2953

T.N.L.A. Debates
official Report

Vol. 30 No. 3

20th November 1986

D
V211,31 N86
N86.30.3
136498

வெளியீடு 16-9-1987 Issued 16-9-1987

1514/87
2983

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வியாழக்கிழமை நவம்பர் 20, 1986—தொகுதி 30 எண் 3

Thursday the 20th November 1986 Volume 30 No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Madras-600009**

விலை ரூ. 3] [Price Rs. 3

8
1-12-1986
N86-866

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நூலகம்
136498
சென்னை-600 009

உள்ளடக்கம்

20–11–1986

பக்கங்கள்.

1. வினாக்கள்-விடைகள்—
உடுக்குறியிட்ட வினாக்கள் .. 313—347

2. கவன ஈர்ப்பு—
(அ) மதுரை, பசுமலை மகாலட்சுமி மில் தொழிலாளர்களுக்கு வேலை மற்றும் ஊதியம் வழங்கப்படாமை .. 348—350
(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சில பகுதிகளில் குடிநீர்க் குழாய்கள் பராமரிக்கப்படாதது .. .. .. 351—352

3. அறிக்கைகள் அளித்தல்— .. .. 853
(அ) பொதுக் கணக்குக் குழு .. .. 353
(ஆ) மனுக்கள் குழு .. .. ..

4. சென்னை கோட்டை இராணுவ முகாம் பகுதியில் பெயர்ப்பலகையில் தமிழ் எழுத்துக்கள் அழிக்கப்பட்டிருத்தல் .. 354—356

5. அரசினர் தீர்மானம்— .. .. 356
விதி 33-ஐத் தளர்த்தல்

6. அறிவிப்புகள்—
(அ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (சிறப்பு வகைமுறைகள் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு, 1986 .. .. 256
(ஆ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1986 .. 357
(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1986 .. 358
(ஈ) உறுப்பினர் கைது செய்யப்பட்டுள்ளது .. 420
(உ) பேரவை அலுவல் .. .. .. 420

பக்கங்கள்

7. அரசினர் சட்டமுன்வடிவுகள்—

(அ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (சிறப்பு வகைமுறைகள் மற்றும் செல்லந்தக்கதாக்குதல்) சட்ட முன்வடிவு, 1986 .. .. 356—357

(ஆ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1986 .. 357

(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1986 .. 358

(ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1986 .. 358—359

8. தகவல் கோரல்—

மின்வாரியத் தலைவர்பற்றி நீதிமன்றம் தெரிவித்த கருத்துக்கள்மீது மேல்முறையீடு .. 359—360

9. தமிழ்நாடு மின்வாரிய நிதிநிலை அறிக்கை 1986–87 மற்றும் துணை நிதிநிலை அறிக்கை 1985–86 ஆகியவைமீது விவாதம்—தொடர்ச்சி. .. .. .. .. 360—491

| | |
|---|---|
| டாக்டர் கே. சௌரிராஜன் | 360—369 |
| திரு. செ. செம்மலை | 369—377 |
| திரு. அ. பிரணவநாதன் | 377—381 |
| திரு. கே. சுப்பராயன் | 381—390 |
| திரு. எம். அண்ணாதாசன் | 391—397 |
| திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் | 497—403 |
| திரு. கு. ரமணி | 403—418 |
| திரு. சைதை சா. துரைசாமி | 418—424 |
| திரு. வை. பாலச்சந்திரன் | 424—430 |
| டாக்டர் கே. சமரசம் | 430—438 |
| திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன் | 438—442 |
| திரு. என். எஸ். வி. சித்தன். | 442—468 |
| மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் | 468—490 |

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 491—493

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986, நவம்பர் 20, வியாழக்கிழமை.

கார்த்திகை 5, அட்சய— திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு "

தான் சொல்லுவன எளிய பொருளுடையனவாகப் பதியுமாறு சொல்லி, தான் பிறரிடம் கேட்பவற்றின் நுட்பமான பொருளையும் ஆராய்ந்து காண்பது அறிவாகும்.

## 1. வினாக்கள்— விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 14–11–1986 அன்று தள்ளிப்போடப்பெற்ற இரண்டு வினாக்கள் முதலில் எடுத்துக் கொள்ளப்பெறுகின்றன.

### லெவி அளவை அதிகரித்தல்

3—(*வினா எண். 7637) திரு. கே. உச்சி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது வசூலிக்கப்படும் லெவி அளவை அதிகமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் அமுல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நெல் கொள்முதல் செய்யப்படுகின்றபோது 50 சதவீதம் லெவி என்ற முறையில் வசூல் செய்கிறார்கள். ஆகவே, இந்த 50 சதவீதம் என்பது அதிகமாக இருப்பதால், தஞ்சை, திருச்சி, தென் ஆற்காடு போன்ற மாவட்டங்களில் விலையில் மிகவும் வீழ்ச்சி ஏற்படுகிறது. எனவே இந்த 50 சதவீதத்தை 25 சதவீதமாகக் கொடுத்தால் விவசாயிகளுக்கு நல்ல சலுகையாக இருக்கும். எனவே, அதைச் செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர் களே, காவிரி டெல்டா பகுதியில் முழுவதும் கொள்முதல் செய் யப்படுகிறது. தமிழகத்தின் மற்ற பகுதிகளில் வணிகர்களிட மிருந்து 50 சதவீதம் லெவி வசூல் செய்யப்படுகிறது. இதை 75 சதவீதமாக உயர்த்தலாமா என்ற யோசனைதான் பரிசீல னையில் இருந்து, இந்திய அரசும் அது வேண்டாம் என்று தெரி வித்ததன் காரணமாக, 50 சதவீதமே தொடர்கிறது.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இந்த லெவியை அதிகரிப்பதுதான் நியாயம். அப்படி அதிகரிப்பதால் மக்களுக்கு கணிசமாக அரிசியை குறைந்த விலை யில் கொடுக்க முடியும் என்பதால் அரசு இதை மறுபரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர் களே, நமக்குப் போதுமான அளவு இப்போது கொள்முதல் செய்யப்படுகின்ற காரணத்தால், 50 சதவீதத்தை, 75 சதவீத மாக உயர்த்த வேண்டியதில்லை என்று அரசு கருதுகிறது. எது நியாயம் என்பதில் கருத்து வேறுபாடு ஏற்படுவது இயற்கை.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பருவமழை தவறியதன் காரணமாக உற்பத்தி பாதிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற உற்பத்தி ஊக்கத் தொகையை சற்று உயர்த் தித்தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, இந்த உணவுத் துறையில் விவசாயிகளுக்குக் கொடுக்கும் அந்த விலையில் ஏகப்பட்ட மாறுதல் இருக்கிறது. ஏரியாவிற்கு ஏரியா மாறுகிறது. எங்கள் தென் ஆற்காடு மா வட்டம் தஞ்சை மாவட்டத்தை ஒட்டி இருக்கிற மாவட்டம்.



தஞ்சையில் ஒரு குவிண்டாலுக்குக் கிட்டத்தட்ட 30 ரூபாய் போனஸ் என்ற முறையிலே அவர்களுக்கு விலையை விட அதிக மாகக் கொடுக்கிறார்கள். எங்களுடைய தென் ஆற்காடு மா வட்டத்தில் நெல் 120 ரூபாய்கூட போவதில்லை. 85 ரூபாய், 90 ரூபாய்க்குத்தான் நாங்கள் விற்றுக்கொண்டு இருக்கிறோம். எனவே, எங்கள் மாவட்டத்திற்கும் அந்த போனசை வழங்கு வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : : தலைவர் அவர் களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததைப் போல, காவிரி டெல் டாப் பகுதியில் முழுவதும் நாம் வாங்கிக் கொள்கிறோம். மற்ற பகுதிகளில் விவசாயிகள் வெளியிலே விற்பதற்கு வாய்ப்பிருக் கிறது. வெளியிடத்திலிருந்துதான் நாம் பாதியைப் பெற்றுக் கொள்கிறோம். வெளி விலை குறைகிறது என்றால், அது ஒரு சில நேரங்களில் ஏறுகிறபோதும் இலாபம் கிடைக்கும். ஆகவே, தஞ்சைப் பகுதியில் உள்ள அந்த விலையை மற்ற பகுதிகளுக்குத் தருவதற்கு தற்போது உத்தேசம் ஏதும் இல்லை.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களில் இருந்து வாங்குகின்ற நெல்லுக்குக் கொடுக்கின்ற விலைக்கும் தமிழகத்திலே கொள்முதல் செய்கின்ற நெல்லுக்குக் கொடுக்கின்ற விலைக்கும் வித்தியாசம் இருப்பது அரசுக்குத் தெரி யுமா ? அந்த அளவிற்கு உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர் களே, லெவி, ஏகபோக கொள்முதல் பற்றிய இந்த வினா தமி ழகத்தை மட்டும் பொறுத்தது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தஞ்சை மாவட்டத்திலே முழுக் கொள் முதலும் ஏனைய பகுதிகளிலே வணிகர்களிடமிருந்து பாதிக் கும் அதிகமாக கொள்முதல் செய்வதாகவும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த ஆண்டு பொது விநியோகத்தின் மூல மாகக் கொடுக்க எவ்வளவு அரிசி தேவைப்படும் என்றும், எவ் வளவு கொள்முதல் செய்திருக்கிறது என்றும் தெரிவிப்பார்களா? இந்த ஆண்டு போதுமான அளவு நமக்கு நெல் கொள்முதல் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன காரணத்தால், மத்தியத் தொகுப்பிலிருந்து நாம் உணவுப் பொரு ளை வாங்க வேண்டிய அவசியம் இல்லையா ? அல்லது வெளி மாநிலங்களில் அரிசி தேவைப்படுகின்றபோது, அதைக் கொடுக் கின்ற நிலைமையில் தமிழக அரசு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 1986 சம்பா பருவத்தில் 10.02 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. 1986 குறுவையில் 24—11—1986 வரையில் 1.25 இலட்சம் டன் நெல் கொள்முதல் ஆகியுள்ளது. இன்னும் சம்பா பருவத்தில் 12 இலட்சம் டன் கொள்முதல் செய்ய இருக்கிறோம். ஏதேனும் குறைபாடுகள் இருக்குமானால் மத்திய அரசின் தொகுப்பி லிருந்து பெற வேண்டிய அவசியம் ஏற்படும்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜ் மாவட்டம் மிகவும் பற்றாக்குறை மாவட்டங்களில் ஒன்று. வணிகர்களிடமிருந்து 50 சதவீதம் லெவி கொள்முதல் செய்கிறபோது விலைவாசி மேலும் 50 சத வீதம் ஏறுகிறது. அதே நேரத்தில் 50 சதவீதம் கொடுக்காமல் இருப்பதற்கு என்ன என்ன செய்ய வேண்டுமோ அதை எல்லாம் வணிகர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, அந்தப் பற்றாக்குறை மாவட்டத்தில் 25 சதவீதம் என்று ஆக்கினால் அவர்கள் மனம் உவந்து கொடுப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, அதை அரசு செய்வதற்கு முன்வருமா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இதே கோரிக்கையை வியாபாரி களும் அரசுக்குத் தந்து இருக்கிறார்கள். அது அரசின் ஆய்வில் இருக்கிறது.

**சேரன்மாதேவியில் கொள்முதல் நிலையங்கள் ஏற்படுத்துதல்**

4—(*வினா எண். 9480) திரு. கூடலூர் நெ. வி. வேலு : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா— .

(அ) நெல்லை மாவட்டத்தில் குறிப்பாக சேரன்மாதேவி தொகுதியில் நெல் விலையில் ஏற்பட்டுள்ள சரிவினைத் தடுக்க அரசு கொள்முதல் நிலையங்கள் ஏற்படுத்தும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை நிலையங்கள் திறக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) கேள்விக்கு இடமில்லை.





**தமிழகத்தில் வெளிச்சந்தையில் அரிசி விலை.**

96—(*வினா எண் 2590) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வெளிச்சந்தையில் அரிசி விலையைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): தமிழக மக் களுக்கு தட்டுப்பாடின்றி வெளிச்சந்தையில் நியாயமான விலை யில் அரிசி கிடைக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள் ளன. வெளி மாநிலங்களிலிருந்து வியாபாரிகளால் தமிழகத் திலுள்ள எல்லாப் பகுதிகளுக்கும் அரிசி கொண்டு வரப்பட்டு விற் கப்படுவதால் வெளிச் சந்தையில் அரிசியின் விலை நிதானமாகவும் கட்டுப்பாட்டிலுமுள்ளது.

உணவுப் பொருட்களைப் பதுக்கி வைத்து கள்ளச் சந்தை யில் விற்பதைத் தடுக்க இன்றியமையாப் பொருட்கள் சட்டத் தின்கீழ் பலதரப்பட்ட கட்டுப்பாடு ஆணைகளின்கீழ் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரப்படுகின்றன.

கட்டுப்பாடு ஆணைகளைத் தீவிரமாக அமல்படுத்துவதன் காரணமாகவும் இதர நடவடிக்கைகள் மூலமும் வெளிச் சந்தை யில் அரிசி விலை அதிகமாக உயராமல் தடுக்கப்பட்டு வரப்படு கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நியாய விலைக் கடைகளில் விற்கப்படும் அரிசி போதுமானதாக இல்லாததால் மக்கள் வெளிச் சந்தையில் அதிக மாக விலை கொடுத்து அரிசியை வாங்கக் கூடிய நிலை இருக்கிறது. இதைத் தவிர்த்து மக்களின் சிரமத்தைப் போக்கும் வகையில் போதுமான, தரமான அரிசியை வினியோகிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, போதுமான, தரமான அரிசியை நியாய விலைக் கடைகளின் மூலமாக வழங்குவதால் தான் அரிசியின் விலை நிதானத்தில் இருக்கிறது. இல்லை என்றால் அது நிதானம் தவறி என்ன என்ன நிலைமைகளோ ஏற்பட்டு இருக்கக்கூடும். கடந்த ஆண்டைக் கருதுகிறபோது இந்த ஆண்டு அரிசியின் விலை குறைவாகவே உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைகளில் விலைப் பட்டியல் ஒழுங்காக வைப்பது கிடையாது. கடைக்கு கடை அரிசியின் விலை வித்தியாசம் இருக்கிறது. இதைப்போக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலைப் பட்டியல் வைக்காத கடைகள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அவர்கள் வழக்கு மன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறார்கள். எங்காவது அப்படிப்பட்ட தவறுகள் இருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசியின் விலையைக் கட்டுப்படுத்த இயலாமைக்குக் காரணம் தொடர்ந்து கள்ளக் கடத்தலில் ஒரு சில சமூக விரோதிகள் ஈடுபட்டு வருவதே. ஆகவே இவ்வாறு தொடர்ந்து கள்ளக் கடத்தலில் ஈடுபட்டு வருகின்ற வியாபாரிகளை கருப்புப் பட்டியலில் அரசு வெளியிட முன் வருமா? மேலும் அவ்வாறு கைப்பற்றப்படும்போது அந்த லாரிகளை விடுவிக்க உயர்நீதி மன்றத்தில் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அதைத் தடுக்க 'கேவியட்' மனு போட்டு அவர்கள் லாரிகளைத் திரும்பப் பெறாதவாறு செய்ய அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசியின் விலையைப் பொறுத்த வரையில் நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல பொதுவாக விலைவாசி உயர்வு 'இன்பிளேஷன் ரேட்' அதிகமாக இருந்தாலும் கூட தமிழகத்தைப் பொறுத்த வரையில் அரிசியின் விலை கடந்த ஆண்டு 6–11–1985 இல் ஒரு கிலோ ரூ. 3.53, இந்த ஆண்டு 5–11–1986 இல் ஒரு கிலோ ரூ. 3.52 தான், அரிசியின் விலை கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது. கள்ளக்கடத்தலைச் செய்பவர்கள் தொடர்ந்து அப்படிச் செய்வார்களானால் அத்தகைய வியாபாரிகளின் பட்டியலை கருப்புப் பட்டியலாக ஆக்குவது பற்றி அரசு நிச்சயமாகப் பரிசீலித்து முடிவு எடுக்கும். உயர்நீதி மன்றத்தில் எத்தகைய முறைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும் அரசு ஆராயும்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது சொன்னார்கள், தேவையான அளவு நியாயவிலைக் கடைகளில் கொடுப்பதால் மார்க்கெட் விலை ஏறவில்லை என்று. குடும்ப அட்டைகளுக்கு இப்போது எவ்வளவு அரிசி வழங்கப்படுகிறது? அந்த அரிசி போதவில்லை என்று வெளி மார்க்கெட்



டில் வாங்கும்போது விலைகள் உயர்கிறதே—ரூ. 3.52 என்று குறிப்பிட்டார்கள்—இந்த கூட்டுறவு கடைகளில் கொடுக்கும் விலைக்கும், வெளி மார்க்கெட்டில் கொடுக்கும் விலைக்கும் உள்ள வித்தியாசத்தைக் குறைப்பதற்கு அரசு முயற்சிகளை எடுக்குமா? இந்த கூட்டுறவு கடைகளில் அந்த கார்டுகளுக்கு அதிகமான அரிசியைக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–10)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் எல்லாம் தர இயலும். ஆனாலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ரேஷன் கடைகளிலிருந்து அரிசி வெளிக் கடைகளுக்குப்போய் அது பாலிஷ் செய்யப்பட்டு மீண்டும் வியாபாரிகள் அதை விற்கக் கூடிய அளவிற்கு அரிசி ரேஷன் கடைகளில் வழங்கப்படுகிறது என்பது தான் உண்மையான நிலை.

படித்து வேலையில்லாதோருக்கு வழங்கும் உதவிப்பணம்.

97—(*வினா எண் 8177) திரு. கூ. பாரமலை : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எஸ்.எஸ்.எல்.சி. படித்து வேலையில்லாதோருக்கு வழங்கப்படும் உதவிப்பணம் மதுரை மாவட்டத்தில் கடந்த ஒரு வருடமாக வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், உதவிப்பணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. கூ. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இந்தக் கேள்விக்கு இல்லையென்று பதில் சொன்னார்கள். ஏற்கனவே நான் கேள்விப்படுவது பல இடங்களில் இப்படி வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு வழங்கப்படுகிற உதவிப் பணம் இப்போது நிறுத்தப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். மதுரை மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக, 1985–86, 1986–87 அதாவது நடப்பாண்டிலும் சேர்த்து, மொத்தம் எத்தனை பேருக்கு இந்த உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் 7,817 பேருக்கு ரூ. 13,30,152 வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : தலைவர் அவர்களே, அப்படி வேலை இல்லாதவர்களுக்கான உதவித் தொகை ஒரு மாவட்டத்திலே எவ்வளவு பேருக்குக் கொடுக்கப்படுகிறது என்ற எண்ணிக்கையைச் சொன்னார்கள். மாநிலம் முழுவதும் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள், பட்டதாரிகள் போன்றவர்களுக்கு அரசாங்கம் உதவித் தொகை கொடுத்து வருகிறது. இப்படிப்பட்ட உதவித் தொகையைப் பெறுகின்ற அவர்களை, ரேஷன் கார்டுகள் விநியோகம் செய்வது, வாக்காளர் ஜாபிதா தயாரிப்பது, சில அலுவலகங்களில் தேங்கியிருக்கின்ற ஸ்டேட்மெண்ட் தயாரிப்பது, போன்ற வேலைகளுக்கு உபயோகப்படுத்திக் கொண்டால், அவர்களும் வேலையில் பயிற்சி பெற்ற மாதிரியும் இருக்கும், அரசாங்கம் கொடுக்கின்ற உதவித் தொகைக்கு வேலை வாங்கிய மாதிரியும் இருக்கும். பின்னர் அவர்கள் அரசுப் பணிகளில் சேர்வதற்கு இது ஒரு வாய்ப்பாகவும், உதவியாகவும் அமையும். எனவே இப்படிப்பட்ட வாக்காளர் ஜாபிதா தயாரிப்பது, ரேஷன் கார்டுகள் விநியோகிப்பது போன்ற வேலைகளுக்கு இவர்களைப் பயன்படுத்துகின்ற முயற்சிகளை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு புரட்சித் தலைவர் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதிலிருந்து, 1980—81-லிருந்து 31—10—1986 வரை ரூ. 13,64,64,397 வழங்கியிருக்கிறோம். ஆகவே அவர்களைப் பயனுள்ள வேலைகளில் தற்காலிகமாக ஏற்படுகின்ற அரசு வேலைகளுக்குப் பயன்படுத்த இயலுமா என்பதைப் பற்றி மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கூறிய ஆலோசனையை அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும்.

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சொன்னதைப் போன்று, உதவிப் பணம் என்று கொடுப்பதைவிட அவர்களை 'பார்ட்-டைம் வொர்க்கர்ஸ்' என்ற வகையில், அரசாங்கத்திலுடைய பகுதி நேர ஊழியர் என்ற நிலையை உருவாக்கி, போக்குவரத்துப் பணி, சிவில் சப்ளையில் ஏற்படுகின்ற தவறுகள், குற்றங்கள், போலிக் கார்டுகளைச் கண்டு பிடித்தல் போன்ற சமுதாய நலக் குற்றங்களைக் கண்டுபிடிக்கப் பயன்படுத்துவது பயன் உள்ளதாக இருக்கும். அதே வேலைக்கு, அடுத்து வரும் பொறுப்புகளுக்கு ஒரு சர்டிபிகேட் அல்லது சான்றிதழ் வழங்குகின்ற வகையிலும் இருக்கும். அந்த வகையிலே பயன்படுத்திக் கொள்ள அரசாங்கம் முன்வருமா?





மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இவை எல்லாவற்றையும் அரசாங்கம் ஆராயும்.

### கும்பகோணம் தாலுக்காவில் புதிய தொழிற்சாலை.

98—(*வினா எண் 1467) திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தஞ்சை மாவட்டம், கும்பகோணம் தாலுக்காவில், ஏதேனும் புதிய தொழிற்சாலை தொடங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) விவசாய விளைபொருட்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்களை அரசு கும்பகோணம் தாலுக்காவில் தொடங்க ஏதேனும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : இல்லை. ஆனாலும் தனியார் சர்க்கரை ஆலை நிறுவ முன்வந்ததை ஏற்று அவர்களுடைய மனுவை மைய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது. இதன் மூலம் 450 பேர்களுக்கு நேரிடையாகவும், 5,000 முதல் 6,000 பேர்களுக்கு மறைமுகமாகவும் வேலை கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, அரசு துவங்கவில்லை என்றாலும், தனியார் துவங்குவதற்கு அனுமதி அளித்ததாகக் கூறியதற்கு நன்றி. அப்படி சர்க்கரை ஆலை தொடங்க அனுமதி அளிப்பதாக இருந்தால், தஞ்சை மாவட்டத்தில் மூன்று சர்க்கரை ஆலைகள், திருவாரூர், மயிலாடுதுறை, குடந்தை ஆகியவற்றிலிருந்து கிடைக்கின்ற மொலாசஸிலிருந்து எரிசாராயம் செய்யலாம். கரும்புச் சக்கையையும், அதிகமாக கிடைக்கின்ற வைக்கோலையும் கொண்டு காகித ஆலை நிறுவலாம். அந்த வட்டாரம் பித்தளைக்குப் பெயர் போன காரணத்தினால் பித்தளைத் தொழிற்சாலையையும் நிறுவலாம். அதை அரசு கருத்தில் கொண்டு இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை நிறுவ முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். கடந்த ஆண்டும் இதே பதில், இந்த ஆண்டும் இதே பதில் வந்திருக்கிறது. வருங்காலத்திலாவது புதியதாக தொழில் இல்லாத பகுதியில் தொழிற்சாலையைத் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1986 நவம்பர் 20

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, தஞ்சை விவசாயப் பகுதியாக இருக்கின்ற காரணத்தால், அங்கே புதியதாக சில சர்க்கரை ஆலைகளை நிறுவலாம் என்று அரசு திட்டமிட்டிருக்கிறது. அதற்கான அனுமதியைப் பெற மத்திய அரசுக்கு மனு அனுப்பப்பட்டிருக்கிறது. மத்திய அரசு இன்னும் சர்க்கரைக் கொள்கையை வகுக்காத காரணத்தாலே சர்க்கரை ஆலைகள் நிறுவப்படுமா என்பதைப் பற்றி இந்த அரசு தெரிவிக்க இயலாத நிலையில் இருக்கிறது.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : தஞ்சை மாவட்டம் விவசாயப் பகுதி. விவசாய விளைபொருள்களைக் கொண்டு தான் அங்கே புதிய தொழிற்சாலையை ஆரம்பிக்கச் சொல்கிறேன். நான் சொல்லுகிற காகிதத் தொழிற்சாலை விவசாய விளைபொருள்களைக் கொண்டு தான் ஆரம்பிக்கப்பட வேண்டும். தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் தொழிற்சாலைகளைப் பற்றிய ஒரு கருத்தரங்கை நடத்தி, தஞ்சைப் பகுதியிலே எப்படி பல தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம் என்ற விவரங்களைப் பரிந்துரை செய்து அரசுக்கு அனுப்பியுள்ளதாக அறிகிறேன். இது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? தஞ்சை மாவட்டம் விவசாயப் பகுதியாக இருந்தாலும், அங்கே தொழிலை ஓரளவிற்காவது தொடங்குகின்ற அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சையிலே கருத்தரங்கு நடைபெற்றது. அங்கு அனுப்பப்பட்டிருக்கின்ற பகுதிகள் அரசினுடைய ஆய்வில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காகிதத் தொழிற்சாலைக்கு தஞ்சை ஆலையிலே இருக்கின்ற கரும்புச் சக்கை புகளூரில் இருக்கின்ற ஆலைக்கு எடுத்துச் செல்லப் படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### திருவாடானை ஒன்றியம் பாண்டுகுடி, ஓரியூர் பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்

99---(*வினா எண் 7799 திரு. கா. சொர்ணலிங்கம் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடானை ஒன்றியத்தில் உள்ள பாண்டுகுடி, ஓரியூர் பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு என்ன ?

(இ) எத்தனை கிராமங்கள் பயன்பெறும் ?



1986 நவம்பர் 20]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) 115.60 இலட்சங்கள்.

(இ) பாண்டுகுடி மற்றும் ஓரிக்கோட்டை கிராமங்களும் மேலும் 43 குடியிருப்புகளும் இதனால் பயன் பெறும்.

திரு. கா. சொர்ணலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் குறிப்பாக திருவாடானை ஊராட்சி ஒன்றியம் மிகவும் வறட்சிப் பகுதியாகக் காணப்படுகிறது. அந்தப் பகுதியில் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாத காரணத்தினால் நோய்கள் வரக்கூடிய ஒரு தன்மை ஏற்பட்டிருக்கிறது. வெய்யில் காலத்திலே காலரா போன்ற நோய்களும், இப்போது கடுமையான காய்ச்சலும், கண் வலியும் ஏற்பட்டு அந்தப் பகுதி மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு முக்கியமான காரணமாக தண்ணீர்ப் பற்றாக்குறையும் கண்மாய்களிலே மிகக் குறைந்த கொழ கொழ என்று இருக்கின்ற தண்ணீரைக் குடிக்கின்ற காரணத்தினாலும் அந்த வியாதிகள் ஏற்படுகின்றன என்று கூறப்படுகிறது. எவ்வளவு காலத்தில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டுகுடியில் 30 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க 78.6 இலட்சம் செலவிலும், ஓரிகுடியிலே 13 குடியிருப்புகளுக்கு 37.54 இலட்சம் செலவிலும் திட்டங்கள் குடிநீர் வடிகால் வாரியத்தாலே தயாரிக்கப்பட்டு தற்போது அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது விரைவிலேயே செயல்படும்.

திரு. கா. சொர்ணலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 42 கிராமங்கள் என்று கூறியிருக்கிறார்கள். அதிலே ஐந்துகோட்டை கிராமமும் சேர்ந்திருக்கிறதா என்பது தெரியவில்லை. ஐந்துகோட்டை சேர்க்கப்படாத காரணத்தினால் திருவாடானை ஊராட்சி ஒன்றியத்தில் கடந்த 15 ஆண்டுகளாக பெருந் தலைவராக இருந்த அவருடைய ஊரிலே, தண்ணீர் கொடுப்பதற்கு லாரி போய்கூட, அந்த ஊருக்கு தண்ணீர் கொடுக்கப்படாத காரணத்தினால், அங்கேயுள்ள ஏ. டி. எம். இராமநாத தேவர் அவர்கள் கலெக்டர் அவர்களுக்குத் தந்தி கொடுத்து வரச்சொல்லியும், தண்ணீர் வசதிக்கு பைப் லைன் இன்னும் போடப்படாத காரணத்தினால் மீண்டும் அந்தப் பகுதிக்கு தண்ணீர் கொடுப்பதற்கு வசதிகள் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு கீழேயுள்ள ஊர்களுக்கு

ஐந்துகோட்டையில் இரண்டு குடியிருப்புக்கும் மேலவாயில்,
பெட்டகோட்டை, பெரியாஞ்சிகுடி மறவர் குடியிருப்பு, ஹரிஜன்
குடியிருப்பு, சுப்பிரமணியபுரம், அழகுமடை, மாந்தூர், ஆதியூர்,
உடையூர் குடியிருப்பு, படப்பை போன்ற குடியிருப்புகளுக்கெல்
லாம் தண்ணீர் வழங்குவதற்கு, தாங்கள் அறிவித்துள்ள பெயர்
களிலே, இந்த குடியிருப்புகளும் இருக்கின்றனவா என்பதை அறிய
விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பாண்டுகுடி வட்டாரத்தில் மட்டும் 30மேல்
நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும் 107 பொதுக் குழாய்களும்
நிறுவப்பட இருக்கின்றன. ஒரிக்குடி பகுதியில் 13 குடியிருப்பு
களுக்கு 16 மீட்டர் உயரத்திற்கு குழாய்கள் போடப்பட இருக்
கின்றன. அதிலே 14 மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும்
48 பொதுக் குழாய்களும் நிறுவப்பட உள்ளன. அதிலே இந்த
ஊர்களும் அடங்கும் என்று நான் நம்புகிறேன்.

**தம்பிக்கோட்டையில் உப்பு உற்பத்தி.**

*100*.—(*வினா எண் 7836) **திரு. ப. ந. இராமச்சந்திரன்:**
மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர்
கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, தம்பிக்கோட்டையில்
உள்ள உப்பு உற்பத்தித் தொழில் நசிந்துவருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நட
வடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, (அ) அவ்வப்போது ஏற்பட்ட மழை மற்றும்
பெரு வெள்ளத்தினால் உப்புத் தொழிற்சாலை பாதிக்கப்பட்டது.

(ஆ) வெள்ள நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசு ஒதுக்
கிய ரூ. 4 இலட்சத்தில் இத்தொழிற்சாலையில் பாதிக்கப்பட்ட
சுற்றுக்கரைகள் மற்றும் உப்புப் பாத்திகள் சீரமைக்கப்பட்டு தற்
பொழுது உப்பு உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-20)

**திரு. ப. ந. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலுள்ள தம்பிக்
கோட்டையில் உள்ள உப்பு உற்பத்தி தொழிற்சாலை மாண்புமிகு
தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால்துவக்கி
வைக்கப்பட்ட திட்டமாகும். அங்கு ஏறத்தாழ இரண்டாயிரம்





தொழிலாளர்கள் உப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வருகிறார்கள். தற்
போது சரியான உதவிகள், வசதிகள்போன்றவை இல்லாத காரணத்
தினாலும், சரியான பராமரிப்பு அங்கே இல்லாத காரணத்தினா
லும் ஏறத்தாழ பாதிக்கும் மேற்பட்டவர்கள் அந்தத் தொழிலை
விட்டே செல்கின்ற நிலை உருவாகியிருக்கிறது. அரசு அங்கு
உற்பத்தியாகின்ற உப்பை அரசு சார்ந்த நிறுவனங்களுக்கு
வாங்குவதன் மூலம் ஊக்குவிக்க முடியும். அரசு அதைச் செய்
யுமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த சட்டமன்றக்
கூட்டத் தொடரில் தூத்துக்குடியில் இருக்கின்ற ஒரு தொழிற்
சாலைக்கு அங்கே இருக்கின்ற உப்பை வாங்குவதற்கு
ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. பரிசீலிக்கிறேன் என்று சொன்
னார்கள். அப்படிப்பட்ட செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரி
சீலனையில் உள்ளதா? அதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்தி
அங்கு இருக்கின்ற தொழிலாளர்களை, உப்பு உற்பத்தியாளர்
களை அரசு காப்பாற்ற தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா
என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்** பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த 1986-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில்
இந்த நிறுவனத்தின் மேம்பாட்டு வேலைகளுக்காக 24.935 இலட்
சங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தற்போது 200 பேர்
வேலை செய்து வருகிறார்கள். 20 பேர் நிரந்தரமான வேலை
யில் இருக்கிறார்கள். அந்த உப்புத் தொழில் நசித்து விடாமல்
மேலும் தழைத்தோங்க அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளும்
மேற்கொண்டு வருகிறது.

**திரு. ப. ந. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு
மிக்க நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். அடுத்து, தம்பிக்
கோட்டை உப்பு உற்பத்தி தொழிற்சாலையிடம் சில தனியார் நிறு
வனங்கள் பல இலட்சம் ரூபாய்க்கு உப்பினைப் பெற்றுக் கொண்டு
மூன்று ஆண்டுகளாக பணம் திருப்பிச் செலுத்தாமல் இருக்கிறார்
கள். அதைத் திரும்பப் பெற அரசு என்ன நடவடிக்கை எடுத்து
இருக்கிறது? அதற்கான நடவடிக்கையை விரைந்து எடுக்க வேண்
டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன், எடுப்பார்களா
என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே,
தற்போது அதுபற்றிய தகவல் என்னிடத்தில் இல்லையென்றாலும்,
அப்படி தனியார்கள் வாங்கிக் கொண்டு பணம் தராமல்
இருப்பார்களானால் அதற்கான தக்க நடவடிக்கையை இந்த அரசு
மேற்கொள்ளும்.

சேலம் கஞ்ச மலையில் இரும்பு தாது.

101—(*வினா எண் 8507) திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் கஞ்சமலையில் இரும்பு தாது கிடைப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், பயன்படுத்த ஏதேனும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) அரசிடம் தற்சமயம் திட்டம் ஏதும் இல்லை.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எல்லாம் அண்ணா அவர்களோடு கூட இருக்கின்ற நேரத்தில், அவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, சேலத்தில் இரும்பாலைத் திட்டம் வேண்டும் என்று ஆர்பாட்டம் நடத்தி, அதற்குப் பின்னாலே, உருக்காலை உருவாவதற்காக திட்டங்கள் தரப்பட்டு இன்றைக்கு உருக்காலை உருட்டாலை யாக சேலத்தில் இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். என்றாலும், கிடைக்கின்ற தாதுப் பொருட்களை முறையாக மத்திய அரசாங்கம் பயன்படுத்தி ஒரு தொழிற்சாலை உருவாக்குவதற்கு தீவிரமான நடவடிக்கையை அரசு மேற் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, 10 ஆண்டுக்காலமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று மத்திய அரசை இந்த அரசு கேட்டுக்கொண்டே இருக்கிறது. அதோடு, அங்கே சேலத்தில் இருக்கிற பிரச் சினை, அங்கே இருக்கிற கனிமப் பொருள் 35 சதவிகிதம்தான் இரும்புச் சத்துள்ளதாக இருக்கிறது என்று தஸ்தூர் கமிட்டி ஒரு விவர அறிக்கையைத் தந்து இருக்கிறார்கள். ஆகவே, அதிகச் செலவாகும் என்ற காரணத்தினால், மத்திய அரசு இன்னமும் அதை ஆய்வில் வைத்து இருக்கிறது.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசைப் பொறுத்தவரையில், ஓ.என்.ஜி.சி. யாக இருந்தாலும், அல்லது வேறு எந்த கனிமப் பொருள் கிடைப்பதாக இருந்தாலும் நம்மிடம் சத்து குறைவு என்று கூறு வதைத்தான் முன் நிறுத்திக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அப்படிப் பார்க்கும்போது, தஞ்சை மாவட்டத்திலே கிடைக் கின்ற ஆயிலைக் கூட, குறைவு என்றுதான் சொல்லி, கை விடு கின்ற நிலைக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



எனவே, அப்படிப்பட்ட நிலைக்கு தள்ளப்படுமானால், மாநில அரசே ஒரு ஆய்வாளரை அமர்த்தி, அது சரியா, தவறா என்று பரிசீலிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, நரிமணத்திலே கிடைக்கின்ற எண்ணெயைப் பற்றி தனியாகக் கேள்வி போட்டால் அதற்கான தகுந்த விடையை நான் அளிக்க முடியும். தற்போது இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை யில் மத்திய அரசை மேலும் கேட்டுக்கொண்டு வருகிறோம். இருந்தாலும், ஏற்கெனவே நான் சொன்னதுபோல், இரும்பு கனிமப் பொருளின் சத்து குறைவாக இருப்பதால், மத்திய அரசு அதை இன்னமும் ஆய்வில் வைத்திருக்கிறது.

திரு. மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் கிடைக்கக்கூடிய இரும்புக் கனியானது இலாபகர மானது, அதனால் இரும்புத் தொழிற்சாலை ஆரம்பிக்க முடியும் என்றுதான் ஜப்பான் நாட்டிலுள்ள நிபுணர்களும், இந்தியாவி லுள்ள தஸ்தூர் கமிட்டி அறிக்கையும் கிடைத்த பிறகுதான் இன்றைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அன்றைய பாரதப் பிரதமர் மறைந்த அன்னை இந்திரா காந்தி அவர்களைக் கூட்டிக் கொண்டு வந்து, இரும்பாலைக்கு அடிக்கல் நாட்டினார்கள். அதன் அறிகுறியாக, சேலத்து மாங்கனியைக் கூட, தங்கத்தில் செய்து, அந்த இரும்புக் கனியை எடுத்து தொழிற்சாலை அமைக்க மாங்கனியை அளித்தார்கள். அப்படி இலாபகரமாக இருக்கிறது என்ற ஆய்வுக்குப் பிறகு தானே அடிக்கல்லே நாட்டப் பட்டது ? இடையிலே தடைக்கல் ஏற்பட்டதற்கு யார் காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிந்து, அந்த தடைக் கல்லை நீக்கி, உடனே உருக்காலை ஏற்பட வழிவகை காண்பார் களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, நல்ல யோசனை, வரவேற்கத்தகுந்தது.

குடிநீர் வடிகால் வாரியத்தை பிரித்தல்.

102—(*வினா எண் 8555) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு குடிதண்ணீர் வடிகால் வாரியத்தை நிர்வாக நலனுக்காகப் பிரித்து அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

[1986 நவம்பர் 20

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : மதுரையைத் தலைமையகமாகக் கொண்டு தெற்கு மண்டலம் 15—9—1985 முதல் செயல்பட்டு வருகிறது. திருச்சியைத் தலைமையகமாகக் கொண்டு மத்திய மண்டலமும், கோயம்புத்தூரை தலைமையகமாகக் கொண்டு மேற்கு மண்டலமும், வேலூரைத் தலைமையகமாகக் கொண்டு வடக்கு மண்டலமும், 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் செயல்பட்டு வருகிறது.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் செலவு எவ்வளவு? குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைமை அலுவலகத்தை மையமாக இருக்கின்ற ஓரிடத்தில் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்திற்கு எவ்வளவு செலவாகின்றது என்பதற்கு தனிக் கேள்வி போட்டால் சொல்ல முடியும். திட்டங்களுக்கு ஏற்ப செலவு வந்துகொண்டே இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருவ மழை தவறியுள்ள இந்த நேரத்தில், சென்னை போன்ற நகரத்தில் ஏற்பட்டிருக்கின்ற குடிநீர் தட்டுப்பாட்டைத் தவிர்ப்பதற்கு முன்னெச்சரிக்கையாக குடிநீர் வடிகால் வாரியம் என்னென்ன ஏற்பாடுகளைச் செய்துள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, சென்னைக்குத் தனியாக இது குறித்து கவனிக்க ஒரு நிர்வாகம் இருக்கிறது. அது சென்னை நகர குடிநீர் பிரச்சினைகளைத் தனியாக கவனித்து வருகிறது. எங்கு தட்டுப்பாடு ஏற்பட்டாலும், அதற்குப் பரிகாரம் தேட இந்த நிர்வாகம் ஆவன செய்து வருகிறது.

திரு. சைதை சா. துரைசாமி : : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாரியம் பிரிக்கப்பட்ட விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது மாநகராட்சி நிர்வாகத்திற்கு உட்பட்டதா? அல்லது மாநகராட்சியிலிருந்து பிரித்து, சென்னை பெருநகர் குடிநீர் வடிகால் வாரியம் என்று அமைக்கப்பட்ட ஒரு அமைப்பா? அல்லது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தோடு இணைக்கப்பட்ட அமைப்பா என்று அறிய விரும்புகிறேன்.



1986 நவம்பர் 20]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் அமைப்பு மாநகராட்சிக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. க. பாரமலை ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய விஸ்தரிப்புப் பணிகளைக் கவனிக்க அதன் மண்டலங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு தலைமைப் பொறியாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இப்படி பல மண்டலங்களுக்கு தலைமைப் பொறியாளர் நியமிக்கப்பட்டிருந்தும்கூட, இன்னும் பல்வேறு இடங்களில் ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட மேல்நிலை தொட்டிகள் 4, 5 வருடங்கள் ஆகியும் இயங்காமல் இருக்கின்றன. அவற்றை சீர்செய்ய சிறப்புத்திட்டத்தை உருவாக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எங்கெங்கு மேல்நிலைத் தொட்டிகள் செயல்படாமல் இருக்கின்றனவோ, அந்த விவரங்களைத் தந்தால், அதற்கான தக்க நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தின் நிர்வாகத்தை செம்மைப்படுத்த குடிநீர் வடிகால் வாரியத்தின் பல்வேறு ரிஜீனல் ஆபீசுகளை அமைத்துள்ளதை நான் வரவேற்கிறேன். ஆனால், அதே நேரத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய தலைமை நிர்வாகக் குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கே பிரதிநிதிகளாக இல்லை. ஐ.ஏ.எஸ். ஆபீசர்கள் மட்டுமே குடிநீர் வடிகால் வாரியத்தின் நிர்வாகக் குழுவில் நிர்வாக உறுப்பினர்களாக இருக்கிறார்கள். பல திட்டங்களை நிறைவேற்றுவதிலே இதன் காரணமாகத் தாமதப்படுகிறது. ஆகவே, எங்களைப் போன்றவர்கள் இந்தக் குழுவிலே உறுப்பினர்களாக இருப்பது சிறந்ததாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். 2, 3 சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தக் குழுவிலே பங்கு பெறுகின்ற முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, ஒரு புதிய யோசனையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி அரசு ஆராயும்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியை மையமாகக் கொண்டு ஒரு மண்டலம் ஏற்படுத்தப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திருச்சியை மையமாகக் கொண்ட அந்த மண்டலத்தில் எந்தெந்த மாவட்டங்கள் இணைக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

[1986 நவம்பர் 20

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, திருச்சி மத்திய மண்டலமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதிலே திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய 3 மாவட்டங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன.

[முற்பகல் 9-30]

**திரு. ஆர். ரெங்கசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் உள்ள வடக்கு மண்டல அலுவலகத்தை சென்னைக்கு மாற்றமுடியுமா என்பதை அறிய விரும்புகிறேன். இங்கே சென்னையிலே நமக்குச் சொந்தமான பெரிய கட்டடம் இருக்கிறது. அதிலே அந்த அலுவலகத்தை வைத்துக்கொள்ளலாம். மேலும் தொழிலாளர்களை இங்கே இருந்து மாற்ற வேண்டியதில்லை. ஆகவே வேலூரிலிருந்து சென்னைக்கு அந்த அலுவலகத்தை மாற்றுவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரிலிருந்து அதை சென்னைக்கு மாற்றுகிற உத்தேசம் இல்லை. அப்படி பிரிவுகள் இருந்தால் தான் வேலைகள் சுமுகமாக நடைபெறும் என்பது தான் நடைமுறை சாத்தியக்கூறாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கன்னியாகுமரி மாவட்டம் கொல்லன் விளையில். விளையாட்டு அரங்கம்.**

*103—(*வினா எண் 4505)* **திரு. வை. பாலச்சந்திரன் :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபபுரம் நகராட்சிக்குட்பட்ட கொல்லன்விளையில் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ள இடத்தில் உடனடியாக விளையாட்டரங்கம் கட்டுவதற்கு அரசிடம் ஏதேனும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



**திரு. வை. பாலச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் கொல்லன் விளையில் ஒரு ஸ்டேடியம் அமைக்கப்படவேண்டுமென்பதற்காக ஒரு இடத்தை ஆர்ஜிதம் செய்து இது ஸ்டேடியத்திற்கான இடம் என்று நகராட்சியால் ஒரு பெயர்ப்பலகை வைக்கப்பட்டு மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் அது பிரச்சினையாக எழுப்பப்பட்டு பிறகு அது ஏற்கப்பட்டு அங்கேயிருந்து அரசுக்குக் கருத்துரை வழங்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம் அந்த செயற்குறிப்பு இல்லை என்பதைத் தான் சொன்னேன். அங்கே உள்ள 2·6 ஏக்கர் நிலத்தை—பாம்பாட்டுக் குளத்தின் பகுதியில் எடுத்து விளையாட்டு மைதானம் கட்டுவதற்காக அந்த நிலம் கையகப்படுத்தப்படுகின்ற நிலை இருக்கிறது. இன்னும் பொதுப் பணித்துறை அந்த நிலத்தை ஒப்படைக்கவில்லை. கோட்டாட்சித் தலைவர் அதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறார். அரசு அவருக்கு இது குறித்து தாக்கீது கொடுத்து துரிதப்படுத்தச் சொல்லும்.

**திருச்சி மாவட்டத்தில் சுயநிதி பாலிடெக்னிக்குகள்.**

*104—(*வினா எண் 5152)* **திரு. அ. மலர்மன்னன் :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் துவக்கப்பட்ட சுயநிதி பாலிடெக்னிக்குகள் எத்தனை?

(ஆ) அனுமதி வழங்கப்பட்ட இப்பாலிடெக்னிக்குகளில் போதிய வசதிகள் இல்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) நான்கு

1. கரூர் பாலிடெக்னிக், கரூர்.

2. தந்தை ரோவர் இன்ஸ்டிட்யூட் பாலிடெக்னிக், பெரம்பலூர்.

3. முகமது கல்வி மற்றும் பல்தொழில் நுட்பப் பயிலகம், திருச்சி.

4. திருமதி எலிசபெத் பாலிடெக்னிக், திருச்சி.

(ஆ) இல்லை.

[1986 நவம்பர் 20

## சென்னை பல்கலைக் கழகத்தில் தேர்வுத் தாள்களின் மறுமதிப்பீடு

105—(*வினா எண் 5648) டாக்டர் அ. பொன்னுசாமி :
திரு. ச. பாலகிருஷ்ணன், திரு. யு. பி. மாதையன் மற்றும்
திரு. அ. பெரியசாமி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்
துறை அமைச்சர்: கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைப் பல்கலைக்கழகத்தில் தேர்வுத்தாள் மறு
மதிப்பீடு செய்யும் ( Revaluation ) முறையை மீண்டும்
கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு என்ன நடவடிக்கை
எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): தேர்வுத்தாள்
மறு மதிப்பீடு (Revaluation ) செய்யும் முறையை மீண்டும்
கொண்டு வருவது சம்பந்தமாக விண்ணப்பங்களை சென்னைப்
பல்கலைக் கழகத்தின் ஆட்சி மன்றக் குழு ஆராய்ந்தது. தேர்
வுத்தாள் மறு மதிப்பீடு செய்வதற்குப் பதிலாக தேர்வுத்தாள்
மறு பரிசீலனை (Review) செய்வதற்கு பல்கலைக் கழகத்
தால் ஒரு குழு ( Review Committee ) அமைக்கப்பட்
டுள்ளது. அதற்கு சில விதி முறைகளையும் வகுத்திருக்கிறது.
இம்முறை மார்ச் 1986 தேர்வுகளிலிருந்து அமுலுக்கு வரு
கிறது.

**டாக்டர் அ. பொன்னுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, தேர்வுத்தாள் மதிப்பீடு செய்கிறபோது சில
சமயங்களிலே தவறுகள் ஏற்பட்டுவிடுகிற காரணத்தினால் மறு
மதிப்பீடு செய்யும் முறையை வைத்திருந்தார்கள். ஆகவே
மீண்டும் மறு மதிப்பீடு செய்கிற முறையைக் கொண்டு வர அரசு
ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, ரீவேல்யுவேஷன் என்ற முறையை
ரெவ்யூ முறை என்று மாற்றி மீண்டும் அந்த முறையில் ஆய்
வதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டிருப்பதாகச் சொன்னேன்.

**திரு. ச. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த மறுமதிப்பீடு முறையை கொண்டு வருவதற்கு
அரசு ஆராய்ந்து கொண்டிருக்கின்றது என்று அமைச்சர் அவர்
கள் சொன்னார்கள். தேர்வுத்தாள்கள் மதிப்பீடுகள் செய்



1986 நவம்பர் 20]

வதிலே ஏற்படுகிற சந்தேகங்களை—விண்ணப்பிக்கின்ற மாண
வர்களுடைய சந்தேகங்களை—போக்குகிற வகையிலே மறுமதிப்
பீடு முறையைக் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை
எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, ரீவேல்யுவேஷன் என்பதை
ரெவ்யூ செய்தல் என மாற்றி தற்போது அதற்காக ஒரு குழு
அமைக்கப்பட்டிருக்கிறது. மறு மதிப்பீடு இல்லை, மறு ஆய்வு
செய்வதுதான். அதற்கான வழிமுறைகள் எல்லாம் வகுக்கப்
பட்டு விட்டன.

**திரு. அ. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தேர்வு முறையில் உள்ள குறைபாடுகளின் காரண
மாக அந்த மாணவர்களுடைய அறிவைச் சரியாகக் கணக்கிட
முடியவில்லை. எனவே தேர்வு முறையை மாற்றியமைப்பதற்கு
அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தேர்வு முறையை மாற்ற வேண்டுமென்
பது முக்கியமானதொன்றாகும். தற்போதைய தேர்வு முறை
என்பது Concentration for the final Examination என்ற அடிப்படையில்
தான் இருக்கிறது. எனவே ஆரம்ப கட்டத்திலிருந்தே
செமஸ்டர் முறையையும் தற்போது பல பகுதிகளில் இருப்
பதைப்போன்று இண்டர்னல் அசெஸ்மென்ட் முறையையும்
கல்வி முறையிலும் தேர்வு முறையிலும் கொண்டு வந்து
மாற்றம் செய்யும்போதுதான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு
காண முடியும். அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்க
இருக்கிறது.

**திரு. துரை கோவிந்தராசன் :** மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, தேர்வு முறைகளில் ஏற்படுகின்ற குறைபாடு
களைப் போக்க வேண்டுமென்றால் முதலில் மாணவர்கள்
மத்தியில் காப்பி அடிக்க வேண்டும் என்ற உணர்வு தற்
போதைய தேர்வு முறையின் காரணமாக ஏற்படுவதைத்
தடுக்க வேண்டும். அதற்கு அரசிடம் திட்டம் ஏதேனும்
உள்ளதா? பள்ளிக் கல்வியிலிருந்து எல்லா மட்டத்திலும் செமஸ்
டர் முறையையும் இண்டர்னல் அசெஸ்மென்ட் முறையையும்
மாணவர்களின் எதிர்கால நலனைக் கருதி, கட்டாயமாகச்செயல்
படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
தற்போது கூறியதைப்போல் தேர்வு எழுதுகிறபோதே இறுதிக்
கட்டத்திற்காகப் படிப்பது என்று இருக்கிறது. ஆண்டின் இறுதி

யில், இறுதித் தேர்வு என்று வைப்பதால் ''ஃபைனல் எக்சாமி
னேஷன்'' என்ற முறையில் எப்படியாவது அதில் அதிக எண்
களைப் பெற்றால் போதும் அதன் மூலம் எதிர்காலத்தில் மேற்
படிப்புக்கும் இடம் கிடைக்கும்; நல்ல வாய்ப்புகளும் கிடைக்கும்
என்ற உணர்வைத் தூண்டுகிற முறையாக இருப்பதால் ஆசிரி
யர்களின் கட்டுப்பாட்டையும் மீறி மாணவர்கள் காப்பி அடிக்கிற
முறை இருக்கிறது. இதை மாற்றியமைக்க வேண்டும் என்பது
தான் அரசின் எண்ணமாக இருக்கிறது. இன்டர்னல் அசெஸ்
மெண்ட் என்கிற முறையில் காலாண்டு அல்லது அரையாண்டு
அல்லது ஒவ்வொரு மாதமும் மாணவர்களுடைய தரத்தை
அளந்து பார்க்கக்கூடிய ஒரு கல்வி முறையையும், தேர்வு முறை
யையும் நடைமுறைப்படுத்தினால் நல்லதாக இருக்கும். எனவே
இன்டர்னல் அசெஸ்மெண்ட் முறையை தமிழகத்தில் எல்லாக்
கல்வி மட்டத்திலும் கொண்டு வரவேண்டும் என்று அரசுக்குப்
பரிந்துரை வந்திருக்கிறது. அரசு அதை ஆராய்ந்து வருகிறது.
விரைவில் அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. க. பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்
போது ரெவ்யூ செய்வதற்குத்தான் வழியிருக்கிறது ''ரீ-வேல்யு
வேஷன்'' செய்வதற்கு வழியில்லை என்றார்கள். அதாவது மறு
ஆய்வு செய்வதற்குத்தான் வழியிருக்கிறது, மறு மதிப்பீடு செய்
வதற்கு வழியில்லை என்று கூறினார்கள். சில மாணவர்கள்
சில குறிப்பிட்ட பாடங்களில் தொடர்ந்து மாதாந்திரந்தேர்வு
களிலும், காலாண்டு அரையாண்டுத் தேர்வுகளிலும் நல்ல மதிப்
பெண்களைப் பெற்றவர்கள், ஆண்டுத் தேர்வுகளில் சில குறிப்
பிட்ட பாடங்களில் குறைந்த மதிப்பெண்களைப் பெற்று
விடுகிறார்கள். மாணவர்களைக் கேட்டாலோ ''நான் நல்ல
முறையில்தான் பரீட்சையை எழுதினேன். நல்ல மார்க் போட
வேண்டிய நிலைமைதான் இருந்தது. ஆனால் எப்படியோ
மார்க்கில் குறைவு ஏற்பட்டிருக்கிறது'' என்று சொல்கிறார்கள்.
அப்படிப்பட்ட மாணவர்களுக்கு மறு ஆய்வின்மூலம் நல்ல
வாய்ப்பு ஏற்பட வழியில்லை. மறு ஆய்வின் மூலம் மதிப்பெண்
களைக் கூட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று அறிய விரும்பு
கிறேன். இல்லை என்றால், மறு மதிப்பீடு என்று பழைய ''ரீ
வேல்யுவேஷன்'' முறையையே அரசு மீண்டும் கொண்டு வர
நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, ரீ-வேல்யுவேஷன் முறையை விட
ரெவ்யூ முறைதான் மாணவர்களுக்குப் பயனுள்ளதாக அமைய
வேண்டும் என்றுதான் ரெவ்யூ செய்கிறபோது முந்தைய தேர்வு
களில் அந்த மாணவர்கள் எப்படிப்பட்ட ஊக்கம் காட்டியிருக்
கிறார்கள்; எத்தகைய தேர்ச்சியைப் பெற்றிருக்கிறார்கள்





கடந்த 1, 2 ஆண்டுகளில் அவர்களுடைய தரம் யாது என்
றெல்லாம் கணக்கில் கொண்டு அவர்களுக்கு மறு ஆய்வு செய்ய
வேண்டும் என்று கொண்டு வரப்பட்டது. எனவே ரெவ்யூ முறை
மாணவர்களுக்கு உகந்ததாக இருக்கும் என்ற காரணத்தால்
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட எண்ணமும் அச்ச
உணர்வும் நீங்குவதற்கு இது உதவியாக இருக்கும் என்று தெரி
வித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் அ. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, இது போன்ற ரெவ்யூ முறையைக் கையாளும்
போது அடுத்த தேர்வு வருவதற்குள் மீண்டும் மதிப்பீடு சரி
செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, காலத்தே ஆய்வு முறையை முடித்
தால் தான் மேல் படிப்பிற்கு மாணவர்கள் போக முடியும்
என்பதால் இது குறித்து தக்க நடவடிக்கையை அரசும்
எடுக்கும், பல்கலைக் கழகங்களும் எடுக்கும் என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

**பணியில் இறந்த அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் வாரிசுகளுக்கு அளிக்கும்
பணிச்சலுகையை தனியார் பள்ளிகளுக்கு நீட்டித்தல்.**

106—(*வினா எண் 8067) **திரு. கோ. இரகுபதி :** மாண்பு
மிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா
வுக்கு விடையளிப்பாரா—

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பணியில் இருக்கும்
போது இறந்து விட்டால் அவரது வாரிசுகளில் ஒருவருக்கு அரசுப்
பணி வழங்கிடும் திட்டத்தை தனியார் பள்ளிகளுக்கும் நீட்டிக்கும்
திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு சி. பொன்னையன் :** மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்
கள் பணியில் இருக்கும் போது இறந்து விட்டால் அவரது வாரிசு
களில் ஒருவருக்கு அரசுப் பணி வழங்கும் திட்டம் 17-12-1983-ல்
இருந்து தனியார் பள்ளி ஊழியர்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

**திரு. கோ. இரகுபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இத் திட்டம் தனியார் பள்ளி ஊழியர்களுக்கும்
நீட்டிக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால் தனியார் பள்ளிகள் அவ்
வாறு செயல்படவில்லை என்று அரசுக்குப் பல தகவல்கள் வந்து
இருக்கின்றன. எனவே அதற்குரிய வகையில் நடவடிக்கை ஏதா
வது எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

[1986 நவம்பர் 20

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகள் அரசினுடைய ஆணையை ஈடேற்றத் தவறினால் கட்டாயமாக அவர்கள் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள். ஏதாவது, எங்காவது தவறு நடந்திருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 9-40.)

திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் பல ஆசிரியர்கள் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். அரசு ஆசிரியர்களுக்குண்டான வசதி வாய்ப்புகள் அவர்களுக்குச் சரியான முறையில் தரப்படவில்லை என்றும், அரசு தருகின்ற சலுகைகள் அனைத்தும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குக் கிடைக்கவில்லை என்றும் அத்தகைய குறைபாடுகள் தனியார் பள்ளிகளில் இருக்கின்றன என்ற கருத்தையும் நான் சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையிலும், அந்தப் பகுதியின் பெற்றோர் என்ற முறையிலும் நான் அரசுக்குத் தெரிவித்திருந்தேன். அதன் பேரில் இது வரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கிறதா அல்லது அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பள்ளியை மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார் என்ற தகவல் என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அதை தற்போது ஒரு மனுவாகக் கொடுக்கும்படி வேண்டுகிறேன். அரசு கட்டாயம் நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## வேதாரண்யத்தில் முன்சீப், மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள்.

107---(*வினா எண் 9512) திரு. மா. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வேதாரண்யம் தாலுகா தலைமையிடத்தில் முன்சீப், மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள் அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை, (ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



1986 நவம்பர் 20]

திரு. மா. மீனாட்சிசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது திருத்துறைப்பூண்டியிலிருந்து அந்த இரண்டு கோர்ட்டுகளும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. வேதாரண்யம் பகுதியிலிருந்து வழக்குகள் திருத்துறைப்பூண்டிக்குச் செல்வதால் அந்த வழக்கு மன்றங்களை விரைவிலே வேதாரண்யத்தில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிமையியல் நீதிமன்றத்தைப் பொறுத்த வரையில் வேதாரண்யம், நாகப்பட்டினம் ஜூரிஸ்டிக்ஷனில் இருக்கிறது. அதைப் போலவே செகன்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டைப் பொறுத்த வரையில் திருத்துறைப்பூண்டி எல்லைக்குட்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் வேதாரண்யம் பகுதிக்கு வேண்டுமென்று கேட்கிறார். அரசு ஒரு கொள்கை முடிவை எடுத்திருக்கிறது. ஒவ்வொரு வட்டப் பகுதிக்கும் ஒரு உரிமையியல் நீதிமன்றம், சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் தர வேண்டுமென்ற நோக்கை அரசு நடைமுறைப்படுத்தவிருக்கிறது. அந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறபோது இந்தக் கோரிக்கை நிறைவேறும்.

திரு. மா. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, வேதாரண்யம் வட்டத் தலைநகரமாக இருக்கிறது. வாரம் ஒரு முறை கேம்ப் கோர்ட் அங்கே நடக்கிறது. நிரந்தரமான கோர்ட்டாக அமைந்தால் மக்களுக்கு நலமாக இருக்கும். ஆகவே அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, அதைத் தான் நான் முன்னரே சொன்னேன். ஒவ்வொரு வட்டத்திற்கும் நீதிமன்றம் வர வேண்டுமென்ற முறையில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும். அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக நிலக்கோட்டை தாலுக்காவில் வத்தலகுண்டில் ஒரு முன்சிபல் கோர்ட்டை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டபோது 1985 ஆம் ஆண்டுக்குள் ஆரம்பிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலேயே வாக்குறுதியை அளித்தார்கள். An assurance was given by the Hon' ble Minister in the past Assembly. அது எந்த நிலைமையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தினுடைய பரிந்துரை அரசுக்கு இல்லை என்ற போதிலும் மாண்புமிகு உறுப்

பினருடைய கோரிக்கையை ஈடேற்ற வேண்டுமென்ற வகையில் அதன் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. நிதித் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது, விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**பீளமேடு வ.உ.சி. கூட்டுறவு வீடு கட்டும் சங்கம்.**

*108—(*வினா எண் 8089)* **திரு. கு. ரமணி** : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரம் பீளமேட்டில் உள்ள வ. உ. சி. கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் டைரக்டர் போர்டு பல ஆண்டுகளாகக் கூட்டப்படாமல் செயலற்று கிடப்பது பற்றி உறுப்பினர்கள் 7–4–1983 முதல் 9–12–1985 வரையில் பல புகார் மனுக்கள் அனுப்பியும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): புகார் மனுக்கள் பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. கு. ரமணி** : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு வீடு கட்டும் சொசைட்டி இருபது வருஷங்களுக்கு மேலாக முறையாக இயங்கிக் கொண்டு வந்தது. அதனுடைய பிரசிடெண்டாக இருக்கிறவர் இன்சால்வெண்ட் பெட்டிஷனைக் கோர்ட்டில் கொடுத்தவர். அன்றைக்கே அவருடைய பதவி காலியாக வேண்டியது. அதற்குப் பிறகு சட்டப்படி அவருடைய பதவி செல்லாது. அவர் அப்படி போகாமல், கடைசியாக டெபுட்டி ரிஜிஸ்ட்ரார் ஆஃப் ஹவுசிங்கினுடைய கோர்ட்டில் கேஸ் ஃபைல் பண்ணி அவர் டைரக்டர் பதவியில் இருக்கக் கூடாது என்ற தீர்ப்பும், மெம்பராக இருக்கக்கூடாது என்ற தீர்ப்பும் வழங்கப்பட்டு இருக்கிறது. இன்றைக்கும் அவர் அந்த நிர்வாகத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள தனி அதிகாரியிடம் பொறுப்பை ஒப்படைக்காமல் இருந்து வரும் அக்கிரமம் நடக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே தலையிட்டு அந்த சொசைட்டியினுடைய ஜெனரல் பாடி கூட்டத்தைக் கூட்டி, புதிய போர்டைத் தேர்ந்தெடுத்து நிர்வாகத்தை அவர்களிடம் வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு** : பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே கூட்டுறவு சார் பதிவாளர் நியமிக்கப் பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவிலே சங்கத்தின் பொதுக் குழுவைக் கூட்டவும், புதிய நிர்வாகக் குழுவைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடத்தவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. கு. ரமணி** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களுடைய பதில் வரவேற்கத் தக்கது. ஆனால் இப்போது செய்ய வேண்டிய ஒரு அவசர காரியம் இருக்கிறது. இன்னும் அந்த நீக்கப்பட்ட நபர் கையிலேதான் ஆபீஸ் நிர்வாகம் இருக்கிறது. எனவே, சார் பதிவாளரிடம் உடனடியாக நிர்வாகத்தைக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு அனுப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு** : பேரவைத் தலைவரவர்களே, டெபுடி ரெஜிஸ்டிரார் (ஹவுசிங்) அவர்கள் ஏற்கெனவே எடுத்த நடவடிக்கைகள் குறித்து கூட்டுறவுத் துறைப் பதிவாளருக்கு பதில் வந்தவுடன், அதற்குரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

**திரு. ஆ. பிரேம்குமார்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்கள், நிர்வாகத்திலே உள்ள குறைபாடு காரணமாக செயல்படாமல் பல இடங்களில் இருந்து வருகின்றன. அப்படிப்பட்ட இடங்களில், முன்பு இருந்ததுபோல், டி. ஆர். கேடரில் செக்கரட்டரி ஒருவரை நியமிக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே பல சங்கங்களில் அரசு அதிகாரிகள் செயல்பட்டு வருகிறார்கள். எனவே, எந்த சங்கத்திலாவது செயலர் நியமிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டுக் கேட்டால், அரசு அது குறித்து பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கும்.

**தாம்பரத்தில் சுங்கத் தீர்வை இயக்க மண்டலத்திற்கு**
**தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய வீடுகள்.**

*109—(*வினா எண் 9005)* **திரு. எல்ல. இராசமாணிக்கம்**: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரத்தில் அமைய உள்ள சுங்க தீர்வை இயக்க மண்டலத்திற்காக தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப் படும் வீடுகள் எத்தனை ?

(ஆ) அதனுடைய திட்ட மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 390 வீடுகள்.

(ஆ) ரூ. 417.97 இலட்சம்.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அங்கு கட்டப்படும் வீடுகள் சுங்கத் தீர்வை யற்ற மண்டல நிர்வாகத்தின் டெபாசிட் ஓர்க்கா அல்லது 'ஹட்கோ' மூலமாக டெபாசிட் செய்யப்படும் ஓர்க்கா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, 'ஹட்கோ' மூலமாக வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டிருக்கிற திட்டங்கள்தான் நான் சொன்ன திட்டங்கள்.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அங்கு கட்டப்படும் வீடுகள் சுங்கத் தீர்வை யற்ற ஏற்றுமதி மண்டலத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கா அல்லது உயர் அதிகாரிகளுக்கா ? இல்லையெனில் அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கும் அந்தத் திட்டத்தில் உள்ள வீடுகளை அரசு ஒதுக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலை வரவர்களே, தாம்பரம் பகுதியில் பொதுமக்களுக்கு தனியாக பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. நான் குறிப்பிட்டுச் சொன்ன திட்டம், சுங்கத் தீர்வை இல்லாத வணிக மண்டலத் தில் உள்ள, அதாவது இப்போது அமைந்துள்ள Free Trade Zone-ல் உள்ள தொழிலாளர்கள், தொழிலதிபர்கள் அனைவருக்கும் வழங்கப்பட கட்டப்படும் திட்டமாகும்.

**தென்னாற்காடு மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கள்**

110—(*வினா எண் 9076) திரு. துரை அன்பரசன் : மாண்பு மிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் கைத்தறி நெச வாளர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டத்தின் கீழ் பயனடைந்த ஊர்கள் யாவை ?

(ஆ) பயனடைந்தோர் எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) தென்னாற்காடு மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தின் கீழ் சின்னசேலம், குறிஞ்சிப்பாடி ஆகிய ஊர் கள் பயனடைந்துள்ளன.

(ஆ) பயனடைந்தோர் எண்ணிக்கை 90.





திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் தொகுதி நிறைந்த நெசவாளர் பெரு மக்களைக் கொண்ட தொகுதியாகும். ஒரு நகர மன்றமும், 58 ஊராட்சி மன்றங்களும் உள்ளடங்கிய தொகுதி அது. அந்தத் தொகுதியில் உள்ள நகராட்சியின் ஒரு பகுதியில் அதிகமான நெசவாளர் பெருமக்கள் வாழ்கிறார்கள். மேலும் 15 ஊராட்சி களிலும் நெசவாளர் பெருமக்கள் நிறைந்து வாழ்கிறார்கள். அவர் களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனை யில் உள்ளதா ?

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, அரசு அது குறித்துப் பரிசீலிக்கும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழே, ஒவ்வொரு வீட்டுக்கும் எவ்வளவு பணம் ஒதுக்குகிறோம் ? அப்படி ஒதுக்கும் பணத்தில் ஏதாவது மானியம் வழங்கப்படுகிறதா ? மேலும் கூட்டுறவு சொசைட்டி யின்கீழ் அவர்கள் வந்தால்தான் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் நிலை இருக்கிறதென்று சொல்கிறார்கள். அப்படிப் பட்ட நிலைமை இருக்கிறதா? அல்லது தனித் தனியாக 10 அல்லது 20 பேர்கள் வீடு கேட்டால் கூட அவர்களுக்கு சேங்ஷன் செய்ய வழி வகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன் னது போல, அவர்கள் கூட்டுறவு சங்கத்திலே உறுப்பினர்களாக இருக்க வேண்டும். ஒவ்வொரு வீடும் 19,000 ரூபாய் மதிப் பீட்டில் கட்டப்படுகிறது. அதிலே 14,600 ரூபாய் ''ஹட்கோ'' கடன். 2,000 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது.

(முற்பகல் 9-50.)

திரு. வி. எஸ். பஞ்சவர்ணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரி கைத்தறி நெசவாளர்களுக்கு எந்தெந்த மாவட்டத்தில் எவ்வளவு வீடுகள் கட்டிக் கொடுக்கப் பட்டு இருக்கின்றன என்பதை பற்றி நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, கேள்வி தென்னாற்காடு மாவட்டத் திலே வீடுகள் கட்டிக் கொடுப்பது பற்றியது. மாநில முழுவதும் விவரங்கள் தேவை என்றால் தனியாகக் கேள்வி போடவும்.

[1986 நவம்பர் 20

வட ஆற்காடு மாவட்டம் ஆரணியில் வீட்டு வசதி வாரிய வீடுகள்.

111—(*வினா எண் 9578) திரு. மு. சின்னக்குழந்தை : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் ஆரணிப் பகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) ஆம்.

(ஆ) நில ஆர்ஜித பணி முடிந்தவுடன் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

திரு. மு. சின்னக்குழந்தை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணிப் பகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்ட அரசுத் துறை அதிகாரிகள் ஆரணியில் இருந்து போளூருக்கு செல்கின்ற வழியிலும், ஆரணியிலிருந்து செய்யாறு செல்கின்ற வழியிலும் இடங்களைப் பார்வையிட்டார்கள். அந்த இரண்டு இடங்களையும் பார்வையிட்டிருக்கிறார்கள். அந்த இடங்களைத் தேர்ந்தெடுத்து இந்த அரசு இந்த ஆண்டு வீடுகள் கட்ட முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி வட்டம் முள்ளிப்பேட்டை கிராமத்தில் ஏறத்தாழ 65 ஏக்கர் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டன. ஓராண்டுக்குள் நில ஆர்ஜிதம் முடிவுற்றபின் ஏறத்தாழ 676 மேம்பட்ட மனைகள், 676 குடியிருப்புக்கள் ரூ. 3½ கோடி மதிப்பீட்டில் அந்த இடத்தில் கட்டித் தரப்படும்.

திரு. மா. கதிர்வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய தொகுதி | தொழிலாளர்கள் நிறைந்த தொகுதி. அங்குள்ள சிப்காட் பகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடு கட்டிக்கொடுக்கவேண்டும். ராணிப்பேட்டையில் உள்ள அந்த சிப்காட் பகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஆய்வு செய்யப்பட்டிருக்கின்றது. எப்போது அந்த திட்டம் நிறைவேற்றி வைக்கப்படும் என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கேள்வி? வட ஆற்காடு மாவட்டம் ஆரணியிலே வீடுகள் கட்டுகின்ற திட்டம் பற்றியது. இன்னொரு உறுப்பினர் போட்ட கேள்வியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'ஓசி' கேள்விக் கேட்காமல் தனிக் கேள்வி போடவும்.

சேலம் மாவட்டம் ஓமலூரில் விசைத்தறிக் கூடம்.

112—(*வினா எண். 10084) திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஓமலூரில் விசைத் தறிக் கூடம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

அனாதை இல்லங்களுக்கு அரசு அங்கீகாரம் வழங்கல்.

113—(*வினா எண். 4961) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனிப்பட்டவர்கள் அல்லது நிறுவனங்கள் நடத்தும் அனாதை இல்லங்களுக்கு அரசு அங்கீகாரம் எந்த அடிப்படையில் அளிக்கப்படுகிறது ?

(ஆ) எந்த அடிப்படையில் அதற்கான மானியம் வழங்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தனிப்பட்டவர்கள் அல்லது நிறுவனங்கள் நடத்தும் அனாதை இல்லங்களுக்கு அரசு அங்கீகாரம் அளிப்பதில்லை,

(ஆ) அரசு மானியம் பெற, சமூக நல தொண்டு நிறுவனங்கள் 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதாக இருக்கவேண்டும். பொது டிரஸ்ட் நிறுவனமாயின், அமலில் உள்ள ஏதாவது ஒரு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். மேலும் அந்நிறுவனம் குறைந்தது 5 ஆண்டுகள் சமூக நலச் சேவையில் ஈடுபட்டுள்ளதாக இருக்கவேண்டும்,

[1986 நவம்பர் 20

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாநிலம் முழுவதும் எத்தனை தொண்டு நிறுவனங்கள் இப்படி பதிவு செய்து மாநில அரசினுடைய மானியங்களைப் பெற்று வருகின்றன? இப்படிப்பட்ட நிறுவனங்கள் அனாதை இல்லங்கள் மூலம் மாநிலம் முழுவதும் எத்தனை பேர்கள் பயன் பெறுகிறார்கள் என்ற விவரம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது போன்ற சமூக தொண்டு நிறுவனங்களுக்கு 1-4-1979-லிருந்து மாநில அரசு 45 விழுக்காடும் மத்திய அரசு 45 விழுக்காடும் கொடுக்கின்றது. மீதமுள்ள 10 விழுக்காடு செலவுத் தொகையை அந்த நிறுவனங்களே ஏற்கின்றன. 1-4-1979-க்கு முன்னர் அனுமதிக்கப்பட்ட இல்லங்களுக்கு செலவுத் தொகையில் 90 விழுக்காடும் மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது. அதுபோல தமிழகத்திலே 159 நிறுவனங்கள் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் 11,830 ஆதரவற்ற குழந்தைகள் பயன் பெறுகின்றார்கள்.

**திரு. ப. ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகத் தொண்டு நிறுவனங்கள் இதுபோன்ற ஆதரவற்ற அனாதை நெஞ்சங்களுக்கு உதவி செய்யும் அதே நேரத்தில் இந்த நிறுவனங்கள் அரசின் உதவியை பெற ஏதாவது விதிகள், வரையறைகள் அரசால் விதிக்கப்பட்டுள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மானியம் பெற வேண்டுமானால் சமூகத் தொண்டு நிறுவனங்கள் கீழ்க்கண்ட விதிகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும்:—

1. நிறுவனம் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டதாகவோ முறைப்படி நிறுவப்படக் கூடியதாகவோ இருக்கவேண்டும்.

2. நிறுவனம் குறைந்தது 5 ஆண்டு காலம் சமூக நலத் தொண்டில் ஈடுபட்டிருக்கவேண்டும்.

3. இந்திய அரசியல் அமைப்பில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள், கடமைகள், பொறுப்புகள் உடைய நிர்வாக அமைப்பாக இருக்கவேண்டும்.

4. குறிப்பிட்ட சாதி, சமய சார்பு உடையதாக இருக்கக் கூடாது. அனைத்துப் பிரிவினருக்கும் சேவை செய்ய வேண்டும்.

5. தனிப்பட்ட ஒரு லட்சியத்திற்காகவோ சொந்த லாபத்திற்காகவோ நடத்தக் கூடாது.



1986 நவம்பர் 20]

6. எந்தத் திட்டத்திற்காக மானியம் கேட்கிறார்களோ
அத்திட்டத்தை நிறைவேற்ற போதுமான ஊழியர்களையும்
வசதிகளையும் மற்றும் நிர்வாக திறமையுடையவர்களாகவும்
இருக்க வேண்டும். அரசிடமிருந்து பெறுகின்ற மானியத்தைத்
தவிர கூடுதலாக செலவு ஏற்பட்டாலும் அதை ஏற்று செலவு
செய்யும் வகையில் நிர்வாகத்தை நடத்தும் அளவுக்கு நிறுவனம்
இருக்க வேண்டும். தேவைப்படின் அவர்கள் சொந்தப் பொறுப்
பில் நிறுவனத்தை நடத்தவும் தயாராக இருக்க வேண்டும். நிறு
வனத்தை நேரில் சென்று பார்வையிட்டு மேற்கண்ட நிபந்தனை
கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருந்தால் மாவட்ட சமூக நல
அதிகாரியின் சான்று அளிக்கப்பட்டு அதற்கு பிறகு தான் மானியம்
வழங்கப்படுகிறது.

**டாக்டர் ந. மாசிலாமணி :** மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, அனாதை இல்லங்களின் மூலமாக குழந்தைகள்
வெளிநாடுகளுக்கு கடத்தப்படுகிறார்கள் என்று புகார் வந்திருக்
கிறதே, அதுபற்றி அரசுக்கு தகவல் வந்துள்ளதா? இது குறித்து
அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அனாதை இல்லங்
களுக்கு வழங்கப்படும் மானியங்கள் முறையாக செலவு செய்யப்
படுகின்றனவா என்று கண்டறிய சட்டமன்ற உறுப்பினர்கள்
அடங்கிய குழு ஒன்றை அமைக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசின் அங்கீகாரம்
பெற்ற சமூக நல நிறுவனங்களின் மூலமாக குழந்தைகள் வெளி
நாடுகளுக்கு கடத்தப்படுவதாக எந்தத் தகவலும் அரசுக்கு வர
வில்லை. அடுத்து, உதவிப் பெறும் சமூகத் தொண்டு நிறுவனங்
கள் முறையாக செயல்படுகின்றனவா என்று அரசு அதிகாரிகள்
ஒவ்வோர் ஆண்டும் நேரில் சென்று பார்வையிட்டு அதற்குரிய
சான்றிதழை வழங்குகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

## கேளிக்கை வரிச் சட்டம்.

114—(*வினா எண். 8521) **திரு. செ. செம்மலை:** மாண்புமிகு
வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) கேளிக்கை வரிச் சட்டத்தின்கீழ் கேளிக்கை வரி
ஏய்ப்பவர்களைப் பற்றி தகவல் கொடுப்பவர்களுக்கு சன்மானம்
வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், 1984-85-ம் ஆண்டு எத்தனை பேருக்கு
அப்படிப்பட்ட சன்மானம் வழங்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கேளிக்கை வரிச் சட்டத்தின்கீழ் வரி ஏய்ப்பு செய்பவர்களைப்பற்றித் தகவல் கொடுப்பவர்களுக்கு சன்மானம் வழங்கும் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது.

(ஆ) 1984-85 ஆம் ஆண்டில் சன்மானம் எவருக்கும் வழங்கப்படவில்லை.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேளிக்கை வரிச் சட்டத்தின்கீழ் கேளிக்கை வரி ஏய்ப்பவர்களைப் பற்றி தகவல் கொடுப்பவர்களுக்கு சன்மானம் வழங்கும் திட்டம் நடைமுறையில் இருந்தும் யாருக்கும் அப்படி பரிசுத் தொகை வழங்கப்படவில்லையென்று சொன்னால், யாரும் அப்படி தகவல் கொடுக்க முன் வரவில்லையா ? ஒரு வேளை தகவல் கொடுப்பவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு இல்லையென்ற அச்சம்தான் அதற்குக் காரணமா ? இல்லை இதுபற்றி அதிகமாக விளம்பரம் செய்யப்படவில்லையா? அப்படி யென்றால் தகவல் கொடுப்பவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவும், நல்லமுறையில் எல்லோருக்கும் தெரியும் வகையில் விளம்பரப் படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு இத்திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. வரி ஏய்ப்பு செய்பவர்களைப் பற்றி தகவல் கொடுப்பவர்கள் இருந்தாலும்கூட அவர்களுடைய உண்மையான முகவரி, சரியான கையெழுத்து எல்லாம் அதில் இருப்பதில்லை. தகவல் கொடுத்தவர் யார் என்று தெரிய முடிவதில்லை. இருப்பினும் புகார் அடிப்படையிலும், அன்றாடம் அலுவல் என்கிற அடிப்படையிலும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் தியேட்டர்களில் திடீரென்று சோதனையிடும்போது வரி ஏய்ப்பு கண்டு பிடிக்கப்பட்டு தண்டனைகளும் வழங்கப்பட்டுள்ளன. நெஞ்சுரம் வாய்ந்தவர்கள் வரி ஏய்ப்புப் பற்றித் தகவல் தந்தால் அவர்களுக்கு தகுந்த சன்மானம் தரப்படும் என்று ஏற்கெனவே அரசு அறிவித்திருக்கிறது. அதுமட்டுமல்ல, வரி ஏய்ப்பவர்களைப் பற்றி தகவல் கொடுத்து அதன்மூலம் சன்மானம் பெறும் திட்டத்தை பலர் பயன்படுத்தி பலனும் அடைந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-85, 1985-86 ஆம் ஆண்டுகளில் இத்தகைய வரி ஏய்ப்பை ஏதோ ஒருவகையில் கண்டு பிடித்ததன் காரணமாக அரசுக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு என்ற அந்த விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?





**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இல்லை. இருந்தாலும் கூட, வரி ஏய்ப்பு பற்றி நம்முடைய அரசுக்கு துப்பு கொடுத்தவர்கள் மொத்தம் 12 பேர். 1981 ஆம் ஆண்டில் 2 பேர். அதிலே ஒரு வழக்கில், அரசாங்கத்திற்கு இந்த வருவாய்தான் கிடைக்கும், வரி விதிப்பின் மூலம் இவ்வளவு கிடைக்கிறது என்பதைக் கணக்கில் கொண்டு பத்து விழுக்காடு என்ற அளவில் ஒருவருக்குப் பணம் வழங்கப்பட்டு விட்டது. இன்னொரு வழக்கு நிலுவையில் இருக்கிறது. இந்த நிலுவையில் இருக்கிற வழக்குக்கு துப்பு கொடுத்தவருக்காக அவர்களை ஊக்கப்படுத்துகின்ற வகையில் 500 ரூபாய் முதல் கட்டமாக வழங்கப்பட்டு இருக்கிறது. முடிவுபெற்ற வழக்கிற்கு ரூ. 4,091 வழங்கப்பட்டு இருக்கிறது. 1982 ஆம் ஆண்டு இரண்டு பேர்கள்—ரூ. 39,602 நமக்கு வரி கிடைத்திருக்கிறது என்ற அந்த அடிப்படையில், துப்பு தந்த ஒருவருக்கு ரூ. 3,960 வழங்கப்பட்டிருக்கிறது; இன்னொருவருடைய வழக்கு நிலுவையில் இருக்கிறது. அதற்கு 250 ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. 1983 ஆம் ஆண்டு வழக்கு, துப்பு கொடுக்கப்பட்ட வழக்கு, முடிவெடுக்கப்பட்டு அரசாங்கத்திற்கு 14,400 ரூபாய் வரி வந்திருக்கிறது. துப்பு கொடுத்தவருக்கு 1,440 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. 1984 ஆம் ஆண்டு 3 பேர்கள் அந்தத் துப்பு தந்திருக்கிறார்கள். ஒரு வழக்கு முடிவு செய்யப்பட்டு அரசாங்கத்திற்கு 20,821 ரூபாய் வரியாக வந்திருக்கிறது. துப்பு தந்தவருக்கு 2,082 ரூபாய் தரப்பட்டிருக்கிறது. மற்ற 3 வழக்குகள் நிலுவையிலே இருக்கிறது. அவர்களுக்கு முறையே ரூ. 2,250-ம், ரூ. 2,500-ம், ரூ. 450-ம் ஆக முதல் கட்டமாக ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது. 1985 ஆம் ஆண்டு 3 பேர்கள் துப்பு தந்திருக்கிறார்கள். ஊக்கத் தொகையாக அவர்களுக்கு 2,000 ரூபாயும், 2,500 ரூபாயும், 5,000 ரூபாயும் வழங்கப்பட்டிருக்கிறது. 1986 ஆம் ஆண்டு ஒருவர் ஒரு வழக்கில் துப்பு தந்திருக்கிறார். அவருக்கு ஊக்கத் தொகையாக 100 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண்கள் 115 முதல் 118 முடிய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப் பெறுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு.

### (அ) மதுரை, பசுமலை மகாலட்சுமி மில் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படாமை.

**திரு. மு. மாரிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''மதுரை, பசுமலை, மகாலட்சுமி மில் நிர்வகம் தொழிலாளர்களுக்குச் சரிவர வேலை கொடுக்காமலும், வேலை செய்த தொழிலாளர்களுக்கு ஊதியம் கொடுக்கமலும், வருங் கால வைப்பு நிதி, பணிக்கொடை போன்ற தொழிலாளர் நல நிதிகளுக்குத் தொழிலாளர்களிடமிருந்து பிடிக்கப்பட்டும், ஆலை நிர்வாகம் பங்குத் தொகை செலுத்தாமல் இருப்பதால் ஏற் பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச் சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

#### அறிக்கை.

மதுரை, மகாலட்சுமி டெக்ஸ்டைல் மில்ஸ் ஓர் இடருதவி நிர்வாகமாக (Relief Undertaking) அரசு தொழில் துறையின் (Industries) 21-2-1983 நாளிட்ட அறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டது. அதன் பிறகு, 8-9-1985 முதல் மேலும் ஆறு மாதத்திற்கு இடருதவி நிர்வாகமாக நீட்டிக் கப்பட்டது. தற்போது, இந்நிறுவனம் 7-3-1986-க்குப் பிறகும் மேலும் ஒரு வருடத்திற்கு இடருதவி நிர்வாகமாக அறிவிக்கப் பட்டுள்ளது. எல்லா கடன்களையும் காலந் தாழ்த்தி தீர்ப் பதற்கான சட்ட இசைவும் அறிவிக்கையில் அளிக்கப்பட்டுள்ளது.

2. இவ்வாலையில், 1,200 தொழிலாளர்கள் பணி புரி கின்றனர். தற்போது ஆலையில் வேலை நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. 1986, செப்டம்பர் மாதம் முடிய தொழிலாளர் களுக்கு சம்பளம் பட்டுவாடா செய்யப்பட்டு விட்டது. பணி புரியும் தொழிலாளர்களில் 250 தொழிலாளர்களுக்கு மட்டும் 1986, அக்டோபர் மாத சம்பளம் வழங்கப்பட்டுவிட்டது. மீத முள்ள தொழிலாளர்களுக்கு இம்மாதத்திற்குள் சம்பளம் பட்டு வாடா செய்யப்படும் என்று நிர்வாகம் தெரிவித்துள்ளது. டோக் கன் இல்லாத தொழிலாளர்களுக்கு மட்டும் தொடர்ந்து வேலை கொடுக்கப்படவில்லை.

3. ஈ.எஸ்.ஐ. மற்றும் ஈ.பி.எப். நிலுவைகள் இரண்டரை ஆண்டுகளாக செலுத்தப்படாமல் உள்ளன. இது தொடர்பாக மாவட்ட ஆட்சியரால் நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்





பட்டு வருகிறது. 1986, மே மாதம்வரை ஈ.பி.எப். நிலுவையாக நிர்வாகம் ரூ. 57·16 இலட்சம் செலுத்த வேண்டி உள்ளது. இதற்கு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி சட்டத்தின்படி நிர் வாகத்திற்கு எதிராக பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஐ.பி.சி. 405/409 ஆகிய பிரிவின்கீழ் நிர்வாகத்திற்கு எதிராக காவல் துறை, வழக்குகள் தாக்கல் செய்துள்ளது. தொழிலாளர் களுக்கு அளிக்கப்பட வேண்டிய பணிக்கொடை தொடர்பான கணக்குகள் தீர்க்கப்பட்டு, அதற்குரிய தொகைகள் ஆலையின் வைப்புத் தொகையில் போடப்பட்டுள்ளன. அதற்கு தொழி லாளர்களுக்கு வட்டி அளிக்கப்பட்டு வருகிறது

4. மதுரை, தொழிற்சாலைகளின் துணைத் தலைமை ஆய்வர், மேற்படி ஆலையை 28-10-1986 அன்று ஆய்வு செய்து, சில மாதங்களில் சில பிரிவினர்களுக்கு தாமதமாக சம்பளம் வழங்கப்பட்டது தொடர்பாக சம்பளப் பட்டுவாடா சட்டத்தின் கீழ் நிர்வாகத்திற்கு காரணம் காட்டும் அறிக்கை வழங்கி தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

5. ஆலையின் நிதி நிலைமை மிகவும் மோசமாக உள்ளதாக வும், ''இன்டஸ்ட்ரியல் ரீ கன்ஸ்ட்ரக்ஷன் பேங்க் ஆப் இந்தியா,' மூலம் ரூ. 169 இலட்சம் நிதி பெற முயன்று வருவதாகவும் அதற் கான வாய்ப்புகள் உள்ளதாகவும் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

**திரு. மு. மாரிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அவையில் வைக்கப்பட்டிருக்கின்ற அறிக்கை யில் ஏறத்தாழ 1,250 தொழிலாளர்களுக்குக் கடந்த இரண்டு மாதங்களாகச் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்றும், சுமார் இரண்டரை ஆண்டுக் காலமாக அந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஈ.எஸ்.ஐ. மற்றும் ஈ.பி.எப். நிலுவைகள் செலுத் தப்படாமல் இருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டு மாத காலம் தொழிலாளர்களுக்குச் சம்பளம் பாக்கி என்பது சாதாரண ஒரு காரியம் அல்ல. தொழிலாளர்களுடைய பொருளாதாரத்தின் முதுகெலும்பையே முறிக்கக்கூடிய ஒன்றாக அது அமையும். எனவே, இவற்றிற்காக நிர்வாகத்தின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே உரிய நடவடிக்கை களை எடுத்து வருகிறோம். மேலும் தொழிலாளர் நலன் காக்க துரிதமான நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. மு. மாரிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையினுடைய நிர்வாகம், கடந்த 3 ஆண்டுக் காலமாக, ரிலீப் அன்டர்டேக்கிங் என்று சொல்லக்கூடிய இடர்

உதவி நிர்வாகமாக இருந்து வருகிறது என்று சொல்லப்பட்டு வருகிறது. 3 ஆண்டுக் காலமாக இடர் உதவி நிர்வாகமாக இருந்தாலும்கூட, இந்த ஆலை நிர்வாகம் இன்னும் சரிப்பட்டு வரவில்லை என்று நன்றாகத் தெரிகிறது. எனவே, இந்த நிலையைக் கருதி அரசே இந்த ஆலையை நேரடியாக எடுத்து நடத்திட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா நிலைகளையும் ஆய்ந்த பிறகே அரசு அந்த முடிவிற்கு வரும்.

**(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சில பகுதிகளில் குடிநீர்க் குழாய்கள் பராமரிக்கப்படாதது.**

**திரு. எப். எம். இராசரத்தினம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கன்னியாகுமரி மாவட்டம், சைமன் காலனி, வாணியக்குடி, குறும்பனை பகுதிகளில் குடிநீர்க் குழாய்களெல்லாம் பழுதடைந்து சாக்கடை நீரும் குடி தண்ணீரும் ஒன்றாகக் கலந்து வருவதால் புதிய குடிநீர்க் திட்டம் உருவாக்குவது பற்றிய'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

**அறிக்கை.**

**வாணியக்குடி,**—2,280 மக்கள் தொகையைக் கொண்ட இந்த குடியிருப்பு குறுத்தெங்கோடு ஒன்றியத்தைச் சேர்ந்ததாகும். இக் கிராமத்தில் இருக்கும் திறந்த வெளிக் கிணற்றை ஆதாரமாகக் கொண்டு நீரேற்றுக குழாய்கள் மூலம் 5,000 காலன் நீர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டியில் நீர் ஏற்றப்பட்டு குடிநீர் மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. இந்த நீரேற்றும் குழாய்களில் சுமார் 200 மீட்டர் நீளத்திற்கு கசிவு ஏற்பட்டு உள்ளது. அதனை உடன் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார்.

ஒரு பாதுகாக்கப்பட்ட புது குடிநீர் திட்டம் ரூ. 3.72 இலட் சங்களுக்கு அங்கீகரிக்கப்பட்டு நடப்பு நிதியாண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.





**குறும்பனை :**—2,160 மக்கள் தொகையைக் கொண்ட இந்த குடியிருப்பு குறுத்தெங்கோடு ஒன்றியத்தைச் சேர்ந்ததாகும். இக் கிராமத்தில் திறந்த வெளி கிணற்றை ஆதாரமாகக் கொண்டு நீரேற்றும் குழாய்கள் மூலம் 5,000 காலன் கொள்ளளவுள்ள இரண்டு குடிநீர்த் தேக்கத் தொட்டிகளில் நீரேற்றப்பட்டு பகிர் மானக் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. பகிர்மானக் குழாய்களில் சுமார் 2 கி.மீ. தூரத்திற்கு கசிவு ஏற்பட்டுள்ளது. அதை நிவர்த்தி செய்யவும் உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இக் குடியிருப்புக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வாரியத் தால் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. இத் திட்டத் திற்கு நடப்பு நிதி ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல் படுத்தப்படும்.

**சைமன் காலனி :**—1,230 மக்கள் தொகையைக் கொண்ட இக்குடியிருப்பும் குருத்தெங்கோடு ஒன்றியத்தைச் சேர்ந்ததாகும். இக் கிராமத்திலும் திறந்த வெளிக் கிணறு ஒன்றை ஆதாரமாகக் கொண்டு 5,000 காலன் கொள்ளளவுள்ள தரைமட்டத் தொட்டி யில் நீரேற்றப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. இந்த திட்டம் 20 வருடங்களுக்கு முன்னால் மீன் வளத் துறையினரால் நிறைவேற்றப்பட்டதாகும். இந்தத் திட்டத்தை மீண்டும் பரா மரிக்குமாறு மீன் வளத் துறையினரிடம் கொடுக்கப்பட்டுள்ள தென கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார். பராமரிப்பின் முக்கியத்துவத்தைக் கொண்டு, வேலைகள் உடன் மேற்கொள்ளுமாறு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

**திரு. எப். எம். இராசரத்தினம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில், வாணியக்குடி பகுதிக்கு ஒரு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் ரூ. 3.72 இலட்சம் செலவில் அங்கீகரிக்கப்பட்டு, நடப்பு நிதியாண்டில் எடுத்துக் கொள்ளப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அந்தத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு, ஏறத்தாழ 4, 5 மாதங்களுக்கு மேல் ஆகிறது. இன்னும் அந்தப் பகுதியில் பணி தொடங்கப்பட வில்லை என்பது பெரும் குறையாக இருக்கிறது. எனவே, விரை வாக அந்தப் பணியைத் தொடங்குவதற்கு அரசு ஆணை பிறப் பிக்குமா என்பதோடு, குறும்பனைப் பகுதியில் 2 கிலோ மீட்டர் தூரத்திற்குக் குடிநீர்க் குழாய்களில் எல்லாம் கசிவு ஏற்பட்டு உள்ளது என்று விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அவற்றை கவனத்தில் கொண்டு, இக் குடியிருப்புக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கத் திட்ட மதிப்பீடு தயாரித்து வருகிறோம் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். திட்ட மதிப் பீடு தயாரிப்பதாகவும் தெரியவில்லை. குறும்பனைப் பகுதி மக்களுக்குக் குடி நீர் கிடைப்பதாகவும் தெரியவில்லை. எனவே,

உடனடியாக இந்தப் புதிய குடிநீர்த் திட்டம் தயாரிக்கவும் அந்தப் பகுதிக்குக் குடிநீர் வழங்கவும் அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, வாணியக்குடியிலும், குறும்பனையிலும் தற்போது வேலைகள் எடுத்துக் கொள்ளக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதற்காகத் தக்க முறையில் அரசு அதிகாரிகளுக்கு ஆணைகள் பிறப்பித்து, தக்க நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

**திரு. எப். எம். இராசரத்தினம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில், சைமன் காலனிப் பகுதிக்கு நீர் வழங்கும் திட்டம், உருவாக்கப்பட்டு, 20 வருடங்களுக்கு முன்னால் மீன்வளத் துறையினரால் நிறைவேற்றப்பட்டு உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இத் திட்டத்தை மீண்டும் பராமரிக்க மீன் வளத் துறையிடம் கொடுக்கப்பட்டுள்ளதென கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மீன் வளத் துறையினர் பராமரிக்க ஊராட்சியிடம் ஒப்படைக்கிறோம் என்று சொல்லி, பராமரிப்பு நீண்ட காலமாகவே குறைவாக இருந்து வருகிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். 20 வருடங்களுக்கு முன்பு நிறைவேற்றப்பட்டுள்ள திட்டம் என்று குறிப்பிடப்பட்டுள்ள திட்டத்திற்கு ஆதாரமாக உள்ள கிணறுகள், சுவர்கள் எல்லாம் பழுதடைந்து அருகிலுள்ள சாக்கடை நீரும், கிணற்று நீரும், ஒன்றாகக் கலந்து விடுகின்றன. ஏறத்தாழ 2 கிலோ மீட்டர் செல்கின்ற குழாய்கள் அனைத்தும் பழுதடைந்து விட்டன. கடற்கரை கிராமமாக இருக்கிற காரணத்தால், அப்பகுதி மீனவர்களுக்குப் பாதுகாக்கப்பட்டக் குடிநீருக்கு வேறு எந்த வசதியும் வழி வகையும் இல்லாததால், அவர்களுக்குக் குழாய்களில் வருகின்ற சாக்கடை நீரைத்தான் குடிநீராகப் பயன்படுத்த வேண்டிய நிலையுள்ளது. இதனால் அப்பகுதியில் காலரா போன்ற நோய்கள் பரவுவதற்கு வாய்ப்பும் உள்ளது. எனவே, அப்பகுதியின் தேவையைக் கருதி, புதிய திட்டம் ஒன்றை உருவாக்க அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, அந்தக் குடிநீர்த் திட்டத்தில் சாக்கடை நீர் கலப்பதாகச் செய்தி ஒன்றும் அரசுக்கு இல்லை. ஆனால், மீன் வளத் துறை 20 ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக இந்தத் திட்டம் சரிவர செயல்பட அரசு ஆவன செய்யும்.





## 3. அறிக்கைகள் அளித்தல்.

### (அ) பொதுக் கணக்குக் குழு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளைப் பொதுக் கணக்குக் குழுவின் தலைவரின் சார்பாக திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவைக்கு அளிப்பார்.

[முற்பகல் 10.10]

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன் :

(1) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1972-73 ஆம் ஆண்டிற்கான (சிவில்) அறிக்கையின் 24 ஆம் பத்தி மீதான குழுவின் ஒன்பதாவது அறிக்கை (ஆறாவது பேரவை) மற்றும் நான்காவது அறிக்கை (எட்டாவது பேரவை)யில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேலும் எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் முப்பத்தைந்தாவது அறிக்கை.

(2) 1974–75ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப்பெற்ற மானியங்களிலும் சாட்டப் பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் மேல் ஏற்பட்ட மிகையாக செலவழித்த தொகைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழு (1980–81) அளித்த முதலாவது மற்றும் குழுவின் (1983-84) 29-வது அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேலும் எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் முப்பத்தாறாவது அறிக்கை.

(3) 1977-78ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப்பெற்ற மானியங்களிலும் சாட்டப் பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் மிகையாக செலவழித்த தொகைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் (1982-83) பதினெட்டாம் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் முப்பத்தேழாவது அறிக்கை.

### (ஆ) மனுக்கள் குழு.

**திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனுக்கள் குழுவின் முதல் அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

[1986 நவம்பர் 20

**4. சென்னை கோட்டை இராணுவ முகாம் பகுதியில் பெயர்ப் பலகையில் தமிழ் எழுத்துக்கள் அழிக்கப்பட்டிருந்தல்.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்ததற்
கிணங்க பேரவைக்கு ஒரு விளக்கத்தைக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிதி இளம் வழுதி அவர்கள்
இந்தக் கோட்டை இராணுவ முகாம் பகுதியில் ஒரு பெயர்ப்
பலகையில் தமிழ்ப் பெயர் அழிக்கப்பட்டிருக்கிறது என்ற
ஒரு பிரச்சனையைப் பேரவையில் எழுப்பினார்கள். அதனை
எழுத்து மூலம் தலைவருக்குத் தந்தால், அது பற்றி உரிய நிலை
மைகளை அறிந்து இந்த அவைக்கு அறிவிப்பதாக அப்போது
பேரவைத் தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த வகை
யில் மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிதி இளம் வழுதி அவர்
களும் மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன் முத்துராமலிங்
கம் அவர்களும் அந்தப் பிரச்சனை பற்றி உரிய நிழற்படங்
களோடு மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு விண்ணப்பித்துக்
கொண்டார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்
அதனை என்னிடம் தந்தார்கள். அது பற்றிய நிலைமைகளை
அறிந்து, விவரங்களைத் தெரிவிக்குமாறு நான் கோட்டையில்
''தமிழ்நாடு அண்ட் கேரளா சப் ஏரியா ஹெட் குவார்ட்டர்ஸ்''
தலைமை அதிகாரியாக இருக்கின்ற லெப்டினன்ட் கர்னல்
ஆர். செல்வநாதன் அவர்களிடம் கேட்டேன். அதற்கான
விளக்கத்தினை அவர்கள் தந்திருக்கிறார்கள்.

கோட்டையில் இப்படிப்பட்ட பெயர்ப் பலகைகள் இருக்
கின்றன. இந்தக் கோட்டை முழுவதும் ஒரு காலத்தில் இராணு
வத்திற்குச் சொந்தம் என்றாலும் இப்போது தலைமைச்
செயலகம் இருக்கின்ற பகுதி முழுவதும் தமிழக அரசுக்குச்
சொந்தம். மற்ற பகுதிகள் இராணுவத்திற்குச் சொந்தம்.
அந்தப் பகுதி இந்தக் கோட்டைக்குள் உட்பட்டிருக்கிற
ஒரு பகுதியாகும். அந்தப் பகுதியில் இருக்கின்ற கட்டிடங்களைக்
குறிக்கின்ற வகையில் ஆறு இடங்களில் பெயர்ப் பலகைகள்
இருக்கின்றன. அவை வழிகாட்டி பெயர்ப் பலகைகளாக இருக்
கின்றன. அதாவது 'தமிழ்நாடு அண்ட் கேரளா சப் ஏரியா'
அலுவலகம் எங்கே இருக்கிறது என்பதைத் தெரிவிப்பதற்காக
ஆறு இடங்களில் ஆறு பெயர்ப் பலகைகள் வைக்கப் பட்டிருக்
கின்றன. அந்த ஆறு இடங்களைப் பற்றிய படங்களையும்
அவர்கள் அனுப்பி வைத்திருக்கிறார்கள். அந்த ஆறு இடங்
களிலும் தமிழ், இந்தி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளி
லும் பெயர்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலே
தமிழை அழிக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை என்றும்,
அவை பல ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்டவை என்றும்,
மழை, வெயில், காற்று போன்ற இயற்கைச் சூழல்களால் பெயர்



சில இடங்களில் அழிந்து, சிதைந்து இருக்கிறது என்றும்
அதனை மாற்றி எழுத இராணுவத் துறை அலுவலகம் நட
வடிக்கை எடுத்து இப்போது மாற்றி எழுதிக்கொண்டு வரு
கிறார்கள் என்றும், மாற்றி எழுதும்போது இந்தியை எழுது
வதற்கு ஒரு பெயின்டர் என்றும், ஆங்கிலத்தை எழுதுவதற்கு
ஒரு பெயிண்டர் என்றும், தமிழை எழுதுவதற்கு ஒரு பெயின்டர்
என்றும் நியமிக்கப்பட்டிருந்தார்கள் என்றும் தெரிவித்திருக்
கிறார்.

மேலும், இந்தியை எழுதியவர் அதனை எழுதிக்கொண்டு
போய்விட்டார் என்றும், ஆங்கிலத்தை எழுதியவர் அதனை
எழுதிக்கொண்டு போய்விட்டார் என்றும், தமிழை எழுதியவர்
அதனை மெதுவாக எழுதிக்கொண்டு வந்தார் என்றும், ஐந்து
இடங்களில் முழுமையாக எழுதப்பட்டுவிட்டது என்றும் ஒரு
இடத்தில் தமிழில் எழுதப்படுவதில் தாமதம் ஏற்பட்டது
என்றும், அதன் காரணமாக அது தார் வைத்து அழிக்கப்பட்டது
என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது என்றும், அப்படிப்பட்ட
எண்ணம் எங்களுக்கு இல்லை என்றும் கூறியிருக்கிறார்கள்.

இது பாதுகாப்புக்கு உட்பட்ட இடம். ஆகவே, மூன்று
மொழிகளிலும் பெயர்ப் பலகைகளைப் புதுப்பிக்க எண்ணு
கிறோமே தவிர வேறு எந்த எண்ணமும் இல்லை என்றும் தெரி
வித்திருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், இராணுவத்துறையைப்
பொறுத்த வரையில் இந்தி, ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழி
களே இருந்தாலும் தமிழக அரசு பின்பற்றுகின்ற ஒரு
கொள்கையாலும், இராணுவத்துறையின் இந்தப் பிரிவு தமிழ்
நாட்டிலே இருப்பதாலும் முதல் பெயர் தமிழிலே இருக்க
வேண்டுமென்றும், இரண்டாவது பெயர் இந்தியிலே இருக்க
வேண்டுமென்றும், மூன்றாவது பெயர் ஆங்கிலத்திலே இருக்க
வேண்டுமென்றும் இந்தப் பெயர்ப் பலகைகளை அந்த வகை
யிலே வைத்திருக்கிறோம் என்றும் தமிழகத்தைப் பொறுத்த
வரையில். தமிழுக்கு உரிய இடம் தரப்படுவதை ராணுவம்
எப்போதும் மதித்து வருகிறது என்றும், அதிலே எந்த ஒரு
வித்தியாசமும் இல்லை என்றும், அதிலே சந்தேகிப்பதற்கே
இடம் இல்லை என்றும், அப்படிப்பட்ட சந்தேகங்கள் ஏற்
படுத்துகிற அளவுக்கு இருந்ததற்காக வருந்துகிறோம் என்
றும், ஆனால் அத்தகைய நிலை, அந்தக் கருத்து, இராணுவத்
துறையில் இருப்பவர்களுக்கு யாருக்கும் இல்லை என்றும்,
அதுவும் கூட 18ஆம் தேதி எழுதப்பட்டு விட்டது என்றும்,
3 பகுதிகளில் இருக்கிற அந்த 6 போர்டுகளும் மறுபடியும்
திருத்தி எழுதப்பட்டு முடிந்து விட்டன என்றும் கூறி அந்த
6 படங்களையும் எடுத்து அனுப்பியிருக்கிறார்கள். அதிலே
ஐயப்படுவதற்கோ, அல்லது வேறு வகையிலே சந்தேகிப்ப
தற்கோ, அல்லது அப்படி எண்ணுவதற்கோ கூட இடம் இல்லை

என்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஆக, அதிலே வேறு விதமான ஆட்கள் உள்ளார்கள் என்றோ, தமிழ் அழிக்கப்பட்டது என்றோ நினைக்கத் தேவையில்லை என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அரசினர் தீர்மானம்.

விதி 33-ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33-ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

6. அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (நெறிப்புவகை முறைகள் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்ட முன்வடிவு, 1986 (ஆ. இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (நெறிப்பு வகை முறைகள் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (நெறிப்பு வகைமுறைகள் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு, 1986.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (நெறிப்பு வகை முறைகள் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.





**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் .** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய, ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

[1986 நவம்பர் 20

(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.



1986 நவம்பர் 20]

மாண்புமிகு திரு. த. இராமசாமி: இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

8. தகவல் கோரல்.

மின் வாரியத் தலைவர் பற்றி நீதிமன்றம் தெரிவித்த கருத்துக்கள் மீது முறையீடு.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, on a point of order. நேற்று நம்முடைய மின்துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலேயே ஒரு கருத்தைச்சொன்னார்கள். நம்முடைய மின் வாரியத் தலைவர் பற்றிய ஸ்ட்ரிக்ச்சர் அடங்கிய நீதிமன்றத் தீர்ப்பு சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் அட்மிட் ஆகிவிட்டது. ஆகவே, அதுபற்றி பேசுவது சப்-ஜுடிஸ் என்று சொன்னார்கள். ஆனால் எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவல்கள்படி அது சரியல்ல. ஏனென்றால் Misleading the House என்று ஆகிவிடக் கூடாது. உண்மையான தகவல் தெரிய வேண்டும்.

[முற்பகல் 10-20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை என்னிடம் கொடுங்கள்.

Thiru A. RAHMANKHAN : He is misleading the House...

MR. SPEAKER : Are you sure?

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, leave for Appeal, number ஆகியிருக்கிறது. Writ Petition admit ஆகவில்லை. நாளைக்குத் தான் அட்மிட் பண்ணலாமா, பண்ணக்கூடாதா என்று இருப்பதாக பரவலாக வழக்கறிஞர்கள் மூலம் நான் கேள்விப்படுகிறேன். எனவே இது சப்-ஜுடிசா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER : If leave petition is numbered, it is sub-judice.

Thiru A. RAHMANKHAN : The appeal is not pending.

MR. SPEAKER : The Special Leave petition is numbered (interruptions).

உட்காருங்கள் சொல்கிறேன். சுப்ரீம் கோர்ட்டில் Leave to Appeal தான் முதலில் பைல் பண்ண முடியும். லீவ் டு அப்பீல் நம்பராகி விட்டால் அது சப்-ஜூடிஸ், Without filing a Leave Petition, you cannot file an appeal.

THIRU A. RAHMANKHAN : The case is not admit'ed. It is not sub-Judice.

MR. SPEAKER : Ofcourse, it is not admitted. But Special Leave Petition is numbered. It is posted before the Court. It is coming up tomorrow. So, it is sub-judice. (Interruptions) You said it is coming up tomorrow.

THIRU A. RAHMANKHAN : Whether it is admitted or not, is the point.

MR. SPEAKER : That will be known only tomorjow.

THIRU A. RAHMANKHAN : it is not admitted. But the Hon. Minister said on the floor of the House that already an appeal has been admitted.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்கஎளே, நான் நேற்றைய தினம் கவனமாக Special Leave admit ஆனதும், அதனுடைய நம்பரையும் தான் சொன்னேனே தவிர, Appeal pending ஆக இருக்கிறதென்று சொல்லவில்லை.

MR. SPEAKER : If there is a case or possibility of a case coming up later on, a Member should not refer to the matter. I will tell again. If there is a case or possibilisy of a case coming up later on, a member should not refer 1o the matter. In this case, it is numbered, so the 'possibility' is certain.

**9. தமிழ்நாடு மின்வாரிய நிதிநிலை அறிக்கை 1986-87 மற்றும் துணை நிதி நிலை அறிக்கை 1985-86 ஆகியவைமீது விவாதம்—தொடர்ச்சி.**

டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தினுடைய 1986–87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் பங்கு கொள்வதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி. நம்முடைய முன்னோர்கள் கண்டுபிடித்ததெல்லாம் பஞ்ச பூதங்கள். ஆனால் பகுத்தறிவு படைத்த மனிதன் கண்டுபிடித்தது ஆறாவது பூதம். அது தான் மின்சாரம். இறைவன் பஞ்ச பூதங்களை வைத்து மனிதனை உருவாக்கினான், உலகத்தை உருவாக்கினான் என்று சொல்வார்கள். ஆனால் மனிதனைக் கூட உருவாக்குகிற அளவிற்கு இந்த மின்சாரம் வளர்ந்து விட்டிருக்கிறது.





இதயம் ஓடவில்லையா ? பேஸ் மேக்கரை வைத்து இதயத்தை ஓட்டிக் காண்பிக்கிறான். அதற்குத் தேவை மின்சாரம். சிறு நீரகம் வேலை செய்யவில்லையா ? ஆர்டிபிஷியல் கிட்னி மூலமாக மின்சாரத்தைப் பயன்படுத்தி சிறுநீரகத்தை உருவாக்கிக் காட்டுகிறான். சுவாச கோசங்கள் வேலை செய்யவில்லையா ? ஆர்டிபிஷியல் வெண்டிலேட்டர் மூலம் மின்சாரத்தைப் பயன்படுத்தி சுவாசம் விடச் செய்து வைக்கிறான். மூளையில் கூட ஒரு பகுதி வேலை செய்யாமல் போனால், மெமரி என்று சொல்வார்களே, கால்குலேஷன் என்று சொல்வார்களே, அந்த ஆற்றல்களை மனிதன் மின்சாரத்தின் மூலமாக கம்யூட்டரைப் பயன்படுத்தி ஒரு முழுமையான மனிதனை படைக்க முடியா விட்டாலும், ஒரு அரைகுறை மனிதனையாவது படைக்கக் கூடிய அளவிற்கு வளர்ந்திருக்கிறான் என்று சொன்னால், நீருக்கும், காற்றுக்கும் அடுத்த இடத்தைப் பெற்றிருக்கும் மின்சாரம் மனிதனுக்கு எவ்வளவு அதி முக்கியத்துவமானது, தேவையானது என்பதை நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

ஜனநாயகத்தின் அடிப்படையிலே மக்களால் தேர்ந் தெடுக்கப்படுகிற அரசின்—யாருடைய அரசாக இருந்தாலும்— முதல்வரும் அவருடைய அமைச்சரவையும் இந்த மன்றத்திற்குப் பொறுப்பாளர்கள். அதாவது accountable to this House என்று சொல்வார்கள். முதல்வருக்கும் அமைச்சர்களுக்கும் அந்தந்தத் துறைகளினுடைய செயலாளர்கள் Heads of the Executive are answerable ஆகவேதான் Article 202 of the Constitution பிரகாரம் Annual Financial Statement என்பது அந்த வருடத்தினுடைய ஆரம்ப காலத்திலேயே வைக்கப்பட வேண்டும் என்றும் எல்லாத் துறைச் செயலாளர்களும் இவ்வளவு நிதி வேண்டும் என்று எல்லாம் சொல்லி, அமைச்சரிடத்திலே கோரிக்கைகளை எல்லாம் கொடுத்து அவர்கள் எல்லோரும் பட்ஜெட் புரப்போசல்ஸ் வருகின்ற கால கட்டத்திலே Annual Financial Statement-ஐ வைத்து விடுவார்கள், அந்தந்த இலாக்காவைப் பொறுத்த வரையில்.

அதைப் போலவே சென்ற ஆண்டு பட்ஜெட் நேரத்திலே இந்த Annual Financial Statement of the Electricity Board வரும் என்று நினைத்தேன். வரவில்லை. காலம் தாழ்த்தி 1986–87-லே பாதி முடிந்து விட்டது. இப்போது தான் சப்ளிமெண்டரி பட்ஜெட் வருகின்றநேரத்தில் 1986–87-க்கான Annual Financial Statement இந்த அவைக்கே வருகிறது.

நேற்று நம்முடைய அருமை நண்பர் மாண்புமிகு திரு. ரவீந் திரன் அவர்கள் ஏதோ ஒன்று சொன்னார்கள் என்று நீங்கள் கூட வருத்தப்பட்டீர்கள். அப்படி எல்லாம் பேசக் கூடாது என்று

துணை சபாநாயகர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்தத் தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய தலைவர் அவர்கள் மாத்திரம் அவருடைய இஷ்டத்திற்கு, அவருக்கு எப்போது சௌகரியமோ, அப்போது இந்த Annual Financial Statement-ஐ வைத்துக் கொள்ளலாம் என்று அவருக்கு மாத்திரம் விதி விலக்கு கொடுத்து இருப்போமேயானால், மாண்புமிகு உறுப்பினர் ரவீந்திரன் அவர்கள் சொல்லியது தவறு இல்லை என்றுதான் நான் நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, மத்திய அரசைப் பொறுத்தவரையில் சமீப காலத்திலே ஏராளமான பப்ளிக் கிரிட்டிசிசம்ஸ் இந்த Public Sector Undertakings பொது நிறுவனங்கள் எல்லாமே பயங்கரமான நஷ்டத்தில் ஓடிக் கொண்டு இருக்கின்றன என்று வந்திருக்கிறது. அது BHEL ஆகட்டும், அல்லது Coal India ஆகட்டும் அல்லது Steel Authority of India ஆகட்டும். இப்படிப் பல பொது நிறுவனங்கள் எல்லாம் ஏராளமான நஷ்டத்திலே ஓடிக்கொண்டு இருக்கின்றன. அதை எப்படியாவது கட்டுப்படுத்த வேண்டும், நிறுத்த வேண்டும் என்று பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் ஒரு தனி முயற்சியை எடுத்து, தொலைக் காட்சியிலே கூட அதற்காக ''ஜனவாணி புரோகிராம்'' ஒன்றைக் கூட ஏற்பாடு செய்திருந்தார்கள். ஏதோ, பியுரோகரசி தலையிலே அதைக் கட்டிவிட்டார்கள். For want of committed bureaucrats இந்த அதிகாரிகளிடத்திலே ஒரு கமிட்மென்ட் இல்லை. அதனாலே தான் இந்த பப்ளிக் செக்டார் நிறுவனங்கள் நஷ்டத்தில் ஓடிக்கொண்டு இருக்கின்றன என்றெல்லாம் சொல்லி, அதற்காக ''ஜனவாணி புரோகிராம்'' கூட ஏற்பாடு செய்தார்கள். ஆகவே இந்த பப்ளிக் செக்டார் நிறுவனங்கள் லாபகரமாக நடத்தப்பட வேண்டும், மக்களுக்கு, அரசாங்கத்திற்கு நஷ்டத்தை உண்டாக்கக் கூடியவை இயங்கக் கூடாது என்பதில் மத்திய அரசு மிக அக்கறையோடு செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது.

இன்னும் சொல்லப் போனால், எதிர்க்கட்சியில் உள்ள உறுப்பினர்கள், காங்கிரஸ் கட்சி சோசலிசப் பாதையிலிருந்து நழுவி விட்டது என்று சொல்லக் கூடிய அளவிற்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறது பல இடங்களில். அப்படிப்பட்ட நிலைமைகளில் கூட இதை எப்படியாவது சீர்படுத்த வேண்டும் என்று கடுமையான நடவடிக்கைகளை எல்லாம் மத்திய அரசு எடுத்துக் கொண்டு இருக்கிறது.





தமிழகம் நடத்தி வருகின்ற ஒரு பப்ளிக் செக்டார் நிறுவனம் தான் தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு. இது ஒரு white elephant. கிட்டத்தட்ட 200 கோடி ரூபாயை வருடம் ஒன்றுக்கு இதற்கு சப்சிடியாக கொடுத்தாலொழிய இந்த எலக்ட்ரிசிட்டி போர்டு சஸ்டெயின் ஆகுமா, தொடர்ந்து நடக்குமா என்பது சந்தேகம்.

[முற்பகல் 10-30]

சட்டக் கல்லூரியில் மாணவர்கள் எல்லாம் சேர்ந்து Mock Parliament என்ற ஒன்றை நடத்துவார்கள். அந்த Mock Parliament-ல் Finance Minister வருகின்ற நிகழ்ச்சிகளையும் அந்தச் சட்ட கல்லூரி மாணவர்கள் நடத்துவார்கள். அங்கே ஒரு கேள்வியை கேட்பார்கள் வேடிக்கையாக.

"From which countries India has not borrowed and name the countries from which India has borrowed"

என்று ஒரு மாணவர் கேட்பார். அதற்கு அந்த Mock Parliment-ல் உள்ள Finance Minister "From the countries wnich have refused to give loan to India"

என்று சொல்லுவார். இதை நான் நேரில் பார்த்து இருக்கிறேன். அதே மாதிரியாக இந்த மின்சாரத் துறை யார் கிட்டேயும் பாக்கி வைக்கவில்லை. ஊர் பூராவும் கடன் வாங்கி விட்டது. எல்.ஐ.சியா கொடு, மற்ற நிதி நிறுவனங்களா கொடு, ஸ்டேட் கவர்ண்மெண்டா கொடு, ஐ.டி.பி.ஐ.யா கொடு, இப்படி எங்கெங்கே யார் யார் கடன் கொடுக்கிறார்களோ ஒருவன் பாக்கி இல்லாமல் எல்லோரிடமும் கடன் வாங்கி இருக்கிற ஒரு நிறுவனம், இந்தியாவிலேயே மிகப் பெரிய சாதனையை தமிழ்நாடு மின்சார வாரியம் செய்து காட்டியிருக்கிறது. கடன் தான் வாங்கியிருக்கிறார்களே முதலை திருப்பிக் கொடுக்கப் போவது இல்லை. அது நன்றாகத் தெரிந்து போய் விட்டது. சரி, வட்டியையாவது கொடுப்பார்களா, இந்த மின்சார வாரியம், அதுவும் சந்தேகம்தான். அங்கே வருகிற ரெவின்யூவுக்கும் அவர்கள் பவர் ஜெனரேஷன், அட்மினிஸ்ட்ரேட்டீவ் எக்ஸ்பெண்டிச்சர், மெயின்டெனன்ஸ் இதை எல்லாம் கணக்குப் போட்டுப் பார்த்தால் நம்முடைய ஸ்டேட் கவர்ன்மெண்டு சப்சிடி கொடுத்தால்தான் அவர்கள் வட்டியைக் கூடக் கொடுக்க முடியும். ஸ்டேட் கவர்ன்மெண்டு வேண்டுமானால் நம்முடைய வட்டியைத் தள்ளி விடலாம், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் எத்தனையோ பேருக்கு வட்டியைத் தள்ளிக் கொடுத்து இருக்கிறவர். அவசியமான அவசர தேவை என்று பார்க்கிறபோது மனிதாபிமானத்தின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய ஸ்டேட் கவர்ன்மெண்டுக்குக் கொடுக்க வேண்டிய வட்டியைத்

தள்ளிக் கொடுத்து விடலாம். ஆனால் ஐ.டி.பி.ஐ.யோ, எல். ஐ.சி.யோ அல்லது மற்றநிதி நிறுவனங்களோ வட்டியைத் தள்ளி விடாது. ஆகவே வாங்கின கடனுக்கு வட்டியைக் கூடத் திருப்பிக் கொடுக்க முடியாத ஒரு தொழில் ஸ்தாபனத்தை நடத்த வேண்டியது அவசியம் தானா? இது நியாயம் தானா? என்பதை சீரியசாக சிந்திக்க வேண்டிய கால கட்டத்தில் நாம் இருக்கிறோம். இன்னும் சொல்லப் போனால் இந்த மின்சார வாரியத்தைப் பிழைக்க வைக்க முடியுமா? அதற்கு என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதையும் தீவிர திர ஆலோசனை செய்ய வேண்டிய கால கட்டத்தில் நாம் இருக்கிறோம்.

பப்ளிக் அண்டர்டேக்கிங்-ஐ பொறுத்தவரையில் அங்கே செண்டிரல் கவர்மெண்டில் சொல்லிவிட்டார்கள். Bureaucrats தான் காரணம் என்று. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அதே Law holds good இங்கே Bureaucrats மட்டும் காரணம் அல்ல, தொழிலாளர்களும் சேர்ந்துதான் இந்த மின்சார வாரியம் இன்றைக்கு இந்த நிலைமையை அனுபவித்துக் கொண்டிருக்கிறது. Cost consciousness என்று சொல்லுவார்கள். எந்த ஒரு நிறுவனத்தை எடுத்துக் கொண்டாலும் அதில் ஒரு Cost consciousness வேண்டும். நாம் உற்பத்தி செய்கிற பொருட்களின் விலை ultimate price கன்ஸ்யூமருக்குப் போகும்போது அது என்ன விலைக்கு விற்க வேண்டும் என்பது பற்றி முன்னாடியே ஒரு குறிக்கோளை நிர்ணயித்து அந்த இலக்கை அடைவதற்கு நாம் என்ன என்ன முயற்சிகளை எடுக்க வேண்டுமோ அந்த மாதிரி முயற்சிகளை யாருமே இதுவரை எடுத்ததாகத் தெரியவில்லை. சேர்மென்கள் வரலாம், போகலாம். ஆனாலும் இந்த Cost Consciousness ஒரு எத்தனைபேர்களோடு செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இவ்றுகளை நாம் நடத்தி இருக்கிறோமா? அதற்கான ஆராய்ச்சி என்று யாரேனும் ஒருவரை, அந்த விதத்தில் படித்த மேதையை Cost Controller நாம் அதற்கு நியமித்து அவரிடமிருந்து ஆலோசனை கேட்டு இருக்கிறோமா என்றால் இதுவரையில் இருப்பதாக எனக்கு ஞாபகம் இல்லை. அந்த ஒரு முயற்சியை எடுத்து இது எதனால் நஷ்டத்தில் போகிறது இந்தத் தொழிலில் எங்கே தவறு நடக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பது என்னுடைய யோசனை.

இதிலே உள்ள குறைகளை மட்டும் சொல்லிவிட்டுப் போவதற்கு நான் வரவில்லை. அது மற்றவர்கள் வேலை. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் என்னுடைய சின்ன அறிவுக்கு எட்டிய வரையில் எதை நிவர்த்திக்கச் சொல்ல முடியுமோ அதை சொல்லுகிறேன். அது சரியாகவும் இருக்கலாம், தப்பாக



வும் இருக்கலாம். என்னுடைய அறிவுக்கு எட்டியதைச் சொல்லுகிறேன். எனக்கு ஞாபகம் வருகிறது, ஒரு பாடலிலுள்ள வாசகம். வெற்றி பெற்ற மனிதர் எல்லாம் புத்திசாலி இல்லை. புத்தியுள்ள மனிதர் எல்லாம் வெற்றி காண்பதில்லை என்று சொல்வார்கள். இந்த 234 பேர்களிலே, எல்லோரும் புத்திசாலிகளாக வந்து உட்கார்ந்து விடவில்லை. தமிழகத்திலே இருக்கின்ற புத்திசாலிகள் எல்லாம் இங்கே வந்துவிடவில்லை. நான் ஒருவனே அதற்கு சாட்சி. நான் ஒன்றும் புத்திசாலி இல்லை. ஆனால் வந்துவிட்டேன்.

இப்போது காஸ்ட் கான்ஷியஸ்னஸ்ஸை நாம் கணக்கில் எடுத்துக்கொள்கிறோமா என்றால் இல்லை. நான் எனக்குத் தெரிந்த வரையில் படித்துப் பார்க்கும்போது, பவர் ஜெனரேஷன் தலைப்பை எடுத்துப் படித்ததில், அதிலே கிட்டத்தட்ட 5,800 மில்லியன் யூனிட்ஸ் நம்முடைய எண்ணூர், தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் மாத்திரம் உற்பத்தி பண்ணியிருக்கிறோம். 4,700 மில்லியன் யூனிட் நெய்வேலி ப்ராஜெக்ட், தெர்மல் ஸ்டேஷனில் நாம் வாங்கியிருக்கிறோம். பவர் பர்சேஸ் பண்ணியிருக்கிறோமே, அதற்குக் கொடுத்திருக்கிற பணத்தையும், பவர் ஜெனரேஷனுக்கு ஆகும் அடக்க விலையையும் கம்பேர் பண்ணிப் பார்க்கும்போது, அது சரியா, தவறா என்பது எனக்குத் தெரியாது. We are paying a higher amount to the Central Government, ie, to the Neyveli Lignite Corporation என்று எனக்குப் படுகிறது. நாம் அனல் மின் நிலையத்திலிருந்து உற்பத்தி பண்ணியிருக்கின்ற ஒரு யூனிட்டினுடைய காஸ்ட் எவ்வளவு ஆகின்றதோ, அதைவிட அதிகமான அளவிற்கு மத்திய அரசு நடத்துகின்ற நெய்வேலி தெர்மல் பிளாண்டிற்குக் கொடுத்திருக்கிறோம் என்று புலனாகின்றது. நாம் ஹைட்ரோ எலக்ட்டிரிக் ஸ்கீம் வைத்திருக்கிறோம். அதுதான் சீப்பெஸ்ட். நாம் உற்பத்தி பண்ணுகின்றோம். உற்பத்தி பண்ணுகின்ற பவருக்கு வடக்கிலுள்ள சிங்கரேணி கோலரீசிலிருந்து நமக்கு நிலக்கரி வரவேண்டும். இன்னும் அவசியமானால், நாம் கப்பலை வாங்கி, ஆஸ்திரேலியா, ஜப்பானிலிருந்து வரவழைக்க வேண்டும். இந்த நாடுகளிலிருந்து நிலக்கரியைக் கொண்டு வர வேண்டும். இதையெல்லாம் யோசனை பண்ணி, கணக்கெடுத்துப் பார்க்கிறபோது, அங்கேயிருக்கின்ற நிலக்கரியைக் கொண்டு வந்து, தூத்துக்குடியிலும், எண்ணூரிலும் வைத்து பவர் ஜெனரேட் பண்ணுகின்ற விலை, நாம் நெய்வேலியிலிருந்து வாங்குகிற விலையைவிட குறைவாகவே இருக்கிறது. ஆகவே நாம் அதிக விலை கொடுத்து வாங்குகிறோம். நெய்வேலியில் மின் உற்பத்தி பண்ணுவதற்கு நிலக்கரி பக்கத்திலே கிடைக்கிறது. நெய்வேலி தெர்மல் பிளாண்டிற்கு நெய்வேலியிலிருந்து கிடைக்கிற நிலக்கரி இன்பீரியராகக் கூட இருக்கலாம். நம் ஊரிலே கிடைக்கிற நிலக்கரியை வைத்து

[டாக்டர் கே. சௌரிராஜன்] [1986 நவம்பர் 20

மத்திய அரசாங்கம் ஒரு நிறுவனத்தை நடத்தி உற்பத்தி செய்
யும் மின்சாரத்தை அதிக விலை கொடுத்து நாம் வாங்குகிறோம்.
அது என்னுடைய கணக்கு, அது சரியோ, தவறோ எனக்குத்
தெரியாது. அமைச்சரவர்கள் இங்கே இருக்கிறார்கள், விளக்
கம் சொல்வார்கள் என்று நினைக்கிறேன்.

நாம் என்ன செய்திருக்க வேண்டுமென்றால்,
தெர்மல் பிளாண்ட் வருகிறபோதே நம்முடைய மாநில அரசு இந்த
தெர்மல்பிளாண்டை எங்களிடம் ஒப்படையுங்கள், நாங்களே
நடத்திக் கொள்கிறோம் என்று சொல்லியிருக்க வேண்டும்.
சென்ட்ரல் கவர்ன்மெண்ட் நடத்துகின்ற நெய்வேலி பழுப்பு
நிலக்கரிச் சுரங்கம் லாபகரமாக நடக்கிறது என்று சொல்கிறார்
கள். அந்த சேர்மனுக்கு பாராட்டுப் பட்டம் வழங்கப்படுகிறது.
நெய்வேலி தெர்மல் பிளாண்ட் பிரமாதமாக இயங்குகிறது,
லாபத்தில் ஓடுகின்றது என்றெல்லாம் சொல்கிறார்கள்.
ஆனால் நம்முடைய தெர்மல் பிளாண்ட் நஷ்டத்திலே ஓடு
கின்றது. காரணம், நாம் வாங்கக் கூடிய நிலக்கரி வெளியிலிருந்து
வருகிறது. கப்பலின் மூலம் வரக் கூடிய நிலைமைகள் எல்லாம்
வருகின்றன. எல்லா தெர்மல் பவரையும் சென்ட்ரல் கவர்ன்
மெண்ட்டே எடுத்து நடத்தட்டும். நமக்கு ஒரு பிக்சட்பிரைஸ்
கொடுக்கட்டும்; இல்லை, நெய்வேலி தெர்மல் பிளாண்ட்டில்
கெபாசிட்டிஸ்டேஜ் 1, ஸ்டேஜ் 2 வரப் போகிறது, இரண்டையும்
சேர்த்து நமக்குக் கொடுக்கட்டும். இப்படி வருஷா வருஷம்
ரூ. 200 கோடி கடன் கொடுத்துக் கொண்டிருப்பதைவிட,
மொத்தமாக சென்ட்ரல் கவர்ன்மெண்டிற்கு நாம் கடன்
பத்திரத்தை எழுதிக் கொடுத்து விட்டு, அந்த பிளான்ட்டை
நாமே ஸ்க்ரேப் வேல்யூ போட்டு, எக்சிஸ்டிங் வேல்யூ போட்டு
வாங்கினால் அங்கே வாங்குகின்ற இந்த எலக்ட்ரிசிடி காஸ்ட்,
விலை இதனால் குறையும் என்பது என்னுடைய தாழ்மையான
அபிப்பிராயம். நிச்சயமாக நம்முடைய மாநில அரசு, தமிழக
முதல்வர் அவர்கள் இந்த நிலைமையை பிரதமரிடம் எடுத்து
விளக்கிச் சொல்வார்களேயானால், நெய்வேலி பிளான்ட் 1,
பிளாண்ட் 2-யும் நாமே வாங்கிவிடலாம், நாமே நடத்த
லாம். I think the power w ll be cheaper also.
நடுவில் ஒருவன் வந்து லாபம் அடைவதைத் தவிர்க்க முடியும்.
இன்றைக்கு நம்முடைய முதல்வர் அவர்களுக்கு, பிரதம மந்திரி
யிடம் இருக்கக்கூடிய நல்ல செல்வாக்கை இன்ப்ளுயன்ஸ்
என்று ஆங்கிலத்திலே சொல்வார்கள். பயன்படுத்தினால் நம்மு
டைய மாநிலத்திற்கு ஒரு நல்ல முடிவு கிடைக்கும் என்பது என்னு
டைய தாழ்மையான அபிப்பிராயம். அதில் என்னைப் போன்ற
வர்கள் முதல்வர் அவர்களுக்கு உறுதுணையாக இருப்போம்.



1986 நவம்பர் 20]

(முற்பகல் 10–40)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடித்து விடுங்கள். இன்னும் 10 பேர்கள் பேசவேண்டும்.

டாக்டர் கே. சௌரிராஜன்: இதைப்பற்றி டிடெய்லாக பேச வேண்டுமென்றால் நிறைய நேரம் ஆகும். எனக்கு அதிக நேரமும் இல்லை. ஆனாலும் சம்-அப் பண்ணுவது பெட்டர் என்று நினைக்கிறேன். 5, 6 பாயின்ட்கள் எடுத்து வைத்தேன். அந்த பாயின்ட்களையாவது படிப்பதற்குத் தயவு செய்து நேரம் கொடுப்பார்கள் என்று நினைக்கிறேன். நான் முதலிலேயே சொன்னேன். இந்த பவர் ஜெனரேஷன், பவர் டிஸ்டிரிபியூஷன் இரண்டையும் ஒரே டிபார்ட்மென்ட் வைத்திருந்தது. ஜெனரேஷன் பண்ணுவதும் நாம்தான். டிஸ்டிரிபியூஷன் பண்ணுவதும் நாம்தான். இரண்டும் அன்வீல்டியாக இருப்பதால் தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டை இரண்டாக பவர் ஜெனரேஷன் ஒன்று என்றும் பவர் டிஸ்டிரிபியூஷன் மற்றொன்று என்றும் உடைக்க வேண்டும். சென்ட்ரல் கவர்ன்மென்ட் கையிலே பவர் ஜெனரேஷனைக் கொடுத்து விடலாம், அப்படிக் கொடுத்து விட்டால் அவர்கள் விலை ஏற்றினால் நாம் சொல்லி விட்டுப்போய் விடலாம். நாங்கள் என்ன பண்ணுவது? டிஸ்டிரிபியூஸன்தான் நாங்கள் பண்ணுகிறோம். விலை ஏறிப் போய் விட்டது, சென்ட்ரல் கவர்மெண்டில் கரி விலையை ஏற்றிவிட்டான். நிலக்கரி விலையை ஏற்றிவிட்டான். இந்த விலைக்குத்தான் நாங்கள் வாங்கியிருக்கிறோம். அதனால் நாங்கள் எப்படி விலையைக் குறைக்க முடியும் என்று அப்படியாவது சொல்லிவிடலாம். பவர் ஜெனரேஷன் பவர் டிஸ்டிரிபியூஷன் என பிரித்துக்கொள்வது It may be better for administration as well as for efficiency. இரண்டாவது மத்திய அரசாங்கத்திலே கேட்டு தெர்மல் பிளாண்டைத் தமிழகத்திற்கு சொந்தமாக்குவது. மூன்றாவது 1957-லே எலக்ட்ரிசிட்டி போர்டை கான்ஸ்டிடியூட் பண்ணினார்கள் என்று நினைக்கிறேன். எலக்டிரிசிட்டி போர்டை கான்ஸ்டிடியூட் பண்ணுகிறபோது அதிலே கவர்ன்மென்ட் அஃபிஷியல்ஸ்தான் இருந்தார்கள். நான்-அஃபிஷியல்ஸை எலக்டிரிசிட்டி போர்டில் வைக்கவில்லை. கோர்ட்டில் இருக்கிறது, சப்-ஜுடிஸ்யஸ் என்றெல்லாம் சொன்னார்கள். இதற்கெல்லாம் காரணம் என்னவென்று கேட்டால் கோர்ட்டில் சொல்லிவிட்டான் "Chairman is a person of the Board, the members of which are subordinate to the Chairman" சேர்மனுக்கு கீழே சபார்டினேட்டாக இருக்கிறவர்கள் அந்த போர்டில் இருந்தால் 'T e Chairman becomes more or less supreme or even I may say he becomes an autocrat. அதற்குக்கூட வாய்ப்பு இருக்கிறது என்றுதான் சொல்லியிருக்கிறார்கள் கோர்ட்டிலே, அதனால், 1957 எலக்ட்ரிசிட்டி போர்ட் ஆக்டில் I do not thtnk they have prohibited inducting non-officials.

அதனால் நான்-அபிஷியல்ஸ் 2, 3 பேர்களை இவர்களோடு எலக்டிரிசிட்டி போர்டில் மெம்பர்களாக போட்டால் It may improve the performance என்பது என்னுடைய அபிப்பிராயம். இந்தியன் ஒர்லைன்சில் டாடா அவர்களையும் நம் ஊரிலிருந்து பி. சி. ரெட்டி அவர்களையும் நான்-அபிஷியல்ஸ் மெம்பர்களாக போட்டிருக்கிறார்கள். அது மாதிரி நம்முடைய எலக்ட்ரிசிட்டி போர்டில் non-officials can be inducted as Members.

அடுத்தாற்போல் வருடா வருடம் எப்பொழுது கேட்டாலும் 18 சதவிகிதம் டிரான்ஸ்மிஷன் லாஸ், டிரான்ஸ்மிஷன் லாஸ் என்று சொல்கிறார்கள். நான் வந்த நாளிலிருந்து என்ன பெர்சன்டேஜ் என்று கேட்டால் 18 சதவிகிதம் டிரான்ஸ்மிஷன் லாஸ் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். வருடா வருடம் ஒரு கோடி ரூபாய் ரிசர்ச் புராஜக்ட் என்று ஒரு புது புராஜெக்ட் சொல்கிறார்கள். டிரான்ஸ்மிஷன் லாஸைக் குறைப்பதற்கு யாருமே எந்த விதமான முயற்சியும் எடுத்ததாகத் தெரியவில்லை. பேசாமல் ஒரு கன்சல்டன்சி சர்வீசஸ் யாரிடமாவது கொடுக்க குளோபல் டெண்டரை வெளிநாட்டிலிருந்து கூப்பிட்டு இந்த டிரான்ஸ்மிஷன்லாஸைக் குறைப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்தால், அதற்குத் தனியாக 10 கோடி ரூபாய் பணம் ஒதுக்கிக் கொடுத்தால், பரவாயில்லை கன்சல்டன்சி சர்வீசை யாரிடமாவது கொடுத்தால் பெட்டராக இருக்கும். அது கொஞ்சம் குறையும் நம்முடைய லாபத்தையும் அதிகப்படுத்தும்.

அடுத்தபடியாக, தமிழக முதல்வர் அவர்கள் எப்போதுமே ஏழைகளின்பால், எளியவர்களின்பால் அன்பு உள்ளவர்கள், இரக்க குணம் உள்ளவர்கள், குடிசைகளுக்கு மின் விளக்குத் திட்டம் என்று கொடுத்திருக்கிறார்கள். விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் மின் கட்டணம் என்று கொடுத்திருக்கிறார். ஆனால் ஒரு Mirage (மிராஜ்) ஏமாற்றமான ஒரு நிலைமை. அவருக்கு ஒரு மனதிருப்தி, ஏழைகளுக்குச் செய்திருக்கிறோம். என்று. இந்த ஏழைகளுக்கும் நம் முதல்வர் செய்திருக்கிறார் என்று. ஆனால் உண்மையில் பார்க்கப்போனால் இதில் ஒன்றும் இல்லை. 200 கோடி ரூபாய் கொடுக்கப் போகிறோம் இதைப் பிழைக்க வைப்பதற்கு. இந்த 200 கோடி எங்கிருந்து வருகிறது? எக்ஸைஸ் டியூட்டி, சேல்ஸ் டாக்ஸ், எண்டர்டெயின்மென்ட் டாக்ஸ் இதிலிருந்துதான் நாம் கொடுக்கப் போகிறோம். After all the poor man is being taxed again in a different way. அதை எப்படித் தடுப்பது/ உலக வங்கித் திட்டம் வரும்போது காஸ்ட் சப்சிடி ஸ்கீம் என்று கொண்டு வருவான். The higher income group must pay for the lower income group. ஏழைக்குத் கொட்டகை போட்டு தருகிறோம் என்று சொன்னால் எம்.ஐ.ஜி., எல்.ஐ.ஜி. கொடுக்கிறோம. கடன் வாங்கு





கிறான் என்றால் 18 சதவிகிதம் இன்டரஸ்ட் கொடுக்க வேண்டும். இந்தக் குடிசையில் இருப்பவன் 4 சதவிகிதம் அல்லது இண்டரஸ்ட் பிரியாக எடுத்துக்கொள்வான் என்று ஒரு ஸ்கீம் இருக்கிறது It is called 'cost subsidy scheme இந்த ஸ்கீம் எலக்ட்ரிசிட்டி போர்டில் இன்ட்ரடியூஸ் பண்ணி அதன் மூலமாக ஏதாவது ஒரு மின் விளக்குத் திட்டம் ஹைட்ரோ எலக்ட்ரிக் பவர் பூராவும் ஏழைகளுக்குக் கொடுத்துவிட வேண்டும். இந்த புரட்சிகரமான திட்டத்தை வைக்கலாம்.

கடைசியாக, Electricity is a very important necessity for men, அதை வேஸ்ட் பண்ணக்கூடாது. தண்ணீரை விட ரொம்ப அவசியம் எலெக்டிரிசிட்டி என்பதற்கு சரியான ப்ராபகண்டா இல்லை. நாம் எல்லாம் கூடப் போய்விடுகிறோம். இந்த பேன் இங்கே சுற்றிக்கொண்டே இருக்கின்றது. இரண்டு மணி நேரமாக. இந்த எலேக்டிரிசிட்டி ஒரு விவசாயினுடைய பம்ப்செட்டினை இயக்கும் இரண்டு மணி நேரத்திற்கு. அதை யாரும் கவனிப்பது இல்லை. எலெக்டிரிசிட்டி தெஃப்ட்டை நாம் கன்ட்ரோல் பண்ணுவதற்கு deterrent law for punishment கொண்டு வந்தால், Electricity Board will improve, என்று என்னுடைய 'சஜெஷன்களைச் சொல்லி, தவறு இருந்தால் அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டலாம்.

'ஜனவாணி' புரோகிராம் மாதிரி—அமைச்சர் திரு. கே.ஏ.கே. அவர்கள் face to face என்று புதிதாக ஒரு பிரோகிராமை தமிழ்நாட்டிலே ஆரம்பித்து இருக்கிறார்கள் நேற்று. ஜனங்கள் கேள்வி கேட்கிறார்கள். இங்கே கேட்பதை விட, அமைச்சர் திரு. சுவாமிநாதன் அவர்களும் face to face programme என்று சொல்லி, கன்ஸ்யூமர்களுடன் பேசினால் எவ்வளவு தவறுகள் இருக்கின்றன என்று தெரியும். (மணியடிக்கப் பெற்றது.)

கடைசியாக, தொகுதியில் பல கம்ப்ளெயிண்ட்ஸ் இருக்கின்றன. 15 ஆம் தேதி பில் கொடுத்து விட்டால், 16 ஆம் தேதி கட்டு, அவர் எம்.பி. யாக இருந்தாலும், எம்.எல்.ஏ. வாக இருந்தாலும் கட்டு' என்கிறார்கள். ரொம்ப அருமையான நிர்வாகம் அடிக்கடி எலெக்டிரிசிட்டி கட் ஆகிறதே, உங்களை யார் கட் பண்ணுவது என்று கேட்பதற்கு ஆள் இல்லை. எலெக்டிரிசிட்டி கட் ஆகிவிடுகிறது என்று போய்க் கேட்டால், டிரான்ஸ்பார்மர் வேண்டும், அதைப் போடுவதற்கு ரூ. 60 ஆயிரம் இல்லை. நீ வாங்கிக் கொண்டு வா.......................... (மணியடிக்கப்பெற்றது) என்னுடைய தொகுதி............ (குறுக்கீடு).

[1986 நவம்பர் 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதிக நேரம் பேசிவிட்டீர்கள். உங்கள் கட்சியில் வேறு உறுப்பினர் பேசும்போது அதைச் சொல்லலாம். (குறுக்கீடு).

**டாக்டர் கே. சௌரிராஜன் :** தலைவர் அவர்களே, நாங்கள் ஆளும் கட்சியோடு சேர்ந்த தோழமைக் கட்சியாக இருந்தாலும், பிரதான எதிர்க்கட்சி, எனவே, எங்களுடைய கருத்துக்களைச் சொல்ல அனுமதியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சீக்கிரம் முடியுங்கள்.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** எவ்வளவோ குறைகள் இருக்கின்றன. என்னுடைய சொந்தக் கட்டிடத்திலேயே கூட 3 பேஸ் சப்ளைக்காக அலைந்து கொண்டிருக்கிறேன். முதலிலே மீட்டர் வாங்கிக் கொடுப்பாயா என்றார்கள். வாங்கிக் கொடுப்பேன் என்றேன். பிறகு கேபிள் வாங்கிக் கொடுப்பாயா என்றார்கள். வாங்கிக் கொடுப்பேன் என்றேன். ஆனால் இன்னும் வரவில்லை. இது மாதிரி பொதுமக்களிடம் ஏகப்பட்ட புகார்கள் அதிருப்தி இருக்கிறது. இதையெல்லாம் சேர்மனும், அமைச்சர் அவர்களும் உடனடியாகத் தலையிட்டு—face to face programme வைத்தால்நானும் சொல்வேன். பொதுமக்களும் வந்து சொல்வார்கள்; வாய்ப்பு அளித்ததற்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

***திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த நிதி நிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களை நான் இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன். நேற்றைய தினம் இந்த விவாதத்திலே கலந்து கொண்டு பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் பல பேர், அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பது போல், மின் வாரியத்தைச் சாடுகிற சாக்கில், அந்த வாரியத்தினுடைய தலைவரை இங்கே சாடினார்கள். பாராட்ட வேண்டிய பல நல்ல காரியங்களை விட்டுவிட்டு, குறைகளையே ஏன் தேடிக்கொண்டிருந்தார்கள் என்பதுதான் எனக்குப் புரியவில்லை.

வாரியத்திலே இருந்து வருகிற வியாதிகளுக்கு அதிர்ச்சி வைத்தியம் அளிக்கிறபோது, வலியைத் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். வியாதி குணமாவதைப் பார்க்கவேண்டுமே தவிர, வியாதிக்கு வைத்தியம் பார்க்கிறபோது ஏற்படுகிற வலியைப் பற்றி நாம் அதிக அக்கறை காட்டக்கூடாது என்பதைத்தான் இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்வேன்.



1986 நவம்பர் 20] [திரு. செ. செம்மலை]

ஒரு தீர்ப்பை வைத்து ஒரு அதிகாரியை விமர்சிக்கலாம் என்று சொன்னால், அந்தத் தீர்ப்பே கூட விமர்சனத்திற்கு உட்பட்டதாக அமைந்துவிடும் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே பேசிய அத்தனை உறுப்பினர்களும் ஒட்டுமொத்தமாக ஒரு கருத்திலே ஒன்றிப் போய் இருந்தார்கள். அதுதான், மின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும், மின் உற்பத்தியில் இந்த அரசாங்கம், அதிகமான அக்கறை செலுத்தவேண்டும் என்பதாகும். எனவே, அந்த வகையில் மின் உற்பத்திக்கு அதிக அக்கறை எடுத்துக்கொண்டு, மின் உற்பத்தியை அதிகமாகப் பெறவேண்டும் என்ற அந்த அக்கறையோடு இந்த வாரியத்திற்குப் பொறுப்பேற்றிருக்கிற அந்தத் தலைவர் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக்குப் பெருமை சேர்க்கிற வகையில், உலக வங்கியிலிருந்து சுமார் ரூ. 3,000 கோடி அளவுக்கு நிதியைப் பெற்று வந்தார்களே அதை நாம் பாராட்ட வேண்டாமா என்பதைத் தான் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

அதைப் போலவே 1984-85 மற்றும் 1986-87 ஆம் ஆண்டுகளில் நேற்றைய தினம் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், தமிழகத்தில் மின் கட்டணத்தை உயர்த்தாமல், வேறு எந்த வகையிலும் நம்மீது பாரத்தை ஏற்றாமல் கிட்டத்தட்ட ரூ. 192.5 கோடி அளவுக்கு வருமானத்தை மின் வாரியத்திற்குப் பெருக்கிக் காட்டி, establishment and Admintstrative expenses-ஐ பொறுத்த வரையில் மிகக் குறைந்த அளவில் வைத்து அதாவது ரூ. 31.77 கோடி மட்டும் நிர்வாகச் செலவுக்கு ஒதுக்கி மின் வாரிய நிர்வாகத்திலே சிக்கனத்தைக் கடைப்பிடித்தாரே அதை நாம் பாராட்டக் கூடாதா என்றுதான் நான் இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன்.

அதைவிட முக்கியமான ஒன்று, நமது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய எண்ணத்திற்கு ஏற்ப—விருப்பத்திற்கு இணங்க—விவசாயப் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதிலும் மற்றும் கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதிலும், குடிசைகளுக்கு இலவச மின் இணைப்பு கொடுப்பதிலும் நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டனை வையும் தாண்டி, இன்னும் சொல்லப் போனால் மிஞ்சி, சாதனை படைத்திருக்கிறாரே அதை நாம் பாராட்ட வேண்டாமா என்றுதான் இந்த நேரத்தில் நான் கேட்க விரும்புகிறேன்.

ஆளும் கட்சி உறுப்பினர் என்ற வகையில் நான் அவரைப் பாராட்டவில்லை. இன்றைக்குப் புள்ளிவிவரங்கள் பேசிக் கொண்டிருக்கின்றன. Out of 57.05 lakhs pump sets, Tamil Nadu accounts for 10.33 lakhs pump sets, occupying the first place, fcllowed by Maharashtra with 9.55 lakhs pump sets இன்றைக் கிருக்கிற நிலையில் தமிழ்நாட்டில் இருக்கிற 12 லட்சம் பம்பு செட்டுகளில் 10.74 லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுத்து விவசாயிகளுடைய வாழ்க்கையின் ஒரு மறுமலர்ச்சி யை உருவாக்கியிருக்கிற துறைதான் மின்சாரத்துறை. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தில் மற்ற மாநிலங்களை விட அதிகக் குறியீட்டை எட்டியிருக்கிறோம் என்றுதான் புள்ளிவிவரங் கள் காட்டுகின்றன. அதைப் போலவே ரூரல் எலெக்ட்ரிபிகே ஷனை எடுத்துக் கொண்டாலும் The progress of the Rura electrif cation on the whole shcws that the S ates such' as Kerala Hary-ana and Punjab have atta:ned 100 percent electrification cf their villa ges என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மாநிலங்கள் எல்லாம் சின்னஞ்சிறு மாநிலங்கள். மேலும் இயற்கையான ரிசோர்சஸ் அதிகமாக இருக்கிற மாநிலங்கள் எனவே அவர்கள் அந்தக் குறி யீட்டை எட்டியதிலே எந்த வியப்பும் இல்லை. ஆனால் பற்றாக்குறை மாநிலமாக இருக்கிற, மின் தட்டுப்பாடுள்ள மாநிலமாக இருக்கிற தமிழகம் இந்த குறியீட்டைத் தாண்டு வது என்பது பெரிய சாதனையாகும். In fact, Tamil Nadu has electrified 99.7 percent of the villages, Maharashtra 92.8 percent என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். கிட்டத்தட்ட இங்குள்ள 64,012 கிராமங்களில் 63,648 கிராமங்களுக்கு நாம் மின் இணைப்பு கொடுத்து சாதனை படைத்திருக்கிறோம். அந்த வகையில் 99.7 சதவீதம் அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக் கிறோம். மற்ற மாநிலங்களை எடுத்துக் கொள்வோமானால், அண்டையிலுள்ள ஆந்திரப் பிரதேசம் 83.9 சதவீதத்தைத் தான் எட்டியிருக்கிறது. பீகார் 49.4 சதவீதத்தைத் தான் எட்டியிருக்கிறது. மேற்கு வங்காளம் 50.4 சதவீதத்தையும், உத்திரப் பிரதேசம் 56.0 சதவீதத்தையும்தான் எட்டியிருக் கின்றன. எனவே பல்வேறு இடையூறுகளுக்கிடையே நாம் இந்தச் சாதனையைப் புரிந்திருக்கிறோம் என்பதை நான் மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மின் உற்பத்தியைப் பொறுத்தவரை நமது மாநிலம் ஒரு சர்ப்ளஸ் மாநிலமல்ல. இது ஒரு பற்றாக்குறை மாநிலம். மின்சாரம் இங்கே அதிகமாகத் தேவைப்படுகிறது. நம் தேவை யைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட நிதிநிலை அறிக்கையிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1989-90 ஆம் ஆண்டில் நம்முடைய மின்சாரத் தேவையின் அளவு





4,142 மெகா வாட். ஆனால் நம்மிடம் கைவசத்தில் இருக்கிற திட்டங்களின் மூலமாக இன்றைக்கு உற்பத்தியாகிற மின்சாரத் தின் அளவு 1,416 மெகாவாட்தான். அது போக மைய அரசின் பல்வேறு மின் நிலையங்களிலிருந்து நமக்குத் கிடைக்கும் மின் சாரத்தின் அளவு 472 மெகா வாட். அந்த வகையில் பார்க்கிற போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கை யில் சொல்லியிருப்பதைப் போல் வரும் 7-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் கூடுதலாக மின் உற்பத்தித் திட்டங்களை எடுத்துச் செயல்படுத்துவதில் மிக முக்கியமாக உள்ள இடை யூறு நிதி வசதிதான். எனவே இதற்காக நிதியை அதிகரிக்க வேண்டும் என்பதுதான் இன்றைக்குள்ள நிலைமையாகும்.

நாம் மத்திய அரசிடம் பல திட்டங்களுக்கு அனுமதியைக் கேட்டிருக்கிறோம். மைய அரசு தயங்காமல் வளர்ந்து வரு கிற, ஆர்வத்தோடு திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று திட்டியுள்ள இந்த மாநிலத்திற்கு அதிக திட்டங்களுக்கான அனு மதி வழங்க வேண்டும். அதே சமயத்தில் நிதியுதவியும் அதிக மாகச் செய்யவேண்டும்.

**மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன் முத்துராமலிங்கம்:** நேற்று பேசுகின்றபோது ஒரு கருத்தைச் சொன்னார். அதோடு நான் உடன்பாடு உள்ளவன். மைய அரசாங்கத்தின் அணுகு முறையைச் சுட்டிக்காட்டி அவர் பேசுகின்றபோது ஒன்றைச் சொன்னார்கள். தேவையில்லாமல் அனல் மின்சார நிலையத்தை, நிலக்கரி இல்லாத மாநிலங்களில் ஆரம்பித்து எங்கேயோயிருந்து நிலக்கரியைக் கொண்டு வந்து அதற்குப் போக்குவரத்துச் செலவு அதிகரிக்கும் வகையில் நிலைமையை உருவாக்கி, விலை போகாத சரக்குகளைத் தள்ளி விடுகிற அந்த முயற்சியில் ஈடு படுவதைவிட தமிழ்நாடு போன்ற கடலோர மாநிலங்களில் அணு மின் நிலயங்களை அமைக்க மத்திய அரசு முயற்சிக்க வேண்டுமென்று சொன்னார்கள். நானும் அதை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். மைய அரசாங்கம் தேவைக்கு மேல் அனல் மின் நிலையங்களை ஆரம்பிப்பதை விடுத்து நமது சர்க்கார் கேட்டுக்கொண்டிருக்கிற அணு மின் நிலையங்களுக்கு அதிக அளவில் அனுமதியைத் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மைய அரசைப் பொறுத்தவரையில், இன்றைக்கு இந்த மாநில சர்க்கார் இருக்கின்ற நிலைமையில் இரண்டு காரியங் களை உடனடியாகச் செய்ய வேண்டும். இன்றைக்கு நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் Power Plant, சம் பந்தப்பட்ட வரையில் ஒரு பிரையாரிட்டி ஏரியாவாக உடனடி

[திரு. செ. செம்மலை] [1986 நவம்பர் 20

யாக வைக்க வேண்டும். இப்போது வடபுலத்திலேயுள்ள சில மாநிலங்களை மட்டும் 'பிரையாரிட்டி ஏரியா' என்று சொல்லி மின் உற்பத்திக்கு அதிகமான பணத்தை ஒதுக்கிக் கொண்டிருக்கிறார்கள். மைய அரசு நம்முடைய மாநிலத்தை 'பிரையாரிட்டி ஏரியா' வாக உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஏற்கெனவே மைய அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நலிவடைந்த நம்முடைய மாநிலம் போன்ற மாநில மின்சார வாரியங்களுக்கு நிதியுதவி அளிக்கின்ற வகையில் மின்சார வாரிய கார்ப்பரேஷன் உடனடியாக அமைத்துத் தேவையான நிதியுதவியை மாநில மின்வாரியங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற இந்த இரண்டு கருத்துக்களையும் நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே அதிக திட்டங்களை நிறைவேற்றி மின் உற்பத்தியைப் பெருக்கிவிடுவோமானால் நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து இருக்கின்ற சில சிக்கலான சூழ்நிலைகளை இந்தத் துறையினுடைய கவனத்திற்கும், மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன். இன்றைக்கு புரட்சித் தலைவருடைய அரசாங்கம் விவசாயிகளுக்கு எவ்வளவோ சலுகைகளை அளித்துக் கொண்டிருக்கிறது. இங்கே ஒரு எச்.பி.க்கு ஆண்டு ஒன்றுக்கு 75 ரூபாய் செலுத்தினால் போதும். மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, வட மாநிலங்களான உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் 300, 350 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. இவ்வளவு பெரிய சலுகைகள் அளித்திருந்தாலும் விவசாயிகள் சிலர் துன்பத்தில் சிக்கி சிரமப்படுகிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இன்றைக்கு நிலத்தடி நீரின் மட்டம் குறைந்து கிணற்றில் நீர் இல்லாத நிலைமை ஏற்படுகிறபோது விவசாயிகள் விவசாயத்தைப் பெருக்க வேண்டும் என்பதற்காக மாற்று ஏற்பாடாக கிணற்றில் போர்-வெல் போட்டு கம்ப்ரெசன் மோட்டார் வைக்க வேண்டிய சூழ்நிலையில் அங்குள்ள ஸ்தல அதிகாரிகளிடம் அனுமதியைக் கேட்டால் அவர்கள் அந்த அனுமதியைக் கொடுக்கத் தங்களுக்கு அதிகாரம் இல்லையென்று கூறுகிறார்கள். தேவையின் அடிப்படையில் விவசாயிகள் அதைப் போட்டுக் கொண்டால் உடனடியாக Anti-Power Theft Squad அவர்களைப் பிடித்துவிடுகிறது. அப்படிப் பிடிக்கிறபோது அதை ரெகுலரைஸ் செய்யுங்கள் என்று கேட்டால் அவர்கள் செய்யாமல் அந்த விவசாயிகள் மீது பெனால்ட்டியைப் போடுகிறார்கள். அந்த அன்-ஆத்தரைஸ்ட் கனெக்ஷனுக்காக அவர்கள் போடும் பெனால்ட்டி என்பது



1986 நவம்பர் 20] [திரு. செ. செம்மலை]

ஒரு சாதாரண தொகையல்ல. அவர்கள் மூன்று மாதங்களுக்கு வைத்திருந்தாலும் one year back period என்று கணக்குப்போட்டு ஒரு வருஷ காலத்திற்குத் தண்டனையை விதிக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதேபோல பத்து மணி நேரத்திற்கு ஓடினால் எந்த அளவுக்கு மின்சாரம் செலவாகும் என்ற அந்தத் கணக்கையும் எடுக்கிறார்கள். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கிராமத்தில் இருப்பவர்கள் நாங்கள். எந்தக் கிணற்றில் பத்து மணி நேரத்திற்கு நீர் இறைக்க முடியும்? எந்த ஊரில் பத்து மணி நேரம் தொடர்ந்து மின்சாரம் கிடைக்கிறது? எனவே விவசாயிகள் தங்களுடைய வசதியைப் பெருக்கிக் கொள்ள முடியாத நிலையில் நிர்வாகத்தினுடைய கோளாறு காரணமாக, நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள் காரணமாக இத்தகைய இடர்ப்பாடுகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். எனவே நான் அதிகாரிகளிடம் இப்படிப்பட்ட விவசாயிகளிடமிருந்து அப்ளிகேஷன் வாங்கி அவற்றை ரெகுலரைஸ் செய்யலாமே என்று கேட்டால் அவர்கள் எங்களுக்கு cause of action அப்போது வருவதில்லை. ஸ்குவாட் பிடித்து எங்களிடம் ஒப்படைத்த பிறகுதான் cause of action வருகிறது என்று சொல்லுகிறார்கள். ஆகவே ஒரு விவசாயி தன்னுடைய கிணற்றில் போர் போட்டு 'கம்ப்ரசன் மோட்டார்' வைத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டுமென்று கேட்கும்போது உடனடியாக ஸ்தல அதிகாரிகள் அதை ஏற்றுக்கொண்டு, அதற்கு அங்கீகாரம் கொடுத்து உதவி செய்ய வேண்டும்.

(முற்பகல் 11-00)

இல்லையென்றால் அவர்கள் இவ்வளவு கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. ஒருவேளை தவறிப்போய் ஒரு விவசாயி கம்பரெசன் மோட்டார் வைத்துவிட்டால், பெனால்ட்டி கால்குலேட் செய்யும்போது, nature of cu;ltiva:ion, availab lity of water, number of hour us(d actually இவற்றையெல்லாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இவற்றையெல்லாம் கணக்கிட்டு, விவசாயிக்கு நியாயமான தண்டனை கொடுத்தால் நல்லது. அதைவிட, விவசாயி என்றைக்கு விரும்புகிறானோ, அன்றைக்கு ஸ்தல அதிகாரிகளே மனுக்களை வாங்கி, கம்ப்ரெசன் மோட்டார் வைத்துக்கொள்ள அனுமதி வழங்க வேண்டும். இதற்கு சீனியாரிட்டி தேவையில்லை. மேலும் ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்து அவர்களுக்குத் தண்டனை கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. செ. செம்மலை] [1986 நவம்பர் 20

அடுத்து, தெரு விளக்குகள் பொறுத்தவரையில் பிரச்சினை இருக்கிறது. தெரு விளக்கைப் பொறுத்தவரையில், சீனி யாரிட்டி அடிப்படையில் வழங்கி வருவதாக சென்ற ஆண்டு நான் பேசிய பேச்சுக்குத் துறை தன்னுடைய பதிலை அளித் திருக்கிறது. Action taken report என்று மின்சார வாரியம் கொடுப்பதை நான் வரவேற்கிறேன். இதைப்போல, உறுப்பினர்கள் பேசும் பேச்சுகளுக்கு, மற்ற அமைச்சர்களும் பதிலைத் தயாரித்துக் கொடுக்க, மாண்புமிகு துணைத் தலைவர வர்களே, தாங்கள் உத்திரவிட்டால், இன்னும் பிரயோசன மாக இருக்கும் என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்பு கிறேன். இப்போது தெரு விளக்கு அமைப்பதற்கு சீனி யாரிட்டி பார்க்கிறார்கள். ஓவர்-ஆல் சீனியாரிட்டி பார்க் கிறார்கள். செக்ஷன் சீனியாரிட்டி அது அல்ல. இதைத் தவிர்க்க வேண்டும். தெரு விளக்கைப் பொறுத்தவரையில், விண்ணப்பம் போடுவது கிராமப் பஞ்சாயத்து, அதற்குப் பணம் கட்டுவது கிராமப் பஞ்சாயத்து. எந்த இடத்தில் தேவை என்று சுட்டிக் காட்டுவது கிராமப் பஞ்சாயத்து. எனவே எத்தனை அப்ளிகேஷன்கள் போட்டாலும், எந்த ஊருக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமோ, அந்த ஊருக்கு முன்னுரிமை கொடுத்து, தெரு விளக்கு அமைக்க வேண்டும். சீனியாரிட்டி பிக்ஸ் பண் ணுவதை பஞ்சாயத்து அல்லது யூனியன்களுக்கு விட வேண்டும் (மணி அடிக்கப்பெற்றது).

அடுத்து, அகதிகள், நெசவாளர்கள், ஆதிதிராவிடர்கள் காலனிகள் அமைக்க கடனோடு, அரசு மானியமும் கொடுக் கிறது. அந்தக் காலனிகளுக்கு தெரு விளக்குப் போட வேண்டு மென்று சொன்னால்கூட சீனியாரிட்டி பார்க்கிறார்கள். ஊர் உருவாகி பல ஆண்டுகளாகியும் தெரு விளக்கு வசதி கிடைக்க வில்லை. அரசாங்க உதவியுடன் ஏற்படுகிற காலனிகளைப் பொறுத்தவரையில், அவற்றை special ca egory ஆக வைத்து, தெரு விளக்கு அமைப்பதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌரிராஜன் : அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இன்றைக்கு மின்சாரம் மலிவு விலையில் கிடைக்கிறது என்பதால் தாராளமாகச் செலவிடு கிறார்கள். அப்படிச் செலவிடுவதைக் குறைக்க வேண்டும். மின்சாரத்தை வீணாக உபயோகப்படுத்துவதை அதிக அள விலே குறைத்து, அதைக் கட்டுப்படுத்தி உபயோகிக்க வேண்டும். இன்றைக்கு பெட்ரோல் விலை அதிகமாகிவிட்டது என்பதால் கார் வைத்திருந்தவர்கள் எல்லாம் ஸ்கூட்டர் வாங்கிவிட்டார் கள். ஸ்கூட்டர் வைத்திருந்தவர்கள் எல்லாம் சைக்கிள் வாங்கி விட்டார்கள். ஆனால், மின்சாரம் மலிவு விலையில், அதிகமாகக் கிடைக்கிறது என்பதால் தாராளமாக உபயோகிக்கிறோம்.



1986 நவம்பர் 20] [திரு. செ. செம்மலை]

அதைத் தவிர்க்க வேண்டும். அதற்கு மின்சார வாரியம் நட வடிக்கை எடுக்க வேண்டும். கூட்டுறவு வாரம், வன விலங்கு வாரம் கொண்டாடுவதுபோல, ஒரு சிக்கன வாரத்தைக் கொண் டாட மின்சார வாரியம் ஏற்பாடு செய்து, மக்களை educate செய்ய வேண்டும். மக்கள் மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன் படுத்த மின்சார வாரியம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இன்னும் ஒரே ஒரு பிரச்சினை. மின்சார வாரியத்தில் Helper பதவிக்கு ஆள் எடுப்பதாகக் கேள்விப்படுகிறேன். Wireman, Lineman ஆகிய பதவிகளுக்கு ஆள் எடுத்து 7, 8 ஆண்டுகள் ஆகின்றன. இப்போது Helper பணியில் காலியிடம் ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பதவிகளைப் பூர்த்தி செய்யும்போது, ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். வாரியத்தில் casual labour, piece-meal contract-ல் நிறைய பேர், 7, 8 ஆண்டுகளாக இருக்கிறார்கள். அவர்கள் நிரந்தரப் பணியாளர்கள் போல் பணியாற்றுகிறார்கள். அப் படி piece-meal contract chit agreement போட்டு பணி யாற்றும் ஊழியர்கள் பற்றி ஸ்தல அதிகாரிகளுக்கு நன் றாகத் தெரியும். அவர்களில் தகுதியுள்ளவர்களுக்கு Helper பணியில் நியமிக்க முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட் டுக் கொள்கிறேன்.

எவ்வளவோ சங்கடங்களுக்கிடையிலே சாதனை படைத் துவரும் மின்சார வாரியத்தின் வளர்ச்சிக்கு இத்துறைக்கு முன்னால் பொறுப்பேற்றிருந்த அமைச்சரவர்களின் முயற்சி காரணமாக இருக்கிறது. இந்தத் துறைக்குப் பொறுப்பேற் றிருந்த முன்னாள் அமைச்சரவர்களும், வாரியத் தலைவரவர் களும் மின் உற்பத்திக்கு அதிக அக்கறை எடுத்திருக்கிறார்கள். அதைப்போல இப்போது பொறுப்பேற்றுள்ள மின் துறை அமைச்சரவர்களும் அதிக அக்கறை எடுத்து, மின்சாரத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய மாநிலத்தைத் தன்னிறைவான மாநிலமாக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. அ. பிரணவநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1984-85 ஆம் ஆண்டுக்கான துணை நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு திரா விட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விழைகிறேன். 20-ஆம் நூற்றாண்டில் மனித சமுதாயம் வாழ்வதற்கு, வளர்ச்சி பெற்று பிறநாடுகளுடன் தலை நிமிர்ந்து நிற்பதற்கு, பொருளாதாரத்தில், விஞ்ஞானத்தில், தொழில் வளர்ச்சியில் முன்னேறி நிற்பதற்கு, தவிர்க்க முடியாதது இன்றியமையாதது மின்சாரம் என்பதனை யாரும் மறுத்துவிட

முடியாது. ஒரு நாடு சீரோடும் சிறப்போடும் எழில் மிக்கதாக
உலக நாடுகளோடு போட்டிபோட்டு நிற்க வேண்டுமென்றால்
மின்சாரம் அவசியமானது என்பதை மனிதனாகப் பிறந்த
யாரும் ஒதுக்கிவிட முடியாது. எனவே வளர்ந்து வரும் நாக
ரீகத்தில் உலக நாடுகள் உயர்ந்து வருகின்றன என்றால் அது
மின்சாரத்தினால்தான் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது.
அந்த அளவுக்கு மின்சாரம் தேவைப்படுகின்றது. அன்றாட
மக்களின் வாழ்வில் 24 மணி நேரமும் தேவைப்படுகின்ற மின்
சாரம் உயிர்ப் பிரச்சினையாக இருக்கின்றது என்பதையும்
நாம் மறுக்க முடியாது.

நம் தமிழகத்தில் 1948 ஆம் ஆண்டு மின் சக்தி வழங்கல்
சட்டத்தின் 61வது பிரிவிற்கு இணங்க தமிழ்நாடு மின் வாரியம்
அதன் நிதிநிலை அறிக்கையை 1948 ஆம் ஆண்டிலிருந்து 1986
ஆம் ஆண்டு வரையில் ஏறத்தாழ 38 ஆண்டுகளாக வைத்துக்
கொண்டிருக்கின்றது. இந்த 38 ஆண்டுகளாக மின்சார உற்
பத்தி எந்த அளவுக்குப் பெருகியிருக்கின்றது என்று பார்க்க
வேண்டும்.

1951ஆம் ஆண்டு 156 கோடியிலிருந்து 1966 வது ஆண்டு
வரை 15 ஆண்டுகளில் 1,370 கோடியாக உயர்ந்திருக்கின்றது.
1966-69-ல் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1,470
கோடி, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2254 கோடியாக
1974 வரையில் உயர்ந்திருக்கின்றது. ஆகவே 1974 லிருந்து
12 ஆண்டுகளுக்குப் பிறகு, நிறுவுதிறன் 1985-86-ம் ஆண்டு
வரை 3,613 கோடியாக உயர்ந்திருக்கின்றது என்பதை இந்த
மன்றத்திற்கு நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்
றேன். இந்த 12 ஆண்டுகளில் 1,359 கோடிதான் உயர்ந்திருக்
கின்றது இந்த அரசில். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்
காலத்தில் வருமானம் ரூ. 500 கோடிதான். ஆனால் இன்றைய
தினம் ஆண்டு வருமானம் ரூ. 3,200 கோடிக்கு மேலாக இருக்
கின்றது என்பதை நான் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

மின்சார உற்பத்தி, புனல் மின்சாரம், அனல் மின்சாரம்,
அணு மின்சாரம் என்று மூன்று வகைப்படுகின்றது. 1972–73
ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அப்போது நவம்பர் 19 தேதி
யில் இந்த மாமன்றத்தில் தாக்கலாக்கப்பட்டுள்ளது. முன்னாள்
முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் மின்சாரத்தின்
அவசியத்தைச் சொல்லி, அறிக்கையை இந்த மன்றத்தில்
மொழிந்து, அப்போது அமைச்சராக இருந்த திரு. இராசாராம்
அவர்களை டெல்லிக்கு மறுநாளே அனுப்பியிருக்கின்றார்கள்.
மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த காலத்திலே



அந்த அளவிற்கு மின்சாரம் அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு வலியுறுத்தினார்கள் என்று சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மத்திய அரசின் அனுமதிக்காக உள்ள புதிய திட்டங்கள், 1976—லே வழங்கிய திட்டங்கள், சோளத்திபுழா, கூவலூர், கள்ளாறு, கீழ் நொய்யாறு, நெல்லித்துறை, சேர்வலாறு, சண்முகா நதி, மேல் தாமிரவருணி, மேல் அமராவதி, மேட்டூர் அணை இப்படி 10 திட்டங்கள் மத்திய அரசினுடைய அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கின்றன. அனுமதி பெற்று நடைபெற்ற திட்டங்கள் பற்றி 1976 ஆம் ஆண்டு மாண்புமிகு கலைஞர் அவர்கள் அறிவிக்கின்றார்கள். நிச்சயமாக இந்த வருடத்தில் இந்தத்திட்டம் நடைபெறும், நிறைவேறும் என்று அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எண்ணூரில் 2-வது நிலை 1976-ல் முடிவுறும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. குந்தா திட்டம் 4-வது நிலை 1976 ஆம் ஆண்டு நிறைவேற்றப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். கல்பாக்கம் அணு மின் நிலையம் 1-வது நிலை, சுருளியாறு நீர் மின் திட்டம் 1978-ல் நடைபெறும் என்று சொல்லியிருக்கின்றார்கள். கல்பாக்கம் அணு மின் நிலையம் இரண்டாவது நிலை 1978 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டுவிடும் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

(முற்பகல் 11-10)

காடம்பாறை திட்டம் 1979-லும், தூத்துக்குடி அனல் மின் திட்டம் 1979-லும் முடிக்கப்படும் என்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் 1979-லே அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எல்லாம் 1986-ல் கூட முடிவு பெறவில்லை. உதாரணமாக நெல்லை மாவட்டத்தில் சேர்வலாறு திட்டம் 1974-ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே போடப்பட்ட திட்டம். 681 லட்ச ரூபாய் முதலீட்டுத் திட்டம். சென்ற ஆண்டு, 1985 ஆம் ஆண்டு அதை நிறைவேற்றுகின்ற காலக் கட்டத்தில் அதன் செலவு 35 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இதையெல்லாம் எண்ணிப் பார்க்கின்றபோது மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில் இந்த அரசு கடந்த 12 ஆண்டுகளாக ஆமை வேகத்தில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது என்கின்ற குற்றசாட்டை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகளைப் பொறுத்தவரையில் இராமநாதபுரம், புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களிலே எல்லாம் விவசாயிகள் அரசிடத்திலிருந்து கடன் வாங்கியோ அல்லது சொந்த முறையிலோ 20 ஆயிரம், 30 ஆயிரம் ரூபாய் செலவு செய்து கிணறு வெட்டுகிறார்கள். பிறகு மின் இணைப்புகேட்டு

அரசிடத்தில் மனு கொடுத்து விட்டு 5 ஆண்டுகள் 6 ஆண்டுகள் காத்துக்கொண்டிருக்கின்ற அவல நிலை இருக்கிறது, 5 ஆண்டுகளுக்குப் பிறகு விவசாயிகளுடைய பம்ப் செட்டினுடைய நம்பருக்கு லைசென்ஸ் வழங்குகிறார்கள். ஆனால் வறுமையில் வாடும் விவசாயி என்றால் 5 ஆண்டுகளுக்கு உள்ளாக பம்ப் செட்டை விற்றுவிடுவதால் மின்சாரத்தைப் பெற முடியாத அவல நிலை இன்றைக்கு இராமநாதபுரம், புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களிலே இருக்கிறது. காரணம் அப்போது அவர்களிடம் பம்ப் செட் இருப்பதில்லை. எனவே இந்த மின்சார வாரியம் விவசாயிகளுக்கு ஓராண்டுக்கு உள்ளாக மின் இணைப்பு கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு குதிரை திறனுக்கு ஆண்டுக்கு மின்சார கட்டணம் 75 ரூபாய் என்று கணக்கிடப்பட்டிக்ருகிறது. ஒரு விவசாயி 5 குதிரை திறன் மோட்டார் வைத்துக் கொண்டால் ஆண்டுக்கு 375 ரூபாய் கட்ட வேண்டி வருகிறது. ஆனால் உள்ளபடியே 3 அல்லது 4 மாதங்கள்தான் அவர்கள் மோட்டாரை உபயோகப்படுத்துகிறார்கள். அதிலும் மின்சாரத்தடை, கட் வந்தால் அவர்கள் ஒரு நாளைக்கு 4 அல்லது 5 மணி நேரம் கூட மோட்டாரை ஓட்ட முடியாது. 4 மாதங்களே மோட்டாரை உபயோகிக்கும் விவசாயிகள் 12 மாதங்களுக்கான தொகையை அபராதத் தொகையாக தற்போது கட்டுகிறார்கள் என்பதை நான் கூறிக்கொள்கிறேன். ஆகவே, ஒவ்வொரு பம்ப் செட் வைத்திருக்கின்ற விவசாயியும் மின்சாரத்தை மீட்டர் வைத்து உபயோகப்படுத்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மோட்டார் வைத்திருக்கின்ற விவசாயிகளைப் பொறுத்தவரையில் 34 கோடி ரூபாயை மானியம் என்கிற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தள்ளுபடி செய்ய ஒப்புக்கொண்டதாக நேற்றைய தினம் இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த 34 கோடி ரூபாயை நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் நலன் கருதி தள்ளுபடி செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். அதே நேரத்தில் நான் இன்னொன்றையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஊராட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில் சில மிகவும் வறுமையில் வாடுகின்றன. அந்தந்த கிராமங்களில் திட்டங்களை நிறைவேற்ற முடியாத நிலையில், மின் இணைப்புக்கு மாதாமாதம் பணம் கட்டக்கூட முடியாத நிலையில் சில ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. ஆகவே, தமிழகம் முழுவதிலும் உள்ள ஊராட்சி மன்றங்களுக்கு மானியமாக, இலவசமாக மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, தெரு விளக்குகளைப் பொறுத்தவரையில் ஊராட்சி மன்றத்தேர்தலுக்குப் பிறகு மக்கள் பிரதிநிதிகள் பொறுப்புக்கு வந்துள்ள நிலையில் ஒவ்வொரு பல்பு மாட்டவும் ஒரு ரூபாய் கட்டணம் ஹெல்பர்களுக்கு வழங்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஊராட்சி மன்றங்களில் 'லைன் மேனை' பார்க்க பல நாட்கள் அலைந்தாலும் அவர்கள் வருவதில்லை. வந்தாலும் ரூ. 1-க்கு மேலாக அவர்கள் கட்டணம் கேட்கின்றார்கள். ஊராட்சி மன்றத் தலைவரை மதித்து அவர்கள் வருவதாக இல்லை. எனவே, ஊராட்சி மன்றத்தினுடைய ஆணையாளருக்கு, ஒன்றிய ஆணையாளருக்கு அந்த அதிகாரத்தை வழங்கி, அவர்கள் மூலமாக, அந்த ஹெல்ப்பர்களை அனுப்பி ஹெல்ப்பர்களுடைய கட்டணத்தை அந்த அந்தப் பஞ்சாயத்திலேயிருந்தே கொடுத்து விடலாம். அப்படிப்பட்ட ஒரு நிலையினை உருவாக்கிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆழ்குழாய்க் கிணறுக்குத் தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று அரசு தாக்கீது பிறப்பித்திருக்கிறது. வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள இராமநாதபுரம், புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களுக்கு அந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும். தஞ்சை மாவட்டத்திலாவது ஆண்டுக்கு ஒருபோக சாகுபடியாவது ஒழுங்காகச் செய்து வருகிறார்கள். ஆனால், இராமநாதபுரம், புதுக்கோட் கோட்டை மாவட்டங்கள் எல்லாம் மழையை நம்பியிருக்கக்கூடிய காரணத்தாலே தஞ்சாவூருக்குப் போட்டிருக்கக்கூடிய திட்டத்தை, ஏனைய, குறிப்பாக, மிகமிகப் பின்தங்கியிருக்கிற இராமநாதபுரம், புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களுக்கு நீட்டித்துத்தர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ரூ. 50,000-க்கு நிரந்தரமான கிணறுகள் வெட்டிக்கொண்டு 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் காத்துக் கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு, உடனடியாக மின்சாரத்தை வழங்கிட வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன், வணக்கம்.

*திரு. கே. சுப்பராயன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே முன் வைக்கப்பட்டிருக்கிற தமிழ்நாடு மின் வாரியத்தின் 1986—87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய ஒரு சில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன். அந்த நிதிநிலை அறிக்கையை வைத்த மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், ஆற்றிய உரைக் குறிப்பை மிகுந்த அக்கறையோடு படித்துப் பார்க்கிறபொழுது அவநம்பிக்கையும் அச்சமும் ஏற்படுகிறதே தவிர, நம்பிக்கை ஊட்டுகிற நிலையில் இந்த நிதிநிலை அறிக்கையும் அமைச்சருடைய உரை

[திரு. கே. சுப்பாராயன்] [1986 நவம்பர் 20

யும் அமையவில்லையென்கிற வேதனையை நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது. இங்கே எனக்கு முன்னால் பல்வேறு எதிர்த்தரப்பு நண்பர்கள் உரையாற்றினார்கள். அவர்கள் உரையாற்றுகிறபொழுது, மின்சார வாரியத்தின் பல்வேறு பலகீனங்களைப் பற்றியும் பல்வேறு தவறுகளைப் பற்றியும் எல்லாம் விரிவாக எடுத்துச் சொன்னார்கள்.

ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சியின் பிரதிநிதி என்ற முறையில் நான் இங்கே குறிப்பிட விரும்புவது ஆளுகிற தரப்பிலே இருந்தாலும் சரி, எதிர்த்தரப்பிலே இருந்தாலும், சரி, பாவங்களை எல்லாம் கங்கையிலே கழுவி விடுவதைப் போல, தவறுகளை எல்லாம் மின்சார வாரியத்தின் மேல் போட்டுவிட்டு தப்பித்துக் கொகிள்ற உத்தியைக் கைக்கொள்ள அரசாங்கம் முயற்சிக்கக்கூடாது என்பதைத்தான் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியம் என்பது அந்தரத்தில் இயங்கக்கூடிய, மாநில அரசின் அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட ஒரு அமைப்பு அல்ல. இந்த மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிற ஒரு அமைப்புதான். அந்த அமைப்பிலே ஏற்படுகிற பலம், பலவீனங்களுக்குப் பொறுப்புதாரர் யார்? அரசாங்கம் தான். வீட்டுக்கு ஒரு விளக்குப் போடுவதற்கு மாநில அரசாங்கம் பொறுப்பு; அதே போல், விவசாயத்திற்கு இலவச மின்சாரம் வழங்குவதற்கு மாநில அரசாங்கம்தான் பெருமைக்குரிய பொறுப்பு. ஆனால், விளக்கு எரியவில்லையா, மின்சார வாரியம்தான் பொறுப்பு. இது என்ன உத்தி, என்ன நடைமுறை என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எனவே புகழுக்குரிய மாலைகளுக்குக் கழுத்தை நீட்டுகிற இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம், மின்சார வாரியத்திலே ஏற்படுகிற தவறுகளுக்கும் தார்மீக, சட்டரீதியான பொறுப்பை மேற்கொள்ள வேண்டுமே தவிர, அதிலேயிருந்து தப்பித்துக்கொள்ள முயற்சிப்பது ஒரு பொறுப்புணர்ந்த ஆட்சியின், பொறுப்பான கடமையாக இருக்காது என்பதைத் தான் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே என்ன சொல்லப்பட்டிருக்கிறது? ஏதோ வெளியிலே இருந்து அல்ல; இதே அமைச்சருடைய உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1985—86-ல் அரசால் நிர்ணயிக்கப்பட்ட எல்லா இலக்குகளையும் மின் வாரியம் அடைந்து விட்டதாக அமைச்சர் மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறார். அப்படியானால், நிறைவேற்றப்படாத பலவீனங்களுக்கு யார் பொறுப்பு? மாநில அரசாங்கம் நிர்ணயித்த இலக்குகளை மின்சார வாரியம் நிறைவேற்றியதாக அமைச்சர் சொல்கிறார். அப்படியானால், மாநில அரசு நிர்ணயித்திருக்கிற நிர்ணயிப்பில் குறைபாடுள்ளதல்லவா என்று கேட்க விரும்புகிறேன்.



1986 நவம்பர் 20] (திரு. கே. சுப்பராயன்)

தமிழ்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் தொழில்
துறை வளர்ச்சிக்கும் ஜீவநாடியாக விளங்கக்கூடியது மின்சாரம்
தான். இந்த மின்சாரத்தைப் பற்றி, உங்களுக்கு என்ன
கொள்கை? தமிழ்நாட்டின் வளர்ந்தும் விரிவு அடைந்தும் வரு
கிற தேவையைப் பற்றி மிகச் சரியான மதிப்பீடு இந்த மாநில
அரசாங்கத்திற்கு உண்டா? மதிப்பிடப்பட்டிருக்கிற தேவையை
உற்பத்தி செய்வதற்குரிய போதுமான மின் உற்பத்தித் திட்டங்
கள் உண்டா? உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்தை முறை
யாக, பழுதின்றி விநியோகிப்பதற்குரிய நடைமுறைத்திட்டங்
கள் உண்டா? விநியோகிக்கப்பட்டிருக்கிற மின்சாரத்தை முறை
யாகப் பராமரிக்கிற திட்டம் இங்கே இந்த மாநில
அரசாங்கத்தால் சொல்லப்படுகிறதா? இல்லை. எனவே

(முற்பகல் 11-20 ).

பொறுப்பை நான் குறிப்பிட விரும்புகிறேன். தனக்குள்ள
பொறுப்புணர்ந்த ஒரு அரசாங்கமாக இருந்தால் இந்த மா
நிலத்திலே ஆட்சி அதிகாரத்தைப் பெற்றிருக்கிற நீங்கள் மா
நிலத்தினுடைய மின்சாரத் தேவையை சரியாக மதிப்பிட்டிருக்க
வேண்டும். அப்படி மதிப்பிட, தேவையை நிறைவேற்றிக்
கொள்ள, மின்சார உற்பத்திக்கான புதிய திட்டங்களை நிறை
வேற்றத் திட்டமிட்டிருக்கவேண்டும். அதைப் போன்று அந்தத்
திட்டத்தை முறைப்படி விநியோகிக்கவும் பராமரிக்கவும் திட்ட
மிட்டிருக்க வேண்டும். அதைச் செய்ய இந்த அரசு தவறியிருக்
கிறது.

அது மட்டுமல்ல. தமிழ்நாட்டில் புதிதான மின்சார
விஸ்தரிப்பு பற்றி கணக்குச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால்,
எரியாத விளக்குகள் எத்தனை என்ற கணக்கு இருக்கிறதா என்
றால் அதுபற்றி ஒன்றும் இல்லை. அதே நேரத்தில் இந்த நிதி
நிலை அறிக்கையிலே அமைச்சர் அவர்கள் மிக மிகக் கவனத்
தோடு சில புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இனி
மேல் எவ்வளவு விளக்குகள் போடப்போகிறோம், எத்தனை
பம்புசெட்டுகளுக்கு இணைப்பு கொடுக்கப் போகிறோம், எத்தனை
கிராமங்களுக்கு மின்சார வசதி கொடுக்கப்போகிறோம் என்று
ஆரவாரமான அறிவிப்பு அற்புதமாக வெளியிடப்பட்டிருக்கிறது.
ஆனால் ஒன்றை மட்டும் வெளியிடவில்லை. அதாவது இருக்கிற
விளக்குகளில் எரிகின்ற விளக்குகள் எத்தனை என்ற விவரம்
வெளிவரவில்லை. போட்டது எத்தனை என்பது கேள்வி அல்ல;
போட்டதை நீங்கள் எரிய வைத்தீர்களா என்பதுதான் கேள்வி.
எரிய வைத்த விளக்குகள் இத்தனை என்று அந்தரங்க சுத்தமாகச்
சொல்லுகின்ற நேர்மையை இன்று அனைத்திந்திய அண்ணா
தி.மு.க. அரசு இழந்து விட்டது. அந்த நிலையை இழக்க
வில்லை என்றால் ஏன் அதுபற்றிய புள்ளி விவரங்கள் இல்லை?

இங்கே எதிர்க்கட்சி நண்பர்களும் சொன்னார்கள். ஆளுங் கட்சி நண்பர்களும் சொன்னார்கள் விளக்கு எரியவில்லை என்று. இதற்கு யார் பொறுப்பு? மாநில அரசுதான் பொறுப்பு. ஆனால் அதுபற்றி எந்தவிதமான விவரங்களும் இந்த அறிக்கையில் இல்லை என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியினர் வேண்டுமென்றே விமர்சனம் செய்வதாகச் சொல்கிறார்கள். எதிர்க்கட்சியினர் ஏன் விமர்சிக்கிறார்கள்? அரசாங்கத்தின் நடைமுறை அந்த அளவுக்கு இருக்கிறது. தமிழ்நாட்டில் அநேகமாக இந்த அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆட்சியில் விமர்சிக்கப்படாத துறையே இல்லை. அனைத்துத் துறைகளும் விமர்சனத்திற்கு உள்ளானாலும் அவற்றிலே முதலிடத்தை வகிப்பது இந்த மின்சாரத் துறை. இன்றைக்கு மின்சார வாரியம் மக்களின் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாகியிருக்கிறது. ஒரு ஜனநாயக அரசு மக்களுடைய விமர்சனத்தைக் காதுகொடுத்துகேட்கவேண்டும். காதுகொடுத்துக் கேட்டு, காலத்தில் தீர்த்து வைக்க வேண்டும்.

ஆனால் இன்றைக்கு என்ன சொல்லப்படுகிறது? 1989–90 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மின்சாரத் தேவை எவ்வளவு என்பதை மத்திய அரசினுடைய 12-ஆவது மின்சார அளவீட்டுக்குழு குறிப்பிட்டிருக்கிறது. அந்த மதிப்பீட்டை அடைவதற்கு இலக்கு என்ன? என்ன அளவுகோல்?

அடுத்து, அமைச்சரவர்கள் சொல்கிறார்கள், மின் வெட்டும், மின் தட்டுப்பாடும் ஏற்படுவதன் வாயிலாக தேவையான அளவு மின்சார உற்பத்தியைப் பெருக்குவதில் தனக்குள்ள பொறுப்பை மாநில அரசு நன்கு உணர்ந்திருக்கிறது என்று. தேவையான அளவுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற பொறுப்பை நன்கு உணர்ந்திருக்கிறது என்று சொல்லிவிட்டு பின்னால் என்ன சொல்கிறார்கள்? 1990–ஆம் ஆண்டு, 7–ஆவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் கூட தமிழ்நாட்டில் மின்சாரத்தில் பற்றாக் குறையாகத்தான் இருக்கும் என்று சொன்னால் மாநில அரசின் இலக்கு என்ன? பற்றாக்குறைதான் உங்கள் இலக்கா? பற்றாக்குறைதான் உங்களுடைய இலக்கு என்று நிர்ணயித்து விட்டீர்களா? ஆகவே, சொற்களை அலங்காரமாக அடுக்கியிருக்கிறீர்களே தவிர, நடைமுறையில் ஒன்றும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.





தற்போது மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரமாக இருந்தாலும் சரி, மத்திய அரசிடமிருந்து கிடைக்கின்ற மாநிலப் பங்கு என்றாலும் சரி, எல்லாவற்றையும் சேர்த்து கணக்கிட்டாலும் கூட 7 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பற்றாக் குறைதான். இதற்கு என்ன தீர்வு?

வட சென்னையில் ஒரு அனல் மின் நிலையம், தூத்துக்குடியில் அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போதும் விளக்கு அணைக்கப்படுகிறது; தொடர்ந்து அணைக்கப்பட்டே வருகிறது. இதற்கு எப்போது நிரந்தரத் தீர்வு? 1991–ஆம் ஆண்டுக்குப் பின்னால் கூட அல்ல. ஒரு நீண்டகால கண்ணோட்டத்தோடு ஒவ்வொரு துறையிலும் பகுப்பாய்வு செய்து, தீர்வு சொல்லுகிற ஆற்றலை நீங்கள் இழந்துவிட்டீர்கள் என்று நான் சொல்லமாட்டேன். ஆற்றலைப் பயன்படுத்தாமல் துருப்பிடிக்க வைத்திருக்கிறீர்கள் என்று தான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. வடசென்னை அனல் மின் திட்டத்திற்கு 150 கோடி அமெரிக்க டாலர் உதவி ஆசிய வங்கியிடம் கேட்கப்பட்டிருப்பதாக நாங்கள் அறிகிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இறுதியில் இது பற்றி தெளிவான ஒரு பதிலை அளிக்க வேண்டும் என்பதற்காக இதை நான் குறிப்பிடுகிறேன். ஆசிய வங்கியிடம் கேட்கப்பட்டிருக்கிற அந்த 150 கோடி அமெரிக்க டாலர் உதவிக்கு ஏதாவது நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறதா? நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது என்று நம்பப்படுகின்ற செய்திகள் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றன. அப்படி என்றால் எத்தகைய நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் இறுதியில் தன்னுடைய பதில் உரையில் கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தீர்வு காணாததற்கு எல்லாம் மாநில அரசு மட்டுமே முழுப் பொறுப்பு என்று அல்ல, மாநில அரசுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற பொறுப்புகளை முழுமையாகச் செயல்படுத்தவில்லை என்பதுதான் என் குற்றச்சாட்டு. அதே நேரத்தில் மாநில அரசு என்ன சொல்கிறது என்றால் திட்டங்களைத் தீட்ட நிதிப் பற்றாக்குறை என்று சொல்கிறது. நியாயம்தான். இல்லை என்று சொல்லவே இல்லை. நிதிப் பற்றாக்குறையும் மாநில அரசாங்கத்தினுடைய செயல் நோக்கமான பணிகளை, கடமைகளை பின்னுக்குத் தள்ளுகிறது என்பது உண்மைதான். ஆனால், இந்த நிதிப்பற்றாக்குறை நிலைமைக்கு என்ன தீர்வு? நான் கேட்க விரும்புகிறேன், வாக்களித்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சிக்குக் கொண்டு வந்தவர்களுடைய நோக்கங்களில் ஒன்று, மாநிலத்தில் எரிகிற பிரச்சினைகளைத் தீர்க்கிற ஆற்றலோடு அவர்கள் செயல்படுவார்கள் என்பதும்

தான். நீண்டகாலமாக இருக்கிற பிரச்னையான மின்சாரப் பற் றாக்குறைப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு, நிதிநிலைக் குறைவு என் பதும் பிரச்னைதான். இந்த நிதி நிலைக் குறைவைத் தீர்க்க என்ன ஆலோசனை செய்தீர்கள் ?

மரத்தடியிலே உட்கார்ந்திருப்பவனிடம் 4 அணா கொடுத் தால் கிளி ஜோஸ்யம் சொல்வான். என்னென்ன கண்டங்கள் இருக்கின்றன என்று சொல்வான். அப்படி கிளி ஜோஸ்யம் சொல்வது போல் பற்றாக்குறையாக இருக்கிறது, கையிலே நிதி நிலைமை சரியில்லை என்று சொல்லுகிறீர்களே, புலம்புகிறீர்களே, அப்படி புலம்புவதற்குப் பதிலாக, மாநிலத்திற்கு மின்சாரம் தேவையாயிற்றே, அதற்கு நிதி வாய்ப்பை உருவாக்க ஏதாவது செய்ய வேண்டாமா ? நீங்கள் ஏன் புலம்புகிறீர்கள் ? கையிலே நிதி இல்லை, எனவே, திட்டம் இல்லை என்று ஏன் சொல லிக் கொண்டிருக்கிறீர்கள் ? இதுவா ஆக்கப்பூர்வமான பதில். இந்தப் பதிலைச் சொல்வதற்கா நீங்கள் ஆட்சியிலே அமர்ந் திருக்க வேண்டும் ? எனவேதான் கொஞ்சம் ஆக்க பூர்வமாக சிந்தித்து இந்த நிதிப் பிரச்னையைத் தீர்க்கக் கொஞ்சம் முயற்சி செய்யுங்கள்.

மின்சார வாரியப் பற்றாக்குறை ரூ. 266 கோடி. ஆனால் மத்திய அரசாங்கத்திற்கு, மத்திய நிறுவனங்களுக்கு நீங்கள் வட்டி யாக மட்டும் கொடுப்பது எவ்வளவு ? மின்சார வாரியத்தில் நிதிப் பற்றாக்குறை இருக்கிறது என்று சொன்னோம். ஆனால் மத்திய அரசாங்கத்திற்கு கொடுக்கிற வட்டி வருடம் ஒன்றுக்கு ரூ. 132 கோடி. ஏன் அந்த வட்டியைத் தள்ளுபடி செய்யுங்கள் என்று சொல்வதுதானே, சொல்லாததற்கு என்ன காரணம் ? நிலக்கரி விலை ஏறியிருக்கிறது என்று சொல்லுகிறீர்கள். ஆனால் இந்திய தேசிய எல்லைக்குள் பல்வேறு அனல் மின் நிலையங் களுக்கு வழங்கப்படுகிற நிலக்கரியின் விலையில் வித்தியாசம் காட்டப்படுகிறது. அது சரியல்ல. ஒரே விலை நிர்ணயிக்கப் பட வேண்டும். உண்மைதான், நீங்களும் சொல்லுகிறீர்கள், விலை ஏறியிருக்கிறது என்று. அதை நாங்கள் சற்று உரக்கச் சொல்லுகிறோம் நிலக்கரியின் விலை ஏறி இருக்கிறது, மத்திய அரசாங்கம் விலையை நிர்ணயிக்க வேண்டும் என்று.

நிலக்கரி விலை ஏறியிருக்கிறது, கப்பல் போக்குவரத்துக் கட்டணம் உயர்ந்திருக்கிறது. இந்த உயர்வுகளுக்கெல்லாம் யார் காரணம் ? பரலோகத்தில் இருக்கிற பரமனா ? இல்லை, டெல் லியிலே இருக்கிற மத்திய அரசாங்கம்தான் காரணம். மத்தியிலே இருக்கிற அரசாங்கத்தினுடைய விலைக் கொள்கைதான் காரணம். மத்திய அரசாங்கத்தினுடைய விலைவாசி ஏற்றக் கொள்கை நிலைதான் காரணம். அதனால் மாநில அரசாங்கங்களின் திட்





டங்கள் எப்படி நிலை குலைந்து போகின்றன என்பதைப் பார்த் தீர்களா ? மத்திய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை யினால், மாநில அரசாங்கங்கள் தங்களின் திட்ட இலக்கை எட்டி பிடிக்கின்ற முயற்சிகளிலே கடுமையான பாதிப்பு ஏற்பட்டிருக் கிறது. நிலக்கரியின் விலை இவ்வளவு தூரம் உயர்ந்ததற்குக் காரணம் என்ன ? மத்திய அரசாங்கத்தின் கொள்கை. அதைக் கொஞ்சம் உரக்க எதிர்த்து, எடுத்துச் சொல்ல வேண்டாமா ?

132 கோடி ரூபாய் வட்டித் தொகையைக் கட்ட முடியாது. அதை மத்திய அரசு தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற கோரிக் கையை நீங்கள் வைக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அப்படி இல்லாவிட்டால் 7, 8 வருடங்களுக்குத் தள்ளிப் போடச் சொல் லுங்கள். இதையாவது செய்யலாம் அல்லவா ? அப்படி அதை யாவது செய்ய வேண்டும் என்று நான் குறிப்பாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதே போல இன்னொரு முக்கியமான பிரச்சினை. எவ்வளவு திட்டங்கள் அங்கே நிலுவையாக இருக்கின்றன என்பதைப் பற்றி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அருமை சகோதர உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள் வேதனை யோடு. நானும் அந்த வேதனையில் பங்கேற்க விரும்புகிறேன். இன்றைக்கு மத்தியில் இருக்கிற அரசாங்கம் தமிழகத்தில் இருக் கிற பல்வேறு திட்டங்களுக்கு அனுமதி வழங்காமல் காலதாம தப்படுத்துவது மாநிலத்தில் மேலும் நெருக்கடியை அதிகப்படுத்து மேயல்லாது வேறு அல்ல. ஏன் இவ்வளவு கால தாமதம் ஏற் படுகிறது என்பதையும் பரிசீலிக்க வேண்டும். அது மட்டும் அல் லாமல் மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் இன்றைக்கு மாநில அரசாங்கங்களின் நெருக்கடியைப் போக்குவதற்கு எந்த வித முயற்சியும் கிடையாது.

தமிழ்நாட்டில் நீர் வளம் குறைவு. நீர் மின்சாரத்தை எடுப் பதற்குரிய வாய்ப்பு ஏற்கனவே அருகிக் கொண்டேயிருக்கிறது. இது இன்றைய பிரச்னை மட்டும் அல்ல, நீண்டகால பிரச்னை. இந்த நீண்ட காலப் பிரச்னையை தீர்க்க, மத்திய அரசாங்கம் இந்த மாநிலத்தின் தேவைகளை உணர்ந்து, உதவுகிற நிலையில் இல்லை என்பதை நடைமுறை அனுபவம் உணர்த்துகிறது. அதை எதிர்த்து பாசிடிவ்வான முறையில் நம்முடைய அணுகு முறை இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து புதிய மின்சார திட்டங்கள் என்ற முறையில் நான் குறிப்பிட விரும்புவது (குறுக்கீடுகள்) அவர் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பாயிண்ட் ஆப் ஆர்டரை நீங்களே அனுமதிக்க முடியாது. நீங்கள் தொடர்ந்து பேசுங்கள், இல்லாவிட்டால் உட்கார்ந்து விடுங்கள்.

**திரு. கே. சுப்பராயன் :** அடுத்து அனல் மின் நிலையங்களில் இருக்கிற பிரச்னைகள் என்ன என்பதும், நெருக்கடிகள் என்ன என்பதும் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கு நாம் செய்ய வேண்டியது ஒன்று. அனல் மின் நிலையங்களையும், அணு மின் நிலையங்களையும் தமிழ்நாட்டில் அதிகம் உருவாக்க வேண்டும் கூடங்குளம் என்ற இடத்தில் ஒரு அணுமின் நிலையத்தை ஏற்பாடு செய்ய திட்டமிட்டு, அனுமதி வழங்க மத்திய அரசைக் கேட்டிருப்பதாக அறிந்து மகிழ்ச்சியோடு வரவேற்கி றோம். அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க, விரைவான முயற் சிகள் வேண்டும். அத்தோடு கோவை மாவட்டத்தின் நீண்ட காலக் கோரிக்கை, கோவை மாநகரத்திலே ஒரு அனல் மின் நிலையம் வேண்டும். அதே போல தஞ்சை மாவட்டத்திலே நாகைப்பட்டினத்தில் ஒரு அனல்மின் நிலையம் வேண்டும் என்பது நீண்டகாலக் கோரிக்கை. அவற்றை

(முற்பகல் 11–30)

நாம் கொண்டு வர வேண்டும். ஏனென்றால், பற் றாக்குறை, பற்றாக்குறை என்று சொல்லி காலம் தள்ளிக்கொண்டு போவது சரியல்ல. திட்டங்களைக் குறிப்பிட்டு அவற்றிற்கு அனு மதி வேண்டுமென்று மத்திய அரசை முறைப்படி மாநில அரசு நெருக்கிக் கேட்க வேண்டுமென்று குறிப்பிட்டுச் சொல்லிக் கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்லி முடித்து விடுகிறேன். பல விஷயங்களில் காலதாமதத்தால் ஏற்பட்டிருக்கிற விளைவுகளைப் பற்றி நாம் புரிந்து கொள்ள வேண்டும். எவ்வளவு திட்டங்கள் இருக்கின்றன என்பதைப் பற்றிய விவரங்களை இங்கே கொடுத் திருக்கிறார்கள். இவ்வளவு காலதாமதத்திற்கு என்ன காரணம்? யார் காரணம்? மத்திய அரசு காரணமா? மாநில அரசு காரணமா? அனுமதி அளித்ததற்குப் பின்னர் 15 ஆண்டுகள் ஆனாலும் திட்டம் நிறைவேறவில்லையென்றால் இதுபற்றி பரி சீலிக்க வேண்டாமா? பரிசீலிக்க வேண்டும். இதுபற்றி இந்த மாநில அரசு கவனிக்க வேண்டும்.

அடுத்து, கடலூர் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. முன்னாள் மின்துறை அமைச்சர் அவர்கள் இரண்டு மூன்று ஆண்டுகளாகவே சொல்லி வருகிறார்கள். கடலூரில் வந்துவிட்டது என்று குடு குடுப்பைக்காரனைப் போல சொல்லிக் கொண்டு வருகிறார்கள் அனல்மின் நிலையம் வந்துவிட்டதாம். ஆனால் அறிக்கையில்





என்ன சொல்லப்படுகிறது? ஆய்வில் இருக்கிறதாம். ஆய்வில் இருக் கிற ஒருவிஷயத்திற்கு இரண்டு ஆண்டுகளாக தண்டோரா போட வேண்டுமா? தவறில்லை, அது பிரச்சார யுக்தி, செய்யுங்கள். இப்படி செய்திருக்கிற நீங்கள் இன்றைக்கு ஆய்விலே இருக்கிறது என்று சொல்லியிருப்பது சரியல்ல என்பதைக் குறிப்பாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது குறித்து மாண்புமிகு உறுப்பினர் ஒருவரால் எழுப்பப்பட்டு அதில் தீர்ப் பைப் பேரவைத் தலைவர் அவர்கள் ரிசர்வ் பண்ணியிருக்கிறார் கள். பிரிவிலெஜ் இஷ்யூ மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் பெண்டிங்காக இருக்கிறது. ஆகவே அதுபற்றி நீங்கள் அபிப்பி ராயம் சொல்ல முடியாது. ஆகவே அந்தப் பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

**திரு. கே. சுப்பராயன் :** துணைத் தலைவர் அவர்களே,

* * * * *

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** துணைத் தலைவர் அவர்களே,

* * * *

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** இந்த விளக்கம் பிரிவிலேஜ் இஷ்யூவில் வராதா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பிரிவிலேஜ் இஷ்யூ பெண்டிங்கில் இருப்பதால் மாண்புமிகு உறுப்பினர் இது குறித்து குறிப்பிட்டதையும், அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கத்தையும், ஆக இரண்டையும் அவைக் குறிப்பி லிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

**திரு. கே. சுப்பராயன் :** துணைத் தலைவர் அவர்களே, இறுதியாக மின்வாரியத்தின் வசூல் கொள்கையில் இருக்கக் கூடிய மிகப் பெரிய ஒருதலைப்பட்சமான, ஒரு கண்ணிற்கு வெண் ணெயும், இன்னொரு கண்ணிற்கு சுண்ணாம்பும் தடவுகிற நிலை பற்றி தெரிவிக்க விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் குறிப் பிட்டிருக்கிற தகவலில் முதலாளிகளிடம் மின்சார பாக்கியாக இருப்பது ரூ. 40 கோடியே 40 லட்சம். அதிலே ஒரே ஒரு கம்பெனி, மால்கோ கம்பெனி 20 கோடியே 4 லட்சம் ரூபாய் பாக்கி வைத்திருக்கிறார்கள். இந்த மால்கோ கம்பெனிக்கு இவ் வளவு தூரம் விட்டு வைத்திருக்கிறீர்களே, அதற்கு என்ன காரணம்? ஹைகோர்ட்டிலே வழக்கு இருக்கலாம். அதுபற்றி உள்ளே போக விரும்பவில்லை. 20 கோடி ரூபாய் நிலுவையை

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

(திரு. கே. சுப்பராயன்) [1986 நவம்பர் 20

அனுமதித்தது எப்படியென்று புரியவில்லை ; ஆனால் விவசாயி
கள் கட்டவில்லையென்றால் உடனடியாக தண்டம் வழங்கப்
படுகிறது. முதலாளிகளைக் கண்டால் மின்சாரம் கூட இப்படியா
பயப்படுவது ? மின்சாரம் ஏழைகளைக் கண்டால் எட்டி உதைப்
பதும், பணக்காரர்களைக் கண்டால்........

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** துணைத் தலைவர்
அவர்களே, முதலாளிகளைக் கண்டு பயப்படுவது அரசு இதுவல்ல.
மின்வாரியமும் அவர்களைக் கண்டு பயப்படவில்லை. சென்னை
உயர்நீதிமன்றம் கொடுத்த தடை உத்தரவினால் அதனை
வாங்கவில்லை. இன்றைக்கும் உச்ச நீதிமன்றத்தில் தடையுத்
தரவு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்தப் பிரச்
சினையை இத்தோடு முடித்துக்கொள்ளுங்கள். விவசாயிகளுக்கும்
நீதிமன்றத்தில் நிறைய தடை உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்
கின்றன. அதை இல்லையென்று சொல்ல வேண்டாம்.

**திரு. கே. சுப்பராயன் :** துணைத் தலைவர் அவர்களே,
அமைச்சர் அவர்கள் தெரிவித்த தகவல் மகிழ்ச்சிக்குரிய விஷயம்
தான். ஆனால் இன்னும் 20 கோடி ரூபாய் நிலுவையில் இருக்
கிறது முதலாளிகளிடம், ஒரு கம்பெனி தவிர. ஆனால் விவ
சாயிகளிடம் 2 கோடியும் சில்லரையும்தான் பாக்கி இருக்கிறது.
ஆனால் இழுத்துப்பிடித்து அறுப்பது விவசாயிகளிடம்தான். விவ
சாயிகளை இப்படி நெருக்குவது சரியல்ல. விவசாயிகளை,
தொழிலாளர்களைக் கண்டால் உங்கள் நிலை வேறாக
இருக்கிறது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில்
சொல்லவேண்டுமென்றால் இந்த மாநிலத்தைப் பற்றி ஒரு
தெளிந்த கண்ணோட்டம் அரசுக்கு இல்லையென்பது இந்த
அறிக்கையில் தெரிகிறது என்பதைச் சொல்லி என்னுடைய
உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. பாப்பா சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
பேசுகின்றபோது இந்த அரசு செய்திருக்கின்ற சாதனைகளை
விடுத்து, ஒரு சில குறைகளைச் சொன்னார்கள். அது அவர்களு
டைய பாணி. அவர்கள் பேசுகின்றபோது எவ்வளவு திட்டங்
களை, எவ்வளவு நன்மைகளைச் செய்திருக்கிறார்கள் என்று
சொல்வதை விட்டு விட்டு, எவ்வளவு லைட்டுகள் எரியவில்லை
என்று ஒரு கேள்வியை எழுப்பினார்கள். உண்மையிலேயே ஒரு
சில பகுதிகளில் அப்படிப்பட்ட நிலைமை இருந்தால், நாங்கள்
எல்லாம் அதிகாரிகளைச் சந்தித்து, ஒரு சில ஊழியர்கள் தவறு
செய்கிறார்கள், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று சொல்கிறோம்.



1986 நவம்பர் 20]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர்களிட
மிருந்து என்ன விளக்கத்தை எதிர்பார்க்கிறீர்கள், அதை மட்டும்
சொல்லுங்கள். சுருக்கமாகக் கேட்பதாக இருந்தால் தான்
விளக்கம் பெற அனுமதிக்க முடியும்.

**திரு. பாப்பா சுப்பிரமணியன் :** அதாவது ஒருசில இடங்
களில் லைட்டுகள் எரியாமல் இருப்பது உண்மை. அதற்குக்
காரணம் வேண்டுமென்றே இந்த அரசாங்கத்திற்கு, கெட்ட
பெயரை ஏற்படுத்த வேண்டும் என்ற காரணத்தாலே, ஒரு சில
ஊழியர்கள் இப்படிச் செய்கிறார்கள். அப்படிப்பட்ட ஊழியர்
களைப் பற்றி இந்த அரசாங்கத்தினுடைய கவனத்திற்கோ அல்
லது மின்சார வாரியத்தின் தலைவருடைய கவனத்திற்கோ
கொண்டுவந்து அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கச் செய்வதற்கு
பதிலாக இப்படித் தவறு செய்கின்ற ஊழியர்களுக்காக அவர்கள்
வக்காலத்து வாங்கிக்கொண்டு வருகிறார்களே, இது நியாயமா,
என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிளப்பிய
தற்கு ரொம்பவும் நன்றி. நான் ரொம்பவும் குற்றச்சாட்டுகள்
குறிப்பிடுவது குறித்துக் குறிப்பிட்டார்கள். அவர் அனைத்
திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்
என்பதால், அண்ணா அவர்கள் சட்டமன்றத்தில் குறிப்பிட்ட
தைக் குறிப்பிட விரும்புகிறேன். 'எதிர்த்தரப்பிலே உள்ள
எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆளுகின்ற கட்சிக்கு லாலி பாடுவதற்
காக சட்டமன்றத்திற்கு வரவில்லை, குறைகளைச் சொல்லத்
தான் வருகிறார்கள்' என்று அண்ணா அவர்கள் சொன்னதை
நான் அவருக்கு பதிலாகச் சொல்ல விரும்புகிறேன்.

***திரு. எம். அண்ணாதாசன் :** மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின் வாரியத்தின்
1986–87 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மீதும்,
1985–86 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை மீதும்
நான் ஒருசில கருத்துக்களைச் சொல்வதற்கு அனுமதி அளித்த
மைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சியி
னுடைய சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் திரு. சுப்பராயன்
அவர்கள், இந்த அரசு இந்த மின் வாரியத்தின் மூலம் எந்தக்
காரியத்தை, எந்தத் திட்டத்தை எங்கே நிறைவேற்றி இருக்கிறது
என்று ஆவேசமாக பொதுவுடமைத் தத்துவத்தினுடைய விளிம்
பின் உச்சியிலே நின்றுகொண்டு பேசியதை நான் பார்த்தேன்.
அப்படிப் பேசுகின்ற நேரத்தில், இடையிலே ஒரு கருத்தை இங்கே
சொன்னார்கள். அந்தக் கருத்து, அனைத்திந்திய அண்ணா

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, கிளி ஜோசியம் பார்க்கிறவர்
கள் போல, கிளி ஜோசியத்தை கையில் எடுத்துக்கொண்டு, என்ன
நடக்கும் என்று ஜோசியக்காரர்கள் சொல்வதைக் கேட்டு திருப்தி
அடைவதைப் போல, சென்று கொண்டு இருக்கிறது, திருப்தி
அடைகிறார்கள் என்று இங்கே சொன்னார்கள், நான் மாண்புமிகு
உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**திரு. கே. சுப்பராயன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, நான் கிளி ஜோசியம் பார்க்கிறவர்கள் போல் இருக்கிறார்
கள் என்று சொன்னது, கிளி ஜோசியம் பார்க்கிறபோது, குறை
களை மட்டும் அவர்கள் சொல்வார்களே தவிர, தீர்வுகளைச்
சொல்ல மாட்டார்கள். அதைப்போல இங்கே பற்றாக்குறை
என்று மட்டுமே சொல்லப்படுகிறதே தவிர, பற்றாக்குறைக்குத்
தீர்வு எங்கே இருக்கிறது என்று சொல்லப்படவில்லை என்பதற்
காகத்தான் குறிப்பிட்டேன்.

**திரு. எம். அண்ணாதாசன் ;** நான் ஒன்றை ஞாபகப்படுத்த
விரும்புகிறேன். பொதுவுடைமைப் பூங்காவில் மலர்ந்த மாண்புமிகு
உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் கிளி ஜோசியத்திற்கு
சென்றது எனக்கு வேடிக்கையாகவே இருக்கிறது. இருந்தாலும்
பரவாயில்லை. நாங்கள் எங்கள் கொள்கையை, எங்களுடைய
புரட்சித் தலைவர் அவர்களுடைய கொள்கையை, இன்றைக்கு
அல்ல, கடந்த காலத்திலேயே அவர்கள் சொல்லியதை நான்
ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ''நல்ல பொழுதையெல்லாம்
தூங்கிக் கெடுத்தவர்கள் நாட்டைக் கெடுத்ததுடன், தானும்
கெட்டார், அல்லும் பகலும் தெருக் கல்லாய் இருந்துவிட்டு'
அதிர்ஷ்டம் இல்லை என்று அலட்டிக்கொண்டார்' என்ற
கருத்தை அழகாக தெள்ளத்தெளிவாக, உறுதியாகவே சொன்
னார்கள். அந்தக் கருத்தை நான் மாண்புமிகு உறுப்பினர்
அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, நாங்கள் கிளி ஜோசியத்
தை என்றும் பின்பற்றக்கூடியவர்கள் அல்ல என்பதை நான்
அவர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-40)

அடுத்து இங்கே இந்த மின்சாரத் துறை என்ன சாதித்து
விட்டது என்று கேட்டார்கள். உண்மையிலேயே கோவைப்
பகுதியில் இருக்கிற மாண்புமிகுஉறுப்பினர் சகோதரர் சுப்பராயன்
அவர்கள் இந்தக் கேள்வியை கேட்கிறார்கள் என்றால் எனக்கு
ஒரு பக்கம் வேடிக்கையாகவும், வேதனையாகவும்தான் இருக்
கிறது. அவர் தொழிற்சங்க பகுதியில் வாழ்கிறார்கள்.
தொழிலாளர்கள் இருக்கின்ற பகுதியில் இருப்பவர்கள். விவ
சாயப் பெருங்குடி மக்கள் அதிகமாக விவசாயத்தை உற்பத்தி





செய்து கொண்டு இருக்கிற பகுதியில் இருப்பவர் இப்படிப்
பேசுகிறார் என்றால் அது முன்னுக்குப் பின் முரணாக இருக்
கிறது, செய்வதை எல்லாம் மறைத்து இப்படி பேசுவது,
வேண்டுமானால் எதிர்க்கட்சியில் இருக்கிற வாதத்திற்கு—நீங்கள்
சொன்னது போல் எங்கள் அண்ணா சொன்னார் அதை நாங்கள்
செய்துகொண்டிருக்கிறோம் என்ற வாதத்தை—வேண்டும்
என்றால் நாங்கள் ஏற்றுக்கொள்வோம். ஆனால் உண்மை
அது அல்ல என்பதை உங்களுடைய கருத்துக்கு எங்கள் அண்ணா
சொன்னதிலிருந்து நான் உங்களுக்குப் பதிலாக வைக்க ஆசைப்
படுகிறேன்.

அடுத்து, 1980ஆம் ஆண்டுக்குப் பின்னால் இந்த மின்சாரத்
துறையின் மூலமாக பெற்று இருக்கக்கூடிய நன்மைகளுக்காக,
கிராமப் புறத்தில் வாழ்கிற, நடுத்தர ஏழை விவசாயிகள்
அரசைப் பாராட்டிக்கொண்டு இருக்கிறார்கள். நான் மீண்டும்
மீண்டும் சொல்ல ஆசைபடுகிறேன், எங்களுடைய தானைத்
தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள் மூன்றாவது முறையாக
இந்த மாமன்றத்தில் முதலமைச்சராக இருக்கிறார்கள். அவர்
இங்கே இல்லாத நேரத்தில் இந்த நாட்டு மக்கள், விவசாயப்
பெருங்குடி மக்கள் புரட்சித் தலைவருக்கு வாக்களித்து இருக்
கிறார்கள். நீங்கள் சொல்லுவதைப் போல் இந்தத் தமிழ்
நாட்டில் அரசுப் பணியாளர்களாக இருக்கின்ற என்.ஜி.ஓ.க்களாக
இருக்கின்ற, ஆசிரியர்களாக இருக்கின்ற பணியாளர்கள்
ஒட்டுமொத்தமாக இல்லாமல், அவர்களில் ஒரு பகுதியினர்
மட்டும் வாக்களித்து இருந்தாலும் மெஜாரிட்டியாக இருக்கின்ற
விவசாயிகளும், தொழிலாளர்களும்தான் மூன்றாவது முறையாக
மாண்புமிகு புரட்சித் தலைவர் அண்ணன் எம்.ஜி.ஆர். அவர்கள்
ஆட்சிக்கு வரவேண்டும் என்ற தீர்ப்பை வழங்கி ஆட்சியில்
அமர்த்தியிருக்கிறார்கள். குடிசைப் பகுதி மக்களுக்கு, ஏழை விவ
சாயிகளுக்கு இந்த மின்துறை மூலமாக இந்த அரசு தீட்டி
இருக்கிற, செயல் ஆற்றி இருக்கிற திட்டம் அங்கே ஏற்கப்பட
வில்லையா அல்லது நிறைவேற்றப்படவில்லையா என்பதைக்
கடந்த கால தீர்ப்புகள் நமக்குக் காட்டிக் கொண்டிருக்கின்றன
என்பதை தயவு செய்து மறந்து விடக்கூடாது,

விவசாயிகள் இரு தவணை முறையில் ஒரு குறிப்பிட்ட கட்
டணத்தைக் கட்டலாம் என்று இந்த அரசு மின்துறையின் மூலம்
ஆணையிட்டு இருக்கிறது. ஆகவே அந்த விவசாயிகள்
இன்றைக்கு நிம்மதியாக மின்சாரத்தை பயன்படுத்திக்கொண்டு
அதிகமான சந்தோஷத்தோடு இருக்கிறார்கள்.

[திரு. எம். அண்ணதாசன்] [1986 நவம்பர் 20

வேண்டுமானால் மின்சாரம் இன்னும் நமக்குத் தேவை
இருக்கிறது, மின் உற்பத்தியை நாம் பெருக்கவேண்டும் என்ற
வாதம் ஏற்றுக்கொள்ளப்படலாம். அதற்காக இந்த 7-வது
ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசு நமக்கு அனுமதித்து
இருக்கிற ஒவ்வொரு திட்டத்தின் அடிப்படையிலும் வருங்காலத்
தில் இவ்வளவு மின் உற்பத்தியை நாம் பெருக்கவேண்டும்
என்று இங்கே இந்த கொள்கைக் குறிப்பில் கொடுத்து இருக்கி
றார்கள். அதை நீங்கள் படித்து இருப்பீர்கள் என்று நான்
நிச்சயமாக நம்புகிறேன்.

குறிப்பாகச் சொல்லுகிறேன், திருச்சி மாவட்டத்தில்
திருவரம்பூர் தொகுதியில் பாயிலர் தொழிற்சாலை இருக்கிறது.
அதில் 16 ஆயிரம் தொழிலாளர்கள் நிரந்தரத் தொழிலாளர்க
ளாக இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் நலன் கருதி
எந்தவிதத்திலும் தடங்கல் இல்லாமல் அங்கே தனியாக ஒரு
அமைப்பை உருவாக்கி இந்த மின் துறை அவர்களுக்கு மின்சாரம்
வழங்கிக்கொண்டு இருக்கிற காரணத்தால்தான் அந்த 16 ஆயிரம்
தொழிலாளர்களும் 3 சிப்ட் முறையில் பணியாற்றிக்கொண்டு
இருக்கிறார்கள். அவர்களுக்கு இன்றைக்கு உயர்வான சம்பளம்
கிடைத்துக்கொண்டு இருக்கிறது. இந்தியாவில் அதிகப்படியான
லாபத்தை அந்த பாயிலர் தொழிற்சாலை இன்றைக்குத்தந்து
கொண்டிருக்கிறது. இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
நிச்சயமாக மறுக்க மாட்டார்கள்.

தெரு விளக்குகள் எரியவில்லை என்று சொன்னார்கள்.
ஊராட்சித் மன்றத்தேர்தல்கள், ஊராட்சி ஒன்றியத் தேர்தல்கள்,
நகராட்சி மன்றத் தேர்தல்கள் நடக்கவில்லை. அதனால்தான்
தெரு விளக்குகள் எரியவில்லை என்று இங்கே முன்பு சொன்
னீர்கள். ஆனால் தைரியமாக நாங்கள் ஊராட்சி மன்றத்
தேர்தலை நடத்தினோம். நகராட்சி தேர்தலை நடத்தினோம்.
இன்றைக்கு ஆளும் கட்சியிலே மட்டும்தான் ஊராட்சி மன்றத்
தலைவர்களாக நகராட்சி மன்றத் தலைவர்களாக இருக்கிறார்
களா? அனைத்துக் கட்சியிலுள்ள பலரும் பதவியில் அமர்ந்திருக்
கிறார்கள். மின் துறை, கம்பங்களின் மூலமாக மின் இணைப்பு
களைப் பொருத்தித் தரமுடியும். ஆனால் தெருவிலே எரியாத
விளக்குகளுக்கு மின்துறை என்ன செய்யமுடியும்? அங்கேயிருக்
கின்ற பணியாளர்கள்தான் செய்யவேண்டும், அங்கேயிருக்கின்ற
ஊராட்சிமன்றத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள்,
நகராட்சித் தலைவர்கள், அங்கேயிருக்கின்ற பணியாளர்கள்
மூலமாக அதைச் செயல்படுத்தத் தவறிவிட்டதன் காரணத்
தால்தான், அவையெல்லாம் எரியாமல் இருக்கின்றன. ஒன்றி
யங்களில், நகராட்சிகளில் சரியான பிரதிநிதிகள் இல்லை.
அதனால்தான் விளக்கு எரியவில்லை என்று சொன்னார்கள்.
இப்போது நேரடியாக மின் துறையைக் குறை சொல்கிறார்கள்.



1986 நவம்பர் 20] (திரு. எம். அண்ணதாசன்)

இன்னொன்றையும் இங்கே சொன்னார்கள். கிராமப்புறங்
களில் குடிசைகளில் விளக்கு எரிகிறதா என்று கேட்டார்கள்.
அவர்களிடம் ஒரு மாதத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகையைக்
கட்டவேண்டுமென்று அரசு அறிவித்தது. இங்கே சட்டமன்றத்
தில் நாம் வைத்த கோரிக்கையின் அடிப்படையில், புரட்சித்
தலைவர் அவர்கள் எண்ணிப் பார்த்து, உடனே அதை ஏற்று,
இனிமேல் குடிசைப் பகுதி மக்களிடமிருந்து எந்தவிதமான
கட்டணத்தையும் வசூலிக்க வேண்டாம் என்று சொன்னார்கள்.
ஆனால் வசூல் செய்ய வேண்டாம் என்று சொன்னதற்குப் பிறகு,
இந்த அரசு போட்ட உத்தரவைச் செயலாக்குவது யார்? மின்
துறையில், மின் இலாகாவில் தலைமைப் பொறுப்பிலே இருக்
கின்றவர்கள் செயலாக்கவேண்டும் என்பது உண்மைதான்.
மாவட்டந்தோறும், தாலுக்காக்கள்தோறும், ஊராட்சி மன்றங்
கள்தோறும் செயலாக்கவேண்டியது அந்த அந்த ஊழியர்கள்
தான். அங்கேயிருக்கின்ற ஊழியர்கள் செய்கிறார்களா என்றால்,
விளக்குக் கம்பம் இருக்கிறது. வீட்டில் உள்ள விளக்கு எரிகிறதா
என்று பார்த்தால் நிலைமை தெரியும். அந்த வீட்டிலே
உள்ள பல்பு நன்றாக உள்ளது. ஆனால் கம்பத்திலே இருக்கின்ற
பிளக் பொருத்தப்படாமல் இருக்கிறது. இது யார் குற்றம்?
அங்கேயிருக்கின்ற ஊழியர்கள் குற்றம். அதைக் கேட்டால
நாங்கள் பொருத்தித்தான் வைத்திருக்கிறோம் என்று சொல்
கிறார்கள். அதற்கு நடவடிக்கை எடுக்க மறுக்கிறார்கள்.
அதற்கு மேல் அங்கேயிருக்கின்ற மேலதிகாரிகளுக்கு எழுத்து
மூலமாகக் கொடுத்தால் வலது கம்யூனிஸ்ட் யூனியன், இடது
கம்யூனிஸ்ட் யூனியன், தி.மு.க. யூனியன் இப்படி நாட்டிலே
இருக்கிற அத்தனை கட்சிகளைச் சார்ந்தவர்களும், நான்
அந்தக் கட்சியைச் சார்ந்தவன், இந்தக் கட்சியைச் சார்ந்தவன்
அதனால நடவடிக்கை எடுக்கக்கூடாது என [illegible]கிறார்கள்.
உடனே அதற்கு மறுப்பு தெரிவிக்கின்றோம். ஆகவே நாம்
போடுகிற சண்டைகளில், வாதங்களில், குடிசை மக்களுக்குக்
கொடுக்கப்பட்டிருக்கின்ற அந்த ஒற்றை விளக்குகளை கூட உருப்
படியாக அவர்கள் அனுபவிக்க முடியாமல் நின்றுகொண்டிருக்
கிறார்கள். அதற்கு காரணம் நாமேதான். ஆகவே அதை
யெல்லாம் மறந்துவிட்டு. வாதப் பிரதிவாதம் பேசுவதை விட்டு,
சித்தாந்தங்களைப் படித்துக் கொண்டிருக்கிற பொதுவுடைமைக்
கட்சிகளைச் சார்ந்தவர்கள், தயவு செய்து எண்ணிப் பார்க்க
வேண்டுமென்று நான் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. மின் துறையிலே தலைமைப் பொறுப்பை
ஏற்றிருக்கிறவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம்,
விவசாயத்திலே ஈடுபட்டிருக்கிற, நடுத்தர ஏழை விவசாயி
கள் இன்றைக்கு மின்சாரத்தை நம்பித்தான் வாழ்ந்து
கொண்டிருக்கிறார்கள். மின்துறையானது, விவசாயிகளுக்கு

[திரு. எம். அண்ணாதசன்] [1986 நவம்பர் 20

வரிசை முறை என்று முறைப்படுத்தி அவர்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு வரைமுறைப்படுத்தியிருக்கிறார்கள். அந்த வரைமுறைக்கு ஒப்ப சில விவசாயிகளை அழைத்து, அவர்களுக்கு நோட்டீஸ் தரப்பட்டிருக்கிறது. நீங்கள் மோட் டாரை வாங்கிவிடலாம். அதற்குரிய சாமான்களை வாங்கித் தயாராக வைத்துக் கொள்ளுங்கள். அதனுடைய நகல்களை சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு அனுப்புங்கள் என்று சொல்லி யிருக்கிறார்கள். அதன் பிறகு அந்த ஏழை விவசாயி பணம் இல்லாத நிலையில் இருக்கின்றபோதும், நெல்லை விற்று, சிலர் நகையை வைத்து, மின்சார மோட்டாரை வாங்கி வைத்துக்கொண்டு, அலுவலகத்திற்கு வரும்போது, மாவட்ட, தாலுக்கா அதிகாரிகள், அதை வைத்துக்கொள்ளுங்கள். நாங்கள் சொல்கின்ற நேரத்திலே எடுத்து வாருங்கள் என்று சொல்கிறார்கள். ஆக இரண்டு வருடத்திற்கு முன்னால் வாங்கி வைக்கச் சொல்வது. உண்மையிலேயே ஒரு விவசாயிக்கு மிகப் பெரிய நஷ்டத்தை உண்டாக்குவதாகும். அப்படி விவசாயிகள் வாங்கி வைத்திருக்கிற மோட்டார் களுக்கு எந்தவிதமான தாமதமுமின்றி, அரசினுடைய அனுமதி பெற்று, சிறப்பு அனுமதி தந்து, மின் இணைப்புகளைத் தந்து உதவவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-50]

குறிப்பாக திருச்சி மாவட்டத்தில் திருவரம்பூர் தொகுதியில் இங்குள்ள அதிகாரிகள் நீங்கள் எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டும்—வீரம்பட்டி, சூரியூர், சின்ன சூரியூர், இலங்கை பட்டி, காந்தலூர், அசூர் துப்பாக்கி தொழிற்சாலையை சுற்றியிருக்கக்கூடிய இந்த ஊர்களுக்கு மோட்டார் வாங்கி வைத்தும் மின் இணைப்பு தரப்படாமல் இருக்கிறது. அதற்கு அரசு சிறப்பு அனுமதி தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு இந்தத் திட்டத்தை தமிழ்நாடு அளவில் எல்லா விவசாயிகளுக்கும் கிடைக்கக்கூடிய ஒரு திட்டமாக உருப் பெற வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் எவ் வளவோ செய்யவில்லை என்று சொன்னார்கள். ஆனால் கடந்த காலத்திலேயும் 1980-க்குப் பின்னாலேயும், எந்தக் கால கட்டத்திலேயும் இந்த ஏழை விவசாயிகளை யார் ஏறெடுத்துப் பார்த்தார்கள் என்பதை மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அதற்குத் தீர்ப்பு தான் மூன்றாவது முறையாக முதலமைச்சராக இந்தத் தமிழகத்திலே இன்றைக்கு பொறுப்பு ஏற்றிருக்கிறார் எங்களுடைய புரட்சித் தலைவர் என்பதைச் சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.



1986 நவம்பர் 20]

***திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த மானியக் கோரிக்கை கள் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மின்சாரம் இல்லாமல் எந்தக் காரியமும் நடக்க முடியாது என்று நாம் எல்லோரும் உணர்ந்திருக்கிறோம். இங்கே பேசிய அத்தனை அங்கத்தினர்களும் நல்லமுறையில் அதைப் பற்றி சிந்தனை செய்து தங்களுடைய கருத்துக்களை எடுத்து சொல்லியிருக்கிறார்கள். இந்த மின்சார வாரியத்தின் மூல மாக வருவாய் ரூ. 670.85 கோடி என்று வருகிறது. செலவு ரூ. 897.48 கோடி என்றும் பற்றாக்குறை ரூ. 226.63 கோடி என்றும் இருக்கிறது. இந்தப் பற்றாக்குறைக்கு நாம் விவசாயி தலையில் சுமையைப் போடாமல், அரசாங்கமே இந்தப் பற்றாக்குறை பணத்தை கொடுத்து உதவுவதற்கு ஏற்பாடு களைச் செய்ய வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

இன்றைக்கு மின்சாரத்தின் உபயோகம் நம்முடைய எல்லா துறைகளுக்கும் தேவைப்படுகின்ற காரணத்தினால் விவசாயத்திற்கு, 10.74 இலட்சம் பம்ப் செட்டுகளுக்கு நாம் மின்சார இணைப்பு கொடுத்திருக்கிறோம். இப்படி மின்சாரத் தினுடைய பயன் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு போகின்ற காரணத்தினால், இந்த மின்சார வாரியத்தின் தலைவர், மற்றவர்கள் எல்லாம் சேர்ந்து, உலக வங்கியின் மூலமாகக் கடன் வாங்கி, ஏற்கனவே காங்கிரஸ் காலத்தில் மிகப் பெரிய திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றியிருக்கிறார்கள், தங்களுடைய அறிவுத் திறமையால் பல நல்ல காரியங்களை ஆற்றுவதற்கான பலவிதமான திட்டங்களை இங்கே அறிவித் திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் விரைவிலே இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். நிறை வேற்றப் படுவதற்கான ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்க வேண்டும். அதை எவ்வளவு முனைப்பாகச் செய்து கொடுக்க முடியுமோ அந்த அடிப்படையில் செய்து கொடுக்க வேண்டும். இன்றைக்கு நிலக்கரி பற்றாக்குறை இருக்கிறது. இந்த நிலக்கரி பற்றாக்குறையாக இருப்பதற்கு ஒரிசா மாநிலத்தில் கலிங்கா என்ற இடத்தில் நிலக்கரிச் சுரங்கம் இருக்கிறது, அந்த இடத்தில் ஒரு சுத்திகரிப்புத் தொழிற்சாலையை ஏற்படுத்து வதற்கான வழிவகையை நாம் செய்தாக வேண்டும். அதற்கு மத்திய அரசின் உதவி தேவைப்படுகிறது என்று சொன்னார் கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அரசாங்கத்தினுடைய முழு நம்பிக்கையைப் பெற்றவராக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறார்கள். அவருடைய முழு நம்பிக்கையை பெற்று அவர்களுக்கு ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் இம்மாதிரி

திட்டங்களுக்கு எல்லாம் எவ்வளவு பணமானாலும், மத்திய அரசும், மாநில அரசும் ஒத்துழைப்பு கொடுத்து, அந்த இலாக்காவினர் இந்தத் திட்டங்களை நிறைவேற்ற உதவி செய்து, விரைவிலே இந்தத் திட்டங்களை நிறைவேற்றினால் இந்த மின்சாரப் பற்றாக்குறையைத் தீர்க்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், மதுரை மாவட்டத்தில் சண்முகாநதி புனல் மின் திட்டம், அமராவதி திட்டம் போன்று ஏழு திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. இந்த ஏழு திட்டங்களையும் இன்னும் 1½ ஆண்டுகளுக்குள் மிகப் பொறுப்பு வாய்ந்த இலாக்காவின் தலைவர் இருப்பதினால், நிறைவேற்றிக் கொடுப்பதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமக்கு வர, வர ரொம்ப மழை இல்லை. நிலத்தடி நீர் நமக்கு இல்லாமல் போய்விட்டது. அப்படிப்பட்ட நிலையில் கடற்கரையை ஒட்டி, கடற்கரை ஓரமாக, பல இடங்களைத் தேர்ந்தெடுத்து அனல் மின் நிலையங்களைச் சிறிது, சிறிதாக அமைக்கவேண்டும். ஏற்கனவே நமக்கு மதுரை மாவட்டத்தில் சமயநல்லூரில் ஒரு மின் நிலையம் இருந்தது. 14 மெகாவாட் மின் உற்பத்தி செய்தது. ஏற்கனவே இருந்த அரசாங்கம் அது கூடாது என்று அதை சின்னாபின்னமாக்கிவிட்டார்கள். அப்படியெல்லாம் இல்லாமல் 10 மெகா வாட், 14 மெகா வாட் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருந்தாலும்கூட, கடற்கரை ஓரங்களில் தண்ணீர் கிடைக்கக்கூடிய பகுதிகளை ஆராய்ந்து பார்த்து, அனல் மின் நிலையங்களை எங்கெல்லாம் ஆரம்பிக்க முடியுமோ, அங்கெல்லாம் ஆரம்பித்து, மின்சாரம் அதிக அளவில் உற்பத்திசெய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்தில் மஞ்சளாறு திட்டம், ஏற்கனவே பல முறை சொல்லியிருக்கிறேன். பழைய காலத்திலே இங்கே விவாதத்திலேகூட சொல்லியிருக்கிறேன். அந்த மஞ்சளாறு திட்டத்திலே தண்ணீர் வருகிறது. மழை பெய்யும்போது உயரமாக வந்து விழுகிறது. அந்த மஞ்சளாறு திட்டத்திலே கூட மின்சார உற்பத்தி செய்யமுடியுமா என்பதைப் பற்றி பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

31–3–1986 நிலவரப்படி ரூ. 187.99 கோடி கடன் உதவி பெரும்திட்டம், 643 திட்டங்களுக்கு மத்திய அரசு உதவி கொடுத்து இன்றைக்கு அதற்கும் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறியும்போது மகிழ்ச்சியான விஷயமாக



இருக்கிறது. அந்த சாங்ஷன் செய்யப்பட்ட 643 திட்டங்களையும் எவ்வளவு சீக்கிரம் முடிக்கமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் முடிக்க ஒரு வழியைச் செய்ய வேண்டும்.

பிறகு வட சென்னை அனல் மின் திட்டம், அது 630 மெகா வாட். ஆசிய நாடுகளின் முன்னேற்ற பாங்குகளின் உதவியோடு இது கிடைப்பதாகத் தெரிகிறது. அதையும் எவ்வளவு சீக்கிரம் நடைமுறைப்படுத்த முடியுமோ அதைச் செய்யவேண்டும் என்று நானும் ஒரு விவசாயி என்ற முறையில் அன்போடும், பணிவோடும் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு கடலூர், உண்மையிலேயே ரொம்ப பாராட்டப்படவேண்டியதுதான். கடலூருக்குப் பக்கத்தில்—ஒரு திட்டம் போட்டால் மின்சாரம் கொடுக்கிறார்கள். மின்சாரத்தை உற்பத்தி பண்ணவேண்டும். பிறகு, கம்பி இழுக்க வேண்டும், பிறகு அதை சேமித்து வைக்கவேண்டும். பிறகு தானே மின்சாரம் கிடைக்கும். உடனே, தட்டினால் திறக்கப் படும் என்கிறார்போல் இல்லை. 2, 3 வருஷம் பரிசீலனை செய்து, ஆய்வு செய்து அதற்குப் பிறகுதான் மிகப் பெரிய திட்டங்களை—கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து நிறைவேற்ற இருக்கிறோம். இந்தக் கடலூர் அருகில் அமைக்க இருக்கும் மின் திட்டத்திற்கு 753 கோடி ரூபாய் செலவு செய்ய இருக்கிறோம் என்றால், அதனால் எப்படி வருமானம் கிடைக்கும்? மின்சார உற்பத்தியை எப்படிச் செய்யவேண்டும், அதற்கு கால அவகாசம் எவ்வளவு பிடிக்கும் என்பதை ஆராய்ச்சி செய்து, இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குள்ளாகிலும் கடலூர் அனல் மின் திட்டத்தைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை இந்த இலாகாவினர் மிக முனைப்போடு எடுத்து அமைச்சர் அவர்களுக்கு நல்ல பெயர் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிறகு, விநியோக முறையில் உண்மையிலேயே நாங்கள் எல்லாம் ரொம்ப பாதிக்கப் படுகிறோம். எனக்குச் சொந்தமாக 4, 5 பம்பு செட்டுகள் இருக்கின்றன. இரண்டு கிணற்றிலே தண்ணீரே இல்லை, தண்ணீர் இல்லாமல் மோட்டாரைக் கழற்றிப் போட்டு, 4, 5 வருஷம் ஆகிவிட்டது. அதற்குப் பிறகுகூட— முன்பு எல்லாம் ஐந்து ரூபாய் மினிமம் சார்ஜ் கட்டிக் கொண்டிருந்தோம். ஆனால் இப்போது 2 மோட்டாருக்கும் 75 ரூபாய் வீதம் கட்டிக் கொண்டே வருகிறோம். ஒரு விவசாயிக்கு நில, புலம் இருந்தாலும்கூட, 4 வருடம் மழை இல்லாவிட்டால் கஷடம் தான். ஒரு துளிகூட தண்ணீர் இல்லாமல், காசு இல்லாமல்

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் [1986 நவம்பர் 20

அலைய வேண்டிய நிலைமை. கடன் எங்கே கிடைக்கும்? நகை நட்டு இருந்தால் கொண்டு போய் அடகு வைக்கிறோம். அது கூட இல்லாதவர்கள் என்ன செய்வார்கள்? ஆக, தண்ணீர் உள்ள கிணற்றுக்கு மின்சாரத்திற்கு 75 ரூபாய் கேட்பதை நான் வரவேற்கிறேன். தண்ணீர் இருக்கக்கூடிய கிணற்றுக்கு, தண்ணீர் 365 நாட்கள் இருக்கக்கூடியவர்களுக்கு, அந்த விவசாயிகளுக்கு அது பயன்படும். ஆனால் தண்ணீரே இல்லாத பகுதிக்கு மோட்டாரை இயங்கச் செய்யமுடியாமல், மின்சாரத்தை உபயோகப்படுத்த இயலாமல் பம்புசெட்டைக் கழற்றிப் போட்டு இருக்கிறோமே, அப்படி இருக்கிறவர்களுக்கும் 75 ரூபாய் கட்டவேண்டும் என்றால் அது நன்றாக இல்லை. அதைச் தயவுசெய்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு ஆராய்ந்து பார்த்து தண்ணீர் இல்லாத கிணற்றுக்கு அந்த வசூல் செய்ய வேண்டியதில்லை. மினிமம் சார்ஜ் 5 ரூபாய் கட்டினால் போதும் என்ற நிலைமையை உருவாக்கிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

அதற்கு அடுத்தபடியாக, தாட்கோ, என். ஆர். இ. பி. திட்டங்களின் மூலமாக குடிசை வீடுகளை மாடிபிகேஷன் பண்ணி, இப்போது ஓடு போட்டு வீடு கட்டிக் கொடுத்திருக்கிறோம். ஏற்கனவே குடிசைகளுக்கு மின்சாரம் இனமாகக் கொடுத்திருக்கிறோம். இந்தக் குடிசைகளை மாற்றி காரை வீடுகளாக, ஓட்டு வீடுகளாக மாற்றப்பட்ட இவைகளுக்கும் இனாமாக மின்சார வசதியை செய்து கொடுத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும். அது மாத்திரம் அல்லாமல், ஏற்கனவே நான் ஒரு கேள்வி எழுப்பும்போது முன்னால் மின்துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அதாவது, தெரு விளக்குகளுக்கு குண்டு பல்பு போட்டு இருக்கிறோம். அதிலே சரியான பல்பு, தரமான பல்பு இல்லை என்று சொல்கிறார்களே அது உண்மையா என்று கேட்கும்போது, அமைச்சரவர்கள் அது உண்மைதான் என்று சட்டமன்றத்தில் சொன்னார்கள். ஆக, குண்டு பல்பு அடிக்கடி ரிப்பேர் ஆவது மாத்திரமல்ல, இன்றைக்கு போட்டால்கூட எரிவதில்லை. அதை மாற்றி பஞ்சாயத்து போர்டுகள் மூலமாக பணத்தைக் கட்ட வையுங்கள்.



1986 நவம்பர் 20] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

(நண்பகல் 12—00)

ஆனால் பல்பை வாங்கிப் போடுவது, அதை பராமரிப்பு செய்வது என்பதையெல்லாம் மின்சார வாரியமே ஏற்றுக் கொள்வது தான் நல்லது. அப்போதுதான் நல்ல தரமான பல்புகளை அவர்கள் வாங்கிப் போட முடியும். அதோடு குண்டு பல்புகளையெல்லாம் அறவே எடுத்துவிட வேண்டும். சில இடங்களில் இன்னும் குண்டு பல்புகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் எடுத்துவிட்டு 2 அடி டியூப் லைட் அல்லது 3 அடி டியூப் லைட்டுகளைப் போட்டால் அதன் மூலம் மக்களுக்கு நல்ல ஒளி கிடைக்கும். அப்படிச் செய்வதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்றும் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டில் உள்ள கிராமங்களைப் பொறுத்த வரையில் 95 சதவீதம் கிராமங்களுக்கு நாம் மின் இணைப்பைக் கொடுத்து விட்டோம். இன்னும் அவ்வாறு மின் இணைப்புக் கொடுக்கப்படாமல் இருக்கிற கிராமங்கள் மிகக் குறைவாகத்தான் இருக்கும். அவற்றையும் ஒன்றிரண்டு ஆண்டுகளில் அல்லது ஆறு மாத காலத்திற்குள் மின்சார வசதியுள்ள கிராமங்களாக மாற்ற வேண்டும். தமிழகத்தில் உள்ள அத்தனை கிராமங்களுக்கும் மின் இணைப்பைக் கொடுத்து இங்கே மின்சார இணைப்பு இல்லாத கிராமங்களே இல்லை என்று சொல்லுகிற அளவுக்கு நிலைமையை உண்டாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அந்தத் துறையைச் சேர்ந்த தலைவர் அவர்களும் நல்ல முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்வது சாலச் சிறந்ததாக இருக்கும் என்றும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மின் விநியோகத்தைப் பொறுத்த வரையில் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். டெல்லி, கல்கத்தா போன்ற இடங்களுக்குச் சென்றால் இரவு 8 மணிக்கெல்லாம் லைட்டை அணைத்து விடுகிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் இங்கே நைட் முழுவதும் கூட லைட் எரிவதைப் பார்க்கிறோம். அது மட்டுமல்ல, அலங்கார லைட்டுகள் கூட இரவெல்லாம் எரிவதைப் பார்க்கிறோம். மைக் செட்டுகள் இரவெல்லாம் பாடிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். கிராமங்களிலும், டவுன்களிலும் இதே நிலைமைதான் இருக்கிறது. ஆகவே ஆடம்பர லைட்களைப் பொறுத்த வரையில் 8 மணிக்குமேல் எரியவிடக் கூடாது என்று ஒரு நிலையை உருவாக்க வேண்டும். அவ்வாறு மிச்சப்படுத்தப்படுகிற மின்சாரத்தைத் தொழில் துறைக்கும் விவசாயத் துறைக்கும் கொடுத்தால் விவசாயத்தை மேலும் சிறப்பாகச் செய்ய சாலச் சிறந்ததாக இருக்கும்.

136498

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1986 நவம்பர் 20

அடுத்து விவசாயிகளைப் பொறுத்த வரையில் இரவு நேரத்
தில் தான் மின்சாரம் வழங்கப்படுகிறது. என்னைப் பொறுத்த
வரையில் எங்கள் குடும்பத்தில் ஆண்கள் இல்லாத காரணத்தால்
நாங்கள்தான் விவசாயத்தை ஆட்களை வைத்து செய்ய வேண்டி
யிருக்கிறது. பெண்கள் இரவு நேரத்தில் கரும்புத் தோட்டத்
திற்குப் போய் தண்ணீர் பாய்ச்ச முடியாது. நிலங்களுக்குச்
சென்று ஆண்கள்தான் இரவு நேரத்தில் தண்ணீர் பாய்ச்ச முடி
யும். அதன் காரணமாக நாங்கள் வேலைக்கு யாரையாவது
வைத்து இரவு நேரத்தில் தண்ணீர்ப் பாய்ச்சச் சொன்னால்
அவர்கள் போய் படுத்து தூங்கி விடுகிறார்கள். இதனால் ஒரு
இடத்தில் தண்ணீர் பாய்கிறது. ஒரு இடத்தில் பாயாமல்
தண்ணீர் வீணாகிப் போய்விடுகிறது. எனவே இரவு நேரத்தில்
விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுப்பதை நிறுத்தி பகல் நேரத்
திலேயே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
இதை நீங்கள் எப்படிச் செய்வீர்களோ எனக்குத் தெரியாது.
இரவு நேரத்தில் கொடுக்காமல் பகல் நேரத்தில் மின்சாரம்
கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படியாவது வழி
வகை காண வேண்டும் என்று இந்த நேரத்தில் வலியுறுத்திக்
கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் அவர்களும் இலாக்கா அதி
காரிகளும் பேசி எப்படியாவது பகல் நேரத்தில் மின்சாரம் வழங்க
நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இரவு நேரங்களில்,
தோட்டத்திற்குச் சென்றால் அங்கே பாம்பு, பல்லி, பூரான்
எல்லாம் வருகிறது. எவ்வளவோ காரியங்களைச் செய்கிறீர்கள்.
விவசாயிகளுக்கு மட்டும் இரவு நேரத்தில் மின்சாரத்தைக்
கொடுக்காமல் பகல் நேரத்தில் கொடுத்தால் அது சாலச் சிறந்த
தாக இருக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

அடுத்து ஆதி திராவிடர்களுக்கு மின் இணைப்பு கொடுப்பது
குறித்தும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எத்தனையோ
பேர் மின் இணைப்பு கேட்டு மனுச் செய்திருக்கிறார்கள். ஹரி
ஜனங்கள் மட்டுமல்ல, மற்றவர்களும் கூட கடன் வாங்கி பம்பு
செட்டு போட்டுவிட்டு—எல். எம். பேங்க் போன்றவைகளில்
கடன் வாங்கி பம்பு செட்டைப் போட்டு விட்டு 3 ஆண்டுகள்
முதல் 5 ஆண்டுகள் வரை காத்துக் கொண்டிருக்கிற நிலைமை
இருக்கிறது. டிரான்ஸ்பார்மரில் லோடு இருந்தால் கூட, அதா
வது தேவையான சக்தி இருந்தாலும் கூட மின் இணைப்புக்
கொடுக்கப்படாத நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையைப்
போக்கி அவர்களுக்கெல்லாம் கனெக்ஷன் கொடுப்பதற்கான
நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 5 ஏக்கர் வரை நிலம் வைத்திருப்பவர்களுக்கு
இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. இனாமாக அவர்களுக்கு
மின்சாரம் வழங்குவதை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.



1986 நவம்பர் 20] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

கிராமங்களில் இருக்கிற விவசாயிகளுக்கு இது மிகவும் உதவியாக்
இருக்கிறது. நெல் பயிரிடும் இத்தகைய விவசாயிகளுக்கு இரவு
பகல் எந்த நேரத்திலும் மின்சாரத்தைக் கொடுக்கலாம். அதிலும்
நான் இப்போது சோழவந்தான் எம்.எல்.ஏ. இல்லை. இப்போது
பழனி தொகுதி. சோழவந்தான் புகுந்த தொகுதி. நிலக்
கோட்டை பிறந்த தொகுதி. இந்தப் பகுதிகள் எல்லாம் எப்படி
இருக்கின்றன. அங்கே இருக்கிற விவசாயிகள் எப்படிக் கஷ்டப்
படுகிறார்கள் என்பதைப் பார்த்து அவர்களுக்கு எப்படி எல்லாம்
நல்லது செய்ய முடியுமோ அப்படிச் செய்ய வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு ஹரிஜனங்களும் ஏழை விவசாயிகளும் 5 ஏக்கருக்கு
மேல் 10 செண்ட் நிலம் வைத்திருந்தால் அவர்களெல்லாம்
நடுத்தர விவசாயிகள் என்று சொல்லி இந்தச் சலுகை இல்லை
என்கிறார்கள். கிணறு வெட்டக் கடன் வாங்கி, பம்பு செட்
போட கடன் வாங்கி நீண்ட காலமாகக் காத்துக் கொண்டிருக்
கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வரிசைப்படிதான் மின்
இணைப்பு கொடுக்க வேண்டும் என்றால் கஷ்டமாக இருக்கிறது.
வரிசைப்படி கொடுப்பதும் நல்லதுதான். இல்லை என்றால் சிலர்
கோர்ட்டுக்குப் போய் விடுகிறார்கள். இருந்தாலும் இப்படி
வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் இப்போதுதான்
வாழ்க்கையின் வளம் பெறுகிற சூழ்நிலை இருக்கிறது என்பதைப்
பார்த்து அப்படிப் பட்ட நிலையில் இருப்பவர்களுக்கெல்லாம்
வரிசைப்படி பார்க்காமல் முன்னுரிமை கொடுத்து மின்சாரம்
வழங்கப்படுவது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று சொல்லி
என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்
களே, மின் வாரியத்தினுடைய பட்ஜெட் சம்பந்தமான விவாதம்
நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே வெகு நாட்
களுக்கு முன்பு நடத்தப்பட்டிருக்க வேண்டிய விவாதம் இது.
அது நடத்தப்படாமல் இப்போதாவது நடத்தப்படுகிறதே என்
பது கொஞ்சம் சந்தோஷத்தோடு பார்க்க வேண்டியதுதான்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

மின் உற்பத்தியைப் பொறுத்த வரையில் தமிழகத்தில் நாம்
அதிகப்படியான மின்சார உற்பத்தியைச் செய்திருக்கிறோம்.
99 சதவீதம் கிராமங்களுக்கு நாம் மின்சாரத்தை விஸ்தரித்
திருக்கிறோம். பத்தே முக்கால் இலட்சம் பம்பு செட்டுகளுக்கு
நாம் மின்சாரத்தைக் கொடுக்கிறோம். இதெல்லாம் நமது சாத
னைகள் என்றெல்லாம் இங்கே பேசப்பட்டது. சாதனைகளாக
உள்ளதை சாதனை அல்ல என்று யாரும் சொல்ல மாட்டார்கள்.
சொல்லக்கூடாது. ஆனால் அதை மட்டும் நாம் பார்த்தால்
போதாது.

[திரு. கு. ரமணி] [1986 நவம்பர் 20

தமிழ்நாட்டில் வளர்ந்து வரக்கூடிய தொழில் வளர்ச்சியில் பத்தே முக்கால் இலட்சம் பம்பு செட்டுகளை உண்டாக்கி அதற்கு நாமும் மின்சாரம் கொடுக்கிறோம். ஆனால் கேரளாவில் பத்தே முக்கால் இலட்சம் பம்பு செட்டுகள் வைக்க முடியாது. அதனுடைய லாண்ட்ஸ்கேப், விவசாய முறை அப்படி. ஆந்திராவில் இவ்வளவு இலட்சம் பம்பு செட்டுகள் வைத்து விவசாயம் நடக்கவில்லை. அவர்களுக்கு இவ்வளவு தேவையில்லை. காரணம், கிருஷ்ணா, கோதாவரி நதிகள் ஓடக்கூடிய நாட்டில் அவர்களுக்குத் தேவையான தண்ணீர் யதேஷ்டமாகக் கிடைக்கிறது. நமக்கு அது இல்லை. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய கிணறுகளில் 200 அடி ஆழத்தில் டபிள் மோட்டார் வைத்து விவசாயம் நடத்த வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட இயற்கைச் சூழ்நிலையில் இப்படிப்பட்ட நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி மோட்டார் பம்புசெட்டு உபயோகப்படுத்த வேண்டியிருக்கிறது. அது முழுவதையும் எனர்ஜைஸ் பண்ண வேண்டிய கடமை நமக்கிருக்கிறது. எவ்வளவுதான் நாம் செய்தாலும் நமக்குள்ள பற்றாக்குறை கடுமையானது. தமிழ்நாட்டில் நீர்மின் நிலையங்களை (ஹைட்ரோ-எலெக்ட்ரிக் ஸ்கீம்ஸ்) மேற்கொண்டு விஸ்தரிக்க முடியாது. இருக்கின்றவரைக்கும் எவ்வளவு பயன்படுத்தலாமோ அந்த அளவிற்குப் பண்ணியிருக்கிறோம். சில ஹைட்ரோ-எலெக்ட்ரிக் திட்டங்கள் பல வருஷங்களாக மத்திய சர்க்கார் ஒப்புக் கொள்ளாததால், நின்று கிடக்கின்றன. நமது சில தவறுகளால் நின்று கிடக்கின்றன. 100 மெகா வாட் உற்பத்தித் திறன் கொண்ட பாண்டியாறு-புன்னம்புழா நமக்கு அவசியம், ஆனால் தண்ணீர் நமக்கு இல்லை. தண்ணீர் நமக்குக் கொடுக்க வேண்டுமென்ற தாவாவைக் கிளப்பியதால் பிளானிங் கமிஷன் ஒத்துக் கொண்டு நடைமுறைக்கு வந்திருக்கக்கூடிய அந்தத் திட்டம் இன்னும் அமுலாக்கப்படவில்லை. அந்த கரண்ட் உற்பத்தி செய்யப்பட்டு நமக்கு வரவில்லை. இப்படிப் பல விஷயங்கள் இருக்கின்றன. விமரிசனம் செய்வதற்கு. அவ்வளவையும் சொல்ல முடியாது. ஆகவே நம்முடைய மின் உற்பத்தி நமது தேவைக்குக் கட்டுப்படியாகவில்லை. மேலும் மேலும் பற்றாக்குறை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இதுதான் உண்மை. இன்றைக்கும் சிறு சிறு தொழில்கள் நடத்த வேண்டிய பல இடங்களில் மின்சாரம் கிடைக்காமல் நீண்ட நாட்களாக தடைப் பட்டிருப்பதால் அவர்களுக்கு கஷ்டங்கள் ஏற்படுகின்றன.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது விவசாயத்தைப் பற்றி பொதுவாகச் சொன்னார். பகல் நேரத்தில் விவசாயத்திற்கு மின்சாரம் கொடுக்க முடியவில்லை. இரவில் கொடுப்பதால்தானே பாம்பு, பல்லி எல்லாம் வருகிறது என்று சொன்னார்கள். பகல் நேரத்தில் மின்சாரத்தைக் கொடுக்க முடியவில்லை. ஆகவே மின் உற்பத்தியைப் பொறுத்த வரையில் நாம் சில இலட்சக்கணக்கான பம்பு செட்டுக்



1986 நவம்பர் 20] [திரு. கு. ரமணி]

களையும், அது மாதிரி தொழிற்சாலைகளின் கணக்கையும் சொல்லி, அதனால் ரொம்ப சாதனையை சாதித்து விட்டோம் என்று சொல்லி வேறு பிரச்சினையில்லை என்பதைப் போல நம்மை மயக்கத்திலே கொண்டு போய் தள்ளிவிட்டு விடக் கூடாது. நமக்கு அதிகமாக மின்சாரம் தேவை. அதற்கு வேண்டிய நடவடிக்கையை நாம் எடுக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் என்ன செய்து கொண்டிருக்கிறோம். எவ்வளவு திறமையாகச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதைப் பற்றி பரிசீலிப்பதற்கும், விவாதிப்பதற்கும் கருத்துக்களைச் சொல்லுவதற்கும்தான் இந்த விவாதம். நாம் இதன் பட்ஜெட்டை விவாதித்து ஓட்டு போட்டு முடிக்க அதிகாரம் இருக்கிறதா என்றால் இல்லை. பேசுவதற்குத்தான், நம்முடைய கருத்துக்களைச் சொல்லுவதற்குத்தான் விமர்சிக்கத்தான் அதிகாரம் இருக்கிறது அந்த விமர்சனங்களைத் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

நியாயமான விமர்சனங்களை நியாயமாக எடுத்துக் கொள்ள வேண்டும். 400 மெகா வாட் உற்பத்தி செய்கிற காடம்பாறை திட்டம் காலம் நீண்டு கொண்டே போகிறது. அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அதற்குச் சொல்லக்கூடிய காரணங்கள் வெறும் சமாதானங்கள்தான். யதார்த்த காரணங்கள் நூற்று கணக்கில் இருக்கின்றன. அங்கே காண்ட்ராக்ட்காரர்கள் கொள்ளை காரணமாக கோடிக் கணக்கான பணம் விரயமாகியிருக்கிறது. இதையெல்லாம் அறிய அடிட்டர் ஜெனரல் அவர்களின் ரிப்போர்ட்டில் சொல்வது ஒன்றே போதும். மாண்புமிகு அமைச்சரவர்கள் இத்துறைக்குப் புதிதாக பொறுப்புக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் அதையெல்லாம் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. நாம் வேதனைப்படக்கூடிய அநேக விஷயங்கள் அதில் இருக்கின்றன. எவ்வளவு பணம் அதிலே போயிருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்கும் பொறுப்பு மின் வாரியத்திற்கு இருக்கிறது.

It has got indcpendent Existcnce and Independent activity.

ஆனால் அது சர்க்காரின் தலைமையின் கீழ் இருக்கிறது. அது இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டாமா? செய்ய வேண்டுமென்று சொல்லுவது நியாயம்தானே. அடுத்த வருடத்தில் ஒரு யூனிட் கமிஷன் ஆகிறதென்ற செய்தி வருகிறது. அப்படி கமிஷன் ஆனால் சந்தோஷம்தான். அதே நேரத்தில் எவ்வளவு பணம் போயிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும் அவ்வளவும் நாட்டு மக்கள் பணம். யாரோ கருணையாகக் கொடுத்த நன்கொடையல்ல. காடம்பாறை 400 மெகா வாட் உற்பத்தி இப்படிப்பட்ட நிலைமையில் இருக்கிறது.

[திரு. கு. ரமணி] [1986 நவம்பர் 20
(பிற்பகல் 12.10)

அடுத்து, குந்தா அடிஷனல் யூனிட் கமிஷன் ஆனால் 20
மெகா வாட் கிடைக்கும். லோயர் பவானி அணைக்கட்டுக்குப்
பக்கத்தில் 8 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய
ஒரு ஜெனரேட்டர் கமிஷன் செய்ய வேண்டியிருக்கிறது. அது
மாதிரி, வைகை அணையில் 6 மெகா வாட் உற்பத்தி செய்யக்
கூடிய திட்டத்தைக் கமிஷன் பண்ண வேண்டியிருக்கிறது. அடுத்து
பைக்காரா திட்டம். அது வெள்ளைக்காரன் காலத்தில் போட்
டது. அங்கே அடிஷனல் யூனிட் போட்டால் 8 மெகா வாட்
கிடைக்கும். இதெல்லாம் மிகச் சிறிய அளவில் உற்பத்தி
செய்யும் திட்டங்கள். ஆனாலும் பல துளிகள் பெரு வெள்ள
மாகிறது. அதைப் போல, அத்தனை இடங்களிலும் மின்சா
ரத்தை உற்பத்தி செய்ய வேண்டியிருக்கிறது.

இவை தவிர, பல்லாயிரக்கணக்கான தனியார் ஜெனரேட்டர்
கள் வேலை செய்கின்றன. தொழிற்சாலைகளில் ஜெனரேட்டர்
கள் வைக்கவில்லை என்றால், அநேக பஞ்சாலைகள் வேலை
செய்யாத நிலை ஏற்பட்டிருக்கும். அங்கேயெல்லாம் ஜென
ரேட்டர்கள் வைத்து ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். திடீர் திடீர்
என்று மின்சாரம் நின்றுவிடுகிறது. கடை வீதிகளுக்குப் போய்
பார்த்தால், பெரிய கடைக்காரர்கள், மண்டிக் கடைக்காரர்கள்
எல்லாம் சின்ன ஜெனரேட்டர்கள் வைத்து, மின்சாரம் போன
வுடன். அதை ஓட்டி, மின்சார சப்ளை பெறுகிறார்கள். அந்த
அளவுக்கு நெருக்கடி இருக்கிறது. மேலும் இதற்குக் கொடுக்கக்
கூடிய விலையும் குறைவானதல்ல. அதையும் ஞாபகத்தில்
வைத்துக்கொள்ள வேண்டும். வீடுகளில் விளக்கு எரிகிறது.
அதற்கு, ஒரு யூனிட் கரன்ட்டுக்கு மக்கள் எவ்வளவு விலை
கொடுக்கிறோம் என்பதையும் பார்க்க வேண்டும். அந்த அவர்
களுக்குச் செலவில்லையா ? மின் வாரியத்திற்குச் செலவில்லை
என்று யாரும் சொல்லவில்லை. அங்கே இயந்திரத்தின் விலை
ஏறுகிறது. இயந்திரத்தின் மதிப்பைதான் உற்பத்தியில் செலுத்
துமே தவிர சர்ப்ளசை உண்டாக்கிக் கொடுக்காது. மத்திய அரசு
நிலக்கரியின் விலையை ஏற்றுகிறது. நாமா ஏற்றச் சொன்னோம்?
இல்லை. அவர்கள் ஏற்றுகிறார்கள். அதற்குக் கொடுக்கிற
விலை இருக்கிறதே, அந்த விலையின் மதிப்புதான் உற்பத்தியில்
டிரான்ஸ்மிட் ஆகுமே தவிர சர்ப்ளஸ் இன்கம் கிடைக்காது.
அந்த சர்ப்ளசை உழைப்பினால் உண்டாக்குகிறவர்கள் தொழி
லாளர்கள்தான். ஆகவே டெக்னிக்கல் சைடையும், நம்முடைய
திறமையையும் மட்டும் பார்த்தால் போதாது. இதில் இருக்
கும் மனித உழைப்பையும், உழைப்பாளர்களையும் சேர்த்து,
இன்ட்டகிரேட்டட்-ஆகப் பார்த்து, அதில் நம்முடைய சிறந்த
ஆலோசனைகளைச் சொல்ல வேண்டும். இன்னும் 2, 3, 5
அல்லது 10 வருடங்களுக்குப் பின்னர் எவ்வளவு மின்சாரம்



1986 நவம்பர் 20] [திரு. கு. ரமணி]

தேவைப்படும் என்பதைத் திட்டமிட்டுச் செய்ய வேண்டும்
திருநெல்வேலி கூடங்குளத்தில் அணு மின் நிலையம் வேண்
மென்று சொன்னார்கள். அதற்காக 25 கிலோ மீட்டர்
அளவுக்கு, அந்த வட்டாரத்தில் அதிகாரிகள் சர்வே செய்தார்
கள். அங்கே அணு மின் நிலையம் வரப் போகிறதென்று
கேள்விப்பட்டு, 10,000 ஏக்கரில் சாதாரண விவசாயம் செய்து
கொண்டிருந்தவர்கள், இனி விவசாயம் செய்ய முடியாது.
நிலத்தை எடுத்துக்கொண்டு விடுவார்கள் என்று எண்ணி, மரங்
களை எல்லாம் வெட்டி, விற்பனை செய்து, ஊரே காலியான
பிறகு, அங்கே அணு மின் நிலையம் வரவில்லை. அதனால்
அங்கே விவசாயம் அழிந்தது. ஆயிரக் கணக்கில் மக்கள் வெளியே
போய்விட்டார்கள். இதற்குச் சர்க்காரும் பொறுப்பு ஏற்றுக்
கொள்ளவில்லை. மின் வாரியமும் பொறுப்பு ஏற்றுக்கொள்ள
வில்லை. அவர்கள் கஷ்டத்தை யார் போக்குவது ? இப்படிப்
பட்ட நிலைமைகள் உருவாகாமல், ஜனங்களின் நன்மைகள்
பாதிக்கப்படாமல், எந்த அளவுக்கு அதிகப்படியான மின்சா
ரத்தை உற்பத்தி செய்ய முடியுமென்பதுதான் நம்முடைய முக்கிய
மான கவனமாக இருக்க வேண்டும். ரொம்ப கடுமையானதும்,
கஷ்டமானதும் ஆன காரியம்தான். இது சின்னது அல்ல.
இன்னும் நம்முடைய தேவை ஜாஸ்தியாகும். அதிகரிக்கும். நம்
முடைய நடைமுறை அனுபவமும் இருக்கிறது.

கோவை மாவட்டத்தில் ஒரு லட்சம் மக்கள் இருந்தார்கள்.
சிறுவாணி குடிநீர் திட்டத்தை அப்போது நிறைவேற்றினோம்.
அப்போது ஒரு லட்சம் ஜனத்தொகைதான் இருந்தது. இப்
போது உள்ள ஜனத்தொகை 7 லட்சம் பேர்களாகும். இந்த
இடத்திற்குக் குடிநீர்ப் போதுமானதாக்க 30, 40 வருடங்கள்
கஷ்டப்பட்டோம். கடைசியிலே கேரளா அரசாங்கத்தோடு
ஒப்பந்தம் செய்துகொள்ள இருந்தபோது, அங்கே இருந்த சீப்
மினிஸ்டர் அவர்கள் உங்களுக்கு எவ்வளவு தண்ணீர் வேண்டும்
என்று கேட்டார்கள். நாம் சொன்னோம். 5 லட்சம் மக்களுக்கு
தேவையான தண்ணீர் கொடுத்தால் பரவாயில்லை என்று
சொன்னோம். அவர்கள் 10 வருடத்திற்குப் பிறகு நகரம் எந்த
அளவுக்குப் பெரியதாக இருக்கும் என்று கணக்குப் பார்த்து
இப்போதே தண்ணீர் கேட்பது நல்லது என்றார்கள். அப்படி
கேட்டதனாலேதான் தமிழ்நாட்டிலே எந்த நகரத்திலே தண்ணீர்
பஞ்சம் வந்தாலும், கோயம்புத்தூரிலே குடிநீர்ப் பிரச்சினை,
பஞ்சம் இருப்பதில்லை. சிறுவாணி அணைக்கட்டுக்கு 32 கோடி
ரூபாய் அளவுக்குச் செலவு ஆகி இருக்கிறது. ஒரு தடவை
தண்ணீர் நிரப்பினால் ஆறு மாதங்களுக்குத் தண்ணீர் சப்ளை
வரும். எதற்காக இதை சொல்கிறேன் என்றால் அப்படிப்பட்ட
ஒரு தூரத்துப் பார்வையில், திறமையாக காரியங்களை நாம்
கையாளவேண்டும். அப்படி கையாள நாம் முயற்சிக்கிறோம்.

[திரு. கு. ரமணி] [1986 நவம்பர் 20

மின் வாரியத்தின் போர்ட் நமக்கு நேரடியாக விரோதி. நம் நேரடியான எதிரி. Enemy No 1. fight till the finish என்பது அல்ல பிரச்சினை. நம்முடைய பிரச்சினை அதனால் பார்க்க முடியவில்லை என்றால், பார்க்க முடியவில்லை என்று சொல்கிறோம். அப்படி சொல்பவர்கள் மேலே தாவுவதும் தாக்குதல் செய்வதும், இடிக்கிறதும் சரியல்ல. அந்த நிலைமை கள் இன்று இருக்கின்றன. அந்த நிலைமையைப் பற்றித்தான் சொல்கிறேன்.

நேற்று கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. சிந்தன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உதாரணம் ஒன்று சொல் கிறேன். 1981–82ஆம் ஆண்டு பட்ஜெட்டிலே அதைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். இந்த சபையிலே சொல்லியிருக்கின் றார்கள். அப்படி பட்ஜெட் வைத்த காலத்தில் பேசிய ஒன்றை ரெபர் பண்ணுவது நல்லது. "இந்தத் திட்ட காலத்திலாவது, இம்மாநிலம் ஆண்டு ஒன்றுக்கு 10 சதவிகிதம் மின் உற்பத்தி வளர்ச்சி பெறுவதற்கான தகுதி பெற்றுள்ளது. எனவே ஒவ் வொரு ஆண்டும் 250 முதல் 300 மெகாவாட் அளவுக்கு மின் உற்பத்தியை அதிகரிக்கவேண்டும். இது ஆண்டு ஒன்றுக்கு 300 முதல் 400 மெகா வாட் மின் உற்பத்தித் திறனை ஏற்படுத்து வதற்கு சமமாகும்." நம்முடைய தேவை ஆண்டு ஒன்றுக்கு எப்படி இருக்கின்றது என்று அப்போது சொன்னார்கள். 1971–1980 காலத்திற்குள் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட வேண்டும். 1971–80 ஆண்டுகளில் ஏற்பட்டது போன்ற தொடர்ந்த மின் வெட்டுகளை தவிர்க்கவேண்டுமானால் இது மிகவும் அவசியம் என்று அன்றைக்கு பட்ஜெட்டில் கொடுத்திருக்கும்படியான வகையில் அந்த விஷயம் இருந்தது. அந்த முறையிலே நம் முடைய காரியங்கள் நடக்கின்றனவா? வருடா வருடம் இன்கிரீஸ் ஆக இருக்கின்றதா? அப்படி நடக்கவில்லை. இதற்கு இந்த அரசாங்கம் மட்டும் பொறுப்பு என்று நான் சொல்லவில்லை. மத்திய அரசுக்கும் பிரதானமான பொறுப்ப இருக்கின்றது. நிலக்கரி வரவேண்டும். தேவையான அளவுக்கு நமக்கு உடனுக்குடனே கிடைக்கவேண்டும். நாம் கேட்கக் கூடிய வேகன்கள் கிளியரன்ஸ் கிடைக்கவேண்டும். புதிய தெர் மல் யூனிட்டுகள் ஹைட்ரோ எலக்டிரிகல் யூனிட்டுகள் ஏற்படுத்த நமக்கு அவர்கள் அனுமதி அளிக்கவேண்டும். அவர்கள் உதவி செய்யவேண்டும். பண உதவியும் செய்ய வேண்டும். எனவே electricity is a strategic industry என்று சொல்கிறேன். அது இல்லாமல் மூச்சுவிட முடியாது. மனிதன் உயிர் வாழ முடியாது. அதைச் செய்யவேண்டும். அதிலே மத்திய சர்க்காருக்கும் பெரும் பொறுப்பிருக்கிறது.



1986 நவம்பர் 20] [திரு. கு. ரமணி]

மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் சிநேகம் என்பதெல்லாம் இப்போது நான் சொல்ல வரவில்லை. அது political Questio. அதற்குள் நா... வரவில்லை. நமக்கு செய்யப்பட வேண்டியதை நாம்தொடர்ந்து வற்புறுத்த வேண்டும். தமிழ்நாட்டு மக்களுடைய மின்சாரத் தேவையை பூர்த்தி செய்ய இந்த அரசுக்கும் பொறுப்பு இருக்கின்றது. இந்த அரசுக்கு ஒரு கருவியாக பயன்படுவது தான் மின் வாரியம். அது அந்தக் காரியங்களை செய்ய வேண் டும். அப்படிப்பட்ட காரியத்தை நாம் செய்வதிலே நமக்குப் பலவீனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. குறைகள் ஏற்பட்டிருக் கின்றன. தோல்வி ஏற்பட்டிருக்கின்றன என்பதுதான் என் னுடைய கருத்து. இப்படிப்பட்ட முறையிலே அகில இந்திய ரீதியிலே, All India Grid-ல் இணைவதால் எங் கெங்கே அபிவிருத்தி இருக்கின்றதோ அங்கே உற்பத்தி அதிகம் கிடைக்கும். எங்கே அபிவிருத்தி குறைவாக இருக் கின்றதோ அங்கே கம்மியாகக் கிடைக்கும். ஆக ஒரே சமமான வளர்ச்சி ஏற்பட வழியில்லை. அகில இந்திய ரீதியிலே ஒட்டு மொத்தமாக உற்பத்தி செய்ய நாடு முழுவதும் பயன்பட வேண்டும். அந்தக் கொள்கை என்னவாயிற்று? அந்தக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுமா? ராமகுண்டம் மின் நிலையம் இருக்கின்றது. ஏராளமான உற்பத்தி இருக்கிறது. அது வேறு மாநிலத்திற்குக் கொண்டு போகப்படுகின்றது. இப்படி யெல்லாம் நாடு முழுவதும் விநியோகம் ஆகவேண்டி இருக்கின்றது. அந்த முறையில் நம்முடைய திட்டங்களுக்குப் போதுமான பணம் கிடைக்க முயற்சி செய்ய வேண்டும். அதற்கு அரசும் மின் வாரியமும் தொடர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(பிற்பகல் 12–20)

அடுத்து, இந்த மின் வாரியத்திலே மின் உற்பத்தியில் ஈடு பட்டுக் கொண்டிருக்கிற ஊழியர்களுடைய விரோதத்தை மின் வாரியம் சம்பாதிக்கக் கூடாது. பல சங்கங்கள் ஆதரிக்கிறார் கள் என்று சொல்லலாம். அதற்காக ஒரு 'ஸ்பிலிட்'-ஐ ஊழி யர்கள் மத்தியில் உருவாக்கினால் அது பூதாகாரமாக உரு வெடுக்கும். என்றைக்கும் கொள்கை வேறுபாடுகள் உள்ள பல சங்கங்கள் இருந்தாலும் தொழிலாளர்கள் பிரச்சினைகள் என்று வருகிறபோது எல்லோரும் ஒன்றுபடுவார்கள். ஆகவே, பிரச் சினைகள் என்று வரும்போது தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து, பிரச்சினைகள் பூதாகாரமாக உருவெடுத்தால் அவர்கள் போராட வேண்டி வரும். அதற்கு வழி வகுக்கக் கூடாது. தோள் தின வெடுத்து ஊழியர்கள் வேண்டுமென்றே யாருடனும் சண்டைக்கு வருவதில்லை. ஒரு லட்சத்து ஐந்து ஆயிரத்திற்கு மேல் ஊழி யர்கள் இருந்த மின் வாரியத்தில் இன்றைக்கு 84 ஆயிரம் பேர் மட்டும்தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நேற்றைய

தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் கூட
இதுபற்றி குறிப்பிட்டார்கள். 1 லட்சத்திற்கு மேல் ஊழியர்கள்
இருந்து வந்த நிலை மாறி இன்று 84 ஆயிரம் என்கிற அளவுக்கு
மிகவும்குறைவாக ஊழியர்கள் இருக்கிறார்கள். அதே நேரத்தில்
மின்சார விநியோகத்தைப் பொறுத்த வரையில் எவ்வளவு
தூரம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்பதையும் நாம் பார்க்
கிறோம். 6 லட்சம் குடிசைகளுக்கு விளக்கு போட்டிருக்
கிறோம். இது போன்று பல விஸ்தரிப்புப் பணிகள் நடைபெற்
றிருக்கிற நிலையில் ஊழியர்களுடைய எண்ணிக்கையை அதற்
கேற்ப அதிகப்படுத்தாமல் நாம் என்ன சொல்லிக்கொண்டிருக்
கிறோம் என்றால், இந்த உலகத்தைப் பார்த்து வேலை
வாய்ப்பை அதிகமாக உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்று
சொல்கிறோம். ஆக, ஆட்களை எவ்வளவு 'கட்' பண்ண
முடியுமோ அவ்வளவு கட் பண்ணியிருக்கிறார்கள். இப்படி
செய்தால் தொழிலாளர்கள் மத்தியிலே எதிர்ப்பு வருமா இல்
லையா ? நிச்சயம் வரும். இதற்கெல்லாம் திட்டம் போடு
வதுதான் இப்பொழுது மின் வாரியத்தின் பணி. ஆனால்,
அறிவைப் பயன்படுத்தி ஆக்கபூர்வமாக ஏதாவது சொல்
கிறார்களா ?

உலக வங்கியிலிருந்து ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பணம்
வாங்குகிறோம். மத்திய சர்க்கார் நமக்கு பணம் தர வேண்டும்.
அவர்கள் உலக வங்கியிலிருந்து வங்கி நாடு முழுவதும் கொடுக்
கிறார்கள். அப்படி உலக வாங்கி பணம் தரும்போது சில
கட்டுப்பாடு வைத்திருக்கிறார்கள். 60 ஆயிரம் ஊழியர்கள்
இருந்தால்தான் 'எக்கனாமிக்' ஆக இருக்கும். இல்லையென்
றால் லாபகரமாக நடத்த முடியாது என்று சொல்கிறார்கள்
என்றால் உடனே இவர்களும் அக்கட்டுப்பாட்டை ஏற்றுக்
கொண்டு தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்கிறார்
கள். தொழிலாளர்களுடைய எண்ணிக்கையை விஸ்தரிப்ப
தில்லை. இப்பிரச்சினையை எப்படி 'சால்வ்' பண்ணப்
போகிறீர்கள் என்று நான் அறிய விரும்புகிறேன்.
தொழிலாளர்களை முறையாக பயன்படுத்தாமல் அவர்களை
கசக்கிப் பிழிகின்ற நிலைக்கு விட்டுவிடக் கூடாது. நம்முடைய
தொழிலாளர் வர்க்கம் 'டிசிபிளின்ட்' வர்க்கம் என்பதை நாம்
மறந்து விடக் கூடாது.

மின் உற்பத்தி சம்பந்தப்பட்ட வேலைகளை காண்டிராக்டர்
களிடம் விட்டுவிடுவதன் மூலமாக மின் உற்பத்தியை அதிகப்
படுத்த முடியாது. 1969 ஆம் ஆண்டிலே காண்டிராக்ட் ஒழிப்புச்
சட்டம் பார்லிமெண்டில் பாஸ் பண்ணிய பிறகும் இது சம்பந்த
மான 'ஆக்டை' அமுல்படுத்த முடியாமல் இப்போதுதான்
'ரூல்ஸ்' போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய தினம்
பல்லாயிரக்கணக்கான காண்டிராக்ட் தொழிலாளர் வர்க்கம்
அரசாங்கத்தின் பல்வேறு துறைகளில் இல்லையா? காண்டிராக்ட்





தொழிலாளர்களுக்காகவும் நாங்கள் யூனியன் வைத்தோம். அவர்களுக்கு 'பேக்டரி ஆக்டை' அப்ளை பண்ண முடியாது. காண்டிராக்ட் ஒழிப்புச் சட்டத்தின் படி முதலில் ரெகுலேட் பண்ணி, நியாயமான கூலியைக் கொடுத்து, கொஞ்சம் காலத்துக்குள் மீண்டும் காண்டிராக்ட் 'அபாலிஷ்' பண்ணி விட வேண்டும். எந்த நோக்கத்திற்காக அச்சட்டம் கொண்டு வரப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறியதா? இந்நிலையில் தொழிலாளர்கள் சங்கம் வைத்தால் அதன் நடவடிக்கைகளை மின் வாரியம் அடித்து நொறுக்கக் கூடாது. அதிகாரிகளை நியமித்து அவர்களிடம் ரூ. 5 ஆயிரம், ரூ. 10 ஆயிரம் என்று பணம் கொடுத்து அவர்கள் ஆட்களைத் தனியாகப் பிடித்து வேலை வாங்குகிறார்கள். இதுதான் உங்கள் கொள்கையா? இதுதான் சமுதாய மாற்றத்திற்கான அரசாங்கத்தின் சேவையா? இதைப்பற்றி, It is nothing but an intensified exploitation என்றுதான் நாங்கள் சொல்ல முடியும். அப்படி நடக்க முடியாது. அரசாங்கம் மின் வாரியத்தை ஒரு முன் உதாரணமாக நடத்த வேண்டும். இன்றைக்கு மின் வாரியத்தில் பல்வேறு விஷயங்களில் வேலை அதிகம் இருக்கிறது.

'ஸ்பாட் பில்லிங் சிஸ்டத்தை' பொறுத்த வரையில் பல்வேறு குறைபாடுகள் இருந்ததால் ஊழியர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்த வேண்டி வந்தது. இப்பொழுது இதெல்லாம் ஒரு பக்கம் நடக்கிறது. இந்தத் தொழிலாளர் இந்த மின் வாரியத்தின் நடவடிக்கைகள் பூராவும் தப்பு என்று சொல்வதாகவோ அல்லது மின் வாரியத் தலைவர் தான் அவர்களுக்கு விரோதி என்று அவர்கள் கூறிவிட்டார்கள் என்று மின் வாரிய அதிகாரிகளும் மின் வாரியத் தலைவரும் கருதக் கூடாது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. அவர்கள் ஒரு நியாயத்திற்காகப் போராடுகிறார்கள். அந்த நியாயத்துக்கான போராட்டத்திலே குறை இருக்கிறது. தவறு இருக்கிறது என்றால் அதை நீங்கள் எடுத்துக் காட்டுங்கள். அதை விட்டுவிட்டு வேறு லைனிலே அதைத் திருப்பி விட்டால் அது சரியாகாது. உதாரணம் நான் சொல்கிறேன். வாரியத் தலைவரே நோட்டீஸ் அச்சடித்தது மாதிரி அச்சடித்து வெளியிட்டுள்ளதில், ஒரு நோட்டீஸிலே என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால், ''மின் உற்பத்தி தனியார் துறையில் அனுமதிக்கக் கூடாது என்று தமிழ்நாடு மின் ஊழியர்களின் மத்திய அமைப்பு சி.ஐ.டி.யூ. கோரிக்கை விடுத்து உள்ளார்கள். மாநிலத்தின் மின் தேவையைப் பூர்த்தி செய்ய மின்சார வாரியம் சரிவர இயங்க வேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொண்டு உள்ளார்கள்'', என்று அவரே சொல்கிறார். கரெக்ட், இதிலே என்ன தப்பு? பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் சொன்னார் — திட்டம் போட்ட பொருளாதாரத்தை நாம் இன்றைக்குக் கொண்டு வருகிறோம். உலகத்திலே சோஷலிஸ்ட் நாடுகள்தான் திட்டம் போட்ட

பொருளாதாரத்தை உருவாக்கின. Not the capitalist world அவர்களால் முடியாது. கேப்பிடலிசத்தினுடைய பேசிக் லா, Exploitation சோஷலிசம்தான் திட்டம் போட்ட பொருளா தாரத்தைக் கொண்டு வர முடியும்.

அதேமாதிரிதான் Socialistic pattern of Society நம் நாட்டிற்கு வேண்டுமென்று சொன்னது. இந்தத் தமிழ்நாட்டில் ஆளுகின்ற அரசாங்கமும் கொள்கை ரீதியாகச் சொல்கின்ற கொள்கையைத்தானே நாங்கள் சொல்கிறோம். இல்லை, அதைக் கைவிட்டு விட்டார்களா? இல்லை. எனக்குத் தெரிந்தவரையில் கைவிட்டு விடவில்லை. அப்படிப்பட்ட திட்டம் போட்ட, பொருளாதாரத்தை இந்தியாவிலே கொண்டு வரும்பொழுது சமுதாயம் முழுமைக்கும் திட்டம் போட வேண்டும், அது அவ் வளவு சுலபமானது அல்ல. அது நம் வளர்ச்சியைப் பொறுத்து இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு திட்டத்தைக் கொண்டு வரு வதற்கு நாங்களும் ஐந்தாண்டுத் திட்டத்தைப் போட்டு நடத்து கிறோம் என்று பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் ஆரம்பித்த திட்டம்; இன்றைக்கு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு அது வந்திருக்கிறது. அந்தத் திட்டத்தைப் பற்றி அவர்கள் சொன்ன வார்த்தைகளை எல்லாம் நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும். அப்படி ஞாபகத்தில் வைக்கிறோமா? (மணியடிக்கப் பெற்றது). Please show me little lenience. நான் ஒரு விஷயத்தைச் சொல்கிறேன். பண்டிட் ஜவஹர்லால் நேரு சொன்னது என்ன? Commanding heights of economy should not lead to expansion of private sector. ஸ்டேட் செக்டார் தொழிலை வளர்த்து பிரைவேட் செக்டாருக்கு கொடுப்பது நம் வேலை அல்ல. நாம் அதனுடைய வேலைக் காரர்கள் அல்ல. மின் வாரியம் தூத்துக்குடியிலே உருவாக்கி இருக்கின்ற மின் உற்பத்தி நிலையம்; 12 தனியார்கள் பிசினஸ் ஹவுசஸ் ஒரு ஸ்தாபனத்தை உண்டாக்கி, அவர்களிடம் அதனுடைய புரொடக்‌ஷன், அதனுடைய டிஸ்டிரிப்யூஷன், எற் பாடுகளை அவர்களிடம் கொடுப்பது என்பது எந்தக் கொள்கை யினுடைய அடிப்படை? அது சரியான கொள்கையா? அந்தக் கொள்கையை நீங்கள் கையாண்டதைத்தான் நாம் தப்பு என்று சொல்கிறோம்.

பப்ளிக் செக்டார் இண்டஸ்ட்ரியில் இருக்கக்கூடிய அனைத்து சங்கங்களும், தொழிலாளர்களும்—இந்த நாட்டில் இருபது, இருபத்தைந்து இலட்சம் தொழிலாளர்கள்—ஒன்றாகச் சேர்ந்து பப்ளிக் செக்டாரினுடைய இம்பார்ட்டன்ஸைக் குறைந்துக் கொண்டு வருவதைக் குறித்து—பப்ளிக் செக்டார் பாதுகாக்கப் படவேண்டுமென்று அவர்கள் முடிவு செய்து—கண்ட னம் தெரிவிக்க வருகின்ற ஜனவரி மாதம் 21 ஆம் தேதி ஒருநாள் அகில இந்திய வேலை நிறுத்தமே நடத்திக் காட்ட உள்ளனர்.





Just to show their protest to the Government of India. இங்கே நாம் இதைப்பற்றிச் சொன்னால் பயங்கரமான நிலைமை. அதே நோட்டீசிலே நமது மின் வாரியத் தலைவர் இன்னொரு இடத்திலே என்ன குறிப்பிடுகிறார் என்றால், 'இவை எல்லாம்' அதாவது சாதனைகள் பூராவும் சொல்லி, ''இவைகளை எல்லாம் என்னுடைய பெருமையாக நான் எடுத்துக் கொள்ள வில்லை. உங்களில் பெரும்பாலோரின் முயற்சியும், அயராத உழைப்பும்தான் இந்த வெற்றிகளுக்கெல்லாம் ஆதாரம் என நான் அறிவேன்.'' எல்லாம், 'நான்' தான். 'நான் அறிவேன்' என்று 'நான்' என்றே போடப்படுகிறது. அது சரியல்ல என்பது என்னுடைய கருத்து. ''நீங்களும் அறிவீர்கள். அப்படியிருக்கும் பொழுது தமிழ்நாடு மின்சார வாரியம் சரியாகச் செயல்பட வில்லை, அதனால்தான் தனியார் துறையிடம் மின் உற்பத்திக் கான பொறுப்பை வழங்க அரசு முயல்கிறது என்ற பொருள் வரத்தக்க ஒரு கருத்து பொது மக்களிடையே பரவ உங்களில் ஒரு சிறு பகுதியைச் சார்ந்த ஒரு தொழிற் சங்கம் உதவுவது என்றால் அவர்கள் மண்டையை மணலில் மறைக்கும் நெருப்புக் கோழிகள் மட்டும் அல்ல, இருக்கும் இடத்தையே அசுத்தப் படுத்தும் தன்னடக்கம் இல்லாதவர்கள் மட்டும் அல்ல, உங் களுக்கே துரோகம் செய்கிறவர்கள்கூட.'' இப்படிப்பட்ட ஒரு பேச்சை ஒரு இன்ஸ்டிடியூஷனுடைய தலைவரிடத்திலேயிருந்து நாம் எதிர்பார்க்கலாமா? தொழிலாளர் வர்க்கத்திற்குக் கொடுக்கக்கூடிய அடைமொழிகள் இவை. இது எப்படிச் சரி யாக இருக்கும்?

[பிற்பகல் 12–30]

அதே மாதிரியாகத் தொழிற் சங்கத் தலைவர்களும் பதில் சொல்ல ஆரம்பித்தால் எங்கே போய் நிற்கும்? அதைப்பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நோட்டீஸைப் பற்றிச் சொன்னீர்கள். அது பிரிண்டட் மாட்டர் என்று சொன்னீர்கள். அதை ரெஃபர் பண்ணுவதற்கு முன் னால் குறைந்த பட்சம் தலைவரிடம் காட்டியிருக்கலாம். பல முறை இதுபற்றி அறிவுறுத்தப்பட்ட பின்னாலும் யாரும் இந்த முறையைக் கடைப் பிடித்ததாகத் தெரியவில்லை. இனிமேலா வது இந்த மாதிரி நோட்டீஸ், நியூஸ் பேப்பர் போன்றவற்றை ரெஃபர் பண்ணும்போது, அதற்கு முன்னால் தலைவரிட காட்ட வேண்டும். இல்லை என்றால் அவையில் அதுபற்றிக்குறிப் பிட அனுமதி அளிக்க முடியாது.

[1986 நவம்பர் 20

**திரு. மா. சின்னராசு :** துணைத் தலைவரவர்களே, ஒரு
விளக்கம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நோட்டீசைக்
காட்டி, மின் வாரியத்தின் தலைவர் இப்படி எல்லாம் விமர்சித்
திருக்கிறார் என்று சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்தில்
தொழிற் சங்கத் தலைவர்கள் மின் வாரியத் தலைவரைப் பற்றி
யும் அரசாங்கத்தைப் பற்றியும் வெளியிட்டிருக்கிற துண்
டறிக்கைகளைப் பற்றி இங்கே விமர்ச்சித்தால் அவர்கள் ஒத்துக்
கொள்வார்களா? அதை ஒத்துக் கொள்வார்கள் என்றால் இதை
யும் ஒத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நோட்டீஸை
ரெஃபர் பண்ணுவதற்கு முன்னால், அதைத் தலைவரிடம்
கொடுத்தால் அல்லது காட்டினால் சம்பந்தப்பட்ட அமைச்ச
ரிடம் தெரிவித்து, தகுந்த விளக்கங்களைப் பெற முடியும்.
(குறுக்கீடு) இதிலே டிஸ்பியூட் இல்லை. நீங்கள் பேசுவதை
அனுமதிக்கிறேன். ஆனால் எந்த டாக்குமெண்டாக இருந்தாலும்
அதைத் தலைவரிடம் காட்டி அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டு
மென்ற மரபை எல்லா உறுப்பினர்களும் கடைப்பிடிக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி :** துணைத் தலைவரவர்களே, உங்களுடைய
உணர்வுகளுக்கு மதிப்பளிக்கிறேன். இந்த நோட்டீஸ் நாங்களே
தயாரித்து வெளியிட்டது அல்ல. அரசாங்கத்தின் கட்டுப்பாட்
டில் இருக்கிற ஒரு நிறுவனத்தின் தலைவர் வெளியிட்டது இந்த
நோட்டீஸ். அது ஒரு 'செமி-கவர்ன்மெண்ட்' ஆர்கனைசேஷன்.
அப்படிப்பட்ட நிறுவனத்திலிருந்து வெளியிடப்பட்ட அறிக்கை
அரசாங்கத்திற்கும் வந்திருக்கும்; அரசாங்கத்திற்குத் தெரியாமல்
இருக்க நியாயமில்லை. நாங்களே வெளியிட்டிருந்தால் அல்லது
வேறு யாராவது வெளியிட்டிருந்தால் முன் அனுமதி பெற
வேண்டியதுதான். மின்சார வாரியம் சர்க்காரின் கன்ட்ரோலில்
இருக்கக்கூடிய ஒரு 'செமி-கவர்ன்மென்ட்' அமைப்பாக இருக்
கிறது. ஆகவேதான் உங்களிடம் காட்டவில்லை. இப்படிப்
பட்ட அறிக்கைகளை வெளியிடுவது மின்சார வாரியத் தலைவருக்
கும் மற்றவர்களுக்கும் அழகல்ல, இது சரியல்ல என்று குறிப்பிட
விரும்புகிறேன். இப்படிப் பழிவாங்கும் நடவடிக்கைகலைத்
தொழிலாளர்கள்மீது மேற்கொள்வது தவிர்க்கப்பட வேண்டும்.

அடுத்து, எவ்வளவு வேகமாக மின்சார உற்பத்திக்குத் திட்
டங்களைத் தீட்டிச் செயல்படுத்த முடியுமோ அவ்வளவு வேகமாக
வழிவகைகளைக் காண வேண்டும். அதிலே கருத்து வேறுபாடு
இல்லை, தமிழக சர்க்கார் மத்திய சர்க்காரிடம் வற்புறுத்தி
அதிகமான மின்சார உற்பத்தியைப் பெற என்னென்ன நட
வடிக்கை எடுக்கிறதோ அதற்கு நாங்கள் பரிபூரணமாக ஒத்து
ழைப்புத் தருகிறோம். அந்த முறையிலே நம்முடைய நட
வடிக்கைகள் செல்ல வேண்டும்.



1986 நவம்பர் 20] [திரு. கு. ரமணி]

எந்தப் பொதுத் துறையாக இருந்தாலும் அதை இப்படிப்
பலவீனப்படுத்தக் கூடாது என்பது எங்களுடைய கருத்து.
அந்தக் கருத்தை நீங்கள் வலியுறுத்த வேண்டும். மத்திய சர்க்
காருடைய சில கொள்கைகளைப் பற்றி இங்கே சொன்னார்கள்.
மத்திய சர்க்காரின் கொள்கை சரியில்லை என்று பாராளுமன்
றத்திலே கண்டித்து, எல்லா பப்ளிக் செக்டார் இண்டஸ்ட்ரீஸ்
தொழிற்சங்கங்களும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். இன்
றைக்கும் எதிர்த்து நிற்கிறார்கள். நம்முடைய அரசும் இதிலே
முனைப்பாக இருந்து, முன்னோடியாக வந்து காரியங்க
களைச் செய்ய வேண்டும்.

தூத்துக்குடி அனல் மின்சார நிறுவனத்தைப் பொறுத்தவரை
யில், தனியாருடைய கன்ட்ரோலுக்கு விட்டது தவறு. தனியார்
கன்ட்ரோலுக்கு ஏன் விட வேண்டும்? விடக் கூடாது என்பது எங்
களுடைய கருத்து. அப்படி விடுகின்ற நிலையை நீங்கள் மாற்ற
வேண்டும். அப்படிச் செய்வதற்கு காரணம், பணம் இல்லாததி
னால்தான் செய்கிறோம் என்று சொல்கிறீர்கள். பணம் இல்லை
என்பதற்காக நாமே வளர்த்த ஒரு நல்ல நிறுவனத்தை அவர்கள்
கையிலே கொடுப்பதா? அந்த மின் நிலையத்தை உருவாக்கு
வதற்கு எத்தனை கோடி செலவு செய்திருக்கிறோம். ஒரு மெகா
வாட் மின் உற்பத்திக்காக எவ்வளவு நூற்றுக்கணக்கான....

**திரு. செ. செம்மலை:** பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்.
'திரு. துணைத் தலைவர் அவர்களே, மேற்கு வங்காளத்திலே நட்டத்
திலே இயங்குகிற, அரசுக்குச் சொந்தமான ஒரு மின் நிலையத்
தைத் தனியாருக்கு கொடுப்பதற்காக, அந்த மாநில முதன் மந்திரி
திரு. ஜோதிபாசு அவர்கள், மத்திய அரசிடம் அனுமதி கோரி
இருக்கிறார்கள். அப்படிச் செய்திகள் வந்திருக்கிறபோது, தனி
யார்களுக்கு அவர்களை ஊக்கப்படுத்துவதற்காக, மின் உற்
பத்தியைப் பெருக்குவதற்காக கொடுப்பதில் எந்த விதத்
தவறும் இல்லை என்று நான் நினைக்கிறேன். இப்போதாவது
அதை ஒப்புக் கொள்கிறாரா நம்முடைய உறுப்பினர் சகோதரர்
திரு. ரமணி அவர்கள் என்று கேட்கிறேன்.

**திரு கு. ரமணி :** இப்போது நம்முடைய மாண்புமிகு உறுப்
பினர் திரு. செம்மலை அவர்கள் கல்கத்தாவிற்குப் போய் ஜோதி
பாசுவைப் பிடித்திருக்கிறார்கள். தயவுசெய்து எந்த மின்
நிலையத்தை அவர்கள் யாருக்குக் கைமாற்றம் செய்யப் போகி
றார்கள் என்ற விவரத்தை......

**திரு. செ. செம்மலை :** மத்திய அரசிடம் கடிதம் எழுதிக்
கேட்டிருக்கிறார்கள். நம்முடைய பிரதம அமைச்சர் திரு. ராஜீவ்
காந்தி அவர்களையும் சந்தித்து இதுபற்றிப் பேசியிருக்கிறார்கள்.

[1986 நவமபர் 20

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அவர் பேசி முடித்து
விட்டார். ஆனால் பேசவே முடியாமல் இப்படி தடை
செய்ய ஆரம்பித்தால் அது நடக்காது. திரு. ராஜீவ் காந்தி
யிடம் அனுமதி கேட்டிருக்கக்கூடிய விவரத்தை நீங்கள் கொண்டு
வாருங்கள். அதற்குப் பிறகு அதன்மீது நாம் பேசுவோம்.
என்ன விஷயம் என்று பார்த்து விடுவோம். அந்த மேற்கு வங்
காள அரசாங்கம் ஒவ்வொரு கோரிக்கையையும் கேட்டு, அதை
அவர்கள் கொடுக்க மறுத்த விவரங்களையெல்லாம் இந்த
நாட்டினுடைய பொதுச் சொத்தாக ஆக்கிக் கொண்டு வந்திருக்
கிறார்கள். ஆனால் இங்கே அப்படிச் செய்யவில்லை. 300
பக்கங்கள் கொண்ட அந்தப் புத்தகத்தை நான் உங்களுக்கு,
அதாவது திரு. செம்மலை அவர்களுக்குத் தரத் தயார். மாண்பு
மிகு தலைவர் அவர்களே, உங்களுக்கும் தரத் தயார். இந்த
அரசும் அப்படிச் செய்தால் நாட்டுக்கு உண்மை தெரியும்.
மின்சாரத்திற்கு சாங்ஷன் கிடைக்கும்படி போராட வேண்டும்.
அதை விட்டு, என்னை இடையிலே குறுக்கிட்டு இப்படிப் பேசு
வதினால் என்ன கிடைக்கும் ? உங்களுக்கு ஒன்றும் கிடைக்காது.

ஆகவே, அப்படி பப்ளிக் செக்டாரைப் பலவீனப்படுத்துகிற
காரியத்தை நாம் செய்யக் கூடாது. இங்கே நண்பர் டாக்டர்
சௌரிராஜன் அவர்கள் ஒரு பாயின்டைச் சொன்னார்கள். தமிழ்
நாட்டிலே இருக்கக்கூடிய லிக்னைட்டைக் கொண்டு உற்பத்தி
யாக்குகின்ற மின்சாரம் நம்முடைய மின்சாரப் பற்றாக்குறை
யைப் போக்க, நம்முடைய கையிலேயே கிடைக்க வேண்டும்
என்று சொன்னார்கள். அப்படி உற்பத்தியாவது பூராவையும்
நாமே வைத்துக் கொள்ள வேண்டும் என்ற நிலையை நாம்
கட்டாயமாக ஆக்கிக் கொள்ள முடியாது. அந்த மாதிரி நிலையை
ஏடுக்க முடியாது, தேசத்தைப் பூராவும் பார்க்கும்போது.
ஆனால் அதிலேயும் ஒரு பொது விஷயம் உள்ளது. ஒரு தனி
யான கவலையுமுள்ளது. இவ்வளவு லிக்னைட் உற்பத்தி செய்
தும், இவ்வளவு மின்சாரம் அதிலிருந்து கிடைத்தும், நம்முடைய
தேவைக்கு, கொஞ்சம் அதிகமாகப் பெறுவதற்கு வழி இல்லையே
என்ற ஏக்கம் நியாயமான அம்சமாக அதனுள்ளே இருக்கிறது.

அப்படிப் பார்க்கிறபோது, 430 மெகா வாட் உற்பத்தி
ஆகக் கூடியதைக் கொண்டுபோய், பெரிய தனியார் பிசினஸ்
ஹவுசுக்குக் கொடுத்து, அது அவர்களுடைய கண்டிரோலில்
போகட்டும் என்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.
There is no point; there is no basis; there is no reason and there is
no policy behind it. பாலிசி என்று சொன்னால், எல்லாவற்றையும்
நேஷனலைஸ் பண்ண வேண்டும் என்பதுதானே பாலிசி என்று
சில நேரங்களில் சொல்லிக் கொள்கிறீர்கள். இந்த நடவடிக்கை
அந்தப் பாலிசிக்கு எதிரானது. அதைத்தான் நான் சொல்ல
விரும்புவது. அந்த வகையில் என்னுடைய வார்த்தைகளையும்
அர்த்தத்தையும் பார்த்தால் நான் சொல்வதை எதிர்க்க வேண்
டிய அவசியமே இல்லை.



1986 நவம்பர் 20] [திரு. கு. ரமணி]

இப்படிப்பட்ட நடவடிக்கைகள் மாற்றப்பட வேண்டும்.
இவற்றையெல்லாம் ஆலோசித்து ஒழுங்குபடுத்தி, ஆக்கப்
பூர்வமான திட்டங்களாக நிறைவேற்ற வேண்டிய பொறுப்பில்
மின் வாரியம் செயல்பட வேண்டும். ஆனால் இன்றைக்கு
அப்படி இல்லை மின் வாரியத்தினுடைய நடவடிக்கை Arbitrary and
bureaucratic என்ற முறையில்தான் நடவடிக்கை இருக்கிறது. அது
பற்றி நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. அதை விளக்க
வேண்டிய அவசியமும் இல்லை. விவரங்கள் நிறைய இருக்
கின்றன. ஆனால் அவை ஐகோர்ட்டின் தீர்ப்பிற்காக
இருக்கின்றன. பல்வேறு ரிக்கார்டுகளை எல்லாம் பரிசீலித்துத்
தான் தீர்ப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அதனால் நான்
அதற்குள்ளே போக விரும்பவில்லை. அதற்காகத்தானே
அரசாங்கத்தினுடைய பிரதிநிதிகளை மின்வாரியத்தில் போடு
கிறோம். எப்படி அவர்கள் தங்கள் கடமையிலே இருந்து
தவற முடியும் ? எதற்காகப் பிரதிநிதிகளை நியமிக்கிறோம் ?
சும்மா கை தூக்கி ஓட்டு போவதற்காக அல்ல. எழுதிக்
கொடுப்பதன்கீழ் கையெழுத்துப் போடுவதற்காகவும் அல்ல.
ஒவ்வொரு விஷயம் வரும்போதும், அதைத் தீவிரமாக
ஆராய்ந்து பார்த்து, அதிலே இருக்கிற குறைகளை விவாதித்து
தீர்க்க வேண்டிய தவறுகளைத் தீர்த்து, ஒழுங்கு படுத்த
வேண்டும். ஆனால் இதிலே நாம் அரசாங்கத்தின் சார்பாக
நியமித்திருக்கும்படியான பிரதிநிதிகள் பெயிலாகி இருக்
கிறார்கள் என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன்.
அதனால்தான் மின் வாரியத்தினுடைய நடவடிக்கையும், மின்
வாரியத்தின் தலைவருடைய நடவடிக்கையும் கேள்வியாகக்
கேட்கப்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட போக்குகள் தான்
இன்னும் தொழிலாளர்களும், மின் வாரியமும் அதிலே இருக்கிற
அதிகாரிகளும் ஒத்துழைத்து ஒருமுனைப் பட்ட உணர்வோடு உற்
பத்தியைப் பெருக்குவதில் ஒருசரியான முடிவிற்குக் கொண்டு
செல்ல முடியாதபடி தடைக்கல்லாக இருக்கின்றன.

(பிற்பகல் 12—40)

எனக்கு தனிப்பட்ட முறையில் மின்வாரியத் தலைவரைப்
பற்றி எந்தவிதமான குறையும் இல்லை. ஒரு திருட்டு கேஸ்
பற்றி காங்கேயத்திலிருந்து வந்த தகவலை ஒரு நபர் மூலம்
அவருக்கு அனுப்பி வைத்தேன். இன்றைக்கும் அந்தக் கோரிக்
கையை நான் கேட்கவில்லை. ஆனால்அதனுடைய ரிசல்ட் என்ன
வென்று ஒரு துண்டு காகிதம்கூட எனக்குப் பதில் கொடுக்க
வில்லை. சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் கூட
எனக்குப் பதில் கொடுக்கவில்லை. நம்முடைய நாட்டில்
மின் உற்பத்தி பெருகி நாடு முன்னேற வேண்டுமென்பதுதான்
நம்முடைய எண்ணம். ஆகவே அவருடைய நடவடிக்கை
களை அவர் மாற்றிக் கொள்ள வேண்டும். அவர் ஒரு திறமை

யான அதிகாரி என்று சொல்கிறார்கள். சரிதான். நீங்கள்
என்ன செய்ய வேண்டும் ? இப்படிப்பட்ட திறமையான
அதிகாரியினிடத்தில் தொழிலாளர்களையும் மின் உபயோகிப்பாளர்
களையும் ஒன்றிணைத்துக்கொண்டு, ஆக்கபூர்வமாக, பாசிட்டி
வாக போகக்கூடிய செயல்முறை இல்லையென்று சொன்னால்
அப்படிப்பட்டவர்களை பெரிய Statistics Compilation
department போன்ற டிபார்ட்மெண்ட் களில்
போட்டு அவருடைய திறமையைப் பயன்படுத்தலாம்.
ஆனால் இதில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களோடு,
லட்சோப லட்சம் மக்களோடு கலந்து பழகி உறவாடிப்
பணியாற்ற வேண்டும். தொழிலும் வளர வேண்டும். ஒற்று
மையும் உறவும் நிற்கவேண்டுமென்ற முறையிலே பணி
யாற்ற வேண்டிய இடத்தில் இப்படிப்பட்ட அதிகாரிகள்
இருக்கக்கூடாது, அவர்கள் மாறுபட்டு செயல்பட ஆரம்பித்தால்
அது பெரிய கஷ்டத்தை உருவாக்கும். அதற்கு நமக்கு
எத்தனையோ உதாரணங்கள் இருக்கின்றன. ஆகவே நம்
முடைய மின் உற்பத்தியைப் பெருக்க அரசு எடுத்துள்ள
நடவடிக்கைகள் போதவில்லை. சில அபிவிருத்திகள்
வந்திருக்கின்றன. பல அபிவிருத்திகள் நின்று போயிருக்
கின்றன. இன்னும் பிரைவேட் செக்டாருக்கு
போகக்கூடிய நிலைமை கூடாது. அதைப்போல தொழி
லாளர்களைப் பழிவாங்குகிற நிலைமை இருக்கக்கூடாது.
காலியான இடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். டிஸ்ட்ரி
பியூஷன் எக்கச்சக்கமாக விஸ்தரிக்கப்பட்டிருக்கிறபோது அதற்
கேற்ற அளவில் தொழிலாளர்களை வைக்க வேண்டும். அந்த
முறையில் தொழிலாளர்களுக்கு நியாயம் செய்ய வேண்டும்
என்பதைக் கூறிக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.
வணக்கம்.

திரு மா. சின்னராசு: துணைத் தலைவர் அவர்களே,
பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் திரு.
ரமணி அவர்கள் எப்போதுமே கொள்கைப் பிடிப்போடு
பேசக்கூடியவர்கள். அவர்களிடமிருந்து சோஷலிச கொள்
கைக்கு ஒரு விளக்கம் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகக்
கேட்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் பேசுகிற போது
மல்ட்டி நேஷனல் கம்பெனியிலிருந்து, உலக வங்கியிலிருந்து
உதவி வாங்குவதை சோஷலிசக் கொள்கைக்கு விரோத
மானது என்றார். அதைத் தமிழ் நாடு அரசு ஊக்குவிக்கக்
கூடாது என்று சொன்னார். நான் அறிந்த வரையில்
மேற்கு வங்காள அரசுதான் இந்தியாவிலேயே உலக வங்கி
யினுடைய உதவியை மிக அதிகமாகப் பெற்றிருக்கிற மாநிலம்.
அண்மையில் திரு. ஜோதிபாசு அவர்கள் மல்ட்டி நேஷனல்
கம்பெனியினுடைய உதவியைப் பெற்று தாங்கள் பெட்ரோ





கெமிக்கல் காம்ப்ளக்ஸ் அமைப்போம் என்று சேலஞ்சாகவே சொல்லி அது வெளியே வந்திருக்கிறது. எனவே இது எப்படிக் கொள்கைக்கு விரோதமானது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. கு. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் கேட்பதற்கு நான் பதில் சொல்ல வேண்டும். அவர்கள் கேட்பது கொள்கை விளக்கம். அதனைச் சொல்லும் போது டைம் ஆகிறது. அதற்குத் தாங்கள் அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சுருக்கமாகச் சொல்லி விடுங்கள்.

திரு. கு. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, திரு. ஜோதிபாசு அவர்கள் கையாண்ட கொள்கை பற்றிக் கேட்கிறார்கள். திரு. ஜோதிபாசு அரசு லோனைக்கேட்டு வாங்கவில்லை. (குறுக்கீடு) சர்க்காஸ்டிக்காக கமெண்ட் செய்ய வேண்டாம். நாம் விவரங்களைச் சொல்வதற்காகத் தான் இருக்கிறோம். ஒருவரை ஒருவர் விரோதித்துக் கொள்வதற்காக அல்ல. ஆகவே வோர்ல்ட் பாங்க் லோனை எதிர்த்து நேஷனல் டெவலெப்மெண்ட் கவுன்சிலில் போராடியது அவர்தான் நீங்கள் அல்ல. அந்த லோனை வாங்குகிற போது அனைத்தையும் கட்டுப்படுத்தித்தான் கடன் வருகிறது. இது கேடு விளைக்கும் கொள்கை. இன்றைக்கு நாம அனுபவித்துக் கொண்டு வருகிறோம். திரு. ஜோதிபாசு அல்ல. அதை ஏற்பவர் இந்தியாவில் இருக்கிற பெரிய முதலாளிகள் கூட இந்த மாதிரியான கொள்கையால் தங்களுக்கு ஆபத்து வந்திருக்கிறது என்று எதிர்ப்பைத் தெரிவிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். எத்தனையோ உதாரணங்களைத் தர முடியும். மேற்கு வங்காளத்தில் தொழில் வளர்ச்சியே வரவில்லையென்று குற்றச்சாட்டு வந்தது, அதையும் நீங்கள் இங்கே பேசியிருக்கிறீர்கள். அதை வாங்கவில்லையென்றால் தொழில் வளராது என்று குற்றச்சாட்டு; வாங்கினால் சோஷலிசத்தை விட்டுவிட்டீர்களா என்று கேட்கிறீர்கள். சோஷலிசத்தை விட்டுவிடவில்லை. திரு. ஜோதிபாசு சொல்வதை அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. பெட்ரோ கெமிக்கல் காம்ப்ளக்ஸ் தொழிலை நடத்துவதற்கில்லாமல் தடுப்பதை எதிர்த்து—மத்திய சர்க்கார் தடுத்தும்—அதை மீறி தனிப்பட்ட முதலாளிகளோடு ஒப்பந்தம் செய்து அந்த காம்ப்ளக்ஸ் உருவாக்கு என்கிறோம். அது சோஷலிசத்தை விட்டுக் கொடுப்பதற்கு அல்ல.

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) உறுப்பினர் கைது செய்யப்பட்டுள்ளது.

Mr. DEPUTY SPEAKER: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. A message has been received from the Inspector of Police, District Special Branch, Coimbatore Urban, as follows:—

"I have the honour in informing the Hon. Speaker that today (19-11-1986), at 17.00 hrs. THIRU M. RAMANATHAN, M.L.A. (DMK), Coimbatore West Assembly Constituency was arrested along with 77 others, including 6 ladies, while they burnt a Chapter of Constitution of India at Town Hall, Coimbatore, to show their protest against imposition of Hindi in Tamil Nadu. They are being sent for remand. Case in Bl Bazaar Police Station Cr. No. 3042/86 under Sections 143, 188, 285, I.P.C., 7(L) of Criminal Law Amendment Act and Section 2 of Prevention of Insult to National Honour Act was registered."

(உ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று (20-11-1986) கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுக்கிணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்:—

| | |
|---|---|
| 21-11-1986 வெள்ளிக்கிழமை | 1986-87 ஆம் ஆண்டுக்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை மீது விவாதமும் வாக்கெடுப்பும். |
| | 1980-81 ஆம் ஆண்டுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைமீது விவாதமும், வாக்கெடுப்பும். |
| 22-11-1986 சனிக்கிழமை | பேரவைக் கூட்டம் இல்லை. |
| 23-11-1986 ஞாயிற்றுக்கிழமை .. | விடுமுறை |
| 24-11-1986 திங்கட்கிழமை மற்றும் 25-11-1986 செவ்வாய்க்கிழமை | அரசினர் சட்ட முன்வடிவுகள்—ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும். |

பேரவை வழக்கம் போல் காலை 9.00 மணிக்குக் கூடும்.

இன்று மாலையிலும் பேரவையின் நிகழ்ச்சிகள் நடைபெறும்.



9. தமிழ்நாடு மின் வாரிய நிதிநிலை அறிக்கை, 1986-87 மற்றும் துணை நிதிநிலை அறிக்கை, 1985-86. ஆகியவை மீது விவாதம்—தொடர்ச்சி.

*திரு. கைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய 1986-87 ஆம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கை மீது ஒருசில உணர்வுகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இங்கே எனக்கு முன்பாக பேசிய அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் பல்வேறு உணர்வுகளை எடுத்து வைத்து தமிழகத்தினுடைய மின்சாரத் துறையினுடைய நிலைமைகளையும், எதிர்காலத்தில் என்னென்ன தலையாய பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற நல்ல பல ஆலோசனைகளையும் சில குறைபாடுகளையும் எடுத்துச் சொல்லி அமர்ந்து இருக்கிறார்கள். தமிழகத்தினுடைய மின்சாரக் தேவையைப் பூர்த்தி செய்யவும், எதிர்காலத் தேவைகளை நிறைவு செய்யவும் மறைந்த பாரத பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் எப்படி தொலைநோக்குப் பார்வையோடு கல்பாக்கம் அணு மின் நிலையத்தினுடைய உற்பத்தியை முழுக்க முழுக்க தமிழகத்திற்கே உரித்தானதாக ஆக்கினார்களோ அதைப்போல அவரது வழியிலே நின்று இன்றைக்கு இந்தியத் திருநாட்டை பரிபாலனம் செய்துகொண்டு இருக்கிற இந்தியத் திருநாட்டினுடைய இளைய தளபதி திரு. ராஜீவ் காந்தி அவர்கள், நெய்வேலியினுடைய மூன்றாவது சுரங்க உற்பத்திக்கு முழுக்க முழுக்க மாநில அரசே பொறுப்பேற்று, அந்த மின் உற்பத்தியை தமிழகத்தினுடைய எதிர்காலத் திட்டத்திற்குப் பயன்படுத்த வேண்டும் என்ற மாநில அரசின் அந்தக் கொள்கை முடிவினை வலியுறுத்தி, மாநில அரசே ஏற்கின்ற வகையில் இந்த மாமன்றம் முயற்சி எடுக்க வேண்டும் என்பதையும், அதற்கு மத்திய அரசு ஒத்துழைப்புத் தந்து தமிழகத்தினுடைய எதிர்காலத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன்பாகப் பேசிய அருமைச் சகோதரர் மாண்புமிகு பெரியவர் திரு. ரமணி அவர்களும் அன்பிற்குரிய நண்பர் மாண்புமிகு திரு. சுப்பராயன் அவர்களும் ஒரு உணர்வைச் சொன்னார்கள். கொள்கை அளவில், சோசலிசக் கொள்கை, அதை முழுக்க முழுக்க நடைமுறைப்படுத்துகிறார்களா என்று கேட்டால், எங்களைப் போன்றவர்களுக்கு அதிலே ஒரு சந்தேகம். எனக்கு முன்பு மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராஜ் அவர்கள் உலக வங்கியிலேயிருந்து மேற்கு வங்காளம் பெற்றுக் கொண்டிருக்கிற நிதியைப் பற்றி, அருமைப் பெரியவர் திரு. ரமணி அவர்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். அருமை நண்பர் திரு. சுப்பராயன் அவர்கள் கூட வட சென்னை அனல் மின் நிலையத் திட்டத்திற்கு, ஆசிய நாடுகளின் பொருளாதார வங்கியிலேயிருந்து பெறப்படுகின்ற நிதி உதவிக்கு, நிபந்தனைக்கு, ஆட்சேபம் தெரிவித்துக் கருத்துக்களைச் சொன்னார்கள். நான்

அருமை நண்பர் மாண்புமிகு திரு. சுப்பராயன் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புவதெல்லாம் இது அவர்களது கொள்கை என்று சொன்னால், இது அவர்களது நிலை என்று சொன்னால் நான் அவருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். **

திரு. சே. சுப்பராயன் : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * * *

(பிற்பகல் 12.50)

*திரு. சைதை சா. துரைசாமி : தமிழகத்தினுடைய மின் சாரத் துறை மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில், பெரிய பல நிறுவனங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. தொழிற் சாலைகள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. தொழிற் மக்களுக்குப் பாதுகாப்பாகவும் இருக்கிறது. உண்மையிலேயே வனங்கள் இன்றைக்கு மின்சாரத்தைத் திட்டமிட்டு, திருடிக் கொண்டிருக்கிறார்கள். திருடிக் கொண்டிருப்பவர்களுக்குத் தண்டனை கடுமையாக இருக்க வேண்டுமென்பதுதான் என்னைப் போன்றவர்களுடைய எண்ணமாகும். அப்படித் திருடுகின்றவர் களுக்கு மின்சார இணைப்பு அறவே துண்டிக்கப்பட வேண்டும். மீண்டும் பங்குதாரர் பெயரிலோ, அல்லது பினாமியின் பெயரிலோ அந்த நிறுவனங்களுக்கு எந்தவிதமான மின்சாரத்தையும் வழங்கக் கூடாது. அப்படி ஒரு கடுமையான நடவடிக்கை எடுத்தால்தான் யாரும் திருடுவதற்கு அஞ்சுவார்கள். அதைவிட்டு நாம் மிகக் கடுமையாக திருத்தம் கொண்டு வரவில்லை என்றால், நிச்சயமாக மின்சாரத் திருட்டை நாம் தடுக்க முடியாது என்பதை இந்த நேரத்தில் மன வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு மின்சார வாரியத் தொழிலாளர்கள் அரசியல் கண்ணோட்டத்தோடு நடக்கிறார்கள் என்பதற்குப் பல உதார ணங்களைச் சொல்ல முடியும். சென்னை நகரில், குறிப்பாக ஞாயிற்றுக்கிழமைகளில், அதுவும் புரட்சித் தலைவர் அவர்கள் நடித்த படங்களைத் திரையிடுகின்றபோது அன்றைக்கு ஒவ்வொரு பகுதியாக மின்சார பவர்கட் நடைபெற்றுக்கொண்டிருந்தது. நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டாலும் கூட, 9 மணிக்குச் செய்திகள் முடிந்த பிறகு தான் மீண்டும் மின்சார இணைப்பு வருகிறது. இவையெல் லாம் அரசியல் கண்ணோட்டத்தோடுதான் செய்யப்படுகின்றன என்பது என்னுடைய குற்றச்சாட்டு என்பதை இந்த மன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றன.



அரசு திட்டம் போடுகிறது. குடிசைக்கு மின் ஒளி கிடைக் கின்றது. இது அரசின் சாதனை. இலவச மின்சாரம் விவசாயி களுக்கு வழங்குகிறது, இது சாதனை. மின்சாரம் பழுதுபட்டால், அந்தப் பணி சரிபார்க்கப்படுகிறதா என்று கேட்டால் கிடையாது. அரசு கொண்டு வருகின்ற நல்ல திட்டங்களை நாட்டு மக்களுக்குச் செயல்படுத்த வேண்டியவர்கள் பணியாளர்கள். பணியாளர்கள் தவறு செய்கின்றபோது, நடவடிக்கை எடுத்தால், அங்கே குறுக் கிடுவது தொழிற் சங்கம். இப்படி ஒரு பாதுகாப்பான நிலைமையை வைத்துக் கொண்டுதான், இன்றைக்குப் பொது மக்களுக்குத் தேவையான பணிகள் நடைபெறாமல் இருக்கின்றன.

நான் ஏற்கனவே சொன்னபடி தமிழகத்தின் நாயகர் ஆன புரட்சித் தலைவர் அவர்கள் நடித்த திரைப்படங்களை T.V.யில் காட்டப்படுகின்ற நாளில் பவர்கட் ஆகிறது. தொலைபேசி மூலம் தெரிவித்தாலும் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுகிறது. நாள்தோறும் பவர் கட். மின்சார குறைப்பு இல்லை. ஆனால் எங்கு பார்த்தாலும் என் னுடைய தொகுதியில் பல மணி நேரங்களுக்கு 3 மணி, 6 மணி, 8 மணி என்று மின் இணைப்பு இல்லாமல் மக்கள் அவதிப்படுகி றார்கள். தொடர்பு கொண்டு முக்கியப் பணியாளர்களிடம் தெரி வித்தாலும், நடவடிக்கை எடுப்பதில்லை. ஆனால் உயர் அதி காரிகளாகிய நிர்வாகப் பொறியாளர், தலைமைப் பொறியாளர் ஆகியவர்களுக்குத் தெரிவித்தால், உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆகவே, இந்தத் தேக்கத்திற்கு அடிப்படைக் காரணம் பணியாளர்கள் முறையாக செயல்படாததுதான்.

(பிற்பகல் 1.00)

இன்றைக்கு என் தொகுதியில் குறைந்த மின் அழுத்தம் பல இடங்களில் ஏற்படுகிறது. மேற்கு சைதாப்பேட்டை, மேற்கு மாம்பலம் ஆகிய இடங்களில் அடிக்கடி குறைந்த மின் அழுத்தம் ஏற்படுகிறது. எந்தவிதமான பணியும் நடைபெறவில்லை. சென்னை மாநகரத்தில் மின்சாரம் இல்லை என்றால், வாழ்க்கையையே நடத்த முடியாது. நரகமாகிவிடும். மின்சாரம் அது சம்சாரம் என்று சொல்வார்களே அது நிச்சயமாக சென்னை வாசிகளுக்கு ஏற்றஒரு கருத்து. எப்படி ஒரு மனிதன் சம்சாரம் இல்லாமல் ஒரு முழுமையான வாழ்க்கையை அனுபவிக்க முடியாதோ அது போல இன்றைக்கு நகர்ப்புறங் களில் மின்சாரம் இல்லாமல் வாழமுடியாது. ஆனால், அப்படிப்பட்ட மின்சாரத்தை இன்றைக்கு முழுவதுமாகப் பெறுகிறோமா என்றால் இடையிலே இருக்கின்ற பணியாளர்கள் முறையாக அந்தப் பணிகளைச் செய்யாத காரணத்தினால் பெற முடியவில்லை. பல நேரங்களில் குறைந்த மின் அழுத்தம். 6 மாத காலம், 3 மாத காலம் மின் அழுத்தம் என்று சொன்னால் இதற்கு

என்ன பொருள் ? ஆகவே, இதுபோன்ற குறைபாடுகளை நிவர்த்தி
செய்ய வேண்டும் என்பதை நான் இந்த மாமன்றத்திலே தெரி
வித்துக்கொள்ள. விரும்புகிறேன்.

அதேபோல, சைதாப்பேட்டை பகுதிக்கு வேண்டிய மின்சாரத்
திற்கு டாட்ஹண்டர் நகர் பகுதியிலே ஒரு புதிய மின் நிலையம்,
அமைப்பதாகச் சொன்னார்கள். அந்தத் திட்டம் எந்த
நிலையில் இருக்கிறது என்பது தெரியவில்லை. நான் ஏற்கனவே
பலமுறை சொல்லியிருக்கிறேன். அந்தத் திட்டத்தை விரைவு
படுத்தி நிறைவேற்றுவீர்களானால், சைதாப்பேட்டை முழுவதற்
கும் அது பயன்படும்.

சென்னை மாநகரத்தில் பாதி இடங்களில் நிலத்திற்கு அடி
யிலே கேபிள்களைப் பதித்திருக்கிறார்கள். பாதி இடங்களில்
இன்றைக்கும் தெருவிலே நின்று கொண்டிருக்கின்றன. அவை
எல்லாம் 30, 40 ஆண்டுக் காலத்திற்கு முன்பாக நட்ட கம்பங்
கள். ஆகவே, அபாயம் ஏற்படக்கூடிய நிலை இருக்கிறது. எனவே
விரைவாக டாட்ஹண்டர் நகர் பகுதி, சைதாப்பேட்டை பகுதி
முழுமைக்கும் இருக்கின்ற அனைத்து தெருக்களிலும் பூமிக்கு அடி
யிலே கேபிள்களைப் பதிக்கின்ற பணியை விரைவில் தொடங்கி,
வீடுகளுக்கு குறைந்த மின் அழுத்தம் வருகின்ற நிலையை சரி
செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே
குறைவான மின் அழுத்தம் ஏற்படுவதற்கு என்ன காரணம்—
டிரான்ஸ்பார்மர் புதியதாக அமைக்க வேண்டுமா—என்பதை
ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியான சைதாப்பேட்டையில் குறிப்பாக மேற்கு
சைதாப்பேட்டை, மேற்கு மாம்பலம் பகுதி மக்கள் மிகவும் இன்
னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள்
அந்தத் தொல்லையிலிருந்து விடுபட விரைவாக நடவடிக்கை
எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்
கிறேன்.

**திரு. வை. பாலச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத்
அவர்களே, தமிழ்நாடு மின் வாரியத்தின் 1986-87ம் ஆண்டுக்
கான நிதி நிலை அறிக்கையில் மீதும், 1985-86ம் ஆண்டுக்கான
துணை நிதி நிலை அறிக்கையின் மீதும் மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் துவக்கி வைத்து தொடர்ந்து நேற்றும் இன்று
மாக நடந்து கொண்டிருக்கின்ற இந்த விவாதத்தில் நானும்
கலந்துகொண்டு இந்து முன்னணிப் பேரியக்கத்தின் சார்பாக
சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு
நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரை
நான் மின் துறையைக் குறிப்பாக மின் வாரியத்தைப் பாராட்டவும்





போவதில்லை, அதே நேரத்தில் பழியைச் சுமத்தவும் போவ
தில்லை. ஆனால் தமிழகத்தில் மின் உற்பத்தியைப் பெருக்க
வேண்டும் என்பதற்காகவும் மின்சக்தியைச் சீராக வினியோகம்
செய்ய வேண்டும் என்பதற்காகவும் சிறப்பான முயற்சிகளை மின்
துறையும் குறிப்பாக மின் வாரியமும் மேற்கொண்டிருக்கின்றன.
என்பதை அறிகின்றபோது அவர்களுடைய முயற்சியில்
அவர்கள் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக நான் அத்
துறையை வாழ்த்துவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே
நான் பொதுவாக பல்வேறு பிரச்சினைகளை இங்கே சொல்
வதற்கு விரும்பாது போனாலும், என்னுடைய கன்னியா
குமரி மாவட்டத்தில் இன்றைக்கு வாழ்கின்ற மக்கள் எல்லாம்
மின்துறை தொடர்பான பல்வேறு பிரச்சினைகளினால் படு
கின்ற அவதிகளை நான் ஒன்றன் பின் ஒன்றாகச் சுட்டிக்
காட்டுவதன் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களும்,
அதிகாரிகளும் தக்க நடவடிக்கையை மேற்கொள்ள முடியும்
என்று கருதுகின்ற காரணத்தினால் நான் என்னுடைய
மாவட்டத்திலுள்ள பிரச்சினைகளை மட்டுமே சுட்டிக்காட்ட
விரும்புகிறேன்.

என்னுடைய மாவட்டம் என்று நான் சொல்லுகின்ற
போது இமயம் முதல் குமரி வரை பரந்து விரிந்து கிடக்கின்ற
பாரத கண்டம் என்னுடைய நாடு என்ற கொள்கைக்குச்
சொந்தக்காரனான நான் ஒரு மாவட்டம் என்று சொல்லி
என்னுடைய உணர்வுகளை ஒரு மாவட்டத்தின் அளவிற்கு
சுருக்கிக்கொள்ளுகின்றேனோ என்று யாரும் கருதத் தேவை
யில்லை. பிரச்சினைகளைச் சொல்லுவதற்காகத்தான் என்னு
டைய மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம் என்று சுட்டிக்
காட்டினேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. என்னுடைய
மாவட்ட மக்கள் இன்று மின் துறை தொடர்பான பிரச்சி
னைகளினால் படுகின்ற அவதிகளில் தலையாய அவதியாக
இருப்பது அவர்களுக்கு மின் தொடர்பே கிடைப்பதில்லை
என்பது தான். மின் தொடர்பு வேண்டும் என்று மனு செய்து
விட்டு, பல மாதங்கள் அல்ல, பல ஆண்டுகள் காத்திருந்து
சீனியாரிட்டி லிஸ்டில் அவர்கள் பெயர் வரும், வரும் என்று
காத்திருந்து, அவர்களுடைய பெயர் வந்த பிறகு எங்க
ளிடத்தில் மீட்டர் இல்லை, வேண்டிய தளவாடச் சாமான்கள்
இல்லை என்று அதிகாரிகளால் பதில் சொல்லப்பட்டு
அவை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவர்கள் காத்
துக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையை நாம் பார்க்கிறோம்.

எந்த அதிகாரியாக இருந்தாலும், அவர் எந்த மட்டத்
திலே இருக்கிற அதிகாரியாக இருந்தாலும், அவர்களைப்
பார்க்கின்றபோது, எல்லாம் ஒரே மாதிரியான, 'ஸ்டீரியோ
டைப் ஆன்ஸரையே' அவர்கள் சொல்வதைப் பார்க்கிறோம்,

அவர்களுடைய பதிலைப் பார்க்கிறபோது, அவர்கள் தப்பித்துக்கொள்வதற்காக அவர்களுடைய மேல் மட்டத்திலே இருக்கிற அதிகாரிகள், மீது பழியைச் சுமத்துகிற ஒரு நிலைமையைக்கூட நாம் இன்றைக்குக் கண்டு கொண்டிருக்கிறோம்.

அவர்களைக் கேட்கிறபோது, அவர்கள் சொல்கிற ஒரே பதில் : " What can we do Sir. We do not have the required materials. If you see that we get the materials, the next moment we will see that you get the service connection என்று அவர்கள் சொல்கிறார்கள்.

எந்த அதிகாரியைப் பார்த்தாலும் இந்த வார்த்தைகளிலே ஒரு மாற்றமும் இன்றி, இதே வார்த்தைக் கோவைகளை அப்படியே சொல்கிற நிலைமையை நாம் பார்க்கிறோம். எத்தனையோ ஆண்டுக் காலமாக எங்களுடைய மாவட்டத்திலுள்ள மக்கள் எல்லாம்—வாய்க்கால் கரையோரத்தில், வயல் கரையோரத்தில் வாழ்ந்த மக்கள்—இன்றைக்குக் காலத்தினுடைய வேகமான மாற்றத்திற்கு, வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கிற வகையில் தங்களுடைய கிராமப் பகுதிகளை மீண்டும் வளர்க்கிற, புதிய கிராமப் பகுதிகளை நிர்மாணிக்கிற பணியில் ஈடுபட்டிருக்கிறபோது, அவர்களுக்கு, மின்சாரம், மின் இணைப்பு கிடைக்காமல் இருப்பது மிகுந்த வேதனையைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வணக்கத் தலங்களுக்கு whether it is a Temple, or a Mosque or a Church—மின் தொடர்பு வேண்டும் என்று மனு செய்தால் அவர்கள் எல்லோரையும் போல் காத்திருக்க வேண்டிய தேவையில்லை. அவர்களுக்கு உடனடியாக மின் இணைப்பு கொடுக்கப்படும். கொடுக்கவேண்டும் என்பதாக ஒரு சுற்றறிக்கை, ஒரு ஆணை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட 41 வணக்கஸ்தலங்கள் மின் இணைப்புக் கேட்டு மனுசெய்து ஆண்டுக்கணக்காக காத்து இருக்கின்றன. நான் இந்து முன்னணியைச் சேர்ந்தவன் என்பதால், இந்து ஆலயங்களை மட்டும் சொல்லவில்லை. கிறிஸ்தவ தேவாலயங்களை, முஸ்லீம்கள் வணங்குகின்ற மசூதிகள், இவற்றிற்கு எல்லாம் மின் இணைப்பு வேண்டும் என்று மனு செய்த பிறகு, கிட்டத்தட்ட 41 மனுக்கள் அப்படித் தேங்கி இருக்கின்றன பல ஆண்டுகளாக என்று சொல்லப்படுகிறது. சான்றாக சுட்டிக்காட்ட வேண்டுமென்றால், என்னுடைய தொகுதிக்குட்பட்ட கப்பியறை பேரூராட்சிக்குட்பட்ட ஒரு பகுதி பனங்குழி என்ற பகுதி. அந்தப் பகுதியில் இருக்கின்ற ஒரு சிறப்பான ஆலயம் பனங்





குழி அருள்மிகு முத்தாரம்மன் திருக்கோயில். அதற்கு மின் இணைப்பு வேண்டும் என்று மனு செய்த பிறகு, இதுவரை 3½ ஆண்டுக் காலம் அவர்கள் காத்து இருக்கிறார்கள். பலமுறை அதிகாரிகளைச் சென்று பார்த்த பிறகு, அலுவலகங்கள் மாறிவிட்டன, எங்களிடத்திலே இருந்த பொறுப்பு வேறு அதிகாரியிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. எங்களால் ஒன்றும் செய்யமுடியாது என்று சொல்கிற சூழ்நிலை இன்றைக்கு அங்கே இருந்துகொண்டிருக்கிறது.

இதேபோல் இன்னொரு பகுதியான தெங்கன்குழி என்ற பகுதியிலே இருக்கிற ஒரு ஆலயம் அருள்மிகு தெங்கன்குழி முத்தாரம்மன் ஆலயத்திற்கும் மின் இணைப்பு வேண்டும் என்று கேட்டு மனுசெய்து பிறகு, பல ஆண்டுகள் மின் இணைப்பிற்காகக் காத்து இருந்த பிறகும் மின் இணைப்பு கிடைக்காத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அதிகாரிகளைச் சென்று பார்க்கிறபோது, இப்படிப்பட்ட ஆலயங்களுக்கு, வழிபாட்டு இடங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதில் முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்ற ஆணைகள் இருப்பதாக சொல்லப்படுகிறதே என்று கேட்டால், அவர்கள் புன்முறுவலோடு, தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்களே தவிர, அவர்கள் பொறுப்பாகச் செயல்பட்டு மின் இணைப்புத் தருகிற நிலைமை இல்லை. மின் இணைப்பு வீடுகளுக்குக் கேட்டாலும், நிறுவனங்களுக்குக் கேட்டாலும், அல்லது தெரு விளக்குகளுக்குக் கேட்டாலும், எங்களுடைய மாவட்டத்திற்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது).

ஒரே ஒரு பாயிண்ட். அடுத்த கிரீவன்ஸ்—அடுத்த பிரச்சினை குறைந்த மின் அழுத்தம் என்ற 'லோ வோல்டேஜ்' பிரச்சினையாகும். இங்கே எந்தப் பகுதியை எடுத்தாலும் இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதிக்குட்பட்ட, வாழ்வச்சகோஷ்டம் பேரூராட்சிப் பகுதியிலும், முளகுமூடு பேரூராட்சிப் பகுதியிலும், திங்கள்நகோடு பேரூராட்சிப் பகுதியிலும் திருவிதாங்கோடு பேரூராட்சிப் பகுதியிலும், கக்குறிச்சி, கடையமங்கலம் ஊராட்சிகள் முத்தளக்குறிச்சி ஊராட்சி உள்ளிட்ட தக்கலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட எல்லா பகுதிகளிலும் 6 மணிக்கு மேல் வெளிச்சமே இல்லாமல், இருள் அடைந்து இருந்துகொண்டிருக்கிற நிலைமை உள்ளது. இது மிகுந்த வேதனையான ஒன்றாகும்.

மின் விளக்குகள் எரிவதே இல்லை என்று சொல்லப்படும் அளவிற்கு லோ-வோல்டேஜ் இருந்து கொண்டிருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மாவட்ட ஆட்சியாளர் சொன்னார். எங்கெல்லாம் குறைந்த மின் அழுத்த பிரச்சினை இருக்கிறதோ அங்கெல்லாம் புதிதாக டிரான்ஸ்பார்மர்கள் .மின்

விசை மாற்றிகள் அமைத்தால்தான் மின் அழுத்தம் தேவையான
அளவு கிடைக்கும் என்றும், டிரான்ஸ்பார்மர் இருப்பு இல்லாத
தால் அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறோம், டிரான்ஸ்பார்மர்
கிடைத்த உடன் அதைப் பொருத்தி உங்களுக்கு மின்
அழுத்தத்தை உயர்த்தித் தருகிறோம் என்றும் சொன்னார்கள்.
இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது சொல்கிறார்கள்—
புதிதாக மின்விசை மாற்றிகள் அமைக்க தேவையில்லை; மூன்று
ஃபேஸ் லைன் போட்டால் போதும். எனவே நாங்கள் 3 ஃபேஸ்
லைன் போட்டுத் தருகிறோம் என்று சொல்லி, அதற்கான
ஆணைகளும் பிறப்பிக்கப்பட்டுவிட்டதாகச் சொன்னார்கள்.
அப்படி ஆணை பிறப்பிக்கப்பட்டது என்று சொன்ன பிறகு,
6 மாத காலமாக காத்துக்கொண்டு இருக்கிறோம்.

வாழ்வச்சக்கோஷ்டம் பகுதியிலே இருக்கிற பள்ளிக்
கூடத்திலே படிக்கின்ற மாணவர்களுடைய கண் ஒளி, பார்வை
எப்படி இருக்கின்றது என்று பள்ளிக்கூடத்திலேயே சோதனை
நடத்தினார்கள். எங்கெல்லாம் மின் அழுத்தம் குறைவாக இருக்
கிறதோ அந்தப் பகுதியைச் சார்ந்தவர்களுக்கு எல்லாம் கண்
பார்வை பழுதுபட்டதாக ஒரு புள்ளிவிவரம் என்னுடைய
மாவட்டத்திலே சொல்கிறது. ஆகவே, குறைந்த மின் அழுத்தம்
உள்ளதால் ஒளி குறைந்த, அந்த விளக்கில், இரவு நேரத்தில்,
மண்ணெண்ணெய் வாங்குவதற்குக் கூட வழியில்லாமல், இருக்கிற
விளக்கைப் பயன்படுத்தி, இருக்கிற் விளக்கிலிருந்து வருகிற
ஒளியைப் பயன்படுத்தி, படித்தால் போதும் என்று, கண்ணைக்
கூர்மையாக்கிக் கொண்டு படிக்கிற காரணத்தால், கண் ஒளி அம்
மாணவர்களுக்குக் கெட்டு விட்டதோ என்ற சந்தேகம் கூட
எனக்கு வந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், தமிழ
கத்தில் அதிகம் படித்தவர்கள் இருக்கின்ற மாவட்டம், அதிகம்
படித்துக் கொண்டிருக்கிற மாணவர்கள் இருக்கின்ற மாவட்டம்
எங்களுடைய மாவட்டம். ஆகவே, பாதிக்கப்பட்டு இருக்கிற
வர்கள், மாணவர்கள் மட்டுமின்றி, குடிசைக்கு ஒரு விளக்கு
என்று சொல்கிறோமே, அப்படிகுடிசைக்கு, வீட்டுக்கு ஒரு விளக்கு
பெற்றவர்களும் அதனாலே பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-10)

மின் இணைப்பு வேண்டுமென்று கோரி ஒரு மனு வந்தால்
மின் இணைப்பு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் தரப்படும் என்று
சொல்லும் வகையில் ஒரு காலக் கெடுவை அரசு நிர்ணயிக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குழந்தை பிறப்பதற்கு
10 மாத காலம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால்
இங்கே மின் இணைப்பு வேண்டுமென்றால் - அதற்காக ஒரு மனு
போட்டால் - அதற்காக இத்தனை ஆண்டு ஆகும் என்று காலம்





ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. ஆகவே இதற்கும் ஒரு கால நிர்ணயத்தை ஏற்படுத்தி மின் இணைப்பை அதற்குள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின் அழுத்தத்தை அதிகப்படுத்தி தேவையானவர்களுக்குத் தருவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். ஒருவர் விண்ணப்பம் போட்டால் ''இன்றிலிருந்து இத்தனை மாதத்திற்குள் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும்'' என்று சொல்லி அதற்குள் தீர்க்கப்பட வேண்டும். அதிலும் குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் விளவங்கோடு, கல்குளம் போன்ற வட்டங்களில் விண்ணப்பம் கிடைத்த இத்தனை மாதத்திற்குள் மின் இணைப்பு தருகிறோம் என்று சொல்லுகிற ஒரு ஓர்க்கிங் பாலிசியை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

இன்னொரு கோரிக்கையையும் இந்த நேரத்தில் வைக்க ஆசைப்படுகிறேன். 19-8-1985 ஆம் தேதியன்று என்னுடைய மாவட்டத்தின் ஓரமாக இருக்கிற கொல்லங்கோட்டில் ஒரு கலவரம் நடைபெற்றது. அந்தக் கலவரம் எதனால் ஏற்பட்டது, எப்படி ஏற்பட்டது என்பதையெல்லாம் நான் இங்கே குறிப்பிட விரும்பவில்லை. அது வேறு விஷயம். ஆனால் அந்தக் கலவரத்தில் அந்தப் பகுதியில் பல்வேறு வீடுகள் எரிக்கப்பட்டன, பல்வேறு மில்கள் எரிக்கப்பட்டன. வசந்தகுமாரி மற்றும் சாந்தகுமாரி என்பவர்களுடைய மில்கள் அன்றைக்கு எரியூட்டப்பட்டன. அதன் காரணமாக ஒவ்வொருவருக்கும் ரூ. 2 லட்சத்திற்கு மேலாகச் சேதம் ஏற்பட்டது. அந்தக் கலவரத்திற்குப் பிறகு அந்த மில்கள் செயல்படவேயில்லை. அங்கே வேலை செய்பவர்களுக்கு வேலையில்லை. அந்த மில்கள் செயல்படாமல் மூடிய நிலையிலேயே இருக்கின்றன. ஆனால் கடந்த ஓராண்டு காலமாக வேலையே நடக்காத நிலையில் உள்ள அந்த மில்லுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 200 வீதம் மின் கட்டணமாகக் கட்ட வேண்டும் என்று சொல்லப்பட்டு அந்தக் கட்டணத்தைக் கட்டாத காரணத்தால் அந்த மில்லிலிருந்து மீட்டர்களை எடுத்துச் சென்றிருக்கிறார்கள் - அதுவும் போலீஸ் பாதுகாப்போடு. சில மில்களில் அவ்வாறு இன்னும் எடுக்கப்படுகிற சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆலையும் எரியூட்டப்பட்டது. ஆலையை ஓட்டுகிற கச்சாப் பொருள்களும் எரிக்கப்பட்டுவிட்டன, எரியூட்டப்பட்டதன் காரணமாக அங்கே இருந்தவர்களில் சிலர் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். இப்படி மிகப் பெரிய சோதனை அவர்களுக்கு ஏற்பட்டது. இவ்வாறு எல்லாவற்றையும் இழந்த பிறகு, எல்லாமே எரிந்துவிட்ட பிறகு அந்த மில்லிலிருந்து மீட்டர்களைப் பிரித்து எடுக்கிற நிலைமை வந்திருக்கிறது என்றால்

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அத்தகைய சோதனைக்குட்பட்டவர்கள் மீது கருணை கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட கலவரத்தில் எரியூட்டப்பட்ட தொழிற்சாலைகளிலும் மில்களிலும் உள்ள மீட்டர்களை நாங்கள் எடுப்பதில்லை. அந்தக் கலவர நாளிலிருந்து இந்தத் தேதி வரை அங்கே யாரும் வேலை செய்வதில்லை. எனவே அவ்வாறு உற்பத்தியில் ஈடுபடாமல் இருக்கிற அந்தக் கால கட்டத்திற்கு ஒரு கணக்கெடுத்து அதற்கு மின் கட்டணத்திலிருந்து விதிவிலக்கு அளிக்க மாண்புமிகு அமைச்சர் அருள் கூர்ந்து ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அடிக்கடி கலவரத்திற்கும் தீ வைப்பதற்கும் ஆட்பட்டு, புண்பட்டு, வதைப்பட்டுக் கொண்டிருக்கிற மாவட்டம் என்னுடைய மாவட்டம். அங்கே உள்ள மக்கள் இந்தகைய சோதனைக்குள்ளாகிறபோது அரசாங்கம் அவர்களுக்குக் கை கொடுத்து உதவி செய்ய முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைத் தவிர என்னுடைய தொகுதியில் உள்ள தக்கலைக்கு அருகே ஒரு சப்-ஸ்டேஷன் இருக்கிறது. அதனுடைய டெக்னிகல் சமாச்சாரங்கள் எனக்குப் புரியவில்லை. அங்கே ஒரு டிரான்ஸ்பார்மர் இருக்கிறது. அதன் மூலமாகத்தான் எல்லாப் பகுதிகளுக்கும் அங்கே மின் சக்தி வழங்கப்படுகிறது. அந்த டிரான்ஸ்பார்மர் பழுதுபட்டால் அந்தப் பழுது தீர்க்கப்படும் வரை அந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க மாற்று ஏற்பாடு ஏதுமில்லை. பழுதுபட்டுள்ள டிரான்ஸ்பார்மரை பழுதுபார்ப்பதற்கு எத்தனை நாள் எத்தனை மணி ஆகிறதோ அத்தனை நாளும், அத்தனை மணியும் மின் விநியோகம் செய்யப்படாத சூழ்நிலை இருக்கிறது என்று சொல்கிறார்கள். எனவே அந்த டிரான்ஸ்பார்மருக்கு ஒரு மாற்று டிரான்ஸ்பார்மர் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

அந்த வேண்டுகோளை வலியுறுத்தி மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அவர்கள் மூலமாக அதிகாரிகளும் என்னுடைய தொகுதியிலுள்ள மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்கப் போர்க்கால அவசரத்துடன் முன்வர வேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தி, அமைகிறேன். வணக்கம், நன்றி.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுற்றுலா, அறநிலையத்துறை மற்றும் மின்துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் வைத்திருக்கிற தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1986-87-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதும், மாண்புமிகு நிதியமைச்சர்





டாக்டர் நாவலர் அவர்கள் அவையில் வைத்திருக்கும் துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு சில கருத்துக்ளைச் சொல்ல முன்வருகிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் துணை நிதிநிலை அறிக்கையின் மீது கருத்து ஏதும் சொல்லாமல் விட்ட காரணத்தால் நானும் அதைப்பற்றி விவாதம் செய்யாமல், இங்கே மற்றவர்கள் எதைப்பற்றி விவாதப் பொருளாக எடுத்துக் கொண்டு முழுமையாகப் பேசினார்களோ அந்த மின்சார வாரியத்தைப் பற்றி ஒரு சில உணர்வுகளை இங்கே பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். மின்சாரம் என்றால், சக்தி. ஆங்கிலத்தில் பவர் என்பார்கள். உருவமற்ற ஒரு சக்தியுள்ள பொருள். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் இவற்றை உள்ளடக்கிய ஒரு உயிர் சக்தியாக உள்ளவன்தான் மனிதன். அதுபோல் உலகம் என்றால் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் இவைகளை உள்ளடக்கியதாகும். இப்படி இவற்றையெல்லாம் உள்ளடக்கி உயிர்ப்புச் சக்தியை உருவாக்கி 98.4 டிகிரி உஷ்ணநிலையை மனிதனுக்கு வகுத்திருக்கிறார்கள்.

அந்த உஷ்ண நிலை கூடாமல் குறையாமல் பார்த்துக் கொள்வார்களானால் அவர்களுக்கு நிச்சயமாக சாவு இல்லையென்று சொல்லுகிறார்கள். அதே போலத்தான் உலகத்தின் உஷ்ண நிலையும். மனிதன்தான் மண்ணானாலும், விண்ணானாலும் அங்கேயெல்லாம் போகக் கூடிய ஆற்றல் படைத்தவன். அந்த அளவிற்கு நிலைமை இருக்கிறது. இயற்கையைப் போலவே மின்சாரம் மிகமிகத் தேவை என்று எல்லோரும் சொன்னார்கள். மின்சாரத்தையும், சம்சாரத்தையும் பற்றியெல்லாம் சொன்னார்கள். வாழ்க்கையிலே சம்சாரம் இல்லாதவர்கள் பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடித்து வாழலாம். ஆனால் பிரம்மச்சாரி கூட மின்சாரம் இல்லாமல் வாழ முடியாது என்ற அளவிற்கு இன்று உலகத்தின் தேவை, நாகரீகம், நடைமுறை, வளர்ந்திருக்கிறது என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

இங்கே பேசியவர்கள் எல்லாம் பல்வேறு உணர்வுகளைச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாகவே இந்திய துணைக் கண்டத்திலே தமிழகத்திலே இருக்கின்ற மின் வாரியம் பல்வேறு வகைகளிலே முன்னோடியாக இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிடுவதற்கில்லை.

1983-84இல் 4000 மில்லியன் யூனிட்டாக இருந்ததை மின் உற்பத்தியை இன்றைய தினம் 5,700 மில்லியன் யூனிட் என்ற அளவிற்கு உற்பத்தியைக் கூட்டியிருக்கிறார்கள். அதே

[டாக்டர் கே. சமரசம்] [1986 நவம்பர் 20]

நேரத்தில் நிறுவப்பட்டத் திறன் ஒன்றுதான். அது மட்டுமல்ல,
எண்ணூரிலே 1983-84இல் 28 சதவீதமாக இருந்த உற்பத்தி
இப்போது 1985-86இல் 52 சதவீதமாக அதிகரித்திருக்கிறது.
தூத்துக்குடியில் 1983-84இல் 50 சதவீதமாக இருந்த உற்பத்தி
1985-86இல் 66 சதவீதமாக அதிகரித்திருக்கிறது. அது மட்டு
மல்ல. இப்படிப்பட்ட இந்த நிலையால், இந்த நிர்வாகத்தால்
எடுக்கப்பட்ட நடவடிக்கையால், நிர்வாகம் மிகச் சீராக
இருக்கின்ற காரணத்தால், இந்த உற்பத்தியை வைத்து
தான் மத்திய அரசுகூட சிறந்த உற்பத்தித் திறன் என்று
சொல்லும் அளவிற்கு பரிசைக் கொடுத்திருக்கிறது. பாராட்டைப்
பெற்றிருக்கிறோம்.

அது மட்டுமல்ல. பர்னஸ் ஆயில் என்ற ஆயிலை உபயோகப்
படுத்திய வகையிலே, அவற்றை ஒழுங்குபடுத்திய காரணமாக
மிச்சப்படுத்தியதால் மட்டும் இந்த மின்சாரம் 42 கோடி
ரூபாய் லாபம். இந்த அளவிற்கு இந்த அரசாங்கம் ஓர்
அருமையான மின்சார வாரியத்தை உருவாக்கி, சம்பந்தப்பட்ட
நிர்வாகத்தினரை அங்கே வைத்து மிகப் பெரிய அளவிலே சிறப்
பாக நடத்த வழிவகை செய்ததில் நான் பெருமைப்படுகிறேன்.

பல்வேறு திட்டங்களைப்பற்றியும், வளர்ச்சியைப் பற்றியும்
நான் இங்கே சொல்லலாம். நேரம் எந்த அளவிற்குக் கொடுக்கப்
படுகிறதோ அந்த அளவிற்கு என்னுடைய கருத்துக்களை எடுத்துச்
சொல்ல விரும்புகிறேன். இங்கே பலர் பல வாதங்களை எடுத்து
வைத்தார்கள். அது அவர்களுடைய உரிமை. வாதங்கள் எல்
லாம் நியாயங்கள் அல்ல. எப்படியும் நியாயத்தை வாதத்திற்
குட்படுத்தலாம். இதுதான் ஜனநாயக நாட்டின் நிலை. இங்கே
ஒரு பிரச்சினை வந்தது. 'மால்கோ' நிறுவனத்திலிருந்து 20
கோடி ரூபாய் வசூலிக்க முடியவில்லையே என்று சொன்னார்கள்.
ஒரு நிர்வாகத்திலே நுழைந்து நீதியை வழங்குகிறது நீதி
மன்றம். நீதிமன்றம் தொழிலாளர்களுக்கு நீதி வழங்குகிறது.
மாணவர்களுக்கு நீதி வழங்குகிறது. அதிகாரிகளுக்கு நீதி வழங்கு
கிறது, புரொமோஷன் விஷயத்திலே நீதி வழங்குகிறது. இப்படி
எத்தனையோ பிரச்சினையில் கோர்ட்டுக்குப் போகிறபோது
பல்வேறு நீதிகளை வழங்குகிறது நீதிமன்றம். ஆனால் ஒரு
தொழிற்சாலை உற்பத்திக்காக மின்சாரத்தை எந்த அளவிற்குப்
பயன்படுத்தியதோ அதற்கேற்ப தொகையை வழங்குவதில்
நியாயம் கொடுங்கள் என்று வாதாடும்போது இன்னும் நியாயம்
கிடைக்காமல் இருப்பது இந்த ஜனநாயக நாட்டின் துரதிருஷ்ட
மானதொரு நிலை. இதை முதலிலே நாம் எண்ணிப் பார்க்க
வேண்டும். சட்டத்தின் சந்து பொந்துகளில் நுழைந்து சிந்து
பாடக்கூடிய நிலையில் பலர் இருக்கிறார்கள். அதற்குரிய மாற்



1986 நவம்பர் 20] [டாக்டர் கே. சமரசம்]

றம் செய்யக்கூடிய வழிவகைகளைக் கண்டறிய வேண்டும். அல்
லது அதிலே உள்ள நியாயம் என்ன, குற்றம் என்ன, .வாசின்
நிலை என்ன என்பதைப் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்
பினர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

இங்கே வேறு ஒரு பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள்.
நிர்வாகத்தைப் பற்றி வருகிறபோது அதிலே நடந்த பல்வேறு
கருத்துக்களைக் கோடிட்டுக் காட்டினார்கள். அதிலே ஒன்றை
மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கம்தான் ஒரு
நிர்வாகம் எப்படி நிர்வாகத்தை நடத்த வேண்டுமென்று திட்டத்
தைக் கொடுக்கிறது, சட்டத்தைப் போடுகிறது. 1973இல்
இருந்த அரசாங்கம் போட்ட சட்டத்தினால்தான் நிர்வாகத்திற்கு
வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலைமை உரு
வானது. இங்கே பொறுப்பேற்றிருக்கின்ற உயர் அதிகாரி ஒருவர்
ஒரு நேரத்திலே சொன்னார், 'நல்ல நேரம்' என்று. அரசாங்
கத்தில் ஒரு பிரச்சினை, பொது மக்கள் பிரச்சினை, எந்த உத்தி
யோகத்தில் இருக்கிறார்களோ அந்த உத்தியோகத்தில் உள்ள
பிரச்சினை என்னவென்று அறிந்து தங்கள் கடமையை எந்த
அளவிற்குச் செய்கிறார்களோ அதெல்லாம் நல்ல நேரம்.

(பிற்பகல் 1-20)

அந்த நேரத்திலே அவர்களுடைய கட்சிப் பிரச்சினை,
கொள்கைப் பிரச்சினை, குடும்பப் பிரச்சினை, இன்னும் வேறு
பலவற்றுக்கு அதைப் பயன்படுத்திக்கொண்டால் அது கள்ள
நேரமென்று ஒருவர் சொன்னார். நல்ல நேரத்தைவிட, கள்ள
நேரம் அதிகமாக உள்ள அரசு அலுவலாளர்கள் ஊடுருவல்
செய்து விட்டதால், நிர்வாகத்திலே பல்வேறு நடவடிக்கைகள்
எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்பதை மறந்து
விடக்கூடாது. அதுமட்டுமல்ல, நாணயம் இல்லாத வியாபாரி,
நேர்மையில்லாத அரசியல்வாதி, ஒழுங்கில்லாத சீர்திருத்தவாதி,
கடமையை நிறைவேற்றாத ஊழியர், கண்டிப்பு இல்லாத
தலைமை—இவை அனைத்தும் இந்த நாட்டைக் கெடுக்கக்கூடிய
வையாகும். அப்படிப்பட்ட நிலையிருந்தால், நடவடிக்கை
எடுத்தாக வேண்டும். நடவடிக்கை எடுக்கத் தவறினால், நிர்
வாகம் எந்த அளவுக்கு ஸ்தம்பித்துப் போய்விடும் என்பதை
எண்ணிப் பார்க்க வேண்டும். இதுமட்டுமல்ல, வேலை செய்ய
மாட்டோம். சம்பளம் வேண்டும்; உழைக்க மாட்டோம்,
உயர்வு வேண்டும்; கட்டுப்பட மாட்டோம், அரசாங்க வேலை
வேண்டும் என்று சொல்லிக் கொண்டு, அரசியல் கட்சிகளின்
நிழலில் அரசு ஊழியர்களாக வாழக் கூடிய பல பேர் ஜன
நாயகப் படுகொலைக்கு இலக்கணமாக இருப்பதால், எத்தனை
யோ தில்லுமுல்லுகள் தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியத்
துணைக் கண்டத்தில் ஏற்பட்டிருக்கின்றன என்பது மன
வேதனையோடு நாம் அனைவரும் ஏற்றுக்கொண்ட உண்மை
யாகும்.

ஒரு மேனாட்டிலே, காட்டிலே வாழக் கூடிய 'கங்கு' என்ற
மிருகம் தன்னை யாராவது தாக்க வருகிறார்கள் என்றால்
ஒரு துர் நாற்றத்தைக் கிளப்பிவிடுமாம். அந்த துர் நாற்றத்
தால், அவர்கள் ஒதுங்கி, ஓடிவிடுவார்களாம். அந்த முறையில்
அந்த மிருகம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுமாம். அதைப்
போல, சில நிறுவனங்களிலே அதிகாரிகளாக இருக்கக்கூடிய
சிலர், சில அரசியல் கட்சிகளின் தொடர்பு கொண்டு, துர்
நாற்றத்தைக் கிளப்பிவிட்டு, நிர்வாகத்திற்குப் பல சங்கடங்
களை உருவாக்கக்கூடிய வகையிலே இருக்கிறார்கள் என்பதை
நாம் மறந்துவிடக்கூடாது. ஒரு சிக்னல் லைட்டில் சிவப்பு
விளக்கு எரியும்போது, எவ்வளவு வண்டிகள், எவ்வளவு தூரம்
நிற்கின்றன என்பதைப் பார்க்கிறோம். மின்சாரம் ஒரு மணி
நேரம் இல்லையென்றால் உற்பத்தி எவ்வளவு பாதிக்கும் என்பதை
எண்ணிப் பார்க்க வேண்டும். பல்வேறு குறைகள் ஊழியர்களுக்கு
இருக்கலாம். தாங்கள் உழைக்க வேண்டும், உயர வேண்டும்
அதற்காக வாதாட வேண்டுமென்ற நிலையிலே எப்போது
ஊழியர்கள் வருகிறார்களோ அப்போதுதான் ஜனநாயகத்
தைப் பாதுகாக்க முடியும். அதை விட்டுவிட்டு, காலம் முழு
வதும் போராட்டம் என்ற நிலையில் இருந்தால், அது பல்
வேறு வகைகளிலே சின்னாபின்னமாக்கப்படுகிறது என்பதை
நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இங்கே தொழிற் சங்கங்கள் பற்றி எல்லாம் சொன்
னார்கள். நம்முடைய அரசு இதில் ஒரு முடிவெடுத்திருக்
கிறது. ஒரு நிர்வாகம் என்று சொன்னால், ஒரு துறை என்று
சொன்னால், ஒரு நிறுவனம் என்று சொன்னால், அதற்கு ஒரு
தொழிலாளர் அமைப்புதான் இருக்க வேண்டும். அப்படி
இருந்தால்தான் அந்த நிர்வாகத்திலே, அந்தத் துறையிலே,
அந்த நிறுவனத்திலே இருக்கின்ற குறைகளை, நிறைகளை
பொது மக்களுக்கு, அரசாங்கத்திற்கு, அந்த நிறுவனத்தின்
தலைமைப் பொறுப்புக்கு எடுத்துச் சொல்லி, கோரிக்கைகளை
நிறைவேற்றிக் கொள்ள முடியும். அப்படியில்லாமல், அவர
வர்கள் ஒரு கொள்கைக்குச் சொந்தக்காரர்களாக, ஒரு
லட்சியத்திற்கு சொந்தக்காரர்களாக இருந்துகொண்டு, எங்
கோ இருக்கின்ற எதையோ சுட்டிக்காட்டி, போராடக்கூடிய
வகையில், அல்லது கேட்கக்கூடிய வகையில் ஓர் அமைப்பை
வைத்துள்ளார்கள் என்றால் அப்போது அந்த நிர்வாகம் எடு
படாது.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, ஒரு விளக்கம் வேண்டுகிறேன். ஒரு தொழி
லுக்கு ஒரு சங்கம் வேண்டுமென்ற நல்ல கொள்கையை மாண்பு
மிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் சொன்னார்கள்.





அதை அமலாக்க வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள்.
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்
நாட்டில் சீக்ரெட் பேலட் மூலமாக ஒரு தொழிலுக்கு ஒரு
சங்கம் என்பதை அமுலாக்க முன்வருமா?

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத் தலைவர்
வர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகத்தின் கட்சி அளவிலேயும், அந்தக் கழகத்தின் சார்பிலே
அமைந்துள்ள இந்த அரசு மற்றும் மாண்புமிகு முதல்வர்
புரட்சித் தலைவர் அவர்கள், அமைச்சர்கள் மட்டத்திலேயும்
அதிகாரிகள் மட்டத்திலேயும் இதை எப்படி நிறைவேற்ற
வேண்டுமென்று கருத்துக்களைக் கேட்டிருக்கிறார்கள். அது
குறித்து ஒரு முடிவிற்கு வந்த பிறகு, அது செயல் திட்டத்திற்கு
வருமென்பதை நண்பர் அவர்களுக்குத் தெளிவுபடுத்த விரும்பு
கிறேன். அந்த அடிப்படையிலே ஒரு துறை என்று சொன்னால்
அங்கே ஒரு சங்கம் என்று இருக்கும்போது, ஒரு கட்சியின்
துணையோடு வாழவேண்டுமென்ற நிலை அவர்களுக்கு வராது.
மேலும் அந்தத் தொழிலாளர்களை வைத்து, கட்சியை வளர்க்க
வேண்டிய அவசியம் அரசியல் கட்சிகளுக்கும் ஏற்படாது. அப்
படிப்பட்ட அப்பழுக்கற்ற நிலையில் அரசியல் கட்சிகள் உரு
வாகும்போது, காந்தியடிகள் கண்ட கனவு, லெனின் அவர்கள்
சொன்ன கருத்து, ஆப்ரஹாம் லிங்கன் அவர்கள் கொண்ட
உணர்வு ஆகியவற்றை இந்த உலகம் எங்கும் பரப்ப முடியும்.
இதை மனதிலே பதிய வைத்துக்கொள்ள வேண்டும். அப்படி
யில்லாமல், ஒரு நிர்வாகம், அதற்குப் பல சங்கங்கள் என்று
சொன்னால், அரிவாள் ஆடிக்கொண்டே இருக்கும், ஆண்ட
குடியும் கெட்டுக்கொண்டே போகும். எனவே இதிலிருந்து
விடுபட வேண்டுமென்றுதான் ஒரு துறைக்கு, ஒரு நிர்வாகத்
திற்கு ஒரு சங்கம் அமைய எல்லா ஆலோசனைகளும் செய்யப்
படுகின்றன. அதை நல்லமுறையிலே பரிசீலனை செய்து,
நல்லதொரு முடிவுக்கு வர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்
சரவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

டிப்பார்ட்மென்ட்டல் ஆக்ஷன் இல்லையென்றால், எந்த ஜன
நாயக நாடும் தாங்காது. டிப்பார்ட்மென்ட்டல் ஆக்ஷன் இல்லை
என்று சொன்னால், எந்த ஆளும் கட்சியும் அல்லது எதிர்க்கட்சி
யும் தன்னுடைய உரிமைகளை, உணர்வுகளை ஒழுங்காக எடுத்து
வைக்க முடியாது. டிப்பார்ட்மென்ட்டல் ஆக்ஷனிலே தவறு செய்
தார்களானால், குற்றம் செய்தார்களானால், அவர்களைத்
தண்டிக்க அரசு எப்போதுமே தயங்காது. அப்படிப்பட்ட நிலை
யில் நம்முடைய உணர்வுகள் இருக்கின்றன. எந்தச் சட்டத்தை
நாம் போடுகின்றோமோ அந்தச் சட்டத்தை, திட்டத்தை நிறை
வேற்றுகின்ற அந்த அதிகாரிகளுக்கு சுதந்திரம் இல்லை என்

றால் அவர்கள் சுதந்திரமாக செயல்படமுடியாது. ''திட்டம் போட்டு திருடுகின்ற கூட்டம் திருடிக்கொண்டே இருக்கின்றது, சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம் தடுத்துக்கொண்டே இருக்கின்றது'' என்ற நிலையிலிருந்து ''திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால், திருட்டை ஒழிக்க முடியாது'' என்ற கடைசி நிலை வந்தால் அதற்கும் முடிவு கட்டவேண்டிய அவசியம் வந்துவிடும். அவர்களே பார்த்து திருந்துவார்கள். அப்படித் திருந்த தவறினால் திருத்துவது எப்படி என்கின்றபோது, அந்த நிலை வருகின்றபோது இதற்கு விடிவு காலம் வரும். அந்த நிலையிலேதான் பல சங்கங்கள், தொழிற்சங்கங்கள், அமைப்புகள் ஒன்றாக சேரும்போது, ஒரு வழி பிறக்கும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயமாகும்.

அது மட்டுமல்ல, இப்போது தகுதிமிக்க தனியார் துறையைச் சேர்ந்தவர்கள் நல்லமுறையிலே மின் உற்பத்தி செய்தால், அவர்களுடைய தேவையை அவர்கள் பூர்த்தி செய்து கொள்வதற்கு அவர்களுக்கு உரிமைகளை வழங்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த மின்சார உற்பத்தியை மக்களுக்குப் பகிர்ந்து கொடுக்கின்றபோது பிரச்சினைகள் இருக்கின்றன. இந்தியாவிலே நதிநீர் பங்கீடு பிரச்சினை, இப்படியெல்லாம் பிரச்சினைகள் வருகின்றன. மத்திய அரசு மின்சாரப் பங்கீடு இவற்றில் முழுமையாக ஈடுபடவேண்டும். உற்பத்தி எவ்வளவு? மாநிலத்திற்குத் தேவை எவ்வளவு? என்பதைப்பற்றியெல்லாம் பார்க்கவேண்டும். தேவையான உற்பத்தி மாநிலத்திலே இல்லை என்று சொன்னால் அதை உருவாக்கிக் கொடுக்கக்கூடிய பொறுப்பை மத்திய அரசு ஏற்கவேண்டும். அப்போதுதான் ஒருமைப்பாடு சிறக்கும். இல்லாவிட்டால் ஒருமைப்பாடு பறக்கும். ஒவ்வொரு நிலையிலும் இருக்கின்ற சூழ்நிலைகளை. எண்ணிப் பார்க்கவேண்டும். அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்யத் தவறினால் ஆட்சி எதற்கு என்ற நிலை வராதா? அப்படிப்பட்ட நிலைமைகள் மாற வேண்டுமென்றால், ஒருமைப்பாட்டை விரும்புகின்றவர்கள் எது எது ஒருமைப்பாட்டிற்குரியதோ அதைச் செய்ய தவறினால், காவிரி பிரச்சினை, தெலுங்கு கங்கை பிரச்சினை எல்லாம் வரும். இன்னும் அனைத்துமே வரும், பாரதி கண்ட கனவு, கருத்து நினைவாக வேண்டும் ''கங்கை நதிபுறத்து கோதுமைப் பண்டம், காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்வோம்'' என்று எப்போதோ எழுதிவைத்த அந்தத் தூர தரிசனத்தின்படி நடக்கத் தவறினால், அதன் விளைவு என்னவாகும் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும் என்பதைத்தான் நான் வலியுறுத்துகிறேன். ஒருமைப்பாடு என்னவாகும்? சிதறுண்டு போகும். தமிழ்நாட்டினுடைய தனித் தன்மை கெடாமல், திராவிடத்தினுடைய கலாசாரம் பாழ்படாமல் இந்திய





தேசியத் தன்மை உருக்குலையாமல் நாம் வாழவேண்டும் என்பதுதான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய, இந்த அரசினுடைய சட்டம், திட்டம், நியாயம், உணர்வு எல்லாம் என்று சொல்லிக் கொள்கிறேன். அந்த அடிப்படையிலேதான் நாம் இதை வைத்துக் கொண்டிருக்கிறோம்.

இங்கே பேசுகின்றபோது பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். லைன் லாஸ் 21 பர்செண்டுக்கு மேலே என்கின்றார்கள். அது சராசரியாக இருக்கின்றது. அதைக் கணக்கு எடுத்துப் பாருங்கள். கணக்கு எடுத்துப் பார்த்தால் இந்திய அளவிலே அதுதான் இருக்கின்றது. தமிழகத்திலே 18.7 பர்செண்ட். அதுவும் சரிதானா? குறைக்கவேண்டாமா? அப்படி நீங்கள் கேட்கலாம். குறைக்கத்தான் வேண்டும். அதற்கு முயற்சி தேவையில்லையா? தேவை. அப்படிப்பட்ட முயற்சியிலே நாம் ஈடுபட வேண்டும். அதை நானும் வரவேற்கிறேன். நிர்வாகம் செய்யவேண்டும். அப்படி கேட்பதிலே எந்தவிதமான தவறும் கிடையாது. ஆக, அந்த அடிப்படையிலே இங்கே சில பிரச்சினைகள் பற்றி சொன்னார்கள். உலக வங்கி இருக்கின்றது. அந்த ஆசிய பொருளாதார வளர்ச்சி வங்கி இருக்கின்றது. வங்கியின் துணையோடு நாம் மிகப் பெரிய திட்டங்களை அமுலாக்குவதற்கு உதவி பெறுகிறதைப் பற்றி சொல்லும்போது, இந்திய துணைக் கண்டத்திலே இவ்வளவு அதிக பண உதவியைப் பெறுகின்றது தமிழகம்தான். கவர்ன்மெண்ட் அண்டர்டேகிங் புராஜெக்ட் என்கின்ற நிலையில் எந்த ஒரு அரசு நிறுவனத்திற்கும் அந்த வங்கி இந்த அளவுக்குக் கொடுக்கவில்லை. அந்தப் பெருமையையும் இந்த தமிழ்நாடுதான் பெற்றிருக்கின்றது. அந்தப் பெருமை நமக்குத்தான் கிடைத்திருக்கின்றது. அந்தப் பெருமை மின்சார வாரியத்திற்குக் கிடைத்திருக்கின்றது. அதை நாம் பயன்படுத்தி எதிர்காலத்திலே தன்னிறைவைப் பெறவேண்டும் என்கின்ற உணர்வை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-30)

பொறி இயல் கல்லூரி பற்றி சொல்ல விரும்புகிறேன். ஒரு நிமிடம் நேரம் வேண்டும். கல்லூரி பற்றி சொன்னார்கள். மின்சார வாரியம் மட்டுமல்ல. அது எந்த வாரியமாக இருந்தாலும் அதனுடைய அட்மினிஸ்டிரேட்டிவ், டெக்னிக்கல், அதனுடைய குவாலிபிகேஷன், டிப்பார்ட்மெண்ட்டினுடைய நடைமுறை இவைகளை எல்லாம் ஒழுங்காகப் புரிந்துகொண்டு, நல்ல பயிற்சி பெற்றாலொழிய நிர்வாகம் செழிக்காது.

எந்த நிறுவனமாக இருந்தாலும் அதற்கு இப்படிப்பட்ட
ஒரு பொறியியல் கல்லூரி அவசியம் தேவை. அதுவும் அந்த
நிறுவனத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.
அப்பொழுதுதான் மிகவும் நல்லமுறையில் கல்லூரியை மின்
சார வாரியம் நடத்த முடியும். அந்த நிலைமைக்கு ஏற்ப,
அப்படிப்பட்ட ஒரு பொறியியல் கல்லூரியை தன்னுடைய நிர்
வாகக் கட்டுப்பாட்டுக்குள்ளேயே அமைப்பது சிறப்பாக இருக்கும்
என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின்
இன்றைய காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை
4-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகள்
மீதான விவாதம் தொடரும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்
பெற்றது.

(மாலை 4-00)

மாலை 4-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ர
மணியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்: மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தி-
சுற்றுலா மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களுடைய இந்த
ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய தாழ்மை
யான கருத்துக்களை இந்த மாமன்றத்திலே சமர்ப்பித்துக் கொள்
கிறேன். மிகச் சிக்கலான, மிகுந்த தேவையான இந்தத் துறையிலே
மகத்தான வெற்றி கண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் சீரோடும் சிறப்
போடும் நிர்வகித்து வந்த மாண்புமிகு அமைச்சர் பண்ருட்டி
இராமச்சந்திரன் அவர்களும், தற்போது இந்த இலாகாவின்
புதிய பொறுப்பை ஏற்றிருக்கிற மாண்புமிகு அமைச்சர் திரு.
வி. வி. எஸ். அவர்களும், இந்தத் துறையைச் சிறப்பாக நிர்
வகித்து வருகின்ற காரணத்தினால் இந்த மாமன்றத்தின் உறுப்
பினர் என்ற முறையில் நான் முதலில் நன்றிகலந்த பாராட்டுக்
களை, வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துறையைப் பொறுத்த அளவிலே, இந்தத் துறை
மக்களுக்கு அன்றாடத் தேவையான, அன்றாட வாழ்க்கைக்கு
அத்தியாவசியமான கால கட்டத்தில் இந்தத் துறை இருக்கின்ற
காரணத்தினால், இந்தத் துறை மக்கள் மத்தியில் எந்த ஒரு





விழிப்புணர்ச்சியோடு கண்
பிரச்சினையானாலும், துறையாகும். அப்பேர்ப்பட்ட இந்தத்
காணிக்கின்ற ஒரு நிர்வாகத்தை கொண்டிருக்கிறது. இந்த
துறை நல்ல, சீரிய உறுப்பினர்களில் பலர் வர
வாரியத்தைப் பற்றி இங்கே பேசிய குறைபாடுகளைச் சுட்டிக்
வேற்று இருக்கிறார்கள். ஒரு சிலர் இந்த தமிழகத்தின்
காட்டியிருக்கிறார்கள். இருந்தபோதிலும், மின் உற்பத்தியை மேற்
மின்துறை இக்கட்டான சூழ்நிலையில் இல்லாத காலத்திலும்,
கொண்டு, நமக்கு சாதகமான சூழ்நிலை மிகச் சிறப்பான
உற்பத்தித் திறனை நோக்கமாகக் கொண்டு வருவதை நாம் கண்
முறையிலே இந்தத் துறையை நிர்வகித்து சாதனையை எங்கள்
கூடாகக் காணலாம். அப்பேர்ப்பட்ட இந்த அவர்கள் ஆட்சியில்
தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் பார்த்து வருகிறோம்.
கடந்த 10 ஆண்டு காலமாக கண்கூடாகப் இப்போது தமிழக
அதை யாரும் மறுக்க முடியாது. இங்கே, தமிழக மக்களுக்கு
முதல்வர் அவர்கள் பல சீரிய திட்டங்களை உன்னத திட்ட
வழங்கியிருக்கிறார்கள். இந்தத் திட்டங்களிலே, தமிழகம் மட்டுமல்ல,
மான இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் இல்லாத இலவச
பாரத தேசம் மட்டுமல்ல, உலகத்திலே எங்கும் டாக்டர் புரட்சித் தலை
மாக மின்சாரம் வழங்கும் ஒரே தலைவர் மின்சாரம் வழங்
வர் அவர்கள்தான் குடிசைகளுக்கு இலவசமாக இலவசமாக
கும் திட்டம், அதேபோன்று ஏழை விவசாயிகளுக்கு திட்டங்களை
மின்சாரம் வழங்கும் திட்டம் ஆகிய இந்த சீரிய அமைச்சர்
மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மாண்புமிகு நமக்கு வழங்கிக்
அவர்கள் மூலமாக சிறப்போடு, குறைபாடின்றி திட்டத்தை இந்த
கொண்டிருக்கிறார்கள். இந்த ஒப்பற்ற கடமைப்பட்டுள்ளோம்,
மாமன்றத்திலே அனைவரும் வரவேற்கக் தேவையற்ற முறையில்
இந்தத்திட்டத்தைப் பற்றிகூட பலர்,
தங்கள் கருத்துக்களை இங்கே சொன்னார்கள்.

இந்த திட்டத்தைப் பொறுத்த அளவில், வரி போட்டு இந்தத்
திட்டத்தை நாங்கள் செயல்படுத்துவதாகச் சொன்னார்கள்.
வரி போடாமல் எந்தத் திட்டத்தையும் செயல்படுத்த முடியாது.
இந்த கோணத்திலே பார்க்கிறபோது, வரியைப் பெற்றுக்
கொண்டுதான் ஏழைகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்
கும் திட்டத்தைச் செயல்படுத்த முடியும். இந்தத் திட்டத்தை
தமிழக அரசு மின் வாரியம் மூலமாக மிகச் சிறப்பாகச் செயல்
படுத்தித் தருவதை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது.

அதே போன்று, இந்தியாவிலேயே பாராட்டக்கூடியவண்ணம்
சிறப்பான முறையில் தூத்துக்குடியில் ஒரு திட்டத்தை வகுத்து
செயல்படுத்தி வருகிறார்கள். நான் சிதம்பரனார் மாவட்டத்
தைச் சேர்ந்தவனாகையால், இந்தத்துறையைக் கேட்டுக் கொள்
கிறேன்—தூத்துக்குடி மின் திட்டத்திற்கு தரமான நிலக்கரியை

சப்ளை செய்வதில்லை என்ற குறைபாடு அந்தப் பகுதி மக்கள் மத்தியிலே நிலவுகிறது. மற்றும் அங்கே வேலைபார்க்கின்ற வல்லுனர்களால் அந்தக் குறைபாடு எங்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

மிகத் தரம் குறைந்த நிலக்கரிதான் வரவழைக்கப்படுகிறது எனவே இந்த வாரியம் அதிலே தகுந்த கவனம் செலுத்தி அந்தத் திட்டத்திற்குத் தேவையான அந்தத் திட்டத்தினுடைய தொழில் நுட்பத்திற்குப் பாதகம் ஏற்படாத வகையில், தரமான நிலக்கரியைத் தங்கு தடையின்றி தேவையான முன்னெச்சரிக்கையோடு பெற்றுத் தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களிலே பெரும்பாலும் முக்கியமான குறைபாடாக எடுத்துச் சொன்னவர்கள் எல்லாம் அவரவர்கள் பகுதிகளிலே தெரு விளக்குகள் எரியவில்லை என்பதைத் தான். இந்தக் குறையை பல முறைகள் இந்தச் சட்டமன்றத்திலும் சரி, டி.டி.சி. கூட்டத்திலும் சரி, எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் துறை நிர்வாகத்தின் திறமையின் காரணமாக சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை சீர்படுத்திய போதிலும் பூரண அளவுக்கு, திருப்தி ஏற்படக்கூடிய அளவுக்கு நிலைமைகள் இல்லை. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பதிலாக, உள்ளாட்சித் துறையும் மின்துறையும் மாற்றி மாற்றித் தட்டிக் கழிக்கும் முகமாகத்தான் காட்சியளிக்கின்றனவே தவிர வேறு இல்லை. மின் வாரியத்தினுடைய நிபுணர்களைக் கலந்துகொண்டு இதைச் செம்மைப்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த வகையிலே பார்க்கிற போது அதற்கு இருக்கிற வழி என்னவென்றால்—என்னுடைய அன்பான பணிவான வேண்டுகோள்—இன்றைக்கு உள்ளாட்சி மன்றங்கள் மின்சாரக் கட்டணத்தைக்கூட மாதாமாதம் செலுத்தக்கூடிய அளவிற்கு நிதி வசதியில்லாமல் இருக்கின்றன. இன்றைக்கு நம்முடைய அரசாங்கம் குடிசைகளுக்கு இலவச மின்சாரம் வழங்குகிறது. சிறு விவசாயிகளுக்கு இல்வச மின்சாரம் வழங்குகிறோம். ஆனால் சிறு விவசாயிகள் என்ற போர்வையிலே வசதி படைத்தவர்கள்கூட இந்த இலவச மின்சார வசதியைப் பயன்படுத்துகிறார்கள். ஆகவே, தனிப்பட்டவர்கள் இலவசமாக இவ்வளவு மின்சார வசதிகளைப் பெறுகிற நிலைமை இருக்கிறபோது ஏழை எளிய மக்களுக்கும் பயன்படுகின்ற தெரு விளக்குகளுக்கு கட்டணத்தை வாங்குகிறோம் அதைப் பெறுவதற்கு அதிகமான சட்டதிட்டங்களை வைத்திருக்கிறோம். சால்வன்சி சர்டிபிகேட் வேண்டுமென்று கேட்கிறோம். டெபாசிட் வேண்டுமென்று கேட்கிறோம் ஒரு தெரு விளக்கு எரிய



வேண்டுமென்றால் சட்டமன்ற உறுப்பினர் எவ்வளவுதான் திறமையாகச் செயல்பட்டாலும் ஒரு விளக்கை எரிய வைக்க வேண்டுமென்றால் ஒரு வருஷத்திற்கு தீவிர முயற்சி எடுக்க வேண்டிய நிலைதான் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கலந்து பேசி பொதுமக்களுக்குப் பயன்படுகிற தெரு விளக்குகளுக்கு இலவச மின்சாரம் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தெரு விளக்கு சரிவர எரிய வேண்டுமென்பதில் உள்ள பிரச்சினை தீர வேண்டுமென்றால் தனித் துறை தெரு விளக்குகளை நிர்வகித்தால்தான் தீரும். இந்த மாதிரிப் பிரச்சினையை உள்ளாட்சித் துறையும் சரி, மின்சார வாரியமும் சரி இரண்டும் ஒருங்கிணைந்து செயல்படுவது என்பது இனி முடியாத காரியம் என்று நினைக்கிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இலவசமாக மின்சாரத்தைத் தெரு விளக்குகளுக்கு அளிக்க வேண்டுமென்று அன்போடு பணிவோடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

கீழ் மட்டத்திலே பணியாற்றுகின்ற ஹெல்ப்பர், வயர்மென் போன்றவர்கள் சிறப்பாகப் பணிகளைச் செய்து வருகிறார்கள். மின் வாரியத்திலே மிகச் சிறப்பான நிர்வாக ரீதியான ஏற்பாடுகள் இருக்கின்றன. அதிலே சில கசப்புணர்வுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருந்தாலும் கூட இந்தத் துறை செம்மையாகச் செயல்படுவதற்குரிய ஆக்கபூர்வமான ஆலோசனைகளை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்குவதுதான் பொருத்தமாக இருக்கும். அப்படியில்லாமல் குறை சொல்வதால் நிர்வாகத்தைக் குற்றஞ்சாட்டுவதால் எந்தப் பயனும் இல்லை.

வீடுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறபோது மீட்டர்களை மின்வாரியமே சப்ளை செய்யலாம். ஆனால் எப்போது கேட்டாலும் மெட்டிரியல்ஸ் இல்லை என்ற குறைபாடுதான் இருக்கிறது. ஆகவே, எல்லா மெட்டிரியல்களும் தங்கு தடையின்றி சப்ளை செய்யப்படுவதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

எங்களுடைய திருச்செந்தூர் பகுதி விவசாயிகள் நிறைந்த பகுதி. அங்கே விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கொடுக்காமல், சிறிய சிறிய டெக்னிக்கல் காரணங்களைச் சொல்லி மின் இணைப்புக் கொடுக்காமல் இருக்கிற நிலையைத் தவிர்க்கமுடியும். அங்கே இருக்கின்ற மின்வாரியத் துறையினர் சிறப்பாகக் காரியங்களைச் செய்தாலும், அவர்களுக்கு டெக்னிக்கலாக சில இடையூறுகள் இருக்கலாம். விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதிலே

(திரு. என். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்) (1986 நவம்பர் 20

முன்னுரிமை அளிக்க வேண்டும். சிறு சிறு டெக்னிக்கல் டிபிகல் டீசைச் சொல்லி காலந் தாழ்த்தாமல் விரைவாக இணைப்புக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

(மாலை 4.10)

இதை நான் அன்பாகக் கேட்டுக்கொண்டு, இந்த மாதிரியான நல்ல பல திட்டங்களையெல்லாம் செயல்படுத்துவதற்கு இந்தத் துறைக்குச் சீரிய ஆலோசனை வழங்குகின்ற ஒரு வாய்ப்பையும், இந்தக் கருத்துக்களைச் சொல்லுகின்ற வாய்ப்பையும் கொடுத் தமைக்காக நன்றி தெரிவித்து, விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க அவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு மின் வாரியத்தினுடைய 1986–87 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை, 1985–86 ஆம் ஆண்டுக் கான துணை நிதிநிலை அறிக்கை குறித்து மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் இந்தப் பேரவைக்கு அளித்துள்ள அறிக் கைகளின்மீது இந்திய தேசீய காங்கிரஸ் கட்சியின் சார்பாக நிறைவுரையாக சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். வழக்கம் போலவே நம்முடைய மின்சாரவாரியம் மின்சாரத் துறையின் சார்பிலே முந்தைய ஆண்டுகளிலே பேரவை உறுப் பினர்கள் தெரிவித்த கருத்துக்களையும், அந்தக் கருத்துக்களின் மீது வாரியம் அல்லது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்ற விவரங்களையும் இங்கே அவைக்கு அளித்து இருக்கின்ற முயற்சியினை நான் வரவேற்கிறேன் பாராட்டுகிறேன். நம்முடைய மின் துறையைப் போலவே, தமிழக அரசிலே இருக் கின்ற ஏனைய துறைகளும் இந்த முறையைப் பின்பற்றுவார் களேயானால் இந்தப் பேரவையிலே மாண்புமிக்க உறுப்பினர்கள் சொல்லுகின்ற கருத்துக்களும், அதன்மீது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளும் பற்றி நாங்கள் புரிந்து கொள்ள, பின்னாலே சரி பார்க்க துணையாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாகவே இந்த மன்றத்திலே ஏனைய நிதிநிலை அறிக்கைகளைப் பற்றிப் பேசுவதற்கும், வாரியத்தினுடைய நிதி நிலை அறிக்கையைப் பற்றிப் பேசுவதற்கும் ஒரு வேறுபாடு இருப் பதை நாம் அறிவோம். நிதிநிலை அறிக்கை என்று சொன்னாலே நாம் அதைப் பற்றிப் பேசி ஆராய்ந்து, வாக்களித்ததற்குப் பின் னாலே நிறைவேறுகின்ற முறை இருக்கிறது. ஆனால், நானும் அறிவேன், நீங்களும் அறிவீர்கள், நம்முடைய மின் வாரியத் தினுடைய நிதிநிலை அறிக்கையின்மீது விவாதிக்கின்ற உரிமை மட்டுமே நமக்கு இருக்கிறதே தவிர வாக்களிக்கின்ற உரிமை



1986 நவம்பர் 20] [திரு. என். எஸ். வி. சித்தன்]

நமக்குக் கிடையாது என்பதை நாம் நன்றாக அறிவோம். அதைப் போலவே, வாரியத்தினுடைய தினசரி வேலைகளிலே தலையிட அல்லது ஈடுபட அரசுக்குக்கூட சட்டத்திலே அதிகாரம் இல்லை என்பதையும் நாம் நன்றாக அறிவோம்.

என்றாலும்கூட, மின்சாரத்தைப் பொறுத்தவரையில், எனக்கு முன்னாலே இந்த அவையிலே பேசிய மாண்புமிகு உறுப் பினர்கள் தெரிவித்த கருத்துக்களை ஒட்டி, மின்சாரம் என்பது மிகப் பெரும்பான்மையான மக்களாலே ஒரு வினாடிகூட தவிர்க்க முடியாத ஒரு இன்றியமையாத பொருளாக இன்றைக்கு வளர்ந்து வந்திருக்கிறது இந்த விஞ்ஞான காலத்திலே. எனவே, அங்கிங்கெனாப் பரம்பொருளாக, நாம் விலக்கிக் கொள்ள முடியாத ஒரு சக்தியாக வளர்ந்து விரிந்து பெருகி வந்திருக்கிறது. வருகின்ற காலங்களில் இதனுடைய சக்தி இன்னும் அதிகமாக இருக்கும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். 1960–61 ஆம் ஆண்டுகளிலே மின்சாரம் உபயோகித்தவர்களை ஒரு பங்காக எடுத்துக் கொள்வோமே யானால், இப்போது 1983-84 ஆம் ஆண்டிலே உபயோகப்படுத்துபவர்களினுடைய எண்ணிக்கை ஐந்து மடங்காகப் பெருகி இருக்கிறது. வருகின்ற காலங்களிலே இது இன்னும் கொஞ்சம் அதிகமாக இந்த விகிதாச்சாரம் கூடு வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதிலேகூட நம்முடைய மின்சார வாரியம் விநியோகிக்கின்ற மின்சாரத்திலே 40 சத விகிதம் தான் தொழில்களுக்கும், இன்னும் சொல்லப்போனால் 25 சதவிகிதம் மட்டுமே விவசாயத் துறைக்கும் பயன்படுத்தப் படுகிறது. அந்த 40 சதவிகிதம் தொழில்களுக்குக் கொடுப்பதிலே சற்றேறத்தாழ 60 சதவிகிதம் உரத் தொழிற்சாலை, இரசாயனம் ஜவுளி, நூல், சிமெண்ட், அலுமினியம் போன்ற ஆலைக ளெல்லாம் இந்த 60 சதவிகிதத்தைப் பெற்றுக்கொள்கின்றன.

1960–61 ஆம் ஆண்டை எண்ணிப் பார்க்கின்ற நேரத்திலே வாரியம் 24 மில்லியன் யூனிட்டுகளைத் தயாரித்ததாகவும், 1983–84 ஆம் ஆண்டில் 3,454 மில்லியன் யூனிட்டுகளை தயாரித்த தாகவும் இங்கே இருக்கின்ற குறிப்புகள் நமக்கு விளக்குகின்றன. தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்திலே புனல் மின்சாரத்தைப் பொறுத்த வரையில் ஓரளவுக்கு நாம் தன்னிறைவு அடைந்து விட்டோம். எந்த அளவிற்குப் பெரிய திட்டங்களை எடுத்துக் கொள்ள முடியுமோ அந்தத் திட்டங்களை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, தமிழகத்தினுடைய மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு ஓரளவு அனல் மின் நிலையங்களும், அணு மின் நிலையங்களும் அல்லது வேறுவேறு சக்திகளிடமிருந்து மின்சாரத்தைப் பெறுவதற்கான வாய்ப்புக்களை ஆராய வேண்டிய நிலையிலே வாரியமும் நாமும் இருக்கிறோம்.

அதிலே நமக்குக் கிடைத்திருக்கின்ற செய்தி இந்தியப் பேரரசைப் பொறுத்த வரையில் 2,000 மெகாவாட் திறனுள்ள ஒரு அணு மின் நிலையத்தைத் தென்னகத்திலே, தென்னிந்யாவிலே அமைக்க இருப்பதாக செய்திகள் வந்திருக்கின்றன. பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற நாங்கள் இந்த இரண்டாயிரம் மெகாவாட் அணு மின் நிலையத்தைத் தமிழகத்திற்கு, கூடன்குளத்திற்கு கொடுக்க வேண்டுமென்று கேட்பதிலே இந்த அரசோடு சேர்ந்து குரல் கொடுக்க, முயற்சி செய்ய, எடுத்துக்கொண்டிருக்கின்ற முயற்சிகளுக்கு ஆதரவாக இருக்க நாங்கள் என்றைக்கும் தயாராக இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசைப் பொறுத்தவரையிலே இந்த விவாதத்திலே பேசுகின்ற பொழுது ஆட்சிக் கட்சியிலே இருப்பவர்கள், இந்த வரிசையிலே இருக்கின்றவர்கள்கூட சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். தமிழகத்திலே மத்திய அரசு தொடங்கியிருக்கின்ற அனல் மின் நிலையங்களிலேயிருந்து தமிழக அரசுக்கு அதிகமான பங்கு மின்சாரம் கொடுக்க வேண்டுமென்ற கருத்துக்களை இங்கே வெளியிட்டார்கள்.

சென்ட்ரல் பவர் ஸ்டேஷன் பார்முலாபடி, மத்திய அரசு ஒரு மாநிலத்திலே அணு மின் நிலையத்தில் மின் உற்பத்தி தொடங்கினால், அதன் மொத்த உற்பத்தியிலே 10 சதவிகிதத்தை எந்த மாநிலத்திலே அந்த மின்சார நிலையம் இருக்கிறதோ, அந்த மாநிலத்திற்கும், 15 சதவிகிதத்தை மத்திய அரசு இருப்புக்கு வைத்துக் கொள்வதற்கும் எஞ்சியிருக்கும் 75 சத விகிதம் மின்சாரத்தை, எந்த மாநிலத்தில் மின் நிலையம் இருக்கிறதோ அந்த மாநிலம் தவிர்த்த ஏனைய மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கும்தான் விதிமுறைகள் இருக்கின்றன. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரை மின்சாரத் தேவை அதிகமாக இருக்கிற காரணத்தாலே, மின் உற்பத்தி குறைவாக இருக்கிற காரணத்தாலே, நம்முடைய வேண்டுகோளுக்கிணங்க கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் 1980-லிருந்து, 1985 வரை உற்பத்தியான முழு மின்சாரமும் தமிழகத்திற்குக் கிடைத்திருக்கிறது. அதேபோல், இரண்டாவது யூனிட்டில் உற்பத்தியாகின்ற மின்சாரத்திலே 50 சத விகிதம் தமிழகத்திற்குக் கிடைத்திருக்கிறது என்பதைப் பார்க்கிறபொழுது, மத்திய அரசாங்கம் தமிழகத்தினுடைய, தமிழக மக்களுடைய மின்சாரத் தேவையை எந்த அளவுக்கு மதிக்கிறது, உதவிக்கரம் நீட்டுகிறது என்பதை நம்மாலே புரிந்துகொள்ள முடிகிறது.



அது மட்டுமல்லாமல், வட சென்னையிலே சற்றேறக்குறைய 630 மெகாவாட் திறனுள்ள ஒரு அனல் மின் நிலையத்தை அமைப்பதற்கு, 180 மில்லியன் டாலர் ஆசிய நாடுகளுடைய முன்னேற்ற வங்கியின் மூலமாகப் பெறுவதற்கு இந்த அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது என்ற குறிப்பினை மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் கேள்விப்படுகிறேன், அதற்கான ஒப்பந்தம் பூர்த்தியாகிவிட்டது; அந்தத் துறையிலெ மத்திய அரசாங்கம் மிகுந்த அக்கறையும் கவனமும் எடுத்துக் கொண்டிருக்கிறது என்று. ஆகவே, அமைச்சர் அவர்கள் நிச்சயமாக மத்திய அரசுக்குப் பாராட்டைத் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

என்ன காரணத்தினாலோ, ஆசிய வங்கி, உலக வங்கி என்று சொன்னாலே சிலருக்கு அலர்ஜியாக இருக்கிறது. இதிலே கூட என்ன, என்ன கட்டுப்பாடுகளுக்கு இணங்கி, என்ன, என்ன வரையறைகளுக்கு உட்பட்டு, நீங்கள் வாங்க இருக்கிறீர்கள் என்று நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் திரு. சுப்பராயன் காலையில் கூடக் கேட்டார். இதிலே என்ன கட்டுப்பாடுகளை விதித்துவிட முடியும்? அரசாங்கத்திலேயிருக்கிற நிதி, மத்திய அரசாங்க நிதி, எந்த, எந்த இனங்களிலிருந்து வருகின்றதோ, அந்த, அந்த இனங்களிலே பெற்று, தமிழகத்தை மின்சாரத்திலே பட்டினி போடாத அளவு மின்சாரத்தை உற்பத்தி செய்வதிலே நாம் அரசுக்கு முழுமையான ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். அந்த முறையில், இந்தியப் பேரரசு தமிழக அரசுக்குக் கொடுக்கின்ற ஊக்கத்தைப் பாராட்ட வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய இந்த மின் வாரிய அறிக்கையிலும் சரி, நிதிநிலை அறிக்கையிலும் சரி, பல்வேறு புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், எனக்கு இருக்கிற குறை எல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையில் பல இனங்கள் பூர்த்தி செய்யப்படாமல் விட்டு விடப்பட்டிருக்கின்றன. அதற்கு என்ன காரணம் என்று எனக்குப் புரியவில்லை. ஒருவேளை போதுமான ஆட்கள் இல்லையா ? விவரங்கள் சரியாகக் கிடைக்கவில்லையா ? பெரும்பாலான விவரங்களிலே வெறும் புள்ளியை வைத்து மட்டும் தொகுத்து இருக்கிறார்கள். என்ன காரணம் என்று புரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள் என்று நினைக்கிறேன்.

தமிழகத்திற்கு இந்த 1986 90ஆம் ஆண்டுகளிலே மிக அதிகமான மின்சாரத் தேவையிருக்கிற இந்த நேரத்திலே அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கும் திட்டங்களைப் பற்றியெல்லாம் இங்கே

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய குறிப்பிலே விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ரிப்போர்ட் ஆப் தி டாஸ்க் போர்ஸ் ஆன் ஃப்யூல் அன்ட் பவர்—படி பல்வேறு இனங்களிலே இங்கே மின்சாரம் உற்பத்தி செய்து பெறுவதற்கான வாய்ப்புகள் இருந்தாலும், வசதிகள் இருந்தாலும், அதற்கான முயற்சிகள் செய்யப்படுகிறதா, செய்யப்படவில்லையா என்பதை அமைச்சருடைய குறிப்பிலேயிருந்து என்னாலே கண்டு கொள்ள முடியவில்லை. அந்த ரிப்போர்ட்டிலே பைக்காராவைப் பொறுத்தவரையிலே, தற்போது நாம் பெறுவது 70 மெகாவாட் மின்சாரம் என்றும் மோயாரிலேயிருந்து 36 மெகாவாட் பெறுகிறோம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. எதிர்காலத்திலே இந்த இரண்டு மின் திட்டங்களிலேயிருந்து—அதாவது, பைகாரா மற்றும் மோயாரிலிருந்து—490 மெகாவாட் பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்று அந்த அறிக்கை கூறுகிறது. அதைப் போலவே, குந்தாவிலே 1 முதல் 5 யூனிட்டுகளிலே 425 மெகாவாட் மின்சாரம் தற்போது கிடைத்துக் கொண்டிருக்கிறது. குந்தாவிலே இன்னும் 315 மெகாவாட் மின்சாரம் பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்று அந்த அறிக்கை கூறுகிறது. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையிலே 20 மெகாவாட் பெறுவதற்கான நடவடிக்கை பற்றிய குறிப்புகள்தான் இருக்கின்றன. அவற்றைப் போலவே, பெரியாற்றிலே இருந்து தற்போது 140 மெகாவாட் மின்சாரம் நமக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. சுருளியாறிலிருந்து 35 மெகாவாட் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று அந்த அறிக்கை கூறுகிறது. அதைப் பற்றிய விவரத்தை என்னாலே இதிலேயிருந்து கண்டு கொள்ள முடியவில்லை. இன்னும் சொல்லப் போனால், காவிரி ஆற்றின் குறுக்கே மேட்டூரிலே தற்போது 240 மெகாவாட் மின்சாரத்தை நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். ஒகேனக்கல் இங்கே செயல்படுமானால் 650 மெகாவாட் பெறுகின்ற அளவுக்குத் தமிழகம் பயன்பெறும் என்ற குறிப்பினையும் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அவற்றைப் போலவே, பரம்பிக்குளம் ஆளியாறு, சோலையாறு திட்டங்களிலிருந்து 185 மெகாவாட் மின்சாரம் நமக்குக் கிடைத்துக்கொண்டிருக்கிறது காடம்பாறை மின்சார நிலையத்தை மட்டும் முறையாக செயல் படுத்துவோமானால், 495 மெகாவாட் மின்சாரம் கிடைப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற குறிப்பிலிருந்து 20 மெகாவாட் பெறுவதற்கான வாய்ப்புதான் இருப்பதாகத் தெரிகிறது. அதைப்போன்று பாபாநாசம் மின் நிலையத்திலிருந்து 25 மெகாவாட் பெறுவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் மேல் தாமிரவருணியிலிருந்து 275 மெகாவாட் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்றும் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். கோதையாறு மின் திட்டத்தில் தற்போது 100





மெகாவாட் கிடைக்கிறது. பரளியாற்றுத் திட்டத்தில் 35 மெகாவாட்டும் மணிமுத்தாறு திட்டத்தில் 550 மெகாவாட்டும் பெற வாய்ப்பு இருக்கிறது என்று அந்த அறிக்கை தெரிவிக்கிறது. அதே நேரத்தில் என்ன காரணத்தினாலோ அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையில் அந்த விவரங்கள் கிடைக்காமலோ அல்லது தெரியாமலோ விடப்பட்டிருக்கின்றன. அனைத்து நிலைகளிலிருந்தும் பெற முடிகின்ற மின்சாரத்தை முழுமையாகப் பெற நம்முடைய அரசு முன் முயற்சி மேற்கொள்ள வேண்டும். அந்த வகையிலே என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற விவரங்களை இந்த அவைக்குக் கொடுத்தால் அது எங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[மாலை 4—20]

இந்த மன்றத்திலே நேற்றும் சரி, இன்றும் சரி, மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லும்போது " லைன் லாஸ் " என்று சொல்லக்கூடிய மின்சார இழப்பு 18 சதவீதத்திற்கு மேல் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இது கிட்டத்தட்ட மொத்த உற்பத்தியில் ஐந்தில் ஒரு பாகமாக இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும். ஒருவேளை அவர்கள் சொல்வார்கள்; மற்ற மாநிலங்களைப் பார்க்கும்போது தமிழ்நாட்டில்தான் இந்த லைன் லாஸ் குறைவாக இருக்கிறது என்று. இந்தியாவின் பிற மாநிலங்களில் இந்த மின் இழப்பு அதிகமாக இருந்தாலும் மேலை நாடுகளில் 8 சதவீதம் தான் மின் இழப்பு வருகிறது என்ற குறிப்புகள் நமக்கு கிடைத்திருக்கின்றன. அப்படி இருக்கும்போது என்ன காரணத்தினாலோ தமிழ்நாட்டில் லைன் லாஸ் 18 சதவீதத்திற்கு மேல் வருகிறது. எனக்கு இதிலே ஒரு ஐயம் ஏற்படுகிறது. மின் இழப்புக்கு லைன் லாஸ் மட்டும் காரணம் அல்ல; மின் திருட்டும் இதிலே அடங்கும்; மின் திருட்டை முறையாகக் கண்டுபிடிக்காததால் இவ்வளவு அதிகமாக இழப்பு வருகிறதோ என்ற ஐயம் எனக்கு எழுகிறது.

இம்மாதிரியான மின் திருட்டுக்களைக் கண்டுபிடிக்க ஐ.ஜி. அலுவலகத்தில் இருக்கிற அதிகாரிகளும், துணை அதிகாரிகளும் தீவிரமான நடவடிக்கை எடுத்து சற்றொப்ப 500-க்கு மேற்பட்ட வழக்குகளைக் கண்டு பிடித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனாலும் இந்த மின் திருட்டைப் பொறுத்தவரையில் இன்னும் கடுமையான நடவடிக்கை எடுத்து, தண்டனையையும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1986 நவம்பர் 20

உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், சில ஆண்டுகளுக்கு முன்னால் மின்சார வாரியத்தின் தலைவராக இருந்த திரு. அப்பாத்துரை அவர்கள் இது சம்பந்தமாக இந்த அரசுக்கும், வாரியத்திற்கும் ஒரு குறிப்பு கொடுத்திருப்பதாகக் கூறுகிறார்கள். மின் விநியோகத்தை பல பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு, அந்தந்த பகுதியிலே பயன்படுத்துகின்ற மின்சாரத்தைக் கணக்கிட ஒவ்வொரு பகுதியிலும் ஒரு பெரிய மீட்டரைப் பொருத்தி வைத்தால் எந்தப் பகுதியில் இழப்பு அதிகமாக ஏற்படுகிறது என்பதைக் கண்டுபிடிக்கலாம்; மின் திருட்டை எளிதில் கண்டுபிடித்துவிடலாம் என்று குறிப்பிலே தெரிவித்திருப்பதாக அறிகிறேன். அதைப் பரிசீலனை செய்து, செயல்படுத்தினால் மின்சாரம் திருடுபவர்களைக் கண்டுபிடித்து, கடுமையான தண்டனை வழங்க ஏதுவாக இருக்கும். அரசு அதை பரிசீலனை செய்ய வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த விளக்கம் இருந்தால் அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்; மாண்புமிகு உறுப்பினர்கள் ஆத்திரப்படக் கூடாது. நான் உதாரணத்திற்காகத்தான் ஒரு இடத்தைச் சொல்கிறேன். அதே மாதிரி பல இடங்களில் இருக்கலாம். கோவையில் பல ஆலைகள் இருக்கின்றன. அங்கே சில ஆலைகளில் மின்சாரத்தை மீட்டர் மூலமாக இல்லாமல் நேரடியாகப் பெற்றுவருவதாகச் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை பல இடங்களில் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமானால், அந்தத் திருட்டுக்களை முறையாகக் கண்டுபிடித்து, மின் திருட்டு செய்தவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். சக்தி பெற்றவர்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதாக இருந்தால் அவர்கள்மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையிலே இந்த ஆண்டு 40,000 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க இலக்கு நிர்ணயித்திருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னும் எத்தனையோ இலட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதுபற்றிய புள்ளி விவரங்களைப் பார்க்க முடியவில்லை. ஆனால் என்னுடைய கணிப்புப்படி தமிழ்நாட்டில் இன்னும் 3.5 இலட்சம் விவசாயப் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படாமல் இருக்கிறது. பக்கத்திலே இருக்கிற ஆந்திரப் பிரதேசத்தைப்போல் அல்லாமல் இங்கே நிலக்கரியைக் கொண்டுதான் அதிகமான அளவுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டி



1986 நவம்பர் 20] [திரு. என். எஸ். வி. சித்தன்]

யிருக்கிறது. மின்சாரம் உற்பத்தியாகும் அளவைப் பார்த்தால் இந்த நூற்றாண்டுக்குள் கூட 3.5 இலட்சம் பம்பு செட்டுகளுக்கும் மின் இணைப்புக் கொடுக்க முடியுமா, அந்த இலக்கை எட்டிப் பிடிக்க முடியுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. அதற்கு என்ன திட்டம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

'' விவசாயி சேற்றிலே காலை வைத்தால்தான் நாம் சோற்றிலே கை வைக்க முடியும் '' என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் 40,000 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படும் என்ற இலக்கு போதாது; இந்த இலக்கை உயர்த்தி இன்னும் அதிகமான அளவுக்கு மின் இணைப்பு கொடுக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் மின்வாரியத்தினுடைய செயல்பாட்டுத்திறன் மன நிறைவு அளிப்பதாக இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மின்சார உற்பத்தி, மின்சாரத்தின் தேவை, மின்சார விநியோகம் ஆகிய மூன்று முறைகளிலும் ஒரு தொலைநோக்குப் பார்வை இருந்திருக்குமானால் வருங்காலத்தில் எந்த எந்த திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்படும், இன்னின்ன முயற்சிக்குப் பின்னால் இவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்ற விவரங்களை முழுமையாகக் கொடுத்திருக்க முடியும். என்ன காரணத்தாலோ முழுமையாக இல்லை என்ற உணர்வைத்தான் இந்த அறிக்கையைப் பார்க்கிற நேரத்திலே என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. மாநிலத்திலே இருக்கிற மின்சாரத்தினுடைய தேவைக்கும் உற்பத்தியாகிற மின்சாரத்திற்கும் இடையே பெருத்த அளவில் இடைவெளி இருக்கிறது. பல நேரங்களிலே அண்டை மாநிலத்திலேயிருந்து, உதாரணமாக கேரளாவிலேயிருந்து கூட, சிமெண்ட் அல்லது அரிசி கொடுத்து பண்டமாற்று முறையிலேதான் நம்மால் மின்சாரத்தை பெற்றுக்கொள்ள முடிகிறது. ஆக, மிக அதிகமான விலை கொடுத்து மின்சாரத்தைப பெறுவதால் தொழில் வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம் போன்ற பணிகளுக்குத் தடையாக இருக்கிறது. இது போன்ற பணிகளுக்கு முதுகெலும்பு போன்ற மின்சாரம் தங்கு தடையின்றி நமக்கு கிடைக்கவில்லை என்று இன்னொரு குறைபாடும் இருக்கிறது.

பல இடங்களிலே திடீர் திடீர் என்று மின்சாரத்திற்குத் தடை ஏற்படுகிறது. நான் கூட அதிகாரிகளைப் பார்த்துக் கேட்டேன்; ஏன் இப்படி அடிக்கடி திடீர் திடீர் என்று நிறுத்தி விடுகிறீர்கள் என்று கேட்டால், ஏன் சார் 24 மணி நேரமும் நாங்கள் மின்சாரம் கொடுக்கிறோமே அதற்கு பாராட்டக் கூடாதா ? ஏதோ 5 நிமிடம் 10 நிமிடம் நின்றுவிட்டால் அதைப்பெரிதாக எடுத்துக்

கொண்டு இப்படி குறை கூறுகிறீர்களே என்று சொன்னார்கள். நம்மாலே 2 வினாடிகள் கூட மின்சாரம் இல்லாமல் இருக்க முடியாத அளவுக்கு அந்த நிலை நாட்டிலே வளர்ந்திருக்கிறது. நான் கூட கேள்விப்பட்டேன். மேலை நாடுகளிலே இப்படிப் பட்ட மின்சாரத் தடை என்பதே கிடையாது என்று சொல்லுகிறார்கள். எப்படி சில நாடுகளிலே மழையே பார்க்காத சிறுவர்கள் இருப்பதாகச் சொல்லுகிறார்களோ, அதைப்போலவே சில நாடுகளிலே மின்சாரத் தடை என்பதே பலருக்குத் தெரியாதாம். அந்த அளவுக்கு அவர்களுடைய எஃபிஷியன்சி, திறமை இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அந்த அளவிற்கு இல்லாவிட்டாலும்கூட, இப்படி திடீர் திடீர் என்று ஏற்படும் மின்சாரத் தடங்கலையாவது அறவே நிறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சிறு தொழிற்சாலைகளின் வளர்ச்சி ஒரு புறம் இருக்க, கன்டினியூவஸ் பிராஸெஸ் என்று சொல்லுகிறார்களே அப்படி தொடர்ச்சியாக 24 மணி நேரமும் வேலை செய்கிற ஆலைகளிலே திடீர் என்று மின்சாரம் நிறுத்தப்படுமானால், அதனுடைய உற்பத்திச் செலவு அதிகமாக ஆகிறது, பொருள் விரயம் ஆகிறது. ஆகவே, அவைகள் கூடுமான அளவுக்கு தவிர்க்கப்பட வேண்டும். எச். டி. பவர் என்று சொல்லப்படுகிற உயர் அழுத்த மின்சாரத்தைக் கூட சில நேரங்களிலே நிறுத்தி விடுகிறார்கள். நாங்கள் கேட்டோமேயானால் பசுமலையிலே நிறுத்தியிருக்கிறார்கள், ஈரோட்டிலே நிறுத்தியிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அது எவ்வளவு தூரம் உண்மை என்று தெரியாது. ஆனால், 100-க்கு 100 சதவீதம் உயர் அழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்தும் இடங்களில் தடங்கல் ஏற்படுத்த வேண்டும் என்றால், அந்த நிலை கட்டாயமாக ஏற்பட்டால், 10 நிமிடம் 15 நிமிடங்களுக்கு முன்பாக அறிவிப்புக் கொடுத்துவிட்டு, அதன் பிறகுதான் மின்சாரத் தடங்கலை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி மின்சார வெட்டு என்று சொல்லுவது ஒரு புறம் இருக்க, அதிகாரபூர்வமாக அல்லாமல் மின்சாரத்தை நிறுத்தக் கூடிய நிலைமை, அதாவது மின் தடங்கல் என்று சொல்லுவார்களே—இப்போது தடங்கலுக்கு வருந்துகிறோம் என்று அடிக்கடி வானொலியிலும் டி.வி.யிலும் சொல்வது போல—மின் தடங்கல் என்கிற லோடு ஷெட்டிங் இல்லாத நாள் உண்டா என்று கேட்கிற அளவுக்கு இன்றையதினம் தமிழகத்திலே நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை தொடருமேயானால், தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியும், பொருளாதார முன்னேற்றமும் எப்படி ஏற்படும் என்ற வினாவை என்னால் எழுப்பாமல் இருக்க முடியவில்லை.





சிறு தொழில்களை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காக ஆங்காங்கே தொழிற் கூடங்களை, தொழிற் பட்டறைகளை காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயிருந்து நாம் தொடங்கி வருகிறோம். சென்னையைப் பொறுத்த வரையில் அம்பத்தூர், கிண்டி, ஒசூர் போன்ற இடங்களில் எல்லாம் சிறு தொழிற் கூடங்களுக்கான அமைப்புகளை ஏற்பாடு செய்து, அதன் மூலம் தொழில் முனைவர்களை அழைத்து சிறு தொழில்களை துவங்கச் செய்ய வேண்டும் என்று நாம் பணிகளை தொடங்கி இருக்கிறோம். ஆனால், சிறு தொழில் முனைவர்களுக்கு எவ்வளவோ பிரச்னைகள். நிர்வாகச் செலவு, கச்சாப் பொருள்கள் கிடைக்கவில்லை மார்க்கெட், சந்தையில் விலை போவது போன்ற பிரச்னைகள் எல்லாம் ஒரு புறம் இருக்க, அவர்கள் பணத்திற்காக அலைவது ஒரு புறம் இருக்க, இந்த சிறு தொழில் முனைவர்கள் மின்சாரத்தைப் பெறுவதற்காக படுகின்ற பாடு தான் மிகக் கஷ்டமாக இருக்கிறது.

ஒரு அறிக்கையை சில நாட்களுக்கு முன்னால்கூட தமிழ்நாடு ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ் அசோசியேஷனிலேயிருந்து ஒரு குறிப்பு கொடுத்திருந்தார்கள். நான் கூட அதைப் பார்த்தேன். சற்றேறக்குறைய 20 சதவீதம் என்டர் பிரனர்ஸ், சிறு தொழில் முனைவர்கள் இங்கே தொழில் தொடங்க விரும்பியவர்கள், இங்கே சரியாக மின்சாரம் கிடைக்காத காரணத்தாலே மூடிவிட்டு சென்று விட்டார்கள் என்று அதிலே சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கருத்து, இந்தப் புள்ளி விவரம் உண்மையாக இருக்கக்கூடாது என்று ஆதங்கப்படுகிறேன். அப்படிப்பட்ட நிலை உருவாவது அது சிறு தொழில் வளர்ச்சியை பாதிப்பது என்பது தமிழகத்திற்கு மட்டும் அல்ல நாட்டினுடைய தொழில் வளர்ச்சிக்கே முதுகெலும்பான பிரச்னையாக இருக்கிற காரணத்தாலே, மின்சாரம் தொழில்களுக்கு தங்கு தடையின்றி கிடைக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதே போல தமிழகத்தில் தொழில் அமைதி நிலவிய போதிலும் இன்றியமையாத மின்சாரத்திற்குத் தட்டுப்பாடு இருக்கக் கூடிய நிலையில் தொழில் தொடங்க யாரும் புதியதாக முன் வருவார்களா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். கர்நாடக மாநிலத்திலேயிருந்தும், ஆந்திர மாநிலத்திலேயிருந்தும், மற்ற வெளி மாநிலங்களிலேயிருந்தும், வெளி நாடுகளிலேயிருந்தும் வந்தவர்கள், தமிழகத்தில் மின்சாரப் பற்றாக்குறை, மின் தடங்கல் இருக்கிற காரணத்தாலே புல புதிய தொழில்களை, தமிழகத்திற்கே முன் மாதிரியாக இருக்கக்கூடிய தொழில்களை, வேலை வாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட தொழில்களை, துவக்காமலேயே, தமிழகத்தை விட்டு வேறு மாநிலத்திற்கு போயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சாத்தியக்கூறுகள் இருக்கின்றன

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1986 நவம்பர் 20

என்று சொல்லுகிறபோது உள்ளபடியே வருத்தமாக இருக்கிறது
எனவே, வருகிற காலங்களிலே அதிகமான அளவில் மின்சாரத்தை
தருவதிலே அதிகமான அக்கறை மின் வாரியம் எடுத்துக்கொள்ள
வேண்டும். அதனால்தானோ என்னவோ நம்முடைய தொழில்
துறை அமைச்சர் அவர்கள் கூட ஒரு சில நாட்களுக்கு முன்பு
தமிழகத்திலே எலக்ட்ரானிக் தொழிற்சாலையைத் தொடங்க
நல்ல வாய்ப்பு இருக்கிறது என்று ஒரு அறிக்கை கொடுத்தார்கள்,
மின்சாரத் தடை இப்படி அதிகமாக உள்ளதால்தான், இந்தத்
துறையிலேயாவது கவனத்தைச் செலுத்தலாம் என்று அப்படிச்
சொன்னார்களோ என்னவோ தெரியவில்லை. அதனாலே அ
சைப் பொறுத்த வரையில் இந்தத் துறையில் மிக மிக அக்கறை
எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளைப் பொறுத்த வரையில் நான் முன்னமேயே
சொன்னதைப் போல அதிகமான அளவுக்கு வருகிற காலங்களி
லாவது அவர்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதற்கான நட
வடிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

[மாலை 4-30]

அடுத்தபடியாக ஒரு முக்கியமான ஆலோசனையை இந்த
அரசுக்கு நான் கூற விரும்புகிறேன். மின் வாரியத்
திலே செயல்பாட்டுத் திறமை குறித்து ஆராயவும்,
தேவை, உற்பத்திப் பெருக்கம், சீரான விநியோகம்,
நேர்மையான நிர்வாகம் ஆகியவற்றை சரி செய்வதற்கும் ஒரு
முத்தரப்புக் குழுவை இந்த அரசு அமைக்க வேண்டுமென்று
ஆலோசனையாக கூற விரும்புகிறேன். இந்தக் குழுவிலே மின்
வியல் தொழில் நுட்ப வல்லுநர் அல்லது மின் வாரியத் தலைவர்,
தொழிலாளர்களுடைய பிரதிநிதி ஒருவர், இந்த இரண்டு
பேர்களைத் தவிர மூன்றாவது உறுப்பினராக வெளி மாநிலத்
தைச் சேர்ந்தவராக மின் வாரியத்திலே வல்லுநராக இருப்பவர்
ஒருவரும் இருந்து சகல அம்சங்களையும், செயல்பாட்டு
முறைகளையும் ஆராய்ந்து அறிக்கை கொடுத்து, இங்கே
என்ன குறைபாடு சுட்டிக்காட்டப்படுகிறதோ அதைக் களை
வதை கட்டாயக் கடமையாக அரசு மேற்கொள்ளவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். இது சம்பந்தமாக மத்திய தொழிற்
சங்கங்களும், அகில இந்திய உற்பத்தியாளர் சங்கமும் விடுத்
துள்ள கோரிக்கைகளை ஏற்று மத்திய அரசு இதன் தொடர்பாக
தமிழக அரசுக்கு தெரிவித்து இருப்பதாக எனக்கு செய்திகள்
கிடைத்திருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் வாரிய பட்ஜெட்
விவாதங்கள் போது பல்வேறு கருத்துக்கள் இங்கே சொல்லப்
படுகின்றன. மின் வெட்டைப் பொறுத்தவரையில் நான்
பல்லாண்டுகளாகப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். தமிழகத்



1986 நவம்பர் 20] [திரு. என். எஸ். வி. சித்தன்]

திற்கு நம்முடைய நிதிநிலை அறிக்கை மார்ச், ஏப்ரல்
மாதத்தில் முடிந்ததற்குப் பிறகு மின் வெட்டு என்ற அறிவிப்பு
வரும். அந்த அறிவிப்பை யார் செய்வார்கள் என்றால் மின்
வாரியத் தலைவர் அல்லது பொதுப் பணித்துறை பொறுப்
பேற்றுக் கொண்டிருக்கிற செயலாளர் சொல்வார்.
ஆனால் மின்வெட்டு தளர்வு என்கிற போது மின்சாரத் துறை
அமைச்சர் அவர்கள் வந்து விடுவார்கள். எனக்கு கொஞ்சம்
பரிதாபமாக இருக்கிறது. மின்வெட்டு என்று சொல்வதற்கு
அதிகாரிகள் வருகிறார்கள். மின் வெட்டு தளர்வு என்று சொல்ல
நல்ல செய்தியைச் சொல்வதற்கு அமைச்சர் அவர்கள் வருகிறார்
கள் என்பதைப் பார்க்கிற போது கொஞ்சம் வேடிக்கையாகக்
கூட இருக்கிறது.

அதைப் போல மின் உற்பத்தியைப் பொறுத்தவரையிலும்,
பிளான்ட் லோட் எவ்வளவு ? நிர்ணயிக்கப்பட்ட திறனளவு
வ்வளவு என்று பார்த்தால் முழுமையான அளவை நாம்
ய்தவே இல்லை. ஆடிட்டர் - ஜெனரல் அண்ட் காம்ப்ட்ரோலர்
ப்போர்ட்டிலும் தெளிவாக இது குறித்து சொல்லப்பட்டிருக்
றது. பின்னாலே அதற்கு நான் வருகிறேன். மின் உற்பத்தித்
றன் அதிகரித்தால்தான் முழு மின் உற்பத்தி அளவை அடைய
டியும். அடுத்த சீர்கேடு மின் இழப்பு. லைன் லாஸ் பொறுத்த
ரையிலும் ஏற்கனவே சில கருத்துக்களைச் சொல்லி
ருக்கிறேன். இந்த லைன் லாசை குறைப்பதற்கான முயற்சி
ளை அரசும், வாரியமும் எடுக்க வேண்டுமென்று மீண்டும்
லியுறுத்த விரும்புகிறேன். ஒரு சதவீதம் மின் இழப்பை சரி
செய்தால் வாரியத்திற்கு ஒரு கோடி ரூபாய் மிச்சமாகும்.
ஆகவே சற்றேறக்குறைய 10 சதவீதத்தை நாம் மிச்சப்படுத்தி
னால் அதன் மூலமாக விழுமிய பலனை வாரியமும், தமிழக அரசும்,
மக்களும் அடையக் கூடும் என்று சொல்ல விரும்புகிறேன்.

அதைப் போல திட்டமிடுதலுக்கும் அதை நிறைவேற்றுதலுக்கு
மிடையே நிரம்ப கால வேறுபாடு இருக்கிற காரணத்தால்
முன்னாலே போடுகிற திட்டம் அதிக செலவில் நிறைவேற்றப்
பட வேண்டியிருக்கிறது. உதாரணமாக காடம்பாறை திட்டம்
கூட 35 கோடி ரூபாயில் போட்டு பின்னாலே பல கோடி
ரூபாய் உயர்ந்திருக்கிறது. திட்டமிடுதலிலும்,
அதை நிறைவேற்றுவதிலும் ஒரு தொடர்பான முறையான
இணைப்பு இல்லாத காரணத்தால்தான் செலவு அதிகமாகிறது
என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1986 நவம்பர் 20

அடுத்து மின் உற்பத்திப் பெருக்கத்திற்கு பல பெரிய
தொழில் நிறுவனங்கள் கூட்டு சேர்ந்து தனியார் துறை
யிலும், கூட்டுத் துறையிலும் மின் உற்பத்தி செய்து, தேவைக்குப்
போக மீதம் உள்ள ஒரு பகுதியை வாரியத்திற்கு கொடுத்து
விட ஒப்புக்கொண்டு பல ஆண்டுகள் ஆகின்றன. தமிழகத்
தைப் பொறுத்த வரையில் பெருந்தலைவர் காமராஜர்
அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த அந்தக்
காலத்தில், இன்றைக்கு இந்தியத் திருநாட்டின் துணை ஜனாதி
பதியாக இருந்து வருகிற மாண்புமிகு ஆர். வெங்கட்ராமன்
அவர்கள் தமிழகத்தின் தொழில் அமைச்சராக இருந்த
காலத்தில் இதுபற்றி அவர்கள் ஆராய்ந்து, அதிலே 'பீசிபிளிட்டி
ரிப்போர்ட்' கொடுக்க வேண்டுமென்று சொல்லி, மறைந்த
தொழில் மேதை திரு. ஏ. இராமசாமி முதலியார் அவர்கள்
தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டதாகவும், அந்தக்
குழு மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரையிலும் ஒரு அறிக்கை
கொடுத்ததாகவும் எனக்கு தெரிய வருகிறது. இந்த அறிக்
கையை இந்தத் துறைக்கு புதியதாக பொறுப்பேற்றுக் கொண்
டிருக்கிற அமைச்சர் அவர்கள் எடுத்து தூசு தட்டி பார்த்து
செயல் படுத்துவார்களானால் பயனுள்ளதாக இருக்கும்.

இந்தத் துறையில் நம்முடைய அமைச்சர் அவர்கள் என்ன
சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா? நான் சொல்கிறேன். 20
ஆண்டுகளுக்கு முன்னாலே இந்தக் கருத்து இருந்தது; குழு
அமைக்கப்பட்டது; அறிக்கை கொடுத்திருக்கிறார்கள்; அரசு
அதை ஏற்றுக் கொள்ளவில்லையென்று சொல்கிறேன். ஆனால்
அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற இந்த அறிக்கையிலே கூட
இந்தக் கருத்துருவை அரசு ஆராய்ந்து வருகிறது என்று சொல்லி
யிருக்கிறார்கள். இப்படி ஆராய்வோம், ஆராய்வோம் என்று
இந்த நூற்றாண்டின் கடைசிக்கு தள்ளிக்கொண்டு போனால்
எனக்கு அச்சமாக இருக்கிறது. தேசிய அளவிலே கூட 20
சதவீதத்தை மின்சார உற்பத்தியிலே தனியார்கள் செய்து
கொண்டிருக்கிறார்கள். அது தவறு என்று மாண்புமிகு உறுப்பினர்
திரு. சுப்பராயன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.
ரமணி அவர்களும் தெரிவித்தாலும் கூட, என்னைப் பொறுத்த
வரையிலும் மின்சார உற்பத்தி வேண்டும். அதற்கான வாய்ப்பு
களை பெருக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு அரசு
கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1986 நவம்பர் 20] [திரு. என். எஸ். வி. சித்தன்]

அதைப் போலவே மின்சார வாரியத்திற்கு நிதி நிலைமை
மோசமாக இருக்கிறது. வருவாயைப் பெருக்கவேண்டும்,
இதிலே யாரும் கருத்து வேறுபாடு சொல்லமாட்டார்கள். ஒரு
சின்ன யோசனையை இந்த அரசுக்கு நான் சொல்ல விரும்பு
கிறேன். நம்முடைய வீடுகளில் மின்சாரத்தை உபயோகிப்பவர்
களுக்கு இன்றைக்கு ஒரு வகையான கட்டணம் வசூலிக்கப்
படுகிறது. சாதாரணமாக நடுத்தர நிலையிலே இருப்பவர்கள்
கடைகளில் சிப்பந்திகளாக வேலை பார்க்கிறவர்கள்
அரசாங்கத்திலே கடைநிலையிலே இருப்பவர்கள் ஆகிய
வர்களுக்கு எந்த அளவிற்கு கட்டண வீதத்திலே மின்சாரம்
வழங்கப்படுகிறதோ, அதே கட்டணம் தான் வாய்ப்பு வசதி
களைப் பெற்றுள்ளவர்களுக்கும், ஃபிரிட்ஜ் வைத்திருப்பவர்களுக்
கும், டி.வி. வைத்திருப்பவர்களுக்கும், ஏர்-கண்டிஷன் வைத்திருப்
பவர்களுக்கும், இன்னும் பல்வேறு வகையான ஹீட்டர் போன்ற
றவைகளை வைத்திருப்பவர்களுக்கும், இன்னும் மேல் தளத்தி
இருப்பவர்கள் உபயோகிக்கின்ற மின்சாரத்திற்கும் ஒரே அளவு
மின் கட்டணம் தான் வசூலிக்கப்படுகிறது. இதை மறு
பரிசீலனை செய்யவேண்டும். ஆகவே தாங்கக்கூடியவர்களுக்கு
இந்த மின் கட்டணத்தை அதிகமாகப் போட்டு வசூலித்து,
இன்னும் கீழ்த் தட்டிலே இருப்பவர்களுக்கு மின்சார
கட்டணத்தைக் குறைப்பதற்கான ஒரு ஆலோசனையை
நான் இந்த அரசுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.
இதை பரிசீலனை செய்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அதைப் போலவே, மின் வாரியத்திலே பல கோடிக்கணக்கான
ரூபாய் பெறுமானமுள்ள பொருட்கள் இன்றைக்கு வாங்கப்
படுகின்றன. உதாரணமாக, கம்பிகள், குழாய்கள், பல்புகள்,
கம்பங்கள் போன்றவைகள் எல்லாம் இன்றைக்கு பல கோடிக்
கணக்கான ரூபாய் அளவிற்கு வாங்கப்படுகின்றன. எவ்வளவு
சேமித்து வைக்கப்பட்டு இருக்கிறது என்ற கணக்குக்கு பின்னாலே
வருவோம். தமிழ்நாடு மின் வாரியம் போன்ற பெரும் நிறு
வனங்கள் இம்மாதிரியான விஷயத்தில் முன்மாதிரியாக
இருக்க வேண்டும் என்று நான் விரும்புறேன். மின்சார
வாரியமே பல்பு தொழிற்சாலை தொடங்கப்போகிறது. மின்
சார வாரியமே அதற்குத் தேவையான பொருட்களை உற்பத்தி
செய்யப்போகிறது என்ற அறிவிப்பு 1967ஆம் ஆண்டு இந்த
அவைக்கு நான் உறுப்பினராக வந்ததிலேயிருந்து, அண்ணன்
ஓ.பி. இராமன் அவர்கள் அன்றைக்கு மின்சாரத் துறை
அமைச்சராக இருந்த அந்தக் காலத்திலிருந்து சில பல மாதங்
களுக்கு முன்பு வரை மின்துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு
பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் காலம் வரை இதைச்
சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். நான் கூற விரும்புவது
இன்றைக்கு நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் அதிக

மாக இருக்கிறது. அரசாங்கம் இந்த மாதிரியான பொருட்
களை உற்பத்தி செய்தால், இன்றைக்கு வாரியத்திற்கு தரமான
பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கின்ற வாய்ப்பு ஏற்படும்.
இடைத்தரகர்கள் இதிலே தடுக்கப்படுவார்கள். பல பேர்
களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. இந்த அறிவிப்புகள்,
அறிவிப்புகளாகவே இருக்கவேண்டுமா? நடைமுறை சாத்தியத்
திற்குக் கொண்டு வர இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள
வேண்டாமா ? எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நல்லவேளையாக எங்களுக்கு ஒரு அறிக்கை
நேற்றைக்கு கிடைத்திருக்கிறது. Report of the Comptroller and
Auditor – General of India 1984-85 (Commercial). ரொம்ப பொருத்
தமாக நேற்றைக்கு கிடைத்திருக்கிறது. இதிலே ஒன்றி
ரண்டு இனங்களை மட்டும் படித்துக் காட்டுவது இங்கே
தொடர்புடையதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.
அந்த புத்தகத்திலே 159ஆவது பக்கத்திலே சொல்லியிருக்கிறார்
கள். சில இடங்களிலே மின் கம்பங்களைப் போட்டு லைன்
இழுக்கின்ற நேரத்திலே நிலங்களை ஆர்ஜிதம் செய்யாமலேயே,
நிலங்களைக் கையகப்படுத்தாமலேயே கம்பங்களை நடுகின்ற
வேலை நடந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக ஆந்திரா
மாநிலத்திலே உள்ள ராமகுண்டத்திலே இருந்து நமக்கு மின்சாரம்
பெறுகின்ற முயற்சியிலே நிலங்களைக் கையகப்படுத்தாமலேயே
கம்பங்கள் நடப்பட்டு இருப்பதாக 159ஆவது பக்கத்திலே கீழ்க்
கண்டவாறு சொல்லியிருக்கிறார்கள். "By starting the work
of construction of link lines even before the alienation of
land, the expendit re of Rs. 10.73 lakhs incurred in 1983
remained unfruitf l also far (December 1985), while inventory worth
Rs. 40.87 lakhs are lying idle for more than two years...."
ஆக அந்த நிலங்களைக் கையகப்படுத்திக் கொள்ளாமலேயே
அவர்கள் 10.73 இலட்சம் செலவு செய்திருப்பதாகவும்,
அதைப் போலவே 40.87 இலட்ச ரூபாய் செலவிலே சாமான்கள்
வாங்கி, அவைகள் எல்லாம் 1985ஆம் ஆண்டு வரை,
முடங்கிக் கிடக்கின்றன என்றும் குறிப்பிலே சொல்லியிருக்
கிறார்கள்.

அதைப் போலவே 165ஆவது பக்கத்திலே சொல்லியிருக்கிறார்
கள். "10.03.4 Avoidable purchase of PVC cables: In November, 1979
the Board decided to discontinue the practice of providing PVC
Cables for new service connections and asked the consumers themselves
to make available the required PVC cables. In spite of this, the Board.
procured 63.45 lakh metres (Rs. 95 lakhs) of PVC cables (2.65 sq. mm.
between February 1980 and May 1981 resulting in wasteful utilisation





of funds in procuring idle stock. As on 31st March 1985 the total
stock holding of surplus PVC cables stood at 63.80 lakh metres
worth Rs. 95.77 lakhs".

ஆக 1979ஆம் ஆண்டிலே நவம்பர் மாதத்திலே பி.வி.சி.
கேபிள்களை, மின்சாரம் தேவையாக இருக்கிற மக்கள் வாங்கிக்
கொள்ளவேண்டும் என்ற உத்தரவை பிறப்பித்ததற்குப்
பின்னாலே, இத்தனை லட்சக் கணக்கான ரூபாய் பெறுமான
முள்ள கேபிள்களை வாங்குவதற்கு என்ன அவசியம் வந்தது
வாரியத்திற்கு, யாருடைய ஆணையின் பேரிலே வாங்கினார்கள்?
அல்லது யாருடைய கட்டாயத்திற்காக வாங்கினார்கள். அவர்
கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ? எப்படி வாங்க
முடியும் ? நம்முடைய மக்களுடைய வரிப் பணம், இத்தனை
லட்சம் ரூபாய் பாழாக முடங்கிக் கிடப்பதற்கு யார் பொறுப்பு
என்பதை நிர்ணயிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன்.

[மாலை 4.40]

அதைப் போலவே அதே 165வது பக்கத்திலே, "10.03.5.
Materials received but kept unaccounted : Instances of
material valuing Rs. 56.17 lakhs received during October 1981 to
December 1983 at the stores but kept unaccounted for periods
ranging from 4 to 41 months were noticed (March 1985) in Audit at
Transmission Link Construction Stores, Korattur (General Construc-
tions Circle, Madras). The related payments have already been
made. The materials have not been taken to stock due to non-receipt
of test reports from the Board's brid Relay Test Divisions delays in
check measurement. No action has been taken so far (December 1985)
to review such cases and get the test reports/check measurements
to insure whether they conform to the purchase order specifications".
ரூபாய் 56 லட்சத்துக்கு மேலாக இங்கே பொருட்கள் வாங்கப்
பட்டு 4லிருந்து 41 மாதங்கள் வரையில் கணக்கில் எடுத்துக்
கொள்ளாத நிலையில் கொரட்டூரில் இருந்து கொண்டிருக்கின்றன.
அதை ஏன் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை என்று சொன்
னால் அதற்கான விவரங்கள் நம்முடைய வாரியத்திலிருந்து
சரி பார்க்கிற துறையிலிருந்து கிடைக்கவில்லை என்று சொல்லு
கிறார்கள். இதற்கான பதிலையும் மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் தன்னுடைய பதில் உரையில் சொல்லுவார்கள் என்று
எதிர்பார்க்கிறேன்.

அடுத்து நேற்றும் இன்றும் இந்த வரிசையில் மிகக் கடுமையாக
விமர்சிக்கப்பட்டவர் மின் வாரியத்தினுடைய தலைவர் அவர்கள்.
மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்த வழக்குக்குள்ளே
போகமாட்டேன். நிச்சயமாக நீங்கள் நம்பலாம். ஆனால்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1986 நவம்பர் 20

இந்த வரிசையில் பலரால் கடுமையாக விமர்சிக்கப்பட்டவர் நம்முடைய மின்வாரியத் தலைவர். எனக்கு தோன்றுகிற ஒரு யோசனை, நம்முடைய மின் வாரியத்தினுடைய தலைவர் அவர்கள் வருகின்ற காலங்களிலே வினியோகத்திலே, உற்பத்தியிலே அதிகமான கவனம் செலுத்த வேண்டும். இந்தத் துறையிலே இருக்கும் 85 ஆயிரம் பேர் மீது ஒழுங்கு நடவடிக்கை என்ற பெயரிலே அவர்கள் மீது வழக்கு தொடருவதிலே கவனம் செலுத்துவதை விட இந்தத் துறையிலே அதிகமான கவனத்தை செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிலயிடங்களிலே விதவைகளுக்கு 4 நேர்வுகளுக்கு ஸ்பெசல் காண்டிரிபியூஷன் கொடுப்பது சம்பந்தமாக வழக்குகள் உச்ச நீதி மன்றம் வரை சென்று இருக்கின்றன. இவ்வளவு பணம் கொடுத்து வழக்குரைஞர்களை நியமித்து அந்த 4 விதவைகளுக்கு ஸ்பெசல் காண்டிரிபியூஷன் சம்பந்தப்பட்ட அந்த பாவத்தை நாம் ஏன் கொட்டிக்கொள்ள வேண்டும். அதற்காக 30 ஆயிரம் ரூபாய் செலவழித்து அவ்வளவு தூரம் போகவேண்டுமா என்பதைப் பற்றி அருள்கூர்ந்து மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, வழக்குகள் அதிகமாக தொடரப்பட்டு இத்தனை தொழிலாளர்களுக்காக இவ்வளவு தொகை செலவு என்று கணக்கு சொல்லுகிறார்கள். அந்தத் தொகை முழுவதையும் 'இம்ப்ரஸ்டு' என்ற தலைப்பில் எழுதப்பட்டு இருக்கிறதாம். அந்த வழக்குக்கான செலவுத் தொகை என்ற தலைப்பில் இவைகள் எழுதப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். இம்ப்ரஸ்டு என்று எழுதப்பட்டு இருக்குமானால், அது தவறு. கண்டிப்பாக பொய்யான தகவலை நிச்சயமாக கொடுக்கக்கூடாது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல, இந்த அவையிலே பேசினார்கள். * *

நான் இங்கே பேசினால் மின்வாரியத் தலைவர் வந்து அதற்குப் பதில் சொல்ல முடியாது என்பதை நான் நன்கு அறிவேன். என்னுடைய கடமையை உணர்ந்துதான் நான் சொல்லுகிறேன். அப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கக் கூடாது என்று நான் சொல்லுகிறேன். இனியாவது * * * * * அப்படிப்பட்ட நிலை இருக்கக் கூடாது என்றுதான் நான் விரும்புகிறேன். வருகின்ற காலங்களில் உறவு சீராக வேண்டும். குடும்பம் என்று சொன்னால் கணவனும் மனைவியும் எப்படி

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1986 நவம்பர் 20] [திரு. என். எஸ். வி. சித்தன்].

ஒத்து அந்த குடும்பத்தை நடத்துகிறார்களோ அதைப்போலவே ** ** செயல்பட வேண்டியது மிகவும் அவசியம் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல, ** என்று நான் நம்புவதற்கு ஒரு காரணத்தை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதெல்லாம் இங்கே பேசவேண்டாம். அதை நீக்கி விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ** ** ** சொன்னதை நீக்கும்படி உத்திரவிடுகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதில் என்ன அன்பார்லிமெண்டரி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் சொல்லுகிற கருத்து உண்மையா, பொய்யா என்று மறுத்து அவரும் இங்கே வந்து சொல்ல முடியாது, அந்த ** ** இங்கே இல்லை. அதனால்தான் நீக்க உத்திரவிட்டேன்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சொல்லக்கூடிய கருத்துக்கள் எல்லாவற்றையும் நீக்கிக் கொண்டு இருந்தால் இங்கே எதையும் பேச முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களே வாதம் செய்து கொள்வார்கள். நீங்கள் உட்காருங்கள். பேசிய அவரே ஒத்துக் கொண்டார்கள். நீங்கள் ஏன் வாதம் செய்கிறீர்கள் (குறுக்கீடு).

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் யூகிக்கிறேன் என்ற வார்த்தையை எண்ணித்தான் போட்டேன். இந்த மன்றத்திலே, தூத்துக்குடி அனல் மின் நிலைய விஸ்தரிப்பு சம்பந்தமாக ஒரு அறிவிப்பினை அன்றைய நம்முடைய மின் வாரியத் தலைவர் அவர்கள் சொன்ன நேரத்திலே சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே, இந்த மாதிரி விளக்கங்களை சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தான் முதலிலே கொடுக்க வேண்டுமென்று இங்கே நான்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1986 நவம்பர் 20

ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பிய நேரத்திலே, மின்சாரத் துறை பொறுப்பேற்றுக் கொண்டிருந்த மாண்புமிக்க அமைச் சரவர்கள் "எனக்குக்கூட தெரியாது, பத்திரிகையிலே செய்தியை படித்துப் பார்த்துத்தான் தெரிந்து கொண்டேன்" என்று சொன் னார் என்று சொன்னேனே தவிர, நான் அப்படி இருக்க வேண் டும் என்று சொல்லவில்லை. எந்தத் துறையாக இருந்தாலும் சரி, அல்லது அமைச்சர் பெருமக்கள் யாராக இருந்தாலும் சரி, இருவரும் இணைந்து செயல்பட்டால் தான் தமிழக மக்களுக்கு உரிய பயன் கிடைக்கும் என்று சொன்னேனே தவிர, யாருக்கும் தனிப்பட்ட முறையில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இடை யாது. நான் எந்த சிபாரிசுக்கும் போனவன் இல்லை. ஆகவே என்னுடை நிலையை உணர்ந்துதான் சொல்லுகிறேன்.

20—2—1982 அன்று சட்ட மேலவையிலே அன்றைய மின் சாரத்துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் ஒரு அறிவிப்பினை கொடுத்தார்கள். தொழிலாளர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 5,000 குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்படும் என்ற அறிவிப்பினைக் கொடுத்தார் கள். அந்த 5,000 குடியிருப்புகள் கட்டுவது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் பதிலில் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக இன்னொரு வேதனையான சம்பவம். மின் வாரியத்திலே பணியாற்றுகின்றபோது விபத்து அல்லது மற்ற காரணங்களினால் இறந்து விட்ட 420 மின் தொழிலாளர்களின் மனைவிமார்களுக்கு அரசு கல்வித் தகுதியை தளர்த்தி அலுவல கப் பணியாளர்களாக வேலையளிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட் டிருந்தது. இது சம்பந்தமாக 20—2—1982 அன்று சட்ட மேலவையிலே அப்போது இருந்த மின்சாரத்துறை அமைச்சரவர் கள் மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் பேசியிருக் கிறார்கள். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் களுடைய அனுமதியோடு நான் இதைப் படிக்கிறேன்.

"வாரிசுதாரர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டு மென்று மாண்புமிகு உறுப்பினர் மீனாட்சிசுந்தரம் இங்கே கருத்து தெரிவித்தார்கள்"—அமைச்சர் பேசுகிறார்—"ஒரு தொழிலாளி பணிக் காலத்திலே இறந்தால், அவருடைய வாரிசு தாரருக்கு பணி தரப்படுவது, அப்படி கல்வித் தகுதி இல்லை என்ற காரணத்தால் 450 பேருக்கு வேலை வாய்ப்பு மறுக்கப் படுகிறது. கல்வித் தகுதி இல்லையென்ற காரணத்தால் அந்தக் குடும்பங்கள் கண்ணீரும் கம்பலையுமாக இருக்கக் கூடாது என்று எண்ணி இப்போது கல்வித் தகுதியை தளர்த்தி 450 பேருக்கு வேலை வாய்ப்பு தருவது என்று அரசு தீர்மானித்திருக்கிறது."



[1986 நவம்பர் 20] [திரு. என். எஸ். வி. சித்தன்]

சட்ட மேலவையில் மின்சாரத்துறை பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்த உறுதி மொழி அது. அதனை ஏற்று பொதுப் பணித்துறையிலே இருந்து 28-2-1982-ல் லெட்டர் நம்பர் 1774-ல் கமிஷனர் மற்றும் செகரட்டரி அவர்கள் அதனை ஏற்று, அதன் தொடர்பாக ஒரு உத்திரவை பிறப்பிக்கிறார்.

"I am directed to state that the proposal of the Tamil Nadu Electricity Board for appointment of 450 unqualified lady dependents as Office Helpers in relaxation of the educational qualification, is accepted by the Government a special case, subject to the condition that no other member in the families of such candidates is employd" இது அரசின் சார்பிலே 28—2—1982-ல் உத்திரவாக பிறப்பிக் கப்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்ட் லெட்டர் எம்.எஸ். 1774 பி.டபிள்யூ.டி-யில் பின்னர் என்ன நிகழ்கிறது? 7—6—1983, அன்று நம்முடைய மின் வாரியத் தலைவர் ஒரு உத்தரவைப் பிறப்பிக்கிறார்கள். B.P. Ms. (F.B.) No. 21, Administrative Branch dated 7-6-1983. அதிலே என்ன சொல்கிறார்—ஃபுல் போர்டு சொல் லியது, ஒன்றிரண்டு மெம்பர்கள் சொல்லியது அல்ல. "The Full Board has examined this proposal in great detail and has decided that the dependents of the employees of the Board who die in harness, should be given employment in the Board only if they possess the prescribed qualification for the post and also satisfy the other conditions prescribed by the Board for the provision of employment assistance and subject to the availability of vacancies". நியாயம் தானா? மின்சார அமைச்சரவர்கள் உத்தரவு கொடுக் கிறார். பொதுப்பணித் துறை உத்தரவு போடுகிறது. அமைச் சருக்கும் பொதுப் பணித்துறைக்கும் மேலாக சூப்பர் பவராக இருக்கின்ற தமிழக மின் வாயம்—இந்த மின்சாரவாரியத்திலே புல் போர்டு வைத்து—அதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக் கிறது. பொதுப்பணித் துறையில் இருக்கின்ற செயலர் இந்த நாற்காலியிலிருந்து உத்தரவு போடுகிறார். பின்னர் அந்த நாற் காலியிலிருந்து வேண்டியதில்லை என்று கையெழுத்து போட் டால், அந்தக் கொடுமையை என்ன என்று சொல்வது? 'சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்காமல் மறுப்பது நியாயமா' என்று நான் கேட்கிறேன். வேறு துறையிலே இருக் கின்ற தொழிலாளர்களைப் பற்றி கவலைப்படவில்லை மின்சாரத் துறையில் இருக்கின்ற தொழிலாளர்கள் தங்கள் உயிரைப் பணய மாக வைத்து வேலை செய்கிறார்கள். எனவே அவர்களுடைய வாரிசுகளுக்கு, அவர்கள் இறந்த பின் வேலை வாய்ப்பு அளிப் பதில் ஏன் உங்களுக்குத் தயக்கம்? ஏன் கொடுக்கக் கூடாது?

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1986 நவம்பர் 20

(மாலை 4—50)

அரசு ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அவ்வளவு கல்மனம் எதற்காக வருகிறது? 450 பேர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று அரசு உத்தரவு இடுகிறது. அந்த அரசுக்கு மேலாக நம்முடைய மின்சார வாரியம் உத்திரவு கொடுக்கிறது என்று சொன்னால் இதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. நான் கூட கேள்விப்படுகிறேன். அப்படி வேலை இல்லை என்று சொன்ன காரணத்தினாலேயே சிலர் உயிர் இழந்திருக்கிறார்கள். இந்தப் பாவம் நமக்குத் தேவைதானா. வேறு துறையை விட்டு விடுவோம். ஆகவே இந்தத் துறையில் இருக்கின்றவர்கள் பணியாற்றுகின்ற போது அவர்களுக்கு சங்கடங்கள் இருக்கின்ற காரணத்தினாலும் உயிரைப் பணயம் வைத்துப் போராடுகின்றார்கள் என்ற காரணத்தினாலும் இந்த 450 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதிலே நம்முடைய அமைச்சரை நான் உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். மனிதாபிமான உணர்வோடு தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் கவனத்திற்கு தயவு செய்து கொண்டு வந்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுத்து அந்தக் குடும்பங்களில் விளக்கேற்றி வைக்கின்ற பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது. இது மாதிரியான ஒரு நிகழ்வு நம்முடைய வாரியத்திலும், வேறு இடத்திலும், அரசிலும் நடக்கக் கூடாது என்ற என்னுடைய கருத்தையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்ததாக நம்முடைய மின் வாரியத்தைப் பொறுத்தவரையிலே பல்வேறு குறைபாடுகளை இங்கேயுள்ள பெருமக்கள் சொன்னார்கள். வேறு மாநிலங்களிலே பார்க்கின்ற நேரத்தில் விவசாயிகளுக்கு மின் இணைப்பு விரைவில் கிடைத்து விடுகிறது. உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் 6 மாதங்களுக்குள்ளாகவே மின் இணைப்பு கிடைத்து விடுகிறது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தளவில்—ஒரு உறுப்பினர் கூட சொன்னார்—1976 ஆம் ஆண்டிலிருந்து கூட மின் இணைப்பு கிடைப்பதற்கு விவசாயிகள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு முன்னுரிமை கொடுத்து வருகின்ற காலத்திலாவது மின் இணைப்பு கொடுக்க வேண்டும். தமிழக அரசு பல்வேறு நிறுவனங்கள் மூலமாக ஹரிஜன பெருமக்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொண்டு வருகிறார்கள். புதிதாக இருக்கின்ற காலனி வீடுகளுக்கு முன்னுரிமை கொடுத்து, வீடுகளுக்கானாலும், தெரு விளக்குகளுக்கானாலும் மின்சாரம் கிடைப்பதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உணவு உற்பத்தியைப் பொறுத்த அளவிலே நாம் மெத்த அக்கறை கொண்டிருக்கிறோம். தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்தில் டியூப் வெல் போடுவதாக இருந்தாலும், ஆழ்



1986 நவம்பர் 20] [திரு. என். எஸ். வி. சித்தன்]

துளைக் கிணறு போடுவதாக இருந்தாலும் ஏனைய விவசாயிகளை விட அவர்களுக்கு பிரையாரிட்டி கிடைக்கிறது என்று நான் அறிகிறேன். தஞ்சை மாவட்டத்திற்கு கொடுத்து இருக்கின்ற அந்த முன்னுரிமையையும் அண்ணா, மதுரை போன்ற ஏனைய மாவட்டங்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆழ்துளைக் கிணறுகளைக் கட்டுவதில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. தண்ணீர் கிடைத்தாலும் கிடைக்கும், கிடைக்காமலும் போகும். எனவே தண்ணீர் தேவையை எண்ணிப் பார்த்து உடனடியாக முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கட்டண பாக்கியைப் பொறுத்த அளவிலே காலையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். 31—3—1986 முடிய ரூ.40.40 கோடி மின் வாரியத்திற்கு நிலுவையாக இருக்கிறது. மால்கோ நிறுவனம் மட்டும் 20 கோடி நிலுவையாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. உச்ச நீதிமன்றத்திலே வழக்கு இருப்பதினால் நான் அதற்குள் போக விரும்பவில்லை. ஆனாலும் கூட, 1980-லே விவசாய பெரு மக்களுடைய நிலுவை ரூ. 37.59 கோடியாக இருந்தது ரூ. 2.44 கோடியாக கணிசமாகக் குறைந்துவிட்ட காரணத்தினால் ஏனைய சிறிய தொழில் நிறுவனங்கள் பெரிய தொழில் நிறுவனங்களிலிருந்து ரூ. 11.76 கோடி பாக்கி நிலுவையை வசூலிப்பதில் வாரியம் அதிகமாக அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது இருக்கின்ற டிரான்ஸ்பார்மர்களில் பல டிரான்ஸ்பார்மர்கள் தங்களுடைய சக்திக்கும் அதிகமாகவே மின் இணைப்பு கொடுக்கின்ற காரணத்தினால் பழுதடைகின்றது என்று வல்லுநர்கள் சொல்கிறார்கள். அதை பரிசீலிக்க வேண்டும். பல்புகளைபொறுத்த அளவிலே நிறைய பல்புகள் ஃபீஸாகின்றன. அதற்குக் காரணம் ஒன்று தரம் குறைந்திருக்க வேண்டும். அல்லது மின்சார வினியோகத்தில் முரண்பாடுகள் இருக்க வேண்டும். அதனால் பல்புகள் ஃபீஸாகின்றன. நான்கூட கேள்விப்படுகிறேன். கேரளாவில் வெர்மிஸ்டர் என்ற சின்ன கருவியின் விலை 1½ ரூபாய்தான். அந்தக்கருவி வாங்கி பொருத்திவிடுவோமேயானால் அதன் மூலமாக இந்த பல்புகள் ஃபீஸாகின்ற எண்ணிக்கை கணிசமாகக் குறையும் என்று சொல்கிறார்கள் அதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்னொன்று, நம்முடைய விவசாயப் பெருமக்கள் மின்சார வாரியத்திற்கு தவணை தவறியிருப்பார்களேயானால் அந்த தவணை தொகைக்கு எவ்வளவு மின் வாரியம் வட்டி வசூல் செய்கிறது என்று பார்த்தால் 32 சதவீதம் வசூலிக்கிறது. விவசாயிகளுடைய நிலையை எண்ணிப்

பார்த்து, கஷ்ட நிலையை உணர்ந்து, விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். மின் கட்டணம் கூட கட்ட முடியாத நிலையை எண்ணிப் பார்த்து தயாள குணத்தோடு நம்முடைய மின்சார வாரியம் 32 சதவீதம் வட்டி வாங்குகிறது. எந்த வட்டிக்காரனும், ஈட்டிக்காரனும் கூட 28 சதவீதம், 32 சதவீதம் வாங்கியதாக எங்களுக்குத் தெரியாது. இது நிஜம் தானா? நான் கூட கேள்விப்படுகிறேன். நம்முடைய உரூரியஸ் லோன் ஆக்ட்டின்படி 6 சதவீதம் தான் வாங்க வேண்டுமென்று இருந் தாலும் கூட இப்படி 28 சதவீதம், 32 சதவீதம் வாங்குவது எந்த அளவிலே நியாயம்? இப்படி இந்த பாவப்பட்ட ஜென்மங்களி டமிருந்து 32 சதவீதம் வசூலித்து மின் வாரியம் லாபத்தில் இயங்க வேண்டுமா? அப்படி இருக்குமானால், தகுந்த நட வடிக்கை எடுத்து, அதிகமாக வசூல் செய்திருந்தால் திரும்ப கொடுப்பதற்கு ஆவண செய்ய வேண்டும். வருங்காலத்தில் இப் படி வசூல் செய்யக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். வாரியத்தில் ஏற்படுகின்ற பொருளாதார இழப்பிற்கு சில காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். பழுதடைந்த மீட்டர்களை வாரியத்தில் உள்ளவர்கள் உடனடியாக மாற்றுவது இல்லை.

பல நாட்களாக, பல மாதங்களாகக் கூட, சென்னையில் கூட ஒரு தனிப்பட்ட பகுதியை, ஒரு ஏரியாவைச் சொன்னார்கள். அந்தப் பகுதியில் பல மாதங்களாக மீட்டர்கள் மாற்றப்பட வில்லை. அதனால் வாரியத்திற்கு மின் யூனிட் கணக்கு சரியாகக் கிடைக்காத காரணத்தால் இழப்பு ஏற்படுகிறது என்று சொல் கிறார்கள். மீட்டர் இல்லை என்ற காரணத்தினால், நேரடி யாக மீட்டர் இல்லாமலே இணைப்பு கொடுப்பதால் உபயோகப் படுத்தப்படுகிற மின்சாரக் கணக்கு வராமலே போகிறது என்கிறார்கள்.

சென்னையில் கே. கே. நகர், அசோக் நகர், பூந்தமல்லி, தாம்பரம் ஆகிய பகுதிகளை இங்கே குறிப்பிட்டுக் காட்டியிருக் கிறார்கள். அதை எண்ணிப் பார்த்து சரி செய்ய வேண்டுகிறேன். பல்வேறு உயர் அழுத்த மின் இணைப்பு பெற்றுள்ள ஹை- டென்ஷன் தொழில் நிறுவனங்களும் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மின் கட்டணம் வசூலிக்கப்படவில்லை என்ற காரணத் தை நான் முன்னேயே சொல்லி இருக்கிறேன். இன்னொன்று, வாரியத்தின் சார்பிலே வழக்குகள் இருக்குமானால், அந்த வழக்கு களில் வாரியத்தின் சார்பில் ஆஜராவதற்கு அரசு வழக்கறிஞர் களைப் பயன்படுத்தாமல், அந்தப் பகுதியிலே முதிர்ந்த வழக்கறி ஞர்களை அமர்த்திக் கொள்ளலாம் என்று அந்த வாரியத் தினுடைய தலைவர் அவர்கள் தன்னுடைய லெட்டர் எண். 15754/எல்.சி.2/83-1, தேதி 28-2-1983இல் இது மாதிரியான





ஒரு அனுமதியைக் கொடுத்து இருக்கிறார்கள். மதுரை, கோவை போன்ற வழக்குகளுக்குக் கூட, சென்னையிலிருந்து வழக்கறிஞர் கள் போகவேண்டிய நிலை உருவாகியிருக்கிறது.

அதனாலே சில இலட்சங்கள் அதிகமான சுமை ஏற்பட்டிருக் கிறது என்ற செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டு அரசு வழக்கறிஞர்கள் இருக்கும்போது தனியார் வழக்கறிஞர் களை அமர்த்துவது அவசியம்தானா என்று கேட்க விரும்பு கிறேன்.

தேவையற்ற தளவாடப் பொருட்களை கோடிக்கணக் கான ரூபாய்க்கு வாங்கி பல வருடங்கள் உபயோகப்படுத்தாமல் பண்டகசாலையிலே தேக்கி வைத்திருப்பது, தமிழகத்தில் உள்ள மின்வாரிய பண்டகசாலையை சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று ஒருமுறை ஆய்வு செய்தாலே சரியாகத் தெரியும் என்று சொல்கிறார்கள். சென்னையைப் பொறுத்த வரையில், மயிலாப்பூர் ஸ்டோரிலே பத்து வருடத்திற்கு மேலாக சாமான்கள் தேங்கியுள்ளன. குக்ஸ் ரோட்டிலே உள்ள அந்தக் கிடங்கிலேகூட, அப்படிப்பட்ட சாமான்கள் தேங்கியிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். தரக் குறைவான, சப்-ஸ்டாண் டர்டு மின் தளவாடச் சாமான்கள், கேபிள்கள், ட்ரான்ஸ்பார்மர் கள், அலுமினியம் கண்டக்டர்கள் வாங்கி உபயோகப்படுத்து வதால், அடிக்கடி மின் தடை ஏற்பட்டும், பழுதுகள் உருவாகி, மீண்டும் புதுப்பிக்கப்படுவதன் காரணமாக செலவு ஏற்படுகிறது என்ற செய்தியையும் சொல்லி இருக்கிறார்கள்.

ஏற்கனவே விவசாயப் பெருமக்களிடம், அவர்களே மீட்டரை வாங்கிக் கொள்ளச் சொல்லி, வாரியம் அவர்களுக்கு 80 ரூபாய் மட்டுமே கொடுக்கிறார்கள் என்ற செய்தியை எனக்கு முன்னாலே பேசிய என்னுடைய கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கசாமி அவர்கள் சொன்னார்கள். அரசாங்கமே அந்த மீட்டர்கள் தயாரிக்க வேண்டும், அல்லது வாரியமே தயாரிக்க வேண்டும் அல்லது பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதிலே இன்னும் கொஞ்சம் முனைப்புடன் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்கணிப்பு செய்த பதினைந்து நாட்களுக்குள் மின் கட்டணம் செலுத்தப்பட வேண்டி இருந்தாலும்கூட, மூன்று மாத சராசரி மின் கட்டணத்திற்குரிய பணம் காப்புத் தொகையாக செலுத்தப் படவேண்டும் என்று பொது மக்களைக் கட்டாயப்படுத்துவது

இந்த நிலையில் அவசியம்தானா என்று கேட்க விரும்புகிறேன். இதைப்போல இன்னும் பல ஆலோசனைகளை சொல்லியிருக் கிறார்கள். காலத்தின் அருமை கருதி அவைகளைச் சொல்லா மலே விட்டுவிடுகிறேன்.

எங்களுடைய கட்சியைச் சார்ந்த எடப்பாடி உறுப்பினர் மாண்புமிகு திரு. கோவிந்தசாமி அவர்கள் ஒரு செய்தியைச் சொல் லியிருக்கிறார்கள். சேலம் மாவட்டம் எடப்பாடி நகராட்சியில் நிதிப்பற்றாக்குறையின் காரணமாக நகராட்சி ஊழியர்களுக்கு சம்பளம் எடுக்காத நிலையில் மின் கட்டண பாக்கிக்காக குடி தண்ணீர் பம்பு செட்டுகளின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட் டிருக்கின்றன. நகராட்சிக்கு எத்தனையோ இனங்களில் இழப்பு ஏற்பட்டிருக்கலாம். அது எல்லாம் அரசுத் துறை நிறுவனங் களாய் இருப்பதால், ஒரு நகராட்சி மின் கட்டணம் செலுத்த வில்லை என்பதற்காக, மக்களுடைய குடிதண்ணீருக்கான பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு துண்டிக்கப்படுவது அவசியம் தானா என்று எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அப்படி இருக்குமானால், உடனடியாக மின் இணைப்பு கொடுக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் பெரு மகனாரைக் கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஆர். வேங்கடரமணன் இன்னொரு செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே மின்சாரம் வழங்குவதில், நம்முடைய மறைந்த பிரதமர் அன்னை திருமதி இந்திரா காந்தி அவர்களின் இருபது அம்சத் திட்டத்தின் கீழ் சுய வேலை வாய்ப்பிற்காக பணத்தைக் கடனாக, வங்கி களிடமிருந்து பெற்று, டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட், ஒன்றிரண்டு மிஷின்களை வைத்து சின்னச் சின்னத் தொழில் செய்து கொண் டிருக்கிறார்கள். அவர்களுக்குக்கூட, கமர்ஷியல் டாரிஃப் என்று கணக்குப் போட்டு அதிகமான கட்டணத்தை வசூலிக்கிறார்கள். இந்த இனங்களில் அரசு கொஞ்சம் மனிதாபிமான உணர்வோடு, அவர்களுடைய பணியை எண்ணிப் பார்த்து வேலையின்மையைப் போக்குவதற்கும், அவர்களுடைய சுய வேலை முயற்சியைப் பாராட்டுகின்ற முறையிலேயும், அதைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

செஞ்சி தொகுதியினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகானந்தம் அவர்கள் ஒரு செய்தியைச் சொல்லியிருக்கிறார் கள். செஞ்சி தொகுதி பெருமாள்பேட்டையில் அண்ணாமலை கவுண்டர் என்பவர் 1962 ஆம் ஆண்டு மோட்டார் பம்பு செட்டுக்கு அனுமதி கேட்டு மனு கொடுத்து இதுநாள் வரை





சற்றேறக்குறைய கால் நூற்றாண்டு ஆகியும், மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை என்ற அதிர்ச்சி தரக்கூடிய செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். அதை விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய மின் வாரியத்தைப் பொறுத்த வரையில், இங்கே பணியாற்றுகின்ற பணியாளர்களைப் பல்வேறு இடங்களுக்கு மாற்றி இருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. பெரிய நிலையிலே இருக்கின்ற அதிகாரிகளை மாற்றுவதை 3, 4 ஆண்டுக் காலத்திற்குள் மாற்றுவதைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் எழுத்தர்கள், கணக்கர்களாக இருக்கிறவர்களை 100 மைல், 150 மைல் தூரத்திற்கு மாற்றுவதால் அவர்களுடைய குடும்ப அமைதி போய், சரியாக வேலை செய்ய முடியாத நிலை இருக் கின்ற காரணத்தைச் சொல்லி இருக்கிறார்கள். ஊழியர்கள் பதவி உயர்வு மற்றும் ஊர் மாற்றல் வழங்கிட 15 ஆண்டுக்காலம் இருந்த நடைமுறைகளை ரத்துச் செய்து தன்னுடைய இஷ்டம் போல், நியாயமும், நியதியும் இல்லாமல், 3 ஆண்டுகளில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள், விதவைகள், மகளிர் உட்பட நீண்ட தூரத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

(மாலை 5-00)

இதன் காரணமாகக் குடும்பங்களுக்கு இன்னல் விளைவிக்கப் பட்டிருப்பதாக செய்தி சொல்கிறார்கள். இதன் காரணமாக ஊழியர்களுடைய பணியின் திறமை குறைந்துவிடாதா என்று எண்ணிப் பார்த்து இவ்வாறு அதிகமான எண்ணிக்கையில் ஊழியர் களை அதிகமான தூரத்திற்கு மாற்றுவதைத் தவிர்க்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தொழிற்சங்கங்களின்— அதுவும் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்களின் நிர்வாகிகளையும் பொறுப்பில் உள்ள வர்களையும் நீண்ட தூரங்களுக்கு மாற்றி அதன் மூலமாக தொழிற்சங்கங்களை முடக்குவதாகவும் சொல்லப்படுகிறது. இது மின் வாரியத்தின் நல்ல போக்கிற்கு ஒரு உதாரணமாக இருக்க முடியாது. மேலும் மின்சாரக் கம்பங்களில் பணி யாற்றுகிற ஊழியர்களுக்குத் தேவைப்படும் பெல்ட்—ரோப் போன்ற சாதாரண ஆனால் முக்கியமான சாதனங்கள் கூட கொடுக்கப்படுவதில்லை என்றும் அதன் காரணமாக சில மரணங் கள்கூட ஏற்பட்டிருக்கின்றன என்றும் சொல்லப்படுகிறது. இதையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வ தோடு இங்கே சொல்லப்பட்ட குறைகளும் குற்றங்களும் ஏதோ நிர்ப்பந்தம் காரணமாகச் சொல்லப்பட்டவையல்ல என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். தமிழகத்தில் உள்ள மின் வாரியம் இந்தியாவில் உள்ள மற்ற மின் வாரியங்

களுக்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழ வேண்டும் என்ற
அக்கறை எங்களுக்கெல்லாம் இருக்கிற காரணத்தால் இத்
தகைய குறைகள் எல்லாம் களையப்பட வேண்டும் என்று
சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மத்திய அரசிடமிருந்து தமிழகத்திற்குத் தேவை
யான மின் திட்டங்களைப் பொறுத்த வரையில் ஆளும் கட்சியில்
இருப்பவர்கள் ஏதோ மத்திய அரசாங்கம்தான் கால தாமதப்
படுத்திக் கொண்டிருப்பதைப் போல் இங்கே குறிப்பிட்டார்கள்.
அதிலே எனக்கு நம்பிக்கையில்லை. ஏதோ சொல்ல வேண்டும்
என்ற காரணத்திற்காக இந்த வாய்ப்பைப் பயன்படுத்திச்
சொல்லியிருக்கிறார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன்.
உண்மையிலேயே அவ்வாறு மத்திய அரசு நமது மாநிலத்
திட்டங்களுக்கு முடிவு சொல்வதில் காலதாமதம் செய்திருக்கு
மானால் அதுபற்றிய புள்ளி விவரங்களை மாண்புமிகு அமைச்சர்
அவர்களேகூட தன்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டிருப்
பார்கள். அப்படி ஏதும் குறிப்பிடப்படவில்லை என்பதை
இங்கே நினைவுபடுத்துவதோடு அவ்வாறு எங்காவது கால
தாமதம் ஆனதாக விவரம் கொடுத்தால்—அதாவது எந்தத் தேதி
யில் மத்திய அரசுக்கு தமிழக அரசு திட்டத்தை அனுப்பியது,
எந்தத் திட்டத்தை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை
என்று கொடுத்தால் நல்லது. எனக்குத் தெரிந்த வரையில்
மத்திய அரசுதான் சில விவரங்களை நம்முடைய மின்வாரியத்
திடமிருந்தும் அரசிடமிருந்தும் கேட்டிருக்கிறது என்றும்
அதற்கு நீண்ட காலமாகப் பதில்கள் அனுப்பப்படாத
காரணத்தால்தான் இந்தத் திட்டங்கள் எல்லாம் முடங்கிக்
கிடக்கின்றன என்றும் அறிகிறேன். எனவே இத்தகைய நிலைமை
களையெல்லாம் மாற்றி தமிழகத்திற்குத் தேவையானவற்றை
நாம் பெற்றாக வேண்டும். மத்திய அரசைப் பொறுத்த
வரையில் தமிழகத்திற்கு உதவி செய்வதற்கு நிச்சயமாகத்
தயாராக இருக்கிறது. எனவே தமிழக அரசு மத்திய அரசிட
மிருந்து திட்டங்களுக்கான அனுமதியையும் அதற்கான நிதி
யையும் பெறுவதிலே காங்கிரஸ் கட்சி அரசுக்கு துணையாக
முன்னணியில் இருக்கும் என்று கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் சக்தி ஒரு
நாட்டின் முன்னேற்றத்திற்கும் தொழில் வளர்ச்சிக்கும் மிக
முக்கியமான மூலப் பொருள் அல்லது இடு பொருள் என்பதை
யாரும் மறுக்க முடியாது.





எதிர்க்கட்சியின் பல்வேறு உறுப்பினர்களும், ஆளும் கட்சியின் உறுப்பினர்களும் இந்த மின்சாரம் பற்றிய விவாதத்தில் கலந்து கொண்டு அரிய கருத்துக்களை தெரிவித்ததற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் எப்போதும் குற்றம்தான் சொல்லுவார்கள் என்று எடுத்துக்கொள்ளாமல் அவர்கள் பரிபூரணமாக மனச் சுத்தியுடன் அவர்கள் உண்மையிலேயே குறைகள்தான் என்று நம்பியவைகளையும், அவர்களுக்குக் கிடைத்த தகவல்களின் பேரிலும்தான் அவற்றைச் சொன்னார்கள் என்று கருதி அவர்கள் சொன்ன குறைகளைப் போக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெங்கசாமி அவர்கள் நேற்று பேசும்போது இந்த அரசு மின்துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை, முதலிடம் கொடுக்கவில்லை என்றும் ஏதோ கடைசி நிலையில்தான் இந்தத் துறையை வைத்திருப்பதாகவும் சொன்னார்கள். தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் 1986–87 ஆம் ஆண்டுக்கான அரசின் மொத்த நிதி ஒதுக்கீடான ரூ. 1,200 கோடியில் 32.15 சதவீதம் மின்சாரத்திற்குத்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. 7-வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 34.78 சதவீதம் ஒதுக்கி அதாவது ரூ. 5,750 கோடியில் ரூ. 2000 கோடியை மின் உற்பத்திக்காக ஒதுக்கி இதற்கு முக்கியத்துவம் அளித்திருக்கிறார்கள். எனவே இதற்கு முதலிடம் கொடுக்கவில்லை என்று சொன்னது ஏற்கக் கூடியதல்ல. தமிழ்நாட்டில் மின்சாரம் 5 முதல் 8 சதவீதம் ஆண்டு ஒன்றுக்கு வளர்ச்சி அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இந்திய அரசு மின்சாரத் துறை வெளியிட்ட அறிக்கைப்படிகூட இந்தியாவில் தனி நபர் உபயோகம் 167 யூனிட். தமிழ்நாட்டில் தனி நபர் உபயோகம் 192 யூனிட். மேற்கு வங்கம் 131 யூனிட். திரிபுரா 24 யூனிட். தமிழ்நாடு தேசிய சராசரியைவிட 25 யூனிட் அதிகம்.

அடுத்து தமிழ்நாட்டின் மின்சாரத் தேவை 2,800 மெகா வாட். இன்றைய தினம் தமிழ்நாட்டில் கிடைக்கும் மின்சாரத்தின் அளவு 2,250 மெகா வாட். எனவே பற்றாக்குறை தேவை 550 மெகாவாட். மேட்டூர் அனல் மின் நிலையம் அடுத்த மாதம் டிசம்பரில் துவக்கப்பட இருக்கிறது. அதன் மூலம் 210 மெகா வாட் மின்சாரம் கிடைக்கும். அதைப்போலவே காடாம்பாரை மின் திட்டம் இன்னும் இரண்டு மாதங்களில் அதாவது ஜனவரியில் தொடங்கப்படும்

அதன் மூலம் 100 மெகா வாட் மின்சாரம் நமக்குக் கிடைக்கும். அத்துடன் கீழ் மேட்டூர் முதல் யூனிட் இன்னும் 2, 3 மாதங் களில் துவக்கப்பட இருக்கிறது. அதனுடைய திறன் 15 மெகா வாட் ஆகும்.

வடசென்னையில் 630 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையத்தைத் துவக்க தமிழக முதல்வர் முயற்சியாலும், பாரதப் பிரதமர் உதவியாலும், இந்தியாவிலேயே முதன் முதல் தமிழ்நாட்டில் 180 முதல் 185 கோடி ரூபாய் வரை உதவி செய்ய ஆசிய நாடுகள் முன்னேற்ற வங்கி முன்வந்ததை நாம் வரவேற்க வேண்டும்.

நம்முடைய பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும் படியான நிபந்தனை ஏதுமின்றி செய்ய வேண்டுமென்று முதல்வர் யோசனையின்படி இந்த அரசின் பொதுப்பணித் துறை செய லாளரும், மின்வாரியத் தலைவரும், நிதிச் செயலாளரும் இந்த உடன்படிக்கைக்கு உதவியதற்கு அவர்களுக்கு நாம் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம். இந்த திட்டத்தில் இந்த நாட்டு முன்னேற்றத்திற்கு ஒவ்வாத நிபந்தனைகள் இருக்கிறதா என்பதை திரு. சுப்பராயன் அவர்கள் கேட்டார்கள். எந்தவித மான பாதகமான நிபந்தனைகளும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆசிய நாடுகள் முன்னேற்ற வங்கி இதை ஏற்றுக் கொண்டதா என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப் பினர் திரு. சித்தன் அவர்கள் கேட்டார்கள். அந்த வங்கி யினுடைய நிர்வாக போர்ட் இந்தத்திட்டத்தை ஏற்றுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றியதாக மைய அரசிலிருந்து தகவல் நேற்றைய தினம் வந்திருக்கிறது. இந்தத் திட்டம் நிர்சயமாக உடனடியாகத் துவக்கப்படும்.

அதற்கடுத்தபடி, கடலூரில் ரஷ்ய நாட்டு உதவியுடன் ஒரு அனல் மின் நிலையத்தை 630 முதல் ஆயிரம் மெகாவாட் வரை உற்பத்தி செய்யக்கூடிய யூனிட்டுகளைப் போட அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. அடுத்த வாரம் சோவியத் நாட்டு அதிபர் திரு. கோர்பசேவுடன் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் பேசும்போது இதன் உடன்படிக்கை யைப் பற்றி பேச வேண்டும் என்று தமிழக முதல்வர் அவர்கள் பாரதப் பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள்.





மற்றொரு மகிழ்ச்சியான செய்தி. 30 மெகாவாட் கொண்ட நான்கு எரிவாயு மின் நிலையத்தை சென்னையில் ஏற்படுத்து வதற்கு மந்திய மின் ஆணைக்குழு ( சென்ட்ரல் எலெக்ட்ரிசிட்டி அத்தாரிட்டி) அனுமதி கொடுத்து, அதற்குத் தேவையான திரவ எரிபொருளுக்கான அனுமதிக்காக மைய மின்சாரத் துறை அமைச்சரிடத்திலே நிலுவையில் இருக்கிறது. இது சுற்றுப்புற சூழலை மாசுப்படுத்தாமல் விரைவில் ஒரு வருஷத்திற்குள் மின்சார உற்பத்தியைத் துவக்க பயன்படும். சென்னையில் பீக்-ஹவர் டிமாண்டை சமாளிக்க இது பெரிதும் உதவியாக இருக்கும்.

தூத்துக்குடியில் மூன்றாவது விஸ்தரிப்புத் திட்டத்தில் 210 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு யூனிட்டுகளுக்கு மைய அரசு ஏற்கனவே அனுமதி அளித்திருக்கிறது. அதற்கு நிலக்கரி வேண்டும். செட்கோ நிறுவனம் தென்னிந்தியாவில் உள்ள 12 தொழிலதிபர்களை ஒன்றாகச் சேர்த்து ஒரு கம்பெனியை உரு வாக்கி தாங்கள் இந்த மின் உற்பத்தி செய்யும் நிலையத்தை ஆசிய நாட்டு உதவியுடன் சுமார் 300 கோடி ரூபாய்க்குக் குறை யாமல் முதலீடு செய்து ஆஸ்திரேலியாவிலிருந்து நிலக்கரியை வரவழைத்து இந்த மின்சார வாரியத்துடன் இணைந்து ஜாயின்ட் செக்டராக வேலை செய்ய அனுமதியைக் கேட்டிருக்கிறார்கள். அதற்கு தமிழக அரசு இரண்டு நிபந்தனைகளை விதித்திருக் கிறது. ஒன்று, அவர்கள், தானாகவே 210 மெகாவாட் கொண்ட இரண்டு யூனிட்டுகளை உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவுக் காகும் பணத்தை சேகரிக்க வேண்டும். அவர்களாகவே சேகரிக்கும் கிறார்களோ அல்லது வெளிநாடுகளிலிருந்து வாங்குவார்களோ அது அவர்களுடைய பொறுப்பாகும். இதைப் போல இரண்டு யூனிட்டுக்கும் தேவைப்படுகிற நிலக்கரியை ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்ய மைய அரசிடம் அவர்கள் அனுமதியைப் பெற வேண்டும். இந்த இரண்டையும் அவர்கள் பெற்று தமிழக அரசை அணுகினால் ஜாயின்ட் செக்டர் என்ற முறையில் இணைந்து வேலை செய்யப்படும். அவர்கள் அனுமதியைப் பெறுகிற வரையில் தமிழக அரசின் மின்சார வாரியம் காத்திராமல், ஏற்கனவே பெற்ற அனுமதியை வைத்து மின்சார உற்பத்தியைச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1986 நவம்பர் 20

இந்த மின்சாரம் மிகவும் முக்கியமானது என்று எல்லோரும்
சொல்லுகிறோம். மனிதனுடைய வாழ்நாளை அதிக நாளாக்
கியதுகூட இந்த மின்சாரம்தான் என்று விஞ்ஞானிகள் கண்டு
பிடித்திருக்கிறார்கள். ஆனால்இந்த மின்சக்தியை நினைத்தவுடன்
அடுத்த ஆண்டு அல்லது அதற்கு அடுத்த ஆண்டு என்று நாம்
இதுவென்று உற்பத்தி செய்ய முடியுமா என்றால் முடியவில்லை.
நிலக்கரி மூலம் அனல் மின் நிலையத்தில் உற்பத்தி செய்ய
வேண்டுமானால் 5 வருடங்கள் ஆகிறது. புனல் மின் நிலையத்தின்
மூலம் மின் உற்பத்தி செய்ய வேண்டுமானால் ஏழெட்டு வரு
டங்கள் ஆகின்றன. அணு மின் நிலையத்தின் மூலம் உற்பத்தி
செய்ய வேண்டுமானால் பத்துப் பன்னிரெண்டு வருடங்கள் ஆகும்.
குறைந்தது ஐந்தாண்டுகள் மின்சக்தியை உற்பத்தி செய்வதற்குத்
தேவைப்படுகிறது.

(மாலை 5—10)

பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே திட்டங்கள் தீட்டப்பட்டு,
மைய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு எதிர்க்
கட்சித் துணைத் தலைவர் திரு. சித்தன் அவர்களும், மற்ற
நண்பர்களும் பேசும்போது, ஏற்கனவே மைய அரசுக்கு அனுப்பப்
பட்ட திட்டங்கள் குறித்து அவர்கள் சில விளக்கங்கள் கேட்டு,
அதற்கு மாதக் கணக்கில் தமிழக அரசு விளக்கங்கள் அனுப்பாத
தால், அனுமதி அளிப்பதற்கு தாமதம் ஏற்படுகிறது என்று தகவல்
வந்ததாகச் சொன்னார்கள். கடிதப் போக்குவரத்து அத்தனை
லயும் மேற்கு வங்க அரசு வெளியிட்டது போல், இந்த அரசும்
வெளியிடத் தயாராக இல்லை. இரண்டு அரசுகளுக்கும் இடையே
யுள்ள உறவுக்கு பங்கம் ஏற்படாமல் ராஜதந்திரமாக காரியங்கள்
நடைபெற வேண்டும். பொதுவாக நான் சொல்ல விரும்புவது,
பல்வேறு திட்டங்கள் காவிரி டெல்டாவுடன் இணைக்கப்பட்டுள்ள
தால், வேறு மாநிலங்களின் இசைவு இல்லை என்று கூறி மத்திய
அரசு அனுமதி தராமல் இருக்கிறார்கள். தேசிய ஒருமைப்பாடு
வேண்டுமென்று அன்னை இந்திரா காந்தி அவர்களின் பிறந்த
நாளன்று பேசும் பல்வேறு மாநில அரசுகளும், தங்கள் உரிமை
களுக்கு, நலன்களுக்கு பாதகம் இல்லாமல், தண்ணீரை மின்சாரம்
உற்பத்தி செய்வதற்கு கொடுக்க முன்வருமானால் பல்வேறு
திட்டங்களுக்கு நிச்சயமாக அனுமதி கிடைக்கும்.

மாநிலங்களிடையே நதி நீர் பங்கீடு தகராறு என்பதால்
மத்திய அரசு அனுமதி தராத திட்டங்கள் மேல் அமராவதித்
திட்டம், சண்முகா நதித் திட்டம், பவானி-கட்டளைக் கால்
வாய் திட்டம், நெல்லித்துறை திட்டம் ஆகியவைகளாகும்.
மேற்சொன்ன திட்டங்களுக்கு மாநிலங்களிடையே நதி நீர்
தகராறு இருக்கிறதென்பதால் மத்திய அரசினர் இசைவு



1986 நவம்பர் 20] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

தராமல் இருக்கிறார்கள். ஹொகேனக்கல் திட்டமும் அதில்
தான் அடங்கும். கர்நாடக அரசு இசைவு தராததால், மத்திய
அரசு அதைப் பற்றி பரிசீலிக்க மறுத்து வருகிறது. மத்திய
மின்சார அமைப்பு— Central Electricity Autherity
யிடமிருந்து பைக்காரா இறுதித் திட்டம், பரளியாறு திட்டம்,
சாத்தனூர் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு விரைவில் அனுமதி
பெற்றால், தமிழ்நாட்டினுடைய தேவைக்கான மின்சார
உற்பத்தியைப் பெருக்க உதவியாக இருக்கும்.

அடுத்து, பல அனல் மின் நிலையங்களுக்கு அனுமதி கொடுத்
தாலும், அந்த அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான மூலப்
பொருளான நிலக்கரியைப் பெறுவதில் தமிழ்நாட்டுக்கு மிகவும்
கசப்பான அனுபவம் இருக்கிறது. 2 மாத மின்சார உற்பத்திக்குத்
தேவையான நிலக்கரி ஸ்டாக் இருக்க வேண்டுமென்று சொல்லு
கிறார்கள். ஆனால் இன்றைய தினம் தமிழ்நாட்டின் நிலக்கரி
ஸ்டாக் 12 நாள், 15 நாள் என்ற நிலைதான் இருக்கிறது.
2 மாதத்திற்குத் தேவையானது இல்லை. அதுவும் தரமான
நிலக்கரியும் அனுப்பப்படுவதில்லை. மேட்டூரிலே டிசம்பர்
மாதம் நிலக்கரியை உபயோகப்படுத்தி மின் உற்பத்தி செய்யத்
தயாராக இருக்கிறோம். ஏற்கனவே மேட்டூரில் டிசம்பர்
மாதம் மின் உற்பத்தி செய்வதற்கு ஒதுக்கப்பட்ட நிலக்கரி
40,000 டன்களாகும். ஆனால் இதுவரை அனுப்பிய நிலக்கரி
10,000 சொச்சம் டன்கள்தான். ஆனால் மாதம் ஒன்றுக்கு
அங்கே தேவைப்படும் நிலக்கரி ஒரு லட்சம் டன்களாகும். எற்
கெனவே சிங்கரேணிக்குப் பக்கத்தில் ஒரு நிலக்கரிச் சுரங்கம்
இருக்கிறதென்றும், அதிலிருந்து நிலக்கரியை எடுத்துக்
கொள்ளலாம் என்று சொல்லிவிட்டு, இப்போது அந்த நிலக்கரிச்
சுரங்கம் சரியாக வேலை செய்யவில்லை, அங்கேயிருந்து நிலக்கரி
வராது, வேறு இடத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்று
சொல்லியிருப்பதோடு, எண்ணூருக்கு வரும் நிலக்கரியை மேட்டூ
ருக்கு எடுத்துக்கொள்ளுங்கள், அடுத்த ஆண்டு, அதாவது
1987-ல் மைய அரசின் கோல் லிங்கேஜ் கமிட்டி ஆய்வு செய்து
தகவல் தரும் என்று சொல்லுகிறார்கள். பல தடவை சம்பந்தப்
பட்ட அமைச்சரும், மாநில முதலமைச்சரும் கடிதம் எழுதி
யிருக்கிறார்கள். வேறு வழியில்லை. தமிழ்நாட்டில் நீரின்
மூலம் எவ்வளவு மின் உற்பத்தி செய்ய முடியுமோ அவ்வளவு
உற்பத்தி செய்துவிட்டோம். நமக்கு நெய்வேலியைத் தவிர
வேறு நிலக்கரி சுரங்கம் கிடையாது. அதுவும் 'லிக்னைட்'
ஆகும். இந்த நிலையில் தமிழ்நாட்டுக்கு நிலக்கரியை இறக்குமதி
செய்ய மத்திய அரசு அனுமதி தர வேண்டும். பல்வேறு பொருள்
களை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறார்கள்.
இப்போது வடநாட்டிலிருந்து வரும் நிலக்கரியில் 47 சதவிகிதம்
சாம்பல் சத்து இருப்பதால், திறன் 60 சதவிகிதம்கூட பெற
முடியாமல் இருக்கிறது.

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1986 நவம்பர் 20

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதற்காக பர்னேஸ் ஆயிலை உபயோகிக்கிறோம். அது இந்தியாவில் போதாமல் இருக்கின்றது. வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்கிறோம். ஆற்றலுள்ள நிபுணர்கள் தமிழ்நாட்டிற்குத் தேவையான நிலக்கரியை ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்வதால் எவ்வளவு பலன் கிடைக்கும்? அப்படி அனுமதிக்காவிட்டால் பல விதத்தில் எப்படி நஷ்டம் ஏற்படும் என்பதைப் பற்றியெல்லாம் மைய அரசுக்கும் மின்சார அமைச்சருக்கும் தெளிவாக அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதிலே யோசனை செய்வதற்கு எதுவுமேயில்லை. அது கோல் லிங்கேஜ் கமிட்டியாக இருந்தாலும், சென்ட்ரல் எலெக்ட்ரிசிடி அத்தாரிட்டியாக இருந்தாலும், அது பிளானிங் கமிஷனாக இருந்தாலும், அந்த ரிப்போர்ட்டைப் படித்தவுடன் வேறு வழியில்லாமல் தமிழ்நாட்டிற்கு இறக்குமதி செய்யச் சொன்னாலும் அதிலே யாருக்கும் ஆட்சேபணை இருக்காது. அயல்நாட்டு வியாபாரம் பெருகும். அயல்நாட்டு செலவாணி இதனால் செலவாகும் என்று பயப்பட வேண்டியதில்லை. ஆஸ்திரேலியாவிலிருந்து நிலக்கரியை தமிழ் நாட்டிற்கு இறக்குமதி செய்தால், அதிகமான மின் உற்பத்தி செய்யலாம், நாமும் ஆஸ்திரேலியாவிற்குத் தேவையான பொருள்களை அவர்களுக்கு ஆட்டோ பாரட்ஸ்களையும் மற்றபொருட்களையும், தமிழ் நாட்டிலும் வட இந்தியாவிலும் உற்பத்தி செய்கின்ற பொருள்களை இந்தியாவிலிருந்து அனுப்பலாம். பண்டமாற்று முறையில் அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கலாம். அதற்கு ஆஸ்திரேலியாவும் தயாராக இருக்கும். அந்த முறையில் மைய அரசு ஆஸ்திரேலியாவிலிருந்து உயர்தரமான அந்த நிலக்கரியை இறக்குமதி செய்யலாம். அதில் 15 சதவிகிதம் சாம்பல், ஆஷ் கன்டெண்ட் இருக்கின்றது. அந்த நிலக்கரியைக் கொடுப்பார்களானால் நிச்சயமாக தமிழ்நாட்டினுடைய அனல் மின் நிலையத்தினுடைய திறன் இன்னும் பன்மடங்கு அதிகமாகும். இப்போதே அது இந்தியாவினுடைய ஆவ்ரேஜ்-ஐ விட அதிகமாக இருக்கின்றது இன்னும் பன் மடங்கு அதிகமாகும். வட இந்தியாவிலிருந்து ரெயில்; கப்பல் மூலம் தூத்துக்குடிக்கு நிலக்கரி கொண்டுவர 5 நாள் 6 நாள் ஆகும் என்றால் ஆஸ்திரேலியாவிலிருந்து கப்பல் மூலம் வருகின்ற நிலக்கரி 5-வது நாள் மாலை அல்லது 6-வது நாள் காலை வரும். அந்த நிலக்கரியைத் தூத்துக்குடியில் கொண்டுவந்து கொடுத்து விடுகிறோம் என்று சொல்கின்றார்கள். தமிழ்நாடு இந்தியாவினுடைய தென் கோடியிலே இருக்கின்றது. நிலக்கரி வட பாகத்திலே இருக்கின்றது. அங்கேயிருந்து கொண்டுவருவதற்கு விலையும் அதிகமாக ஆகிறது.



1986 நவம்பர் 20] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

இந்த குறிப்பிலே கூட ஒரு டன்னுக்கு 350 ரூபாய் அதிகமாகிறது, என்று சொல்லப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல. அனுப்புகிற நிலக்கரி தரம் இல்லாதபோது, அத்துடன் $3\frac{1}{2}$ அடி $4\frac{1}{2}$ அடி நீள அகலமுள்ள கல் வருகிறது. இதுவரையில் அந்த மாதிரி கல் தூத்துக்குடி துறைமுகத்திற்கு வந்ததன் மதிப்பு 3 கோடி ரூபாய். அந்த 3 கோடி ரூபாய் மதிப்பிற்கு நல்ல கருங்கல்லை அனுப்பியிருக்கின்றார்கள். அது சம்பந்தமாக ஒப்பந்தப் பிரகாரம் நிலக்கரிதான் அனுப்ப வேண்டும். ஆனால் நிலக்கரி அனுப்பாமல் கல்லை அனுப்பியிருக்கிறார்கள். 3 கோடி ரூபாய் பெறுமானமுள்ள கல்லுக்கு நீங்கள் நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்று கோல் இந்தியாவிற்கும் நாம் எழுதியிருக்கிறோம். அந்த முறையில் நிலக்கரியை இறக்குமதி செய்வதற்கு வழிவகைகளை செய்ய வேண்டும். அணுமின் நிலையம் உற்பத்தி செய்வதும் மற்றொரு வரவேற்கக்கூடிய காரியமாகும். ரஷ்யா கூட ஆயிரம் மெகாவாட் 2 ஆயிரம் மெகாவாட் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட அணுமின் உற்பத்தி செய்கின்ற இயந்திரங்களை இந்தியாவில் ஏற்படுத்துவதற்குத் தயாராக இருக்கின்றார்கள். அதை நாம் பயன்படுத்திக்கொண்டு தமிழ்நாட்டிலே அணுமின் நிலையம் ஏற்படுத்தலாம். கூடங்குளத்திலே ஏற்படுத்த ஏற்கனவே கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாகவும் பல தடவை சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களும் தமிழக முதல்வர் அவர்களும் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். கூடங்குளத்திலே மாண்புமிகு குமரி அனந்தன் அவர்கள் கூட ஏதோ தண்ணீர் தகராறு இருக்கின்றது என்று சொன்னார்கள். அதற்கு தமிழ்நாடு அரசு உத்தரவாதமே கொடுத்து இருக்கின்றது. ஏற்கெனவே கூடங்குளத்திலே சைட் செலக்ஷன் கமிட்டி தேர்ந்தெடுத்திருக்கிறது. அந்தகமிட்டியால் தேர்ந்தெடுக்கப்பட்ட இடமாகும். அந்த இடத்திலே மேலும் ஒரு அணு மின் நிலையம் தமிழ்நாட்டிலே ஏற்படுவதற்கு இந்திய அரசு உதவ வேண்டும். அத்துடன் சென்னையிலே அமைப்பது போல காஸ் டர்பைன், மற்ற இடங்களில் ஏற்படுத்துவதற்கும் அவர்கள் முன்வர வேண்டும். நாகப்பட்டினம், குமரிக்கு பக்கத்திலே உள்ள இன்னொரு இடம், இன்னும் ஒரு இடம் என்று 3, 4 இடங்களில் நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட அனல்மின் நிலையம் ஏற்படுத்துவதற்கு இந்திய அரசு அனுமதி தர முன்வர வேண்டும். அதுபோலவே நாகப்பட்டினம், பறங்கிப்பேட்டை இன்னும் நரிமணம் போன்ற இடங்களில் உள்ள ஆஃப் ஷோர், ஆன் லேண்ட் டிரில்லிங்கைத் துரிதப்படுத்தி, ஓ.என்.ஜி.சி.யிடம் சொல்லி, எங்கெங்கு எரி வாயுக்கள், பெட்ரோல் கிணறுகள் கிடைக்கும் என்று ஆய்வு செய்து அதன் அடிப்படையிலே மின் உற்பத்தி செய்கின்ற நிலையங்களை ஏற்படுத்துவதற்கு மைய அரசு நமக்கு உதவி புரிய வேண்டும். தமிழ்நாடு மின் வாரியம் கடந்த சில ஆண்டுகளாக திறமையாகப் பணியாற்றியிருக்கிறது

என்பதை நீங்கள் நான் கொடுத்திருக்கிற புள்ளி விவரத்திலிருந்து படித்திருப்பீர்கள். அது தேவையான அளவிற்கு தொழிற்சாலைகளுக்கும், மற்றவர்களுக்கும் கிடைப்பதுடன் சில நலிந்தவர்களுக்கும் மெலிந்தவர்களுக்கும் இலவசமாக மின்சாரம் வழங்க வேண்டுமென்று இங்கே மாண்புமிகு உறுப்பினர்களில் பலரும் கேட்டதற்கு இணங்க இலவசமாக ஏழைகளுக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் மூலம் மின்சாரம் வழங்கி வருகிறோம். இப்படிப்பட்ட திட்டம் இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லை இதனால் அரசுக்கு 6 கோடி ரூபாய் செலவு ஏற்படுகிறது. அப்படி என்றால் 6 கோடி ரூபாய் மின்சார வாரியத்திற்கு ஆகின்ற செலவாகும். இலவசமாக 30–9–1986 வரை. கிட்டத் தட்ட 7,30,450 குடும்பங்களுக்கு இலவசமாக ஒரு விளக்குத் திட்டத்தின் மூலமாக மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து, ஏழை விவசாயிகளுக்கு மின்சாரத்தை இலவசமாக வழங்குகின்ற திட்டம் தமிழ்நாட்டிலே தான் இருக்கிறது. இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலேயும் இத்திட்டம் இல்லை. இத்திட்டத்தின்கீழ் ஒரு லட்சம் பேர் பயனடைந்திருக்கிறார்கள். இதனால் அரசுக்கு ஏற்பட்ட நஷ்டம், அதாவது செலவு 30 கோடி ரூபாய் ஆகும்.

எப்படி ஏழை எளியவர்களுக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் மின்சாரம் இலவசமாக வழங்கப்படுகிறதோ அது போல என்.ஆர்.இ.பி. மற்றும் ஆர். எல். இ. ஜி. பி. திட்டங்களின் கீழ் ஒடு போட்ட வீடுகள் கட்டப்படுகின்றனவே அவைகளுக்கும் இலவசமாக மின்சாரம் வழங்கப்படுகிறது. என்.ஆர்.இ.பி. திட்டத்தின் கீழ் 29,477 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின்கீழ் 41,945 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. ஆக மொத்தத்தில் 71,422 ஒடு போட்ட வீடுகளுக்கும் இலவசமாக மின்சாரம் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

அடுத்து, குழாய் கிணறு வாரியத்தின் சார்பாக ஆதி திராவிடர்கள், மலைவாழ் மக்கள், சிறிய விவசாயிகள், நலிந்தவர்கள் இப்படிப்பட்டவர்களுக்கு எல்லாம் இலவசமாக மின்சாரம் வழங்கும் திட்டத்தின் மூலம் 7,861 குடும்பங்கள் பயனடைந்திருக்கின்றன. மேலும் இதன்மூலம் 6,388 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.



அடுத்து, இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலுள்ள மின்சார வாரியத்தில் தான் எல்லா நிரந்தர ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை 1–7–1986 முதல் நடைமுறைப்படுத்தும் படி மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்மூலம் 65 ஆயிரம் பேர் பயனடைந்திருக்கிறார்கள்.

அடுத்து, ஒப்பந்தப் பணியாளர்களின் நலனுக்காக அவர்களும் பயனடையும் வகையில் எண்ணூரிலுள்ள அனல் மின் நிலையத்தில் கூட்டுறவு பணி மையம் ஒன்றை அமைத்து அதனுடைய பங்கு மூலதனத்தில் மின்சார வாரியமும் பங்கு ஏற்று அது சிறப்பாக பணியாற்றி வருகிறது. எண்ணூர் அனல் மின் நிலையம் 1985–86 ஆம் ஆண்டு 52.2 சதவிகித திறனை எட்டியதற்காக, மத்திய அரசிடமிருந்து சிறந்த பரிசு என்கிற வகையில் 3.68 லட்சம் ரொக்கப் பரிசை பெற்றிருக்கிறது. அதுபோல 62 சதவிகித திறனை 1984–85–ல் எய்தியதற்காக தூத்துக்குடி அனல் மின் நிலையம் மத்திய அரசிடமிருந்து 6 லட்சம் ரூபாய்க்கான ரொக்கப் பரிசை பெற்றிருக்கிறது. இந்த 9.68 லட்சம் ரூபாயையும் அந்தந்த அனல் மின் நிலையங்களில் வேலை செய்கிற ஸ்டாப் மற்றும் பணியாளர்களுக்குப் பகிர்ந்து சமமாக அளிக்கப்படும்.

அடுத்து, தமிழ்நாட்டின் சரித்திரத்திலேயே முதன் முதலாக தூத்துக்குடியிலுள்ள முல்லைக்காட்டில் 55 கிலோவாட் திறன் கொண்ட 10 காற்றாடி ஆலைகள் நல்லமுறையில் செயல்பட்டுக் கொண்டிருப்பது தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய சாதனையாகும். மேலும் 10 காற்றாடி ஆலைகளை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

மின்சார இணைப்பு இல்லாத கிராமமே தமிழ்நாட்டிலே இல்லையென்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று திருமதி பொன்னம்மாள் அவர்கள் இங்கே சொன்னார்கள். 30–9–1986 அன்று உள்ளவாறு தமிழ்நாட்டில் மின்சார வசதி பெற வேண்டிய பாக்கி கிராமங்கள் 6 தான். அடுத்த 6 மாதத்திற்குள் இந்த 6 கிராமங்களுக்கும் கூட மின் இணைப்பு கொடுக்கப்பெற்றுவிடும். இந்தியாவிலேயே உள்ள மொத்த விவசாயிகளும் பயன்படுத்துகின்ற பம்ப் செட்டுகளின் எண்ணிக்கை 40 லட்சமாகும். இதில் நான்கில் ஒரு பங்கு, அதாவது 10 லட்சத்து 74 ஆயிரம் பம்ப் செட்டுகள் தமிழ்நாட்டிலே மட்டும் இருக்கின்றன. இந்த 10 லட்சத்து சொச்சம் பம்ப் செட்டுகளில் 1 லட்சம் பம்பு செட்டுகள் சிறிய விவசாயிகளுடையதாகும். அந்த சிறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசனம் செய்வதற்கு மின்சாரம் இலவசமாக அளிக்கப்படுகிறது. விவசாயிகளினுடைய பம்பு செட்டுகளுக்கு ஒரு குதிரைச் சக்தி ஓட்டத்திற்கு ரூபாய் 75 வீதம் ஃப்ளாட் ரேட் கட்டணம் வசூல் செய்கிறது மின்சார வாரியம்

திரு. வி. வி. சுவாமிநாதன்] [1986 நவம்பர் 20

என்றும் அது அதிகமாக இருக்கிறது என்றும் உறுப்பினர்கள் விமர்சித்தார்கள். ஆனால் இதனால் ஏற்படும் செலவு, தமிழக அரசுக்கு அல்லது மின்சார வாரியத்திற்கு ஏற்படும் நஷ்டம் அல்லது இழப்பு 240 கோடியே 33 இலட்சம் ரூபாய் ஆகும். ஆனால் ஃப்ளாட் ரேட் மற்ற மாநிலங்களிலேயும் இருக்கிறது. உத்தரப் பிரதேசத்தில் ஃப்ளாட் ரேட் ரூ. 360 ஆகும்; இராஜஸ்தானில் ரூ. 324 ஆகும். பஞ்சாபில் ரூ. 227 ஆகும்; ஹரியானாவில் 288 ஆகும்; மராட்டியத்தில் ரூபாய் 100 ஆகும்.

தமிழ்நாட்டில் பெரிய விவசாயிகள் பம்பு செட்டுக்கு வசூல் செய்யப்படும் மின் கட்டணம் சராசரி 11 பைசாதான். ஃப்ளாட் ரேட் 75 ரூபாய் கட்ட வேண்டும் என்று சொன்னாலும் அதற்காக ஆகின்ற சராசரி செலவு 11 பைசாதான். ஆனால் ஃப்ளாட் ரேட் இல்லாத மற்ற மாநிலங்களில் மின்சாரம் எவ்வளவு விலையில் கொடுக்கப்படுகிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்** : பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன் சார்.

**மாண்புமிகு மாற்றுத தலைவர்** : டாக்டர் கே. சமரசம் : அமைச்சர் பேசி முடித்த பிறகு தயவு செய்து கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்** : ஃப்ளாட் ரேட் இல்லாத மாநிலங்களில் எவ்வளவு விவசாயிகள் கட்ட வேண்டியிருக்கிறது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அசாமில் 30 பைசா, பீகார் 37 பைசா, குஜராத் 34.49, பைசா கேரளாவில் 15.22 பைசா; மத்தியப் பிரதேசத்தில் 16 பைசா; ஒரிசாவில் 23.11 பைசா; மேற்கு வங்கத்தில் 35 பைசா.

தமிழ் நாட்டினுடைய மின்சார உற்பத்தி அனல் மின் நிலையங்களைப் பொறுத்தவரையில் மிகவும் அதிகமாகியிருக்கிறது. 1981-82ஆம் ஆண்டில் 3,174-ஆக இருந்தது 1985-86ஆம் ஆண்டு 5,696-ஆக ஆகியிருக்கிறது. புனல் மின் உற்பத்தி செய்வதில் தான் குறைந்திருக்கிறது. அதற்குக் காரணம் மழையின்மை. கடந்த பத்தாண்டுகளாக மழை எவ்வளவு வர வேண்டுமோ அது வரவில்லை. அது வராமல் போனதால்தான் நாம் புனல் மின் நிலையம் மூலம் பெற வேண்டிய மின் சக்தியைப் பெறாமல் இருக்கிறோம். சிலபேர் இப்படி பற்றாக்குறை இருந்துகொண்டே இருக்குமா என்று கேட்கிறார்கள். அது தவிர்க்க முடியாத ஒன்றாகும். நான் சொன்னதைப்போல இன்றைக்கு அனுமதி கொடுத்தால்கூட அனல் மின் நிலையம் துவக்கி அதில் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு ஐந்து வருஷங்கள் ஆகும்; புனல் மின்



1936 நவம்பர் 20] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

நிலையம் துவக்கினால் ஏழெட்டு வருஷங்கள் ஆகும். அணு மின் நிலையம் என்றால் பத்து பன்னிரெண்டு ஆண்டுகள் ஆகும். ஆகவே, நாம் திட்டங்களைத்தான் அதிகமாக இதிலே துவக்குவதற்கு முன்வர வேண்டும்.

திரு. சித்தன் அவர்கள் மின்னிழப்பைப்பற்றிப் பேசினார்கள். நான் இதற்கு முன்பே ஒரு கேள்விக்குப் பதில் சொல்கின்ற பொழுதுஇந்தியாவினுடைய ஆவரேஜையும், தமிழ்நாட்டினுடைய ஆவரேஜையும் ஒப்பிட்டேன். அதை அமைச்சரவர்கள் சொல்வார்கள் என்று சொன்னார்கள். மேலும் இந்தத் திருட்டையும் கண்டு பிடிக்க வேண்டும் என்று சொன்னார்கள்

திருட்டைக் கண்டு பிடித்ததன் மூலம் 1986 ஆகஸ்ட் மாதம் வரையில் 345 இலட்சம்—சுமார் 3 கோடிக்கு மேல் 1986-இல் மட்டும் இந்த மின்வாரியத்திற்கு வருமானம் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. இதைப் பெரியவர்கள் செய்கிறார்கள் என்று மின்சார வாரியம் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் இல்லை. அதுவும் ஒரு பெரிய தொழில் அதிபர் திருட்டைக் கண்டுபிடித்தவுடன் அவர் கைது செய்யப்பட்டு கோர்ட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

அது மாத்திரம் அல்ல. மின்சார வாரியம் இந்த பர்னஸ் ஆயிலை உபயோகப்படுத்துவதில் அதிக அயல் நாட்டுச் செலாவணி செலவழிகிறது, அதைக் குறைக்க வேண்டும் என்ற முறையில் குறைத்து, அது மிகவும் பயன் உள்ளதாக ஆகி, அதன் மூலம் மின்சார வாரியத்திற்குக் கிடைத்த இலாபம் மாத்திரம் 42 கோடி ஆகும். அதிலே ஆல் இந்தியா சராசரி இந்த பர்னஸ் ஆயிலைக் குறைப்பதில் 20 மில்லி லிட்டர் ஒரு யூனிட்டிற்கு ஆகும். ஆனால் அதைவிட நம்முடைய மின்சார வாரியம் எண்ணூரிலும், தூத்துக்குடியிலும் முறையே 7.80, 9.86 மில்லி லிட்டா ஒரு யூனிட்டிற்கு என்ற சாதனையைச் செய்திருக்கிறார்கள்.

(மாலை 5—30)

அதைப்போலவே மின்வாரியம் அனல் மின் நிலையங்களின் உள்ளே இருக்கிற பொருள்களை சரியாக இயக்குவதன் மூலம், எவ்வளவு மிச்சப்படுத்தியிருக்கிறார்கள் என்றால் அந்த வகையிலே சுமார் 3 கோடி ரூபாய் மிச்சப்படுத்தியிருக்கிறார்கள். அதைப் போன்று பல்வேறு முறைகளில் அவர்கள் நல்ல காரியங்களை ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1986 நவம்பர் 20

தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டதாகச் சொன்னார்கள். தொழிலாளர்களுக்கு பல்வேறு வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெங்கசாமி அவர்கள் கூட படித்துக் காட்டினார்கள். ஆனால் ஏற்கெனவே அவர்களுக்கு என்னென்ன செய்து கொண்டிருக்கி றோம் என்ற விவரத்தை தெரிவிக்க விரும்புகிறேன். அத்துடன் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு.என். எஸ். வி. சித்தன் அவர்கள் வாரிசுதாரர்களுக்கு வேலை கொடுப்பது பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள். ஒரு சர்க்கார் ஆணையைப் படித்துக் காட்டினார்கள். அதன்படி மின்வாரியத்தில் வேலை கொடுக்கவில்லை என்ற குறையை இங்கே தெரிவித்தார்கள். அரசு உத்தரவில் என்ன சொல்லியிருக்கிறதோ அந்த முறையில் தான் மின்வாரியத்திலும் செய்யப்படுகிறது.

அரசு ஊழியர் ஒருவர் பணியில் இருக்கும்போது இறந்து போனால் அவருடைய வாரிசு ஒருவருக்கு, அந்தக் குடும்பத்தில் வேறு யாரும் வேலையில் இல்லை என்றால், அவருக்கு காலியாக உள்ள இடம் அல்லது தேவையான தகுதியைப் பெற்றிருந்தால் அதற்குத் தகுந்த வேலை கொடுக்கப்படும் என்று அரசு உத்தரவில் கூறப்பட்டிருக்கிறது. அந்த முறையில் எவ்வளவு பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1979-லிருந்து இன்றுவரையில், அதாவது 1986 வரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த முறையில் இறந்து போனவர்களுடைய வாரிசுகள் 2,640 பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. தற்போதுள்ள மின்சார வாரியத் தலைவர் வந்த பிறகு இந்த முறையில் 1,085 பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த சர்க்கார் பிறப்பித்த ஆணைக்கு முரணாக மின்சார வாரியம் அல்லது மின்சார வாரி யத்தின் தலைவர் வேலை கொடுக்கவில்லை என்பதை மாண்பு மிகு உறுப்பினர்கள் தனியாக கடிதம் எழுதியோ அல்லது வேறு வகையிலோ தெரிவித்தால் அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று, 1984 ஆம் ஆண்டில் மின்சார வாரியத் திற்கும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் ஏற்பட்ட உடன் படிக்கை பிரகாரம் சம்பள உயர்வு, பணிப் பளு இரண்டையும் சேர்த்து தகுந்த ஆலோசனை செய்து, அதன் மூலம் எடுக்கப் பட்ட முடிவின் அடிப்படையில் 23,060 வேலையாட்கள் தேவை யில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அப்படி எடுத்த முடிவின் அடிப்படையில் எந்த ஒரு தொழிலாளியும் பதவியிலிருந்து நீக்கப்படவில்லை என்றும் தொழிலாளர்கள் பழிவாங்கப்படவில்லை என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அது



1986 நவம்பர் 20] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால் கடிதம் மூலமாகவோ அல்லது வேறு வகையிலோ தெரிவித்தால். தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, 'காஷுவல் லீவ்' வேண்டுமென்று சொன்னார்கள். அரசு ஊழியர்களுக்கு 12 நாட்கள் தான் காஷுவல் லீவ் கொடுக் கிறார்கள். தற்போது 15 நாள் காஷுவல் லீவ் கொடுக்கப்படுகிறது.

'ஃப்ரீ எலெக்ட்ரிசிட்டி' பற்றிச் சொன்னார்கள். இப்போது ப்ராஜக்ட் ஜெனரேஷன் சர்க்கிள்ஸ் இருக்கிற இடங்களில் பணி யாற்றுகின்றவர்களுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்படு கிறது. அதைப் போலவே 'சப் ஸ்டேஷன்'களில் இருக்கிற ஸ்டாப்களுக்கும் இலவசமாக மின்சாரம் வழங்கப்படுகிறது.

'மெடிக்கல் அலவன்ஸ்' பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். நோய்வாய்ப்பட்டு அவர்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று, மருந்து வாங்கிய அல்லது சிகிச்சை பெற்ற செலவுக்கான 'பில்லை' அனுப்பினால் அந்தப் பணத்தைத் திருப்பிப் பெற்றுக்கொள்ளலாம் என்ற வகையில் ஆண்டு ஒன்றுக்கு 5 இலட்சம் ரூபாய் மின்சார வாரியம் ஒதுக்கி உள்ளது. அது அல்லாமல் மின்சார வாரியமே பல இடங்களில் பிராஜக்ட் அண்டு பவர் ஹவுசுக்கு பக்கத்தில் மருத்துவ மனைகளை வைத்திருக்கிறார்கள். மருந்தகங்களையும் வைத்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து, லீவ் டிராவல் கன்சஷன், எல்.டி.சி. வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அது நியாயம் தான் என்று ஏற்றுக் கொண்டு மின்சார வாரியம் அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறது. அரசு அதைப்பற்றி விரைவிலே முடிவு எடுத்து, முதல்வா அவர் கள் ஆணை பிறப்பிப்பார்கள்.

அடுத்து, ஷிப்டிங் ஆப் சர்வீஸ். ஏற்கனவே ஒரு இடத்திலே பம்ப் செட் வைத்திருந்தும், அங்கே இப்போது தண்ணீர் கிடைக்கவில்லை. வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்றால், நாங்கள் வேண்டிய உபகரணங்களை கூட வாங்கிக் கொடுக்கிறோம். என்று இங்கே எடுத்துச் சொன்னார் கள். அப்படி அது உண்மையானதாக இருந்தால் அதை பரி சோதனை செய்து கொடுப்பதற்கு ஆட்சேபனை இல்லை என்று மின் வாரியம் தெரிவிக்கிறது.

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1986 நவம்பர் 20

பொதுமக்களுக்கும், மின்சார வாரியத்திற்கும், பொது மக்களின் பிரதிநிதிகளுக்கும் மின்சார வாரியத்திற்கும நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். அது பற்றி விசாரித்தபோது 'கிரிவன்ஸ் டே' என்று குறைகளை போக்குகிற நாள் என்ற முறையில் மாதத்திற்கு இரண்டு தடவை சென்னையிலும், வெளி ஊர்களில் மாதததிறகு ஒரு முறையும் கூட்டி, குறை போக்கும் தினத்தை நடத்துவதாக சொல்லுகிறார்கள். அதிலே பொதுமக்கள் சென்று பார்க்க வேண்டும். அங்கே அதிகாரிகள் 2 மணியிலே இருநது மாலை 3 மணி வரை பொது மக்களுடைய குறைகளை கேட்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். மின்சார வாரியத் தலைவர் கூட தினமும் 1 மணியிலிருந்து 2 மணி வரையில் குறைகளைக் கேட்பதற்காக தம் அலுவலகத்தில் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் போதிய விளம்பரம் இல்லாமல் இருக்கிறது.

ஒரு டிவிஷனல் இன்ஜினியர்ஸ் ஒரு கோட்டத்திற்கு வந்தால் மக்களுடைய குறைகளைக் கேட்டு, அல்லது மக்களுடைய பிரதிநிதிகளைப் பார்த்து என்ன தேவை என்று கேட்பதற்கு சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்கள், அல்லது நகரசபைத் தலைவர், ஒன்றிய பெருந்தலைவர் போன்றவர்களுக்கு முன் கூட்டியே அறிவிப்புக் கொடுக்க வேண்டும். இல்லை என்றால் ஒரு மாதத்தில் 3-வது சனிக்கிழமை, 2வது சனிக்கிழமை அன்று வந்து குறை கேட்பார்கள் என்று நிரந்தரமாக ஒரு நாளில் நிச்சயமாக வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் அப்படி அன்றைக்கு அந்த நாளில் வரவில்லை என்றால், மறுநாளாவது கட்டாயமாக வருவார் என்ற முறையில், முறைப்படுத்தப்பட்டு சரியான விளம்பரமும் கொடுத்தால் மின்சார வாரியத்திற்கும், பொது மக்களுக்கும் அல்லது பொது மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டு வந்திருக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட வாய்ப்பு இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

இப்போது கூட மாநில மின்சார ஆலோசனைக் குழுவைக் கூட்டச்சொல்லியிருக்கிறோம். கூட்டுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

அடுத்து, வாலண்டரி டிஸ்குளோசர் என்ற திட்டம் முன்பு இருந்ததாகச் சொன்னார்கள். ஏற்கனவே அந்தத் திட்டம் இருந்ததாகவும், 1979லும் 1984லும் இருந்ததாகவும், அதன் மூலம் சிலர் அந்தச் சலுகைகளை தவறாகப் பயன்படுத்திக் கொள்ள முயல்வதால் அது நிறுத்தப்பட்டது என்றும், ஆனால் இன்னமும் அது பற்றி வேண்டும் என்றால் ஏற்பாடு செய்யலாம் என்றும் வாரியம் சொல்கிறது. இன்றைக்குக் கூட முன்னாள் சட்டமன்ற மேலவை உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி அவர்கள்



1986 நவம்பர் 20] [திரு. வி. வி சுவாமிநாதன்]

ஒன்றைக் குறிப்பிட்டு காலதாமதம் ஆகிறது என்று சொன்னார் கள். உறுப்பினர் குறிப்பிட்டு என்ன காரணம் என்று சொல்வார் களேயானால் அது பற்றி துரிதமாகப் பரிகாரம் காணுவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.

நேற்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ரவீந்திரன் அவர்கள் பேசும்போது திருவண்ணாமலையிலே உள்ள ஒரு சூப்ரிண்டென்டிங் என்ஜினியருடைய பி.ஏ. வெங்கடரமணன் என்பவர் மீது திடீர் என்று நடவடிக்கை எடுத்தார்கள். அவர் வாலண்டரியாக ராஜினாமா கொடுத்தார்கள். இருந்தாலும் மின்சார வாரியம் விடவில்லை என்று சொன்னார்கள். நானும் அதுபற்றி கேட்கிறபோது பெரிய கொடுமை நடந்து விட்டதாக எண்ணினேன். ஆனால் விவரம் என்னவென்று சொன்னால், அவர் அங்கு பி.ஏ.-வாக இருந்த 4 மாத காலத்திற்குள், இந்த மருத்துவ வசதி என்ற பெயரால் 2.35 இலட்சம் ரூபாய்க்கு பில் சாங்ஷன் பண்ணுவதற்கான ஏற்பாடு செய்ததாக வும், அது சம்பந்தமாக விஜிலன்ஸ் நடவடிக்கை எடுக்கக்கூடும் என்று கேட்டவுடன் அவர் முன் கூட்டியே ராஜினாமா செய்த தாகவும் ; அதையும் பிற்பாடு மின்சார வாரியம் நடவடிக்கை எடுப்பதற்கு முன்பு, நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று அவரே அங்குள்ள முன்சீப் கோர்ட்டில் வழக்கு தொடுத்ததாகவும் தகவல். அவர் ரிடையர் ஆனாலும, கணக்கு வழக்குகளை தீர்க்க முடியுமா, முடியாதா என்ற நிலைமைக்குக் காரணம் அவர் தொடுத்த வழக்கே தவிர மின்சார வாரியம் இதற்குக் காரணம் இல்லை.

(மாலை 5.40)

மின்சார வாரியத்தின் பணிகள், திறன் இவைகளையெல்லாம் பற்றி தங்களுக்கு ஏற்கனவே புத்தகம் மூலமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டின் விமர்சனம் பற்றி மாண்புமிகு சித்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்னும் பல்வேறு குறைகளை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். சென்ற பட்ஜெட் விவாதத்தின் போது மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன பல்வேறு கருத்துக்களுக்கு மின்சார வாரியம் பதில் எழுதியதோடு, அச்சடித்தும் வழங்கி இருக்கிறது. நான் ஏதாவது சொல்ல விட்டுப் போயிருந்தால், விட்டுப் போனவைகளுக்கு முக்கியமாக உறுப்பினர்கள் அனைவரும் சப்-ஸ்டேஷன் வேண்டுமென்று சொன்னது, பல்வேறு பிரச்னைகளுக்கு என்ன பரிகாரம் என்பதைப் பற்றி மின்வாரியம் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு பதில் எழுதுவதோடு, அவைகளை அச்சடித்து அனைவரும் தெரிந்து கொள்வதற்கு வைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தெரு விளக்குகளைப் பொறுத்த வரையிலும், நகரப் பஞ்
சாயத்துகள், முனிசிபாலிட்டிகள் இவைகளைத் தவிர, மற்றவை
களுக்கு உள்ளாட்சிகளுடன் இணைந்து விளக்குகள் எரிவதற்கு
நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏதாவது இணைப்புகள்
துண்டிக்கப்பட்டு விளக்குகள் எரியாமல் இருந்தால் அதனை சரி
செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மின்சார
அமைச்சகமும், உள்ளாட்சித் துறை அமைச்சகமும் இணைந்து
தெரு விளக்குகள் எரிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வரு
கிறது. ஏற்கனவே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவு
பிறப்பித்து, அவர்கள் அந்தந்த உள்ளாட்சிகளுக்குத் தேவையான
மின் விளக்குகளை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று ஆணைகள்
பிறப்பிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நினைவு
படுத்தப்பட்டு, அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** துணைத் தலைவர் அவர்களே,
நான் பேசிய போது குறிப்பிட்ட பணியின் போது விபத்தின்
காரணமாக, நோயின் காரணமாக இறந்த பணியாளர்களின்
450 குடும்பங்களில் ஏழை விதவைகளுக்கு, கண்ணீரும் கம்பலை
யுமாக இருக்கிற விதவைகளுக்கு மனிதாபிமான அடிப்படையில்
முன்னாள் அமைச்சர் அவர்கள் மேலவையில் கொடுத்த வாக்
குறுதியின்படி வேலை தரவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்
திருந்தேன். ஒரு அரசாங்கம் கொடுத்த வாக்குறுதியை அடுத்து
வருகிற அரசாங்கம் நிறைவேற்றுவது என்பது ஒரு மரபு. இதற்கு
முன்னால் இருந்த அமைச்சர் அவர்கள் கொடுத்த உறுதிமொழி
யை இப்போது புதியதாக பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற
அமைச்சர் அவர்கள் நிறைவேற்றுவார்களா ? இது முக்கியமான
பிரச்னையாக இருப்பதால் இதிலே மாண்புமிகு அமைச்சர்
அவர்களுடைய உறுதிமொழியை, வேலை போட்டு கொடுக்க
வேண்டுமென்பதற்கான உறுதி மொழியை நான் எதிர்பார்க்
கிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** துணைத் தலைவர்
அவர்களே, இதுபற்றி மாண்புமிகு முதல்வர் அவர்களுடன்
கலந்து நான் அறிவிக்கிறேன். அத்துடன் நான் இன்னொன்றைச்
சொல்ல மறந்து விட்டேன். சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்
பினர் மாண்புமிகு துரைசாமி அவர்கள் மின் அழுத்தத்தைப்
பற்றி தன்னுடைய தொகுதியை மட்டும் குறிப்பிட்டுச் சொன்
னார்கள். சென்னையில் பொதுவாக மின் அழுத்தம் குறைவாக
வும், அடிக்கடி ஏற்றத் தாழ்வாகவும் இருப்பதை நன்றாக அறிந்
திருக்கிறோம். ஆசியா முன்னேற்ற வங்கி இந்த வட சென்னை
அனல் மின் நிலையம் செயல்படுவதற்கு 180 முதல் 185 கோடி
ரூபாய் வரையில் உதவி செய்ய முன் வந்திருக்கிறார்கள். அவர்





களை கலந்தபோது, சென்னை மாநகரத்தை எந்தவிதமான மின்
அழுத்தக் குறைவும் இல்லாமல், ஏற்றத்தாழ்வும் இல்லாமல்,
ஜீரோ எரர் என்ற நிலையில் உன்னதமான லட்சிய மாநகராக
ஆக்குவதற்கு 75 கோடி ரூபாய் செலவில் திட்டம் தீட்டச் சொல்லி
யுள்ளார்கள். அதற்கு பணம் தருவதற்கு அவர்கள் தயாராக
இருக்கிறார்கள். அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்
களிடம் சொல்லி விரைவில் அறிவிப்பு செய்வோம் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி :** துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய
அமைச்சர் அவர்கள் பல விவரங்களைக் கொடுத்தார்கள்.
ஹைட்ரோ எலக்ட்ரிக் ஸ்கீம் மத்திய அரசினுடைய ஒப்புதல்
கிடைக்காமல் இன்னும் தாமதமாகிக் கொண்டிருக்கிறது என்ற
விவரங்களைச் சொன்னார்கள். பாண்டியாறு-புன்னம்புழா
ஸ்கீம் 100 மெகாவாட் மின்சாரம் நமக்கு வருவது. அது திட்டக்
கமிஷன் உள்பட, மத்திய அரசு உள்பட சாங்ஷன் பண்ணியுள்ள
ஒன்று. அதற்கான ஆரம்ப வேலைகள் கூட செய்யப்பட்டு,
அங்கு தொழிலாளர்களை அனுப்பி சில மாதங்கள் வேலைகள்
நடந்தன. அதற்குப் பிறகு அது நிறுத்தப்பட்டுவிட்டது. அந்தத்
திட்டத்தை அமலுக்கு கொண்டு வருவதிலே தண்ணீர் பங்கீட்டில்
என்ன பிரச்னை இருக்கிறதோ அதை பின்னாலே பேசி தீர்த்துக்
கொள்ளலாம். 100 மெகாவாட் மின்சாரம் இந்தத் திட்டத்தில்
உற்பத்தியாகும் என்பதால் அதை அமலுக்கு கொண்டுவர நட
வடிக்கையெடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சோளட்டிப்புழா,
நீலகிரி மாவட்டத்திற்கு பக்கத்தில் 60 மெகாவாட், பாண்டி
யாறு-புன்னம்புழா 100 மெகாவாட், நீலகிரிக்கு அருகில் உள்ள
திட்டங்கள் போன்றவைகளுக்கு எல்லாம் ஏற்கனவே புரா
ஜெக்ட்கள் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டு இருக்கின்றன.
அந்த புராஜக்ட்டுகளுக்கு கேரள அரசு அனுமதி தராமல்
இருக்கிறது. குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் சொன்ன
அந்த பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்திற்கு அவர்கள் சம்
இசைவு தரவில்லை. கேரள முதல்வர் அவர்களையும், சம்
பந்தப்பட்டவர்களையும் மீண்டும் சந்தித்து, இந்தத் திட்டத்
திற்கு அனுமதி பெற்று, விரைவில் அமுல்படுத்த நட
வடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் துணை
தலைவர் அவர்களே, தனியார் வீடுகளுக்கு மின் இணைப்பு
கொடுக்கும் போது மீட்டர்களை வாங்கித் தரச் சொல்கிறார்
கள். அதேபோல் மின் இணைப்பு சாதனங்களை எல்லாம்
தனியார்களையே வாங்கித் தரச் சொல்கிறார்கள். பிறகு மீட்

(திரு எ. எஸ். ஏ. ஆறுமுகம்) [1986 நவம்பர் 20

டர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை மட்டும் கொடுத்து,
மீட்டர் வாடகையை நாம் போட்டு வாங்குகிறோம். அப்படி
இருக்கும்போது, மீட்டர்களை அதிகமாக வாங்கி வைத்து,
பற்றாக்குறை இல்லாமல், மின் இணைப்புகளை உடனே
கொடுக்கவும், அதேபோல் விவசாயிகள் பல ஆண்டுக்காலமாக
அரசாங்கத்திலே கடன் வாங்கி, பம்ப் செட்டுகளையும் மோட்
டார்களையும் வாங்கி வைத்துக் கொண்டு, மின் இணைப்பு
இல்லாமல் கஷ்டப்படுகிறார்களே அவர்களுக்கும், துரிதமான
மின் இணைப்பு கொடுப்பதற்கும் அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, வீடாக இருந்தாலும், அது
விவசாயிகள் உபயோகப்படுத்துகிற பம்ப் செட்டுகளாக இருந்
தாலும், மீட்டர்கள் விரைவில் கிடைப்பதற்கு இப்போது நட
வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பெ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுக்கும், பேரு
ராட்சிகளுக்கும் இந்த மின் விளக்குகள், மற்றும் உதிரிப் பொருட்
களை வாங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருடைய அனுமதி
வருவதற்குள் கிராமத்தில் உள்ளவர்கள் இப்போது
மின் விளக்கிலே பழக்கப்பட்டுவிட்டதாலே, பல பிரச்சனைகள்
உருவாகின்றன. எனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்
இருக்கிறபோது, அந்தக் கவுன்சிலுக்கே பூர்ண அதிகாரம்
வழங்கி, மின் விளக்கு சம்பந்தப்பட்ட பொருட்களை வாங்கு
வதற்கு அரசாங்கம் உடனடியாக உத்தரவு பிறப்பிக்குமா?
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, இது நான் சார்ந்திருக்
கிற இலாக்கா சம்பந்தப்பட்ட கேள்வியாக இல்லாவிட்டாலும்
சம்பந்தப்பட்ட உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை
நேரிலே 2, 3 நாட்களுக்கு முன்பு சந்தித்து நான் இதுபற்றி
பேசினேன். விரைவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த
ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள் போன்றவைகளே விளக்கு
களை வாங்கி அவைகளை எரிய விடுவதற்கு சுதந்திரம் கொடுப்
பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள்.

திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் தமிழ்நாட்டில்
மின் துறையினுடைய அனுமதி பெற்று, இவர்கள் நோட்டிஸ்
கொடுத்து, விவசாயிகள் மோட்டார்களை வாங்கி வைத்து
ரெடியாக இருங்கள், மின் இணைப்பு தருகிறோம் என்று
சொல்லி, அதன்பிறகு விவசாயிகளும் அவைகளை வாங்கி



1986 நவம்பர் 20] [டாக்டர் கே. சமரசம்]

வைத்திருக்கிறார்கள். கடந்த 3 ஆண்டுக் காலத்திற்கும் மேலாக
அந்த மோட்டார்கள் காத்துக் கொண்டு இருக்கின்றன. அதற்கு
உடனடியாக மின் இணைப்பு தர வேண்டும் என்று கேட்டுக்
கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதற்குத் தகுந்த
ஒரு நல்லா தரவை தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, போதிய மின்சாரம் இல்லாததால்தான்,
மின்சாரத்தை வழங்க முடியாததால்தான் இந்த பம்பு செட்டு
களுக்கு இணைப்பு கொடுக்கப்படாமல் இருந்து வருகிறது,
இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆகும் என்று கேட்டார்கள்.
ஆண்டுக்கு 40 ஆயிரம் என்றால்கூட, 10 ஆண்டுகளாகும். ஆகவே
தான் குறுகிய காலத்திலே மின் உற்பத்தியைப் பெருக்கினால்
அன்றி, விவசாயிகளுடைய பம்ப் செட்டுகளுக்கு கொடுக்க
முடியாது. தற்போது பிரயாரிட்டி சிஸ்டத்திலேதான் மின்
சாரம் வழங்குகிற முறை நடந்து கொண்டிருக்கிறது. மாண்பு
மிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதிலே ஏதாவது விதிவிலக்கு
அளிக்க முடியுமா என்பதை மின்சார வாரியம்தான் ஆய்வு
செய்யும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, நம்முடைய புரட்சித் தலைவர் அரசு கிராமத்திலே
இருக்கக்கூடிய ஏழைகளுக்கு குடிசைக்கு ஒரு விளக்கு கொடுத்து
இருக்கிறது. அதனால் கிராமத்து ஏழைகள் குடிசைக்கு
ஒரு விளக்கு வசதியைப் பெறுகிறார்கள். ஆனால் நகரத்து
ஏழைகள் அந்தப் பலனை அனுபவிக்க முடியாமல் தவிக்கிறார்
கள். ஆகவே நகரத்திலே இருக்கிற, மாநகராட்சி, நகராட்சி,
டவுன் பஞ்சாயத்து போன்றவைகளில் இருக்கிற குடிசைகளுக்
கும் விளக்கு வசதியைக் கொடுப்பதற்கு உரிய வழிவகையை
மேற் கொள்ள முடியுமா, இது ஒன்று. இரண்டாவதாக வி.ஐ.பி.
கோட்டாஸ் என்று முன்பு இருந்தது. அவர்களுக்கு முன்னுரிமை
கொடுத்து மின் சப்ளை கொடுப்பார்கள். அதை நடைமுறைப்
படுத்தி மின் சப்ளை கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

மூன்றாவதாக 2 அடி குழல் விளக்குகளை 4 அடி குழல்
விளக்குகளாக மாற்றவேண்டும் என்று வாரியம் முன்பே திட்ட
மிட்டு செயல்பட்டு வந்தது. அது முழுமையாக இன்னும் முடிய
வில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
அமைச்சர் பேசிய பிறகு விளக்கம் கேட்கும்போது, சுருக்கமாகத்
தான் விளக்கம் கேட்க வேண்டும். நீங்கள், ஒன்று, இரண்டு
என்று அடுக்கிக் கொண்டே போகக் கூடாது. சந்தேகம் இருந்

தால் அதை மட்டும் தான் கேட்க வேண்டும். சீக்கிரம் கேட்டு முடியுங்கள். மின்சார வாரியத்தின் மீது இரண்டு நாட்கள் விவாதம் நடந்திருக்கிறது.

டாக்டர் சே. சமரசம் : ஆகவே, அந்த 2 அடி குழல் விளக்காக இருப்பதை 4 அடி குழல் விளக்காக மாற்றும் திட்டம் இன்னும் முழுமையாக பூர்த்தி அடையவில்லை. எனவே அதை நிறைவேற்றுவதற்கும் வழிவகை செய்யப்படுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

(மாலை 5–50)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவைகள் எல்லாம் கொள்கை சம்பந்தமாக முடிவு எடுக்கப்பட வேண்டிய விஷயம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை கேட்டுத் தான் சொல்ல முடியும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரையில் ஆர். எல். இ. ஜி. பி., என். ஆர். இ. பி. திட்டத்தின் மூலம் கட்டக் கூடிய வீடுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும் என்று சொன்னார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் தாட்கோ மூலம் அதுவும் குடிசை வீடுகளைத் தான் மறுபடியும் இடித்துக் கட்டுகிறோம். ஆகவே தாட்கோ மூலம் கட்டுகின்ற அந்த வீடுகளுக்கும் இந்த இலவச மின்சாரம் வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவும் கொள்கை பற்றிய முடிவு ஆகும். இதைப் பற்றி மின்சார வாரியமும் முதலமைச்சரும் கலந்து முடிவு எடுக்க வேண்டும்.

திரு. கே. குப்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இந்த வாலண்டரி டிஸ்குளோசர் ஸ்கீம் கைவிடப்பட்டதாகச் சொன்னார்கள். அது கடைப்பிடிக்கப்பட்ட நேரங்களில் பயன்படுத்தப்பட்ட மோட்டார்கள் இன்னும் ரெகுலரைஸ் செய்யப்படவில்லை. அதை ரெகுலரைஸ் செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ரெகுலரைஸ் செய்வதற்கு மனு கொடுக்கப்பட்டு இருந்தால் அவைகள் பற்றி முடிவு எடுக்கப்படும். மிகவும் அவசரமானது, தீவிரமானது என்றால் மின்சார வாரியத் தலைவர் அவர்களிடம் சொன்னால், அவரும் நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் மத்திய பகுதியான ஒரு விஷயத்திற்கு அமைச்சருடைய தொகுப்பிலிருந்து பதில் கிடைக்க வில்லை. ஆகவேதான் நான் இந்தப் பிரச்சினைகளைக் கிளப்ப விரும்புகிறேன். தமிழ்நாட்டில் மின்சார பற்றாக்குறையை ஈடு செய்வதற்கு உரிய திட்டங்களை நிறைவேற்ற மாநில அரசில் இருக்கக்கூடிய நெருக்கடியே நிதி பற்றாக்குறை என்று தான் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நிதி பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு உரிய வருவாய்க்கு உரிய வாயில்கள் எது என்பதை ஆக்கப்பூர்வமான முறையில் அவர்களுடைய தொகுப்பில் சொல்லுவார்கள் என்று எதிர் பார்த்தேன். ஏமாந்தேன். ஆனால் அதுபற்றி ஏதாவது இருக்கிறதா என்பதோடு அதற்கு ஆலோசனையாக நான் ஒன்றை வலியுறுத்தினேன். இப்போதும் வலியுறுத்த விரும்புகிறேன். வருடம் ஒன்றுக்கு 132 கோடி ரூபாயை வட்டியாக மத்திய அரசுக்கு கொடுத்துக் கொண்டு இருப்பதைத் தள்ளிப் போட வேண்டும் அல்லது ரத்து செய்ய வேண்டும் என்று மத்திய அரசுக்கு ஒரு நிலையை மாநில அரசு மேற்கொண்டு மின்சார வாரியத்தின் மூலம் எழுதுமா? அப்படி எழுதுவதன் மூலம் கடன் சுமை குறையுமே என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த வட்டியை தள்ளிச் செலுத்த தள்ளச் செய்ய வேண்டும் அல்லது கொஞ்ச காலம் தள்ளி செலுத்துவதற்கு அனுமதி வேண்டும் என்று கேட்பதற்கு நமது அரசு தயாராக இருக்கிறது. அத்துடன் ஜப்பான், ஸ்பெயின், இட்டாலி போன்ற நாடுகளுடன் தொடர்பு கொண்டு அவைகள் தமிழ் நாட்டுக்கு உதவி செய்யுமா, இந்த மின் சக்தியை உற்பத்தி செய்வதற்கு, என்பது பற்றியும் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியின் மின் அழுத்தத்தை குறைப்பதற்கு 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து இருப்பதாகச் சொன்ன மாண்புமிகு அமைச்சருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மின்சார மீட்டர்களைப் பொறுத்தவரையில் ஒரு சின்ன சங்கடம் இருக்கிறது. டாக்டர்

சௌரிராஜன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை நான்
குறிப்பிட வேண்டும் என்று இருந்தேன், நேரம் இல்லாத காரணத்
தால் பேச முடியவில்லை. இப்போது மாண்புமிகு அமைச்சரின்
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன், வீட்டுக்கு இணைப்பு
கொடுக்கும்போது மின்சார மீட்டர்களை மின்சார வாரியம்
சப்ளை செய்வது இல்லை. அதனால் வெளியிலிருந்து வாங்கும்
போது அதற்கு விலை அதிகமாக இருக்கிறது. மின்சார வாரியம்
திருப்பிக் கொடுக்கும்போது அதற்கு விலை குறைவாக கொடுக்
கிறார்கள். எனவே இந்த நிலையைப் போக்க மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் என்னிடம் ஏற்கனவே இதைப் பற்றி சொன்னார்கள்.
சொன்னதிலிருந்து மின்சார வாரியத்திற்கு உத்திரவு போட்டு
போர்க்கால நடவடிக்கையில் சென்னையைப் பொறுத்த வரை
யில் மீட்டர்களை கொடுக்க வேண்டும், பொருத்தப்படவேண்
டும் என்று சொல்லியிருக்கிறேன். எந்தவிதமான சாமான்
இல்லை என்று சொல்லக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன்.
அடிக்கடி கன்சுமர்களையும், மக்களுடைய பிரதிநிதிகளையும்
சந்திக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். விரைவில்
மீட்டர்கள் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மதுரை, அண்ணா, மாவட்டங்
களில் போடப்பட்டு இருக்கிற குழாய் கிணறுகளுக்கு முன்னுரிமை
அடிப்படையில் மின் இணைப்பு கொடுக்கப்படுமா? அதைப்
போன்று இப்போது இருக்கக்கூடிய டிரான்ஸ்பார்மர்களில்
லோடுகள் இருந்தால் அதில் ஆன் தி லைன் சர்விஸ்கள் அனு
மதிக்கப்படுமா. என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, லோடுகள் ஏற்கனவே
டிரான்ஸ்பார்மர்களில் இருந்தால் அங்கே ஏன் அடிஷனல் லோடு
கொடுக்கக்கூடாது என்று பல மாண்புமிகு உறுப்பினர்கள்
கேட்டார்கள். அப்படி அடிஷனல் லோடு இருக்குமானால் அதில்
ஏற்கனவே இணைப்புகள் உள்ளவர்களுக்கு கொடுத்தால்,
இணைப்புக்காக ஏற்கெனவே ஆண்டு கணக்கில் காத்துக்கொண்டு
இருப்பவர்களுக்கு கிடைக்காது என்று சொல்லுகிறார்கள். அந்த
டெக்னிக்கல் பாயிண்டை பார்த்து, பிறகு இந்தப் பற்றி முடிவு
எடுக்கலாம்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடி
வுற்றது. (குறுக்கீடு) ஒரு நியாயத்தின் அடிப்படையில் விவா
தத்தில் பங்கு பெற்ற உறுப்பினர்களுக்கு மட்டும் தான் அனுமதி
தந்து இருக்கிறேன். வேறு யாரையும் அனுமதிக்க வில்லை.
(குறுக்கீடு) அது ஒரு கன்வென்ஷன். ஒரு நியதி.

பேரவையில் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று,
நாளை 21—11—1986 காலை 9—00 மணிக்கு பேரவை மீண்டும்
கூடும்.

பின்னர் பேரவை மாலை 5-55 மணிக்கு ஒத்தி வைக்கப்
பெற்றது.

10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்:.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

156. தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி
விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்—
சமய அறக் கட்டளைகள் துறையின் 18—7—1986-ஆம்
நாளிட்ட 708-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை
வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்
கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

157. ஜீவா போக்குவரத்துக் கழகத்தின் 1985-86-ஆம்
ஆண்டிற்கான மூன்றாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு
நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ
பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

158. மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின்
1985—86-ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை.(1956-
ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்/
1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

159. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் 1985-
86-ஆம் ஆண்டிற்கான ஏழாவது ஆண்டறிக்கை. (1956-ஆம்
ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956)
619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

[1986 நவம்பர் 20

160. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத் தின் 1985–86-ஆம் ஆண்டிற்கான பதினொன்றாவது ஆண் டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

161. தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகத்தின் 1985–86-ஆம் ஆண்டிற்கான பதினொன்றாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

162. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் 1985–86-ஆம் ஆண்டிற்கான பதினொன்றாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

163. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் 1985–86-ஆம் ஆண்டிற்கான பதினான்காவது ஆண்டறிக்கை. (1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

164. அண்ணா போக்குவரத்துக் கழகம் மற்றும் அண்ணா பொறியியற் கழகத்தின் 1985–86ஆம் ஆண்டிற்கான பதினான் காவது மற்றும் பனிரெண்டாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

165. சேரன் போக்குவரத்துக் கழகத்தின் 1985–86-ஆம் ஆண்டிற்கான பதினைந்தாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

29. தமிழ்நாடு மின் வாரியத்தின் 1986–87-ஆம் ஆண்டுக் கான நிதிநிலை அறிக்கை குறித்தும், 1985–86-ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை குறித்தும், விவாதத்தைத் தொடங்கிவைத்து சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் அவர்கள் ஆற்றும் உரை. (தமிழ், ஆங்கிலம்).

30. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1984–85 மற்றும் 1985–86-ஆம் ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கைகள் மீதான விவாதத்தின் போது சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கிய கருத் துரைகளும் அக்கருத்துரைகள் மீதான குறிப்புரைகளும் அடங் கிய விவர அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).



1986 நவம்பர் 20]

31. மனுக்கள் குழுவின் முதலாவது அறிக்கை.

32. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1972–73-ஆம் ஆண்டிற்கான (சிவில்) அறிக்கையின் 24-ஆம் பத்தி மீதான குழு வின் ஒன்பதாவது அறிக்கை (ஆறாவது பேரவை) மற்றும் நான் காவது அறிக்கை (எட்டாவது பேரவை)யில் கண்டுள்ள பரிந்துரை களின் மீது அரசு மேலும் எடுத்த நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தைந்தாவது அறிக்கை. (தமிழ்).

33. 1974-75-ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப் பெற்ற மானியங்களிலும் சாட்டப் பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் மேல் ஏற்பட்ட மிகையாக செலவழித்த தொகைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழு (1980-81) அளித்த முதலாவது மற்றும் குழுவின் (1983–84) 29-வது அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகள்மீது அரசு மேலும் எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தாறாவது அறிக்கை. (தமிழ்).

34. 1977-78-ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப்பெற்ற மானியங்களிலும் சாட்டப் பெற்ற நிதியொதுக்கீடுகளிலும் மிகை யாக செலவழித்த தொகைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழு வின் (1982-83) பதினெட்டாம் அறிக்கையில் கண்டுள்ள பரிந் துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தேழாவது அறிக்கை. (தமிழ்).

---

ஆவணக்காப்பக
136498
சென்னை-600 008.
D 1
V2ll,31 N86

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 P. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District)
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V.Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-rappalli-4.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore 10
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavillas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 [illegible]thaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R. B. Gandhi Street, Calcutta-11.

©

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.